முத்துலட்சுமி ராகவன்



ஏழு ஸ்வரங்கள்...

ஆறாம் ஸ்வரம்...

தனம் நிறைந்த பாரதம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்... பாகம் – 6

உரிமை : **ஆசிரியருக்கு**

பொருள்	:	நாவல்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	ஆகஸ்ட் 2015
வெளியீடு	:	**லட்சுமி பாலாஜி பதிப்பகம்** 68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு, சி.ஐ.டி. நகர், தி.நகர், சென்னை - 600 035 செல் : 95669 42486
நூலின் அளவு	:	1x8 கிரவுன்
தாள்	:	11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து	:	11 புள்ளி
மொத்தப்பக்கங்கள்	:	400

விலை : ₹ 200/-

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **கிளாசிக் அச்சகம்,** சென்னை–5.

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய



ஏழு ஸ்வரக்கில்...

ஆறாம் ஸ்வரம்

'தனம் நிறைந்த பாரதம்...'

உடன் பயணிப்பது...



ஏழாவது ஸ்வரத்தின்

'நிழல் ஆட்ட யுத்தம்...'

ஆசிரியர் கடிதம்...

ஸ்வரம் ஆறு...

முன்னுரை :

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

செந்தமிழில் இருந்து வழக்குத் தமிழுக்கு மாறியிருக் கிறேன்..

ஏழு ஸ்வரங்களில் ஆறாம் ஸ்வரத்திற்கு வந்திருக்கிறேன்.. இந்த ஸ்வரம் விடுதலைப் போராட்ட வரலாற்றைத் தன்னுள் பொதித்து இசைத்து வரப் போகிறது.. இதற்கான காரணங்கள் பல உண்டு.. அவற்றில் சிலவற்றை மட்டுமே குறிப்பிடுகிறேன்..

முதலாவது காரணம் :

காஞ்சி மாநகரம் இந்த ஏழுஸ்வரங்களின் கதைத் தளமாகும்.. பல்லவ, சோழ, பாண்டிய, சேர, விஜயநகர மன்னர்களின் ஆட்சியில் காஞ்சி இருந்த கால கட்டங்களை ஐந்து ஸ்வரங்களில் இசைத்து விட்டேன்.. அதன் பின்னால் குறிப்பிடும்படியாக ஆற்காட்டு நவாபின் ஆட்சியில் இருந்த காஞ்சி.. கி.பி. 1801–ல் ஆங்கிலேயரிடம் கைமாறியிருக்கிறது. ஆற்காட்டு நவாபிற்கும் ஹைதர் அலிக்கும் ஏற்பட்ட போரில் ஆங்கிலேயர் ஆற்காட்டு நவாபிற்கு உதவியிருக்கிறார்கள்.. அதற்குப் பதிலாக தமிழகத்தில் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்று.. படிப்படியாக முழு ஆட்சிப் பொறுப்பையும் கிழக்கிந்தியக் கம்பெனி பெற்று விட்டது..

கி.பி. 1806–ல் வேலூர் ஜெயிலில் திப்பு சுல்தானின் படைவீரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்கள்..

கி.பி. 1855–ஆம் ஆண்டில் வாரிசு இல்லாத சமஸ்தானங்களை கிழக்கிந்திய கம்பெனியுடன் இணைத்துக் கொள்ளும் சட்டத்தின்படி ஆற்காட்டு நவாபிடமிருந்த

அனைத்து உரிமைகளையும் ஆங்கிலேயர் அபகரித்துக் கொண்டனர்..

கி.பி. 1857–ல் சிப்பாய் கலகம் உண்டானது.. அதன் விளைவாக கி.பி. 1858–ல் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்து பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் நேரடி ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டது..

காஞ்சியும் ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட்டது.. காஞ்சியில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் கி.பி. 1801–ல் ஆரம்பித்து இந்தியா சுதந்திரம் பெற்ற கி.பி. 1947–ஆம் ஆண்டுவரை நீடித்திருக்கிறது..

இந்த காலகட்டம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் கால கட்டமாகும்.. எனவேதான் ஆறாம் ஸ்வரம் விடுதலைப் போராட்டத்தைத் தன்னுள் இணைத்து இசைத்து வருகிறது..

<u>இரண்டாவது காரணம் :</u>

நான் வரலாற்றில் எம்.ஏ.பட்டம் பெற்றவள்.. நான் படித்த வரலாறில் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் நிகழ்வுகள் வரும் போது மனம் பதறியிருக்கிறது.. இன்றளவும் ஜாலியன் வாலாபாக் படுகொலையின் கொடூரத்தை என்னால் மறக்க முடியவில்லை..

‘தண்ணீர் விட்டோ வளர்த்தோம்..?– இப்பயிரை
கண்ணீரால் காத்தோம்..’

என்று சுதந்திரப் பயிர் வளர்த்துக் கவிதையில் கலங்கினார் பாரதி.. அவரைப் போல எண்ணற்ற தேசத் தலைவர்களும்.. தொண்டர்களும்.. கண்ணீர் சிந்தி.. ரத்தம் சிந்தி.. தங்களின் வாழ்நாளைத் தேசத்திற்காக அர்ப்பணித்துப் பெற்றுத் தந்ததுதான் நம் நாட்டின் சுதந்திரம்..! அதைச் சொல்ல நான் விரும்பினேன்..

மூன்றாவது காரணம் :

நான் படித்தது காந்தியத்தை தன் மூச்சாகக் கொண்டு.. தனிப்பட்டு நின்று தேசியத்தைப் போதிக்கிற பள்ளி..! மதுரை மாவட்டம், T. கல்லுப்பட்டியில் உள்ள 'காந்தி நிகேதன் மேல்நிலைப்பள்ளி..'!

அங்கே.. இந்திய சுதந்திர தினமும்.. குடியரசு தினமும்தான் விழா நாள்களாக கொண்டாப்படும்.. அந்நாள்களில் அப்பள்ளியின் பாரதி பூங்காவில் கூடும் கூட்டங்களில் மாணவ, மாணவிகள் விடுதலைப் போராட்ட வரலாற்றைத்தான் உருக்கம்காகப் பேசி கைதட்டல்களை வாங்குவார்கள்.. பாடப்படும் அனைத்துப் பாடல்களும் பாரதியாரின் பாடல்களாகவே இருக்கும்..

எங்கள் பள்ளியில் காந்தி மண்டபம் இருக்கிறது.. அங்கே காந்தியின் சிலை உள்ளது.. மற்ற சிலைகளுக்கும் இதற்கும் மகத்தான வித்தியாசம் ஒன்று உண்டு... இச்சிலையில் காந்தியின் கையெழுத்து இருக்கும்.. காந்தி மண்டபத்தில் காலையிலும், மாலையிலும் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும்.. இக்கூட்டத்தில் காந்திக்கு விருப்பமான பாடல்களைப் பாடுவார்கள்.. மௌனமான பிரார்த்தனையும் உண்டு.. அந்நொடிகளில் நாம் உணரும் உணர்வை வார்த்தைகளில் வடித்து விட முடியாது.. இங்கே பாடப்பட்ட கீதையின் சாராம்சப் பாடலை இன்றும் நினைவில் வைத்திருக்கிறேன்..

காந்தியை என் தோழனாக பாவித்திருக்கிறேன்.. சிறுவயதில் காந்தியின் சிலையருகே சென்று.. அவர் காதருகே குனிந்து கைகளால் வாயை மறைத்து ரகசியம் பேசுவது போல என் மனதில் உள்ள பிரார்த்தனைகளைக் கூறுவது உண்டு.. நந்தி பெருமானின் செவிகளில் நான் வேண்டுதலைக் கூறும் போதெல்லாம் எனக்கு சிறுவயதில் காந்தியின் செவிகளில் கூறிய வேண்டுதல்கள் நினைவுக்கு வரும்..

இக்காரணங்களினாலேயே நான் ஆறாம்ஸ்வரத்தில் விடுதலைப் போராட்டத்தை இசைக்க நினைத்தேன்..

இளம் பருவத்திலேயே நான் கேட்டு வளர்ந்த விடுதலைப் போராட்டத்தின் நிகழ்வுகளை இக்கதையில் வடிக்க விரும்பியே சுதந்திரப் போராட்டத்தின் நிகழ்வுகளை மீண்டும் ஓர்முறை படிக்க ஆரம்பித்தேன்.. படிக்கப் படிக்க என் மனம் அதிர்வு கொண்டது..

ஆம்.. எந்த காந்தியை என் தோழனாக நினைத்து நான் வளர்ந்தேனோ.. அந்த காந்தி மகானுக்கும் இன்னொரு முகம் இருந்ததாக சில வரலாற்றுக் குறிப்புகள் எனக்குத் தெரிவித்தன..

என் உணர்வில் கலந்திருந்த விடுதலைப் போராட்டத்தை உரைக்க எனக்குக் குறிப்புகள் தேவையில்லை.. அதை மட்டும் வைத்து நான் எழுத ஆரம்பித்திருந்தால் இந்த நொடியில் ஆறாவது ஸ்வரத்தை முடித்து.. ஏழாவது ஸ்வரத்தில் பேனாவைப் பதித்திருப்பேன்.. ஏன்.. அவ்வாறு செய்யாமல் போனேன் என்று இப்போது வருத்தமாக இருக்கிறது.

மறுபடியும் ஓர்முறை படித்துத் தெளிவு படுத்திக் கொள்ள வரலாற்று நிகழ்வுகளை விவரிக்கும் பல்வேறு புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்ததின் விளைவு.. எனது ஆய்வு ஒரு மாதத்திற்கும் மேலாக நீடித்து விட்டது..

'இதுவரை நான் படித்துப் பட்டம் பெற்ற வரலாறு புனையப் பட்ட வரலாறா..?' என்ற கேள்வி என் முன்னால் நிற்கிறது..

மறைக்கப்பட்ட வரலாற்றில் எனது ஆதர்சக் கதாநாயகனின் சாகசம் சின்னாப் பின்னமாக்கப்பட்டு.. அரசியல் துரோகங்களில் மூழ்கி.. அவர் நேசித்த தலைவர்களால் முதுகில் குத்தப்பட்டு.. அநாதையான

கதையைப் படிக்க நேர்ந்ததில் என் மனம் அதிர்வுகளில் ஆட்பட்டுச் சிதிலமாகியிருக்கிறது..

இது உண்மைதானா..?

மெய் என்று சொல்ல ஆயிரம் தடயங்கள் உள்ளன.

பொய் என்று சொல்ல ஒரேயொரு தடயம் கூடக் கிட்டவில்லையே..

அது ஏன்..?

நான் எழுத நினைத்த வரலாறு வேறு.. இனி எழுதப் போகும் வரலாறு வேறு.. இதுநாள்வரை கானலை அருவியென நினைத்து விட்டேனா என்ற பூகம்பம் என் மனதில் எழுந்துள்ளது..

மறைக்கப்பட்ட இந்திய வரலாறின் நாயகன் கூறியுள்ளார்..

"அதோ.. அந்த நதியின் கரைக்கு அப்பால்.. அந்த அடர்ந்த காடுகளுக்குப் பின்னால்.. நம் கண்ணில் படும் அந்த மலைகளுக்குப் பின்னால்.. நமக்காக உறுதியளிக்கப்பட்ட.. நம் பூமி உள்ளது.. ஏந்த மண்ணில் இருந்து நாம் உயிர் பெற்றோமோ.. அந்த மண்ணை நோக்கி நாம் திரும்புகிறோம்.. புறப்படுங்கள்.. இந்தியா அழைக்கிறது.. ரத்தம் ரத்தத்தை அழைக்கிறது.."

கி.பி. 1944–ல் பிப்ரவரி மாதம் 4–ம் தேதியன்று அந்த சாகச நாயகன் கூறிய இவ்வார்த்தைகளை வரலாறு ஏன் தனது பொன்னேடுகளில் பொறிக்கவில்லை..?

தனியொரு மனிதனாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்துக் காட்டிய மாவீரன் இவர்.. இரும்புக் கோட்டை போன்ற பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கட்டுக் காவலில் இருந்தபோது புகையைப் போல மாயமாக மறைந்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தண்ணீரைக் காட்டிவிட்டு நாடு கடந்தவர்..

உலகில் உள்ள அனைத்து நாடுகளின் தலைவர்களையும் சந்தித்து இந்தியாவின் நிலை பற்றி எடுத்துக் கூறியவர்.. அவர்களுடன் கை குலுக்கி சமதையாக அமர்ந்து உரையாடும் அளவிற்கு அவர்களின் மதிப்பு மரியாதையைப் பெற்றவர்.. இந்திர்களை வசீகரித்த இளம் தலைவர்..! உலகம் சுற்றிய வாலிபன்..!

அவரது அந்த அதீத வசீகரத்தன்மையினால் தான் அரும்பாடு பட்டு அடைந்த சுதந்திர இந்தியாவில் வாழ முடியாமல் அவர் மறைந்து நின்றாரா..? உயிருடன் இருந்தும் 'இறந்து..' நின்றாரா..?

ஆங்கிலேயரின் ஆட்சியில் சிதறிக் கிடந்த இந்தியா ஒன்று பட்டு ஒரே ஆட்சியின் கீழ் வந்தது.. கல்வியின் அவசியத்தை ஆங்கியேர்தான் நமக்கு உணர்த்தினார்கள்.. பள்ளிக்கூடங்கள் தொடங்கினார்கள்.. தொழிற்சாலைகள் கட்டினார்கள்.. அணைகளை அமைத்தார்கள்.. மத விசயங்களில் தலையிடாமல் ஆலய வழிபாட்டிற்கு இடையூறு விளைவிக்காமல் ஒதுங்கி நின்றார்கள்.. அதுவரை இல்லாத நல்ல நிர்வாகத்தை ஆங்கிலேயர்தான் நமக்குத் தந்தார்கள்.. 'சதி' முதலிய மூட வழக்கங்களை ஒழித்தார்கள்..

இவை பாராட்டப்பட வேண்டியவைதான்.. அதே தருணத்தில் அவர்களிடம் உயர்வு மனப்பான்மை இருந்தது.. இந்தியர்கள் அடிமை என்ற எண்ணம் இருந்தது.. இந்தியர்கள் ஆயுதங்களை வைத்துக் கொள்ளக் கூடாது.. இரவு 9 மணிக்கே உறங்கி விட வேண்டும்.. ஆங்கிலேயர் மட்டுமே ஆயுதங்களுடன் சுற்ற வேண்டும் என்றெல்லாம் சட்டம் போட்டார்கள்.. இந்தியாவின் கலைச் செல்வம் உட்பட அனைத்துச் செல்வங்களையும் தமது நாட்டிற்கு சுரண்டிச் சென்றார்கள்.. இந்தியர்கள் தொழில் தொடங்கக் கூடாது.. கப்பல் வணிகம் செய்யக் கூடாது..

கல்வி கற்று விவரம் அறிந்த இந்தியர்கள் தமது நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதை உணர்ந்து தேசத்திற்கு அதைத் தெரிவித்து விடுதலைக்காக போரட ஆரம்பித்தார்கள்.. அதற்காக உருவாகிய இயக்கத்தில்..

'மிதவாதிகள்..' 'அமிதவாதிகள் (தீவிரவாதிகள்..)' என்ற இரண்டு பிரிவு தோன்றியது.. மிதவாதிகள் சமாதானத்தை முன்னிருத்தி விடுதலையைக் கேட்டுப் பெற நினைத்தார்கள்.. அமிதவாதிகளோ விடுதலையைக் கேட்காமல் எடுத்துக் கொள்வது தங்களின் உரிமை என்று முழங்கினார்கள்.. அதைச் சொல்ல வருவதே இந்த ஆறாவது ஸ்வரம்..



– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
படிக்க : www.muthulakshmiraghavan.com
http:muthulakshmiraghavan.in

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்...

ஆறாம் ஸ்வரம்

‘தனம் நிறைந்த பாரதம்...’



1

வளம் பொங்கும் எம் திருநாட்டை
வெள்ளையனிடம் விட்டு வைப்பதா..?

தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் பாய்ந்தாள் அவள்.. நீந்திக் கரையேறியவளின் கை நிறைய தாமரை மலர்கள் தண்டுடன் இருந்ததில் அவளது தோழிகள் கை தட்டி ஆர்ப்பரித்தார்கள்..

“எப்புடிடீ இவ்வளவு பூவையும் பறிச்சுக்கிட்டு வர்ற..? தாமரைக் கொடியில கால் சிக்கிருமுன்னு பயமாய் இல்லையா..?”

அப்பெண்ணின் தோழி விழி விரித்த போது..

“இல்லை வைரம்..” என்றாள் அவள்..

“இவளுக்கு எப்படிடீ பயம் இருக்கும்..? இவளே தாமரை..! இவதாமரைப் பூவ பறிச்சுக்கிட்டு வர அச்சப் படுவாளா..?” நீட்டி முழங்கினாள் இன்னொருத்தி..

"அதச் சொல்லுடி செவ்வந்தி.." ஆமோதித்தாள் வைரம்..

தோழிகளின் பேச்சைக் கவனிக்காமல் தாமரைப் பூக்களில் முகத்தைப் பதித்து முகர்ந்து பார்த்த தாமரை.. அந்தப் பூவைப் போலவே வெகு அழகாக இருந்தாள்.. அவளது அழகுக்கு அழகு சேர்த்தது பாதம் வரை நீண்டு தொங்கும் அவளுடைய கருங்கூந்தல்..

அந்தச் சுற்றுப்பட்டிக் கிராமங்களிலே தாமரையின் அழகும் நீண்ட கூந்தலும் பிரசித்தமானவை..

தங்கத்தை அரைத்துப் பூசியதைப் போல அப்படியொரு நிறம் அவளுக்கு.. குமுதவாயும், சிறிய சீரான நாசியும், அகன்ற நீள்வடிவிலான பெரிய கண்களும் என்று அவள் முகத்தைப் படைக்கும் போது பிரம்மன் ரசித்துப் படைத்த படைப்பு அவள்..

தாமரைத் தண்டைப் போன்ற உடல்வாகுதான் அவளுக்கும்.. மெலிதான, நீண்ட தேகம்.. சங்குக் கழுத்து.. உடுக்கை போன்ற இடை.. பெண்மையின் அனைத்து லட்சணங்களும் ஒருங்கே பொருந்திய அழகு தேவதை அவள்..

சூரியனின் கதிர் பட்டால் கருத்து விடுவோம் என்று மற்ற பெண்கள் அஞ்சினால்.. இவள் தகதகத்த தங்கச் சிலையாக சூரியனின் கதிர்களில் மின்னுவாள்.. அப்படியொரு அபூர்வப் பிறவி அவள்..

அந்தத் தாமரையின் அழகில் தோழிப் பெண்களே மயங்கிப் போகும் போது கட்டிளங்காளைகள் மயங்க மாட்டார்களா என்ன..?

தாமரையிடம் மயங்காத ஆடவரில்லை.. ஆனால் அவள் எவரிடமும் மயங்கியதில்லை.. அவளிடம் மயங்கிய ஆடவரைக் கண்டு அவளுடைய தோழிப் பெண்கள் தான் மயங்குவார்கள்.. இவள் மயங்கி நிற்க மாட்டாள்.. அவள் மயங்கி நின்றது ஒருவனிடம்தான்..

"உனக்கு அழகிங்கிற திமிருடி.." வைரம் பொறாமைப் படுவாள்..

"இருக்காதா பின்னே..? கூந்தலிருக்கிற மகராசி.. கொண்டையும் போடுவா.. இல்ல.. பின்னலும் போடுவா.."

செவ்வந்தி யார் பக்கம் நிற்கிறாள் என்று வைரம் குழம்பிப் போவாள்.. அவளுக்கும் தாமரை மேல் பொறாமை உண்டுதானே.. அப்படியிருக்க பெரிய நியாவாதி போல என்னத்திற்கு கூந்தலைப் பற்றிய வியாக்கினம் பேசுகிறாள்..?

"ரெண்டையும் போடலைன்னா என்னடி பண்ணுவா..?" எரிச்சலுடன் வைரம் கேட்பாள்..

"ஊம்..? நீண்ட கூந்தலை பப்பரப்பான்னு விரிச்சுப் போடுவா.. போதுமா..?" அதற்கும் பதில் சொல்லுவாள் செவ்வந்தி..

தாமரை கூந்தலை விரித்துப் போட்டால் என்ன ஆகும்..?

பாதம் தொடும் அவள் கூந்தலின் மீது வைரத்தின் பார்வை படும்..

'எப்புடித்தான் இவளுக்கு இவ்வளவு நீண்ட முடியோ..!' பொறாமை பொங்கி எழும்..

அவளுக்கும் செவ்வந்திக்கும் ஒன்றும் குட்டையான கூந்தலில்லை.. கருமையான நீண்ட கூந்தல்தான்.. என்ன ஒன்று.. தாமரையின் கூந்தல் அவளுடைய பாதத்தைத் தொட்டால்.. வைரத்தின் கூந்தலும், செவ்வந்தியின் கூந்தலும் அவர்களின் இடுப்பைத் தொட்டன..

"இவ மோகினிடி.." பொறுமுவாள் வைரம்..

"ஆமாமாம்.. நம்ம ஊரில இருக்கிற வாலிபப் பசங்கள ஆட்டி வைக்கிற மோகினி.." செவ்வந்தி சிரிப்பாள்..

"இவ ஆட்டி வைச்சா அவனுக ஏன் ஆடறானுக..?" எரிச்சல் மண்ட வைரம் கேட்பாள்..

"ஏன்..? நீ ஆட்டி வைக்க அவனுக ஆடனும்னு ஆசைப்படறியா..?" நிதானமாகக் கேட்டு வைரத்தின் மன ஆழத்தைத் தொட்டு விடுவாள் செவ்வந்தி..

நிட்டாந்தரமாக.. நேரூக்கு நேராக கேள்வி கேட்பதில் செவ்வந்தியை மிஞ்ச எவராலும் முடியாது.. அவள் நியாயவாதி.. அந்த நியாயத்தையும் ஆட்டிப் பார்க்கும் வல்லமை தாமரையின் அபாரமான அழகில் இருந்தது..

செவ்வந்திக்கும் தாமரையின் மீது பொறாமை உண்டு.. அந்தப் பொறாமையில் வைரத்தைப் போல காழ்ப்புணர்ச்சி இருக்காது.. இயல்பாக பெண்களுக்கு வரும் பொறாமையாக அது இருக்கும்..

"இருந்தாலும் இவ இத்தனை அழகா இருந்து தொலைக்கக் கூடாதுடி.."

தண்ணீரில் மூழ்கி எழுந்த தாமரையின் வாளிப்பான தோற்றம் மயக்கும் மோகினியைப் போலிருக்க.. என்றும் போல அன்றும் பொறாமை அதிகரித்ததில் வைரம் முணுமுணுத்தாள்..

“வேற எப்படி இருந்திருக்கனும்..?” செவ்வந்தி விளக்கம் கேட்டு வைரத்தின் கடுப்பை அதிகரித்தாள்..

“கொஞ்சம் கருப்பா.. கொஞ்சம் குட்டை முடியா.. கொஞ்சம் குண்டா.. கொஞ்சம் மூக்கு கோணலா... கொஞ்சம் சின்னக் கண்ணா..” வைரம் உற்சாகமாக அடுக்க ஆரம்பிக்க..

“விட்டா இன்னைக்குப் பூசா யோசிச்சு யோசிச்சுச் சொல்லுவியே..” என்று அவளை வாரினாள் செவ்வந்தி..

குளக்கரையில் சப்தம் கேட்டது.. வயது முதிர்ந்த இரு பெண்மணிகள் படித்துறையில் இறங்கினார்கள்.. தாமரையைக் கண்டதும் அவர்களில் ஒருத்தி கண்களின் மீது கையை விரித்து மறைத்துப் பார்த்தபடி..

“யாருடி அது..? நம்ம மருதாயி பேத்தியா..?” என்று விசாரித்தாள்..

“ஆமாம் பாட்டி..” என்றாள் தாமரை..

“ஏன் ஆத்தா..? குளக்கரைக்கு குளிக்க வந்தா.. வெரசாக் குளிச்சு முடிச்சுட்டு.. வெள்ளனா வீட்டுக்குப் போயி சேர வேணாமா..? அங்கன என்னடான்னா என் பேத்தியக் காணோமுன்னு ஒன் அப்பனப் பெத்த பாட்டி வீடு வீடா தேடிக்கிட்டு இருக்கா.. இங்கன என்னடான்னா நீ

குளிக்கிறத விட்டுப்புட்டு தாமரப் பூவப் புடுங்கி மோந்து பாத்துக்கிட்டு நிக்கிற.. வெரசா வீடு போயி சேரு ஆத்தா..”

அந்தப் பெண்மணி அதட்டியதில் வயதுப் பெண்கள் மூவரும் அரட்டையை மறந்து குளியலில் ஈடுபட்டார்கள்.. வாழைத் தண்டைப் போன்ற கால்களில்.. படித்துரையில் உரசிய மஞ்சனை வழித்துத் தேய்த்துக் கொண்டாள் தாமரை..

“உனக்கெல்லாம் மஞ்சக் கிழங்கோட துணையே தேவையில்லடி..” வைரம் காய்ந்தாள்..

குளிக்க வந்த பெண்மணிகள் வைரத்தை முறைத்தார்கள்...

“யாருடி அவ...? பொம்பளையாப் பிறந்தவளுக்கு மஞ்சக் கிழங்கோட துணையே தேவையில்லன்னு சொல்லுறவ..?”

“வைரம்தான் பாட்டி..”

“எவடி அவ...? நம்ம சோணாச்சலம் மகன் மருதநாயகம் பெத்த மருக்கொழுந்தா..?”

“இவ மருக்கொழுந்தில்ல பாட்டி.. வைரம்..!”

“எல்லாக் கழுதையும் எங்களுக்கும் தெரியும்.. வைரமாமில்ல வைரம்.. பேரு பெத்த பேரு.. பேசறதெல்லாம் நீரு மோரு..”

“இல்ல பாட்டி.. நம்ம தாமரை நிறத்துக்கு மஞ்சப் பூசனுமாங்கிற அர்த்தத்தில இவ கேட்டுப் புட்டா..”

"அப்புடியே வாயில போட்டிருவேன்.. இவளுக்கு நீ வக்காலத்தா..? வந்துட்டா வருசநாட்டு நாயம் பேச.. அடியே சுந்தரி பெத்த சுந்தரிகளா..? என்னதான் நீங்க சீமைத் துரைகளை மிஞ்சின அழகிகளா இருந்தாலும்.. நம்ம நாட்டு வழக்கத்த மறந்துபுடாதீங்க.. வானத்தில இருந்து குதிச்சு வந்த பேரழகியா இருந்தாலும்.. அவளுக்கு மஞ்சளும் குங்குமும்தான் அழகைத் தரும்.. புரியுதா..?"

இல்லையென்று சொல்லி விட்டு இன்னும் கொஞ்சம் வாங்கிக் கட்டிக் கொள்ள அந்தப் பெண்கள் தயாராக இல்லையென்பதால்.. தஞ்சாவூர் பொம்மையாக தலையை ஆட்டி..

"ஆமாம் பாட்டி.. புரியுது.." என்று சொல்லித் தப்பித்தார்கள்..

பாட்டி போட்ட போட்டில் அரையும் குறையுமாக மஞ்சளைப் பூசிக் குளித்தேன் பேர்வழியென்று குளக்கரையை விட்டு ஓட்டம் பிடித்த வைரத்தைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தாள் செவ்வந்தி..

"தேவையாடி உனக்கு..?"

வைரமோ செவ்வந்தியின் சிரிப்புச் சப்தம் குளக்கரையில் இருக்கும் பாட்டிகளின் காதுகளில் விழுந்து விடப் போகிறது என்று பயந்து போனாள்..

"சத்தம் போட்டுச் சிரிச்சுத் தொலைக்காதடி.. குளக்கரையில அடிச்ச கும்மி பத்தாதுன்னு ஊருக் குள்ளேயும் தொடுத்து வந்து அந்தக் கிழவிக கும்மியடிச்சிறப் போகுதுக.."

"இந்த பயம் இருக்கில்ல..? ஏண்டி அதுக முன்னாலே வாயைத் திறந்து தொலைச்சே..?"

"அப்படியொரு வேண்டுதல்டி எனக்கு.. போவியா.."

"சரிசரி.. நின்னு மூச்சை வாங்கிக்க.. குளக்கரையை விட்டு தலை தெறிக்க ஓடி வந்ததில உனக்கு மூச்சு இரைக்குது பாரு.."

செவ்வந்தி அக்கறைப்பட்டதில் வைரத்தின் மூச்சிறப்பு அதிகமானது.. அலட்டிக் கொள்ளாமல் பதுமை போல பதவிசாக நடந்து வந்த தாமரையின் மேல் அவள் கோபம் பாய்ந்தது..

"எல்லாம் இவளாலதான்.."

"ஏண்டி..? நான் என்னடி செஞ்சேன்..?"

"உன்னைச் சொல்லுப் போய்தானேடி அந்தக் கிழவிக வாயில நான் அரைபட்டுத் தொலைச்சேன்..?"

"என்னை எதுக்குச் சொன்ன..? அதுக்கு முதல்ல பதிலச் சொல்லு.."

தாமரை மடக்கியதும் வைரம் பேந்தப் பேந்த விழித்தாள்.. செவ்வந்தியின் சிரிப்பு அதிகமானது.. அவள் வைரத்தைச் சீண்டினாள்..

"கேட்கிறாள்ல.. பதிலைச் சொல்லு.."

"அவ சும்மாயிருந்தாலும்.. நீ சும்மாயிருக்க மாட்ட போல.."

"ஏண்டி.. அவளே உன்ன எதுவும் கேட்காம தேமேன்னு வாயை மூடிக்கிட்டு வந்துக்கிட்டு இருக்கா.. நீயேண்டி நினைவு படுத்திட்டு இவகிட்டயும் வாங்கிக் கட்டிக்கிற..?"

"இதுவும் வேண்டுதல்ன்னு வைச்சுக்க.."

வைரம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.. செவ்வந்தி திரும்பிப் பார்த்ததில் அரண்டு போய்..

"என்னடி..?" என்றாள்..

"என்னத்த என்னடி..?"

"ஏன் திரும்பிப் பார்த்த..?"

"என்னடி இது..? ஒரு மனுசி திரும்பிப் பாத்தாக் கூட தப்பாடி..? அதுக்கும் நீ கேள்வி கேட்பியா..?"

"இல்லடி.. அந்தக் கிழவிக தொடுத்துக்கிட்டு வருதுகளோன்னு பயந்து போயிட்டேன்.."

"பாருடி இவள.. அந்தக் கிழவிககிட்ட இந்த அளவுக்கு அரண்டு போயிருக்கா.. அடியேய் வைரம்..! குளக்கரையில இருந்து கூப்பிடு தொலைவையும் தாண்டி நாம வந்திட்டோம்.."

"அந்தக் கிழவிக கூப்பிட்டுச்சுகன்னா..?"

"நீ மட்டும் போயி வாங்கிக் கட்டிக்கிட்டு வா.. ஏண்டி இவ இப்புடிப் பினாத்தறா..? அடியேய் இவளே.. கூப்பிடு தொலைவை தாண்டி நாம வந்துட்டோம்ன்னா.. அந்தக் கிழவிக கூப்பிட்டாலும் நம்ம காதில விழுகாத அளவுக்கு தொலைவில வந்துட்டோம்ன்னு அர்த்தம்.."

"அப்ப.. நாம பேசறதும் அந்தக் கிழவிக காதில விழுகாதில்ல.."

"விழுந்திருந்தா.. வார்த்தைக்கு வார்த்த.. அதுகள கிழவின்னு நாம சொன்னதுக்கு துரத்தி வந்து அடிச்சிருக்கும்கள்ல..?"

"அதுக கிழவிக இல்லாம குமரிகளா..?"

"பாருடி.. இவளுக்கு வாய் கிழியறத.. இத அப்புடியே போயி அந்தக் கிழவிக காதில ஒதி விட்டு வந்துரவா..?"

"அடிப்பாவி..! சண்டாளி..! உனக்கென்னடி கெடுதல் பண்ணினேன்..? நீ சோட்டுக்காரியா..? இல்ல போட்டுக் கொடுக்கிறவளா..? கால வாருறதிலயே குறியாய் இருக்கே.."

"ரெண்டும்தான்.. இப்ப என்னாங்கிற..?"

"எதுவும் சொல்லலை.. பேசாம வா.."

"அதை முதல்ல நீ செய்யி.. மஞ்சக் கிழங்கப் பத்திக் கிழவிக முன்னால பேசி வாங்கிக் கட்டிக்கிட்ட ஆளுதானேடி நீ..?"

செவ்வந்தியின் கேள்வியில்.. அவள் அந்த மஞ்சக்கிழங்கு விவகாரத்தை ஊர் முழுக்கப் பரப்பாமல் ஓயமாட்டாள் என்று கலவரமானாள் வைரம்..

'இவளுக்கு அந்தக் கிழவிகளே தேவலாம்..'

தன்னைத்தானே அவள் நொந்து கொண்டாள்.. அவளையே பார்த்தபடி நடந்து கொண்டிருந்த செவ்வந்தி.. ஒரு தினுசாக.. குரலை இழுத்து..

"என்ன..?" என்றாள்..

"ஒன்னுமில்லையே.. ஒன்னுமேயில்ல செவ்வந்தி.."

"ஒன்னுமில்லாததுக்கா நீ இத்தனைக் கூழைக் கும்பிடு போடற..? ஆதாயமில்லாம வைரம் ஆத்தோடு போக மாட்டாளே.."

"இந்தப் பழமெழிக்கும் வைரம்தான் உனக்கு அகப்பட்டாளா..? போதும்டியம்மா.. குளக்கரைக்கு போயிட்டு வந்ததுக்கே மூச்சு வாங்குது.. இதில ஆத்தோட போயி நான் என்னத்த அள்ளிக் கட்டிக்கப் போறேன்..?"

"ஏண்டி.. ஆதாயத்த அள்ளிக் கட்டிக்க மாட்டியா..?"

"அது யாருக்கு வேணும்..? நீயே மூட்டை கட்டி வைச்சுக்க.."

தோழிகள் வாக்குவாதம் செய்வதை வேடிக்கை பார்த்தபடி நடந்த தாமரை.. பாதையோரமாக இருந்த புளிய மரத்தில் இருந்த புளியம் பழத்தைப் பறித்து.. அதன் ஓடை உடைக்க ஆரம்பித்தாள்..

செவ்வந்தி சுற்று முற்றும் பார்த்தபடி..

"நீ பாட்டுக்கு புளியம் பழத்த பறிக்கற.. யாராச்சும் பாத்துட்டா என்ன ஆகிறது..?" என்று கேட்டாள்..

ஓடை நீக்கிய பழத்தை தாமரை நாவினால் சப்புக் கொட்டி சுவைப்பதைப் பார்த்தவர்களுக்கு எச்சில் ஊறியது.. வைரம் தானும ஒரு பழத்தைப் பறிக்கப் போனாள்.. செவ்வந்தி தடுத்தாள்..

"ஏண்டி.. உனக்கு புளியம்பழம் திங்கனும்னு தோணலையா.."

"தோணாம இருந்தாலும் இவ சப்புக் கொட்டித் திங்கிறதில எச்சி ஊறித் தொலைக்காதா..?"

"அப்புறம் ஏண்டி வேண்டாம்கிற..?"

"பழத்தப் பறிச்சா வம்பு ஏதாவது வந்து தொலைக்கப் போகுதுடி.."

செவ்வந்தியின் கவலையில் தாமரை அவளை விசித்திரமாகப் பார்த்து வைத்தாள்.. ஊருக்குள் இருக்கும் புளியமரத்தில் காய்த்துத் தொங்கும் புளியம்பழத்தைப் பறித்துத் தின்றால் வம்பு வருமா..? எப்படி..?

"அழகு இருக்கிற அளவுக்கு அறிவு இருந்தா இப்புடிக் கேட்டுத் தொலைக்க மாட்ட.."

"ஆமாமாம்.. நான் திண்ணைப் பள்ளிக்கூடம்.. இவ அதுக்கும் மேலே படிச்சுக் கிழிச்சவ.. போவியா.. நாம மூணுபேருமே திண்ணைப் பள்ளிக்கூடத்தோட வீட்டில முடங்கினவங்கதான்.. இதில நீ பெரிய அறிவாளி.. நாங்க ரெண்டு பேரும் கூமுட்டைகளா..?"

"இதுக்கு மட்டும் வைரத்தக் கூட்டுச் சேர்த்துக்கு வியே.. அடியே தாமரை..! இது நம்ம ஊரு புளியமரம்தான்.. ஆனா.. இதில காய்க்கிற புளியம்பழம் நம்ம ஊருக்குச் சொந்தமானதா இருக்கணுமில்ல..?"

"ஏனாம்..? ஊரில இருக்கிற மரமெல்லாம் ஊருக்குத்தான சொந்தமாகனும்..?"

"அதுக்கு முதல்ல.. இந்த ஊரு நமக்கே நமக்குன்னு சொந்தமானதா இருக்கனுமில்ல..?"

செவ்வந்தி மடக்கிக் கேட்டதில புளியம் பழமும் கையுமாக இருந்த தாமரை புரியாத பார்வை பார்த்தாள்..

"நம்ம ஊரு நமக்குத்தானேடி.." என்றும் கேட்டாள்..

"இவளுக்கு புளிபோட்டு விளக்கிச் சொல்லனும்.. ஏண்டி தாமரை.. நீதான் திண்ணைப் பள்ளிக்கூடம்.. உங்கண்ணன் அப்படியயில்லைல்ல.. சீமைக்குப் போயி படிச்சுட்டு வந்த மகராசன் ஆச்சே.. அவர் ஊரு நிலவரத்த உனக்குச் சொல்லலியா..?"

"அது என்னத்தையோ புரியாம பேசி வைக்கும்.. அதுகூடச் சேர்ந்துக்கிட்டு உங்கண்ணனும் பின்பாட்டுப் பாடுவாரு.. எங்கண்ணன்தான் சீமைக்குப் போயி படிச்சுட்டு வந்துச்சா..? உங்கண்ணனும்தான கூடப் போயி படிச்சுட்டு வந்தாரு.."

தாமரை உரிமையுடன் செவ்வந்தியிடம் பேசியதில் வைரத்துக்குள் பொறாமைத் தீ பற்றி எரிந்தது.. சும்மாவே அவள் பொறாமைப் படுவாள்.. இதில் செவ்வந்தியும், தாமரையும் அவரவரின் அண்ணன்மார்களைப் பற்றிய பெருமையைப் பேசினால் வைரத்துக்கு குளுமையாகவா இருக்கும்..?

இதில் வேறு.. தாமரையின் அண்ணனான தனஞ்ஜெயனும்.. செவ்வந்தியின் அண்ணனான ஆதவனும்.. கம்பீரமான தோற்றத்தோடு வாட்ட சாட்டமாக


இருப்பார்கள்.. சீமைக்கு சென்று வக்கீலுக்குப் படித்து வந்திருக்கிறார்கள் என்ற பெத்த பெயரும் அவர்களுக்கு உண்டு.. அந்த கிராமத்தின் பெரும்பான்மையான மக்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்தின் பக்கம்கூட தலை வைத்து படுத்ததில்லை என்றிருக்கும் போது.. இந்த இரண்டு ஆண்பிள்ளைகள் மட்டும் சீமைக்குப் போய் வக்கீலுக்கு படித்து விட்டு வந்ததினால்.. அவர்கள் பிறந்த வீடுகளுக்கு அந்தகிராமத்தில் தனிப்பட்ட மதிப்பும், கௌரவமும் இருந்தன.. அதில் வைரத்தின் வயிறு எரிந்தது..

கன்னி மனம் அறியும் ரகசியங்கள் தனி விதமானவை.. வைரத்தின் மனம் அறிந்த ரகசியங்களும் அதில் சேர்ந்தவைதான்.. தாமரையின் அண்ணனான தனஞ்ஜெயனும்.. செவ்வந்தியின் அண்ணனான ஆதவனும் இணை பிரியாத தோழர்களாக.. இணையான படிப்பாளிகளாக இருந்ததில் ரகசியமான ஒரு பந்தம் உருவாகி விட்டதை வைரத்தால் புரிந்து கொள்ள முடிந்தது..

அது.. செவ்வந்தியின் மனம் தனஞ்ஜெயனை விரும்புகிறது.. செவ்வந்தியின் அண்ணனான ஆதவனின் மனம் தாமரையை விரும்புகிறது என்பது..

அந்த ஊரிலேயே கம்பீரமான ஆணழகர்கள் இருவர்தான்.. அந்த இருவரில் ஒருவரைக் கூட வளைத்துப் போட முடியாது என்றால் வைரத்தின் உள்ளத்தில் பொறாமைத்தீ பற்றியெரியாமல் என்ன செய்யும்..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



1

அடி மனதின் ஆழத்தில்..
அடிமைப் பட்ட நீழல் ஒன்று..

கம்யூட்டரில் மூழ்கியிருந்த யாமினி ரேகாவின் குரல் கேட்டதும் உலுக்கி விட்டவளைப் போல நிமிர்ந்து பார்த்தாள்.. ரேகா புருவங்களை உயர்த்திச் சிரித்தாள்..

"என்னாச்சு யாமினி..? ஏன் இப்படி ஷாக் ஆகுற..?"

"ஒன்னுமில்லை.."

வெட்கத்துடன் சொன்னாள் யாமினி.. அவளுக்குச் சங்கடமாக இருந்தது.. அவளுக்கு இருக்கும் மனப்பிரச்னைகளைப் பற்றி ரேகா அறிவாளா என்ற நினைவுடன் சிரிக்க முயன்றாள்..

"வரலைன்னா விட்டிரு.." ரேகா இலகுவாகச் சொன்னாள்..

"எதை..?"

"சிரிப்பை..."

இப்போது யாமினி உண்மையாகவே சிரித்து விட்டாள்..

"இது பெட்டரா இருக்கு.. ஆமாம்.. ஆபிஸே காலியாகிருச்சு.. நீ மட்டும் என்னத்துக்கு கம்யூட்டருக்கு

கழுத்த நீட்டினவ மாதிரி அதை உத்து உத்துப் பாத்துக்கிட்டு இருக்க..?"

"ஏய்ய்.."

யாமினி கையிலிருந்த ஃபைலைக் கொண்டு ரேகாவின் முதுகில் அடித்தாள்.. ரேகா விலகி நின்று இரண்டு கைகளின் விரல்களையும் தலைக்கு மேல் உயர்த்தி பழிப்புக் காட்டிச் சிரித்தாள்..

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் வயலெட்டிற்குப் பிடிக்காத யாமினியிடம் இயல்பான நட்புணர்வு ரேகாவுக்கு வந்து விட்டது.. தாமோதரனைக் கடுப்பேற்ற யாமினியிடம் பாசம் காட்ட வயலெட் முயன்றால்.. யாமினி அதற்கு இடம் கொடுக்காமல் முறைத்து விட்டாள்..

"அது என்ன மாயமோ.. மந்திரமோ தெரியலைடி.. இந்த யாமினியை ஜி.எம் அந்த கடி கடிக்கிறாரு.. இவ என்னடான்னா அந்த ஆளு மேல விரோதம் காட்டாம சூடம் காட்டி சாம்பிராணிப் புகையப் போட்டுக்கிட்டு இருக்கா.. இப்படியா ஒரு மனுஷி அந்த மனுசன் கத்துற கத்தல காதில போட்டுக்காம இருப்பா..? என்ன கடி கடிச்சாலும் கொசுக்கடியப் போலத் தட்டி விட்டு போயிக்கிட்டே இருக்காடி.."

தாள முடியாத கோபத்துடன் தர்ஷிணியிடம் வயலெட் புலம்பிக் கொண்டிருக்க.. அந்தப் பக்கமாக வந்த ரேகா..

"அதில உனக்கென்னடி பிரச்னை..?" என்று கேட்டு வைக்க.. அன்று ரேகாவுக்கும் வயலெட்டுக்கும் நீண்ட நேரம் சொற்போர் நடந்தது..

"எனக்குப் பிரச்னையாகிறது இருக்கட்டும்.. நான் இவகிட்டப் பேசறதில உனக்கென்ன பிரச்னை..?"

"சும்மா பேசினா பரவாயில்லை.. நீ.ஜி.எம்மப் பத்தியில்ல பேசற..?"

"தெரியாமத்தான் கேட்கிறேன்.. இத்தனை நேரமா நான் இவகிட்ட என் ஆற்றாமையைச் சொல்லிக்கிட்டு இருக்கேன்.. கேட்டுக்கிட்டு இருந்தவ உனக்கென்ன பிரச்னைன்னு கேட்கலை.. ஆனா இப்பத்தான் இந்தப் பக்கமா வந்து வழியோட போகிற நீ.. நின்னு.. இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்னா.. என்னடி அர்த்தம்..?"

"அதையும் நீயே சொல்லு.."

"பிரச்னை எனக்கில்ல.. உனக்குத்தான்னு அர்த்தம்.."

"ஊஹூம்..? எனக்கென்ன பிரச்னைன்னு நினைக்கிற..?"

"ஜி.எம்மைப் பத்தி வாயைத் திறந்தாலே உனக்குப் பிரச்னையாத்தான் இருக்கு.. கேளுடி தர்ஷிணி..! உச்சாணிக் கொம்பப் பாத்து ஏக்கப்பட்டுச்சாம் ஏதோ ஒன்னு.."

வயலெட் விசமமாகச் சொல்ல.. கேட்டுக் கொண்டிருந்த தர்ஷிணி கலவரமாகிப் போனாள்.. அவள் வம்பில் மாட்டிக் கொள்ளாமல் வம்பை செவி மடுக்கும் கேட்டகிரி.. யாரிடம் வேண்டுமானாலும் எதை

வேண்டுமானாலும் பேசி விடுவாள்.. அத்தனையையும் பேசி விட்டு மறக்காமல்..

“இதை நான் சொன்னேன்னு யார்கிட்டயும் சொல்லிராதேப்பா.. எனக்கெதுக்கு வம்பு..?” என்று சொல்லுவாள்..

அதைப்போல ஆபிசில் நிகழும் அத்தனை அக்கப் போர்களையும் காக்கா, குருவி வாய்க்குள் பறந்து கூடு கட்டி.. குஞ்சு பொரிக்கும் அளவுக்கு ‘ஆ’வென வாய் பிளந்து கேட்டு முடித்து விட்டு..

“விடுப்பா.. இதையெல்லாம் ஒரு பேச்சுன்னு பேச வந்திட்ட.. எனக்கெதுக்குப்பா ஊர் வம்பு..?” என்பாள்..

அப்படி சர்வ ஜாக்கிரதையாக வம்பு பேசி.. கேட்கும் பேர்வழி அவள்.. எதிலும் அகப்பட்டுக் கொள்ள மாட்டாள்.. நிர்வாகத்தை விரோதித்துக் கொள்ள மாட்டாள்.. சித்தார்த்தனுக்கு வணக்கம் சொல்கிறாளோ இல்லையோ.. தாமோதரனை அங்கே கண்டு விட்டால்.. இங்கே எழுந்து வணக்கம் சொல்லி விடுவாள்..

“சாமி வரம் கொடுக்கனும்னா பூசாரியப் பகைச்சுக்கக் கூடாதுடி..” என்று அதற்கான வியாக்கினமும் சொல்வாள்..

அப்பேற்பட்ட தர்ஷினியிடம் வயலெட் ஜாடை பேசினால் அவள் கலவரமாகி விட மாட்டாளா..? அவளே வயலெட் பேசும் வம்பை அவள் சுவராஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்ததை ரேகா பார்த்து விட்டாளே என்ற கவலையில் இருந்தாள்..

‘போதாக் குறைக்கு இது வேறா..?’



2

தனம் நிறைந்த எம் பாரதத்தை..
கணப் பொழுதும் விட்டுத்தர மாட்டோம்..

“போதும்டி.. ரெண்டு பேரும் பெருமை பீத்திக் கிட்டது..”

வைரம் சிடுசிடுத்தாள்.. செவ்வந்தியும், தாமரையும் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள்.. சிநேகிதிகள் மூவரில்.. தனிப்பட்டு இணையும் அந்த இருவரின் நெருக்கத்தில் மூன்றாவதாய் ஒதுக்கப்பட்ட வைரம் தனிமைப்பட்டு விட்டதாய் மனம் குமுறினாள்..

‘இதுக்கு என்னத்துக்கு இவளுக என்னையும் சோட்டுப் பெண்ணா இணை சேர்த்துக்கணும்..? இவளுக மட்டும் கொஞ்சிக் குழாவிக்க வேண்டியதுதானே..?’

ஒன்றரை முழத்துக்கு அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டதில் மற்ற தோழிகள் இருவரும் அவளைச் சமாதானப் படுத்த முனைந்தார்கள்..

“பாருடி வைரம்.. இப்புடி முணுக்குன்னா முகத்தத் தூக்கி வைச்சுக்கக் கூடாது... பொண்ணுக்கு இது அழகில்ல..”

“அப்படின்னு யாரு சொன்னா..?”

“தாமரைக் குளத்தில குளிக்க வந்த கிழவிகள்ல ஒன்னுதான் சொல்லுச்சு.. சந்தேகமிருந்தா நீயே போயி

அப்புடியா கிழவின்னு கேட்டுட்டு வந்துரு.. என்னடி தாமரை..! நான் சொல்றது சரிதான..?"

"நீயென்ன தப்பாவா சொல்லப் போற செவ்வந்தி..? போ வைரம்.. போயி கேட்டுட்டு வா.."

"எகத்தாளமாடி உங்களுக்கு..? இந்த வைரம் என்ன கிழவிகளப் பாத்து பயந்து ஓடறவளா..?"

"பின்னே..? இல்லயா..?"

"நொல்ல.. போதுமா..?"

"போதாது வைரம்..! அப்புடியே பின்னால திரும்பிப் பாரு.."

"என்ன அலுவலுக்கு..?"

"பாத்தாத்தான தெரியும்.."

"என்னத்தடி பாக்கச் சொல்றீங்க..?"

தெனாவெட்டாகத் திரும்பிப் பார்த்த வைரம் அரண்டு விட்டாள்.. குளிக்க குளத்தில் இறங்கின மூதாட்டிகள் இருவரும் குளித்து முடித்து வந்து கொண்டிருந்தார்கள்..

"இதுகள யாருடி இத்தன விரசா குளிச்சு முடிக்கச் சொன்னது..?"

வைரம் ஓடிப்போய் மரத்தின் பின்னால் மறைந்து கொண்டாள்.. தாமரையும்.. செவ்வந்தியும் கை நீட்டிச் சிரித்தார்கள்..

"இதப் பாருடி.. இவ கிழவிகளப் பாத்து பயந்து ஓடாதவளாம்.."

செவ்வந்தி சொல்லிக் கொண்டிருக்கும் போதே தாமரையும் வைரத்துடன் பதுங்கிக் கொண்டாள்..

"ஏண்டி..?" செவ்வந்திக்கு ஒரு மண்ணும் விளங்க வில்லை..

"யாருடி இவ..! அந்தப் பாட்டி என்னைப் பாத்தா.. மருதாயியோட பேத்தி இன்னும் வீட்டுப் பக்கம் போகாம புளிய மரத்தடியில என்னடி பண்றேன்னு பிலாக்கணம் பாட ஆரம்பிச்சிரும்.. தேவையாடி எனக்கு..?" விளக்கம் சொன்னாள் தாமரை..

"தேவையே இல்லை.." என்ற செவ்வந்தியும் ஓடி வந்து தோழிகளுக்கு மத்தியில் பதுங்கினாள்..

"நீ எதுக்குடி ஒளியற..?"

"ஒத்தையில அந்தக் கிழவிகிட்ட மாட்டிக்கச் சொல்றியா..? எதார்த்தமா மஞ்சக்கிழங்கப் பத்தி வைரம் ஒத்தை வார்த்த பேசிப்புட்டா.. அதுக்கு அந்தக் கிழவிக இவள கூடையில ஆய்ஞ்சு போட்டுக் கொட்டிக் கவிழ்த்திருச்சுக.. நான் மாட்டிக்கிட்டா அவ்வளவுதான்.. ஒன் சோட்டுப் பொண்ணுக வீட்டத் தேடிப் போயிட்டாகளே.. ஒனக்கு மட்டும் புளிய மரத்தடியில என்னடி வேலைன்னு புளியங்கிளையை விட்டுப்புட்டு என்னை உலுக்கிறாதுகளா..?"

"அதச் சொல்லு.."

தாமரை ஆமோதித்தாள்.. வைரமோ கிடைத்தது வாய்ப்பென்று செவ்வந்திக்கு எடுத்துக் கொடுத்தாள்..

"அதுக உலுக்கினா நீ அசரக் கூடாது செவ்வந்தி.."

"இதப்பாருடா.. உறுதியான வைரம் யோசனை சொல்லுது.. கிழவிக கிட்டத்தில வராம தூரத்தில வருதுகங்கிற தெம்பு..?"

"எவடி இவ..! ஒன் நல்லதுக்குச் சொல்ல வந்தா என்கிட்டயே மோத வர்றா.."

"யாரு..? நீ..? என் நல்லதுக்குச் சொல்ற..? சொல்லு.. சொல்லு.."

"புளியமரத்தடியிலயும்.. வேப்ப மரத்தடியிலயும் தான் எனக்குச் சோலிக் கழுதையிருக்குன்னு சொல்லுடி செவ்வந்தி..!"

வைரம் சிரிக்காமல் சொல்ல.. தாமரை அடக்க மாட்டாமல் சிரித்து வைத்தாள்.. அதில் உஷாரானாள் செவ்வந்தி..

'இதில ஏதோ வில்லங்கம் இருக்கு போல..'

வைரமாவது.. செவ்வந்திக்கு யோசனை சொல்கிறதாவது..

"என்னடி சொல்றா இவ..?" தாமரையிடமே கேட்டாள்..

"உனக்கு நிசமாவே புரியலையா..?"

"புரியலைடி.."

"அறிவுக்கொழுந்தே..! புளிய மரத்திலயும்.. வேப்ப மரத்திலயும் எது தொத்திக்கிட்டு இருக்கும்..?"

"எதுடி தொத்திக்கிட்டு இருக்கும்..?"

"என்னடி நீ..? எல்லாத்திலயும் விவரமா இருக்கிறவ.. இவ பேசற பகடிப் பேச்சக் கண்டு பிடிக்க முடியாம அல்லாடறியே.. ஏய்ய்.. இவ உன்னப் பேயின்னு சொல்றாடி.."

'ஓ..! அதுக்குத்தான் புளிய மரத்தடியிலயும், வேப்ப மரத்தடியிலயும் எனக்குச் சோலிக் கழுதையிருக்குன்னு சொல்லச் சொன்னாளா இவ..?'

செவ்வந்தி ரௌத்ரமானாள்.. கொலைவெறியுடன் வைரத்தை முறைத்தாள்.. அதற்குள் பாட்டிகள் புளிய மரத்தை அணுகி விட.. வைரம் செவ்வந்தியை எச்சரிக்கை செய்யும் விதமாக ஆள்காட்டி விரலை வாயின் மீது வைத்து சைகை செய்தாள்..

புளிய மரத்தடிக்கு வந்த மூதாட்டிகள் இருவரும் புளிய மரத்தை அண்ணாந்து பார்த்தார்கள்.. அவர்கள் முகத்தில் விசனம் வந்தது..

"சடைசடையாய் காய்ச்சுத் தொங்குது.."

"ம்ம்ம்.. பாத்தாலும் குத்தம்ன்னு சொல்லிப்புடப் போறாக.. நடையை எட்டிப் போடு.. வீடு போய் சேரலாம்.."

"ஆமாமாம்.. காலம் போன கடைசியில இந்தக் கருமாயம் நமக்கு எதுக்கு..?"

மூதாட்டிகள் வேகம் காட்டி அகன்று விட்டதில் தாமரை விழித்தாள்.. மரத்தின் பின்னாலிருந்த தோழிகள்

மூவரும் வெளியே வந்தார்கள்.. தாமரையின் கையிலிருந்த புளியம் பழம் காலியாகி இருந்தது.. அவள் மற்றுமொரு பழத்தைப் பறிக்க.. வைரத்தின் நாவில் எச்சில் ஊறல் அதிகமானது.. அவள் செவ்வந்தி தடுத்தும் கேட்காமல் புளியம்பழத்தைப் பறித்து விட்டாள்..

"தாமரை..! உன்னாலதாண்டி இவளும்.சொன்னப் பேச்சக் கேட்காம பழத்தில கைய வைக்கிறா.. போடுடி பழத்தக் கீழே.."

"என்ன அலுவலுக்கு..? கீழே போடறதுக்கா வேலை மெனக்கெட்டு பழத்தப் பறிச்சேன்..?"

தாமரை செவ்வந்தியின் கோபத்தை சட்டை செய்யாமல் பழத்தைச் சுவைக்கத் தொடங்கினாள்.. வைரத்தின் நாக்கு சப்புக் கொட்டியது.. அவளும் கையிலிருந்த புளியம்பழத்தின் ஓட்டை நீக்கி உள்ளேயிருந்த பழத்தைச் சுவைக்க ஆரம்பித்தாள்..

"ஹீ ஆர் யு..?"

பலமான அதட்டல் ஒலியில், பெண்கள் மூவரும் பயந்து போனார்கள்.. செவ்வந்தியின் பார்வை..

'சொன்னேனே.. கேட்டிங்களா..?'

என்று தோழிகளைச் சாடியது.. தாமரையின் விரல்கள் நடுங்க ஆரம்பித்ததைப் புரிந்து கொண்டவளாய் அவள் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்.. வைரமோ வாயில் வைத்திருந்த புளியம் பழத்தை மெல்லவும் முடியாமல்.. துப்பவும் முடியாமல் திணறி திக்கு முக்காடினாள்..

"இஃது பிரிட்டிஷ் கவர்ன்மென்டுக்கு சொந்தமன மறம்.."

குதிரையில் அமர்ந்திருந்த அந்த ஆங்கிலேயன் தமிழைக் கர்ண கடூரமாக அவன் விருப்பத்துக்கு ஏற்ப உச்சரித்து கொலை செய்தான்.. அவன் நாக்கை இழுத்து வைத்து வசம்பைத் தேய்த்து..

'மறம் இல்லடா மடச்சாம்பிராணி..! மரம்..! எங்கே சொல்லு.. மரம்..! மறம்ன்னா வீரம்ன்னு அர்த்தம்டா..' என்று செவிட்டில் நான்கு அப்பு அப்ப வேண்டும் போல ஆத்திரம் கிளர்ந்தது செவ்வந்திக்கு..

"இவன் என்னடி நம்ம ஊர் மரத்த இவங்க ஊரு மரம்ங்கிறான்.." வைரம் முணுமுணுத்தாள்..

செவ்வந்தி பார்வையால் அவளை எரித்ததில்.. வாயில் ஆள்காட்டி விரலை வைக்காமலே வாயை மூடிக் கொள்ளப் போனாள்.. அங்கேயிருந்த புளியம்பழம் இனித்து வைத்ததில்.. இந்தப் பழம் எங்கள் ஊர் பழமில்லையா என்ற துயரம் அவள் மனதைக் கவ்வியது..

"பலத்தக் கீள போடு.."

மறுபடியும் அவன் தமிழை அனாவசியமாக வம்புக்கு இழுத்ததில் துயர் கொண்டாள் செவ்வந்தி.. அந்த ஆங்கிலேயன் தமிழைப் பேசி அவளைக் கொல்வதற்குப் பதிலாக பீரங்கியால் அவள் உடலை சல்லடையாக்கி விடலாமே என்று நொந்து போனாள்..

"போட்டுத் தொலைங்கடி.."

அவளின் சீறலில் தாமரையும்.. வைரமும் கையில் இருந்த புளியம் பழத்தை வீசியெறியச் சித்தமான போது.. மோட்டார் காரின் ஒலி அருகாமையில் ஒலித்தது.. அதைக் கேட்டதும் குதிரையில் உட்கார்ந்திருந்த ஆங்கிலேயனின் உடல் விரைத்தது..

'அட..! நம்மள நடுங்க வைக்கிற இவன நடுங்க வைக்கவும் ஆள் இருக்கா..?'

அந்தப் பெண்கள் ஆச்சரியத்துடன் மோட்டார் காரைப் பார்த்தார்கள்.. அதன் கதவைத் திறந்து இறங்கிய ஆங்கிலேயன் குதிரையில் இருந்தவனிடம்..

"வாட் ஹேப்பன் லாரன்ஸ்..?" என்று விசாரித்தான்..

"சர்.."

குதிரையில் இருந்தவன் தரையில் குதித்து காரிலிருந்து இறங்கிய ஆங்கிலேய அதிகாரிக்கு சல்யூட் அடித்தான்.. தாழ்ந்த குரலில் விளக்கம் சொன்னான்..

"ஈஸிட்..?"

நிமிர்ந்து அந்தப் பெண்களைப் பார்த்த ஆங்கிலேய அதிகாரியின் முகத்தில் எல்லையில்லாத ஆச்சரியம் வந்து அமர்ந்தது.. அவன் கண்களில் தோன்றி பிரகாசத்தில்..

'என்னடி இது..' என்று குழம்பிப் போனாள் செவ்வந்தி..

அவன் உற்றுப் பார்த்த பார்வையில்..

'அப்புடி இவன் யாரைப் பாக்கிறான்..?' என்று அருகாமையில் பார்த்த வைரத்துக்கு தூக்கிவாரிப் போட்டது..

அவன் தலைமுடியை விரிய விட்டிருந்த தாமரையை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் விழிகள் விரிந்து தரையைத் தொட்டுக் கொண்டிருந்த தாமரையின் கூந்தலை அளந்தன..

"வாட் எ லாங் ஹெய்ர்..!"

வாய் விட்டு அவன் சொல்லியதில் செவ்வந்தி மிரண்டாள்.. தாமரையை தன் முதுகிற்குப் பின்னால் மறைத்து நின்று கொண்டாள்..

ஆங்கிலேய அதிகாரியின் பார்வை செவ்வந்தியின் முதுகிற்குப் பின்னால் ஒளிந்திருந்த தாமரையைத் தேடிப் படிந்தது..

"ஷி இஸ் எ ஏன்ஜல்.." என்றான்..

"இவன் என்னத்தடி சொல்றான்..?" வைரம் செவ்வந்தியின் காதில் முணுமுணுத்தாள்..

"யாருக்குத் தெரியும்..?" செவ்வந்தி எரிச்சலுடன் கேட்டாள்..

ஆங்கிலேயரின் அலையும் பார்வையில் அவளது அடிவயிற்றில் தீ மூண்டது.. காண்பவரின் மனதைக் கட்டி இழுக்கும் கட்டழகியான தாமரையை மோகிக்கும் அவன் பார்வையில் அவள் மனம் பதறியது..

"இவங்கல டிஸ்டர்ப் பணாதே லாரன்ஸ்.."

தன் பங்குக்கு தமிழைக் கொடுமை படுத்தினான் அவன்.. அந்த லாரன்ஸீம் சும்மா இருக்காமல்.

"பணலை சர்.." என்று படுத்தி எடுத்தான்..

"பட் கேர்ள்ஸ்.. இன்த ஒரு தடவ மன்னிக்கரோம்.. இணம இதப் போள பலத்த பரிக்கம் குடது.. இன்த மறம் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டுக்குச் சொந்தமனது.."

அவன் 'பிரிட்டிஷ் கவர்ண்மென்ட்..' என்ற வார்த்தையை மட்டும் மிகத் தெளிவாக உச்சரித்ததில்..

'இவன் தமிழ் பேசலைன்னு யார் இங்க அழுதா..?' என்று கோராமைப் பட்டுப் போனாள் செவ்வந்தி..

அந்த ஆங்கிலேய அதிகாரி தாமரையைப் பார்த்த படியே மோட்டார் காரில் ஏறினான்.. ஒரு வழியாய் கார் கிளம்பியதும்..

"அப்பாடி.." என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் செவ்வந்தி..

வைரத்தால் அப்படி நிம்மதியடைய முடியவில்லை.. அவள் கைக்கு எட்டி.. வாய்க்கும் எட்டிய புளியம்பழத்தை தொண்டைக்குள் விழுங்க முடியாமல் நிறுத்தி வைத்திருந்த துயரத்தில் இருந்தாள்..

கார் போன பின்பும்.. போகாமல் அவர்களையே முறைத்துப் பார்த்த லாரன்சின் பார்வையில் அவர்களின் குலை நடுங்கியது.. லாரன்ஸின் பூனைக் கண்களில் படிந்திருந்த வெறுப்பில் அவர்கள் குன்றிப் போனார்கள்..

"எப்புடிப் பாக்கிறான் பாரு.. எனக்கு நீ இணையான்னு கேக்கிறதப் போலயில்ல பாத்து வைக்கிறான்.." பொருமினாள் வைரம்..

"நீ சொன்னாலும் சொல்லாட்டியும் இவன் மனசில அப்புடித்தான் நினைச்சுக்கிட்டு இருக்கான்.." பல்லைக் கடித்தாள் செவ்வந்தி..

"யார் ஊரில.. யாரை வந்து.. யார் முறைக்கிறது..?"

"சத்தம் போட்டுத் தொலைக்காதேடி.. அவன் காதில விழுந்திரப் போகுது.."

"ச்சை..! இப்புடி அஞ்சி அஞ்சி பிழைக்கிற பிழைப்பு என்ன பிழைப்பு..?"

இதைத்தான் ஆதவனும் விழிகள் சிவக்கக் கேட்டுக் கொண்டிருக்கிறான்.. அவனது கோபத்தின் நியாயத்தை அந்தத் தருணத்தில் புரிந்து கொண்டாள் செவ்வந்தி..

என்னவோ.. காரில் வந்த வெள்ளைக்காரனிடம் லாரன்ஸைப் பற்றி அந்தப் பெண்கள் மூவரும் போட்டுக் கொடுத்து விட்டதைப் போல அவர்களை முறைத்தபடி குதிரையில் தாவி ஏறினான் அந்த லாரன்ஸ்..

'அப்புடியே வழுக்கி விழுந்து காலொடிஞ்சு போகனும்..'

வைரம் மனதுக்குள் ஏகத்துக்கும் ஆசைப் பட்டாள்.. அவள் ஆசை நிறைவேறவில்லை.. அந்த லாரன்ஸ் குதிரையிலிருந்து வழுக்கி விழுகாமல் இறுக்கிப் பிடித்து உட்கார்ந்து விட்டான்..

'ம்ஹூம்.. என்னைக்குத்தான் நான் நினைச்ச எண்ணம் நிறைவேறியிருக்கு..' வெறுத்துப் போனாள் வைரம்..

குதிரையும் கிளம்பி விட்டது.. வைரத்தின் தொண்டையில் சிக்கியிருந்த புளியம்பழமும் அவள் தொண்டையில் இறங்கி விட்டது..

“இப்புடியெல்லாம் கருமாயப்பட்டு இந்த புளியம் பழத்த தின்னுதான் ஆகனுமா..?” செவ்வந்தி எரிமலையானாள்..

“யாருடி இவ.. நம்ம ஊரு ஏரிக்கரைப் புளிய மரத்தில இருக்கிற புளியம்பழத்துக்கு எங்கேயோ இருக்கிற பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு உரிம கொண்டாடும்ன்னு நான் கனவா கண்டேன்..?” வைரம் சப்புக் கொட்டினாள்..

“இந்த ஊரே அவங்களுது.. இதில ஏரியும்.. ஏரிக்கரையில இருக்கிற புளிய மரமும் மட்டும் நம்மளுக்குச் சொந்தமாகிருமா..?” விரக்தியுடன் கேட்டாள் செவ்வந்தி..

தாமரையின் கையிலிருந்த புளியம் பழம் பிசுபிசுத்திருந்தது.. அவுள் ஏரிக்கரையோரமாக நின்று ஏரித்தண்ணீரில் கைகளைக் கழுவினாள்..

பரந்து விரிந்திருந்த ஏரி அது..! பொன் விளைந்த களத்தூர் என அழைக்கப்படும் அவர்களது கிராமத்தின் வற்றாத ஏரி.. அந்த ஏரி..! 1200 ஏக்கர் நிலப்பரப்பில் செங்கல்பட்டு நீஞ்சல் மடுவிலிருந்து கால்வாய் மூலம் தண்ணீர் நிரம்பிய ஏரி..! ஆதனூர், பெரும்பேடு போன்ற சுற்று வட்டாரத்திலிருந்த 15 கிராமங்களுக்கு அந்த ஏரியிலிருந்துதான் தண்ணீர் பாய்ந்தது.. 5200 ஏக்கர் விளை நிலங்கள் அந்த ஏரியினால் பயன் பெற்றன..

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை நீர்ப்பரப்பு தெரிந்தது.. செவ்வந்தி அக்கரையைப் பார்க்க முயன்றாள்.. தெரிய வில்லை.. புள்ளியாக தெரிந்த மறுகரையைப் பார்த்த வண்ணம் ஏரிக்கரையில் நடக்க ஆரம்பித்தாள்..

"இருடி.. நானும் கையக் கழுவிட்டு வாரேன்.."

வைரமும் ஏரிக்கரையில் இறங்கி தாமரையின் பக்கத்தில் போய் நின்று கைகளைக் கழுவினாள்.. செவ்வந்தி நிற்கவில்லை.. அவளது நடையில் வெளிப்பட்ட கோபத்தில்.. தோழிகள் இருவரும் அவசரமாக கரையில் ஏறி ஓட்டமும் நடையுமாக அவளைச் சென்றடைந்தார்கள்..

"எதுக்குடி எங்களை விட்டுட்டுப் போற..?"

"அப்படியொரு வேண்டுதல்டி எனக்கு.."

செவ்வந்தியின் மிளகாயின் காரத்தோடு கூடிய பதிலில் வைரம் வாயை மூடிக் கொண்டாள்.. தோழிகளை மௌனம் அரவணைத்துக் கொண்டது.. ஏரிக்கரையை ஒட்டிய விளை நிலத்தில் ஒரு பெண் களை எடுத்தபடி பாடிக் கொண்டிருந்தாள்..

"ஓரான் ஓரான் தோட்டத்தில..
ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்கா..
காசுக்கு ரெண்டு விக்கச் சொல்லி..
காகிதம் போட்டான் வெள்ளக்காரன்.."

காற்றில் மிதந்து வந்த அந்தப் பாடலில் செவ்வந்தி உதட்டைக் கடித்தாள்.. வைரம் சுவராஸ்யமாக பாட்டுப் பாடிக் கொண்டிருந்த பெண்ணைப் பார்த்து விட்டு..

"இந்தப் பாட்ட.. அந்த லோரன்ஸீ கேட்டிருக்கணும்.." என்றாள்..

"லோரன்ஸா..?" தாமரை புருவங்களை உயர்த்தினாள்..

"லோரன்ஸீதான்.. பின்னே..? அவன் பேர ஒழுங்காச் சொல்லனுமாக்கும்..? அவன் மட்டும் நம்ம தமிழ ஒழுங்காவா பேசறான்..?"

"விடுடி.. அவனுக்கு நம்ம மொழியத் தெரியாதில்ல.."

"தெரியாதுன்னா இங்கே ஏன் இருக்கனும்..? பொட்டியக் கட்டிக்கிட்டு அவன் ஊரப் பாத்து ஓட வேண்டியதுதான..?"

வைரம் கேட்ட கேள்விக்குத் தாமரை பதில் சொல்ல வில்லை.. செவ்வந்தி சொன்னாள்..

"பொட்டிய எதுக்குடி கட்டச் சொல்ற..? வெறுங்கை யோட வந்தவன் வெறுங்கையோடதான் போகனும்.. பொட்டியில அவன் கட்டிட்டுப் போறது நம்ம நாட்டோட செல்வம்டி..."

தாமரை செவ்வந்தியை ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

"அப்புடியே எங்கண்ணனும்.. உங்கண்ணனும் பேசறதைப் போலவே இருக்குடி செவ்வந்தி.. எப்புடித்தான் இப்படிப் பேசறியோ.."


"இத நான் பேசலைடி தாமரை..! சுப்பிரமணிய சிவான்னு தேசத் தலைவர் ஒருத்தரு பேசினாராம்.. உங்கண்ணன் தான் சொன்னாரு.. போன வருசமே

'வெள்ளையனே.. வெளியேறுன்னு...' காங்கிரஸ் கட்சியோட பொதுக்கூட்டத்தில காந்தி சொல்லிட்டாராம்.. இவனுகதான் போகாம இங்கேயே டேரா போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கானுக.."

"அதுசரிடி செவ்வந்தி..! உங்கண்ணன் அடிக்கடி காணாமப் போகிறாரே.. எங்கே போகுறாரு..?"

வைரத்தின் கேள்வியில் செவ்வந்தியும்.. தாமரையும் மனம் அதிர ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



2

அடிமையென்னும் விலங்கினிலே...
அன்றொருநாள் கட்டுண்டிருந்தோம்..

மற்ற நேரமாக இருந்தால்.. வயலெட் பேசிய பொடியை அடக்கிய விசமப் பேச்சிற்கு தர்ஷிணி வேலையை மூட்டை கட்டிப் போட்டு விட்டு படு இண்ட்ரெஸ்டாக அவளைத் தூண்டி விட்டிருப்பாள்..

"யாருப்பா உச்சாணிக் கொம்பு..? யாருப்பா ஏக்கப் படறது..?" என்று நொட்டை விட்டுக் கேட்டிருப்பாள்..

அப்போது கதையே வேறு.. தாமோதரனைப் பற்றிய பேச்சை அவள் காது கொடுத்துக் கேட்டிருக்கவும் கூடும் என்று எவரேனும் சொன்னால் தாமோதரன் நம்பாத அளவிற்கு தங்கக் கம்பியைப் போல வேசம்

போட்டிருந்தவளுக்கு அந்த வேசம் கலைந்த பயம் வந்து விட்டது..

"பாருப்பா ரேகா.. இதுக்கும் எனக்கும் யாதொரு சம்பதமுமில்லை.." என்று கழன்று கொள்ள முனைந்தாள்..

"'இது'ன்னு யாரைச் சொல்ற.. 'இதையா..?'"

ரேகா வயலெட்டை அம்ஃறிணையாக்கி கை காட்டிக் கேட்க.. வயலெட்டிற்கு முகம் ஜிவுஜிவுத்து விட்டது..

"இதுவா..?" அவள் பொங்கினாள்..

"நான் சொல்லலைடிம்மா.. இந்த தர்ஷிணிதான் சொன்னா.. உன் முன்னாலதான சொன்னா..? நீயும்தானக் கேட்ட.."

வயலெட்டின் முகத்தில் சற்றுமுன் தவழ்ந்த விசமச் சிரிப்பு இடம் மாறி இப்போது ரேகாவின் முகத்தில் தவழ்ந்தது.. வயலெட்டையும் தர்ஷிணியையும் கோர்த்து விட்டு.. அவள் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

உண்மையில் வயலெட் தன் போக்கில்தான் போய் கொண்டிருந்தாள்.. தர்ஷிணிதான் அவளைக் கூப்பிட்டு.. வாயைக் கிள்ளி.. உணக்கையாக வம்பு பேச வைத்து.. ஆனந்தமாக கேட்டுக் கொண்டிருந்தாள்..

'இப்ப என்னடான்னா.. இதுக்கும் எனக்கும் சம்பந்த மில்லைங்கிறாளே..' வயலெட் காளிஅவதாரம் எடுத்தாள்.. தர்ஷிணி அதற்கெல்லாம் அலட்டிக் கொள்ளவே இல்லை.. நீ எந்த அவதாரம் எடுத்தாலும்.. எனக்கு என்

வேலை மட்டும்தான் முக்கியம் என்பதில் அவள் திடமாக இருந்தாள்..

"இதுவா..? இதுன்னு 'எதைச்'சொல்ற..?"

'எதை' என்று சொல்லும் போது ரேகாவைப் பார்த்தபடி அழுத்தம் திருத்தமாக அந்த வார்த்தையை வயலெட் உச்சரித்தாள்..

'அடிப்போடி...!' அலட்சியப் புன்முறுவலுடன் வயலெட்டை மண்ணைக் கவ்வ வைத்தாள் ரேகா..

தர்ஷிணியோ வில்லாதி வில்லியிலும் கடைந்தெடுத்த வில்லியாக இருந்தாள்.. வயலெட்டை யாரோ.. எவரோ என்று.. முன்னே பின்னே அறிமுகமில்லாததைப் போலப் பார்த்து வைத்தாள்..

"பாரு வயலெட்..! உனக்கு ஒருத்தங்களைப் பிடிக்காதுங்கிறதுக்காக இப்படியெல்லாம் பேசக் கூடாது.."

தர்ஷிணி அறிவுரை சொல்லியதில் வயலெட் காண்டாகிப் போனாள்..

"எனக்கு யாரைப் பிடிக்காது..?"

"அதை என் வாயால சொல்ல விரும்பலை.."

"ஏண்டி..? வேற யாரோட வாயால சொல்ல விரும்பற..? என் வாயாலயா..?"

"உன் வாயால நீ சொல்றதுக்கெல்லாம் நான் பிணையில்லை.. எனக்கெதுக்கு வம்பு..? நானுண்டு.. என்

வேலையுண்டுன்னு இருக்கிற இடம் தெரியாம வேலை பார்த்திட்டுப் போகிறவ நானு..”

“அட..! அப்படியா மேடம்..? அப்புறம் என்ன அலுவலுக்குடி வழியோட போன என்னக் கூப்பிட்டு வாயைக் கிண்டி கிழங்கை எடுத்த..?”

“யாரு..? நான்..? உன்னைக் கூப்பிட்டேன்..? குட்ஜோக்.. நீயா வந்தே.. ஏதோ பேசிக்கிட்டு இருந்த.. நீ என்ன பேசினேன்னு கூட நான் கவனிக்கலை.. நான் பாட்டுக்கு என் வேலையைப் பாத்துக்கிட்டு இருந்தேன்.. என்ன...”

“அடிப்பாவி..!”

ஆனானப்பட்ட வயலெட்டையே தர்ஷிணி பலகாரம் பண்ணிச் சாப்பிட்டதில் வயலெட் கொலைவெறி கொண்டாள்..

“நானாப் பேசிக்கிட்டு இருந்தேனா..?”

வயலெட்டுக்கு நெஞ்சுவலி வரும் போல ஆகிவிட்டது.. ரேகாவோ அதை அதிகப் படுத்துவதில் குறியாக இருந்தாள்..

“இதில என்ன ஆச்சரியம் தர்ஷிணி..? இவ எப்பவும் பக்கத்தில இருக்கிறவங்ககிட்டப் பேச மாட்டாளே.. போனைக் காதில குடுத்து.. தானாத்தானே பேசிக்கிட்டு இருப்பா.. அதை ஜி.எம். சொல்லிக் காட்டறாருன்னு தான அவர் மேல குத்தம் சொல்லிக்கிட்டே இருக்கா..”

“ரேகா..!”

"எதுக்குடி கத்தற..? தர்ஷிணி பாவம் இன்னொசெண்ட்.. நீ என்ன சொன்னேன்னு கூட இவளுக்குத் தெரியாதுங்கிறா.. அப்படித்தானே தர்ஷிணி..?"

"அப்சல்யூட்லி கரெக்ட் ரேகா.."

ரேகா பார்த்த பார்வையில் அடிபட்டுப் போனாள் வயலெட்..



3

எம் முந்தையர் வாழ்ந்த பூமி..! இதை அடிமை கொள்ளல் என்ன நீதி..?

"அவன் பெயர் ராபர்ட்..!"

விழிகள் சிவக்கச் சொன்னான் ஆதவன்.. தனஞ்ஜெயனின் முகத்தில் கவலை அப்பியிருந்தது..

"நம்ம ஜில்லாவுக்கு வந்திருக்கிற புதுக் கலெக்டராம்டா.."

"புதுசா வந்திருக்கிற திருடன்னு சொல்லுடா.."

"எல்லாம் ஒன்னுதான்.. அவன் நம்ம தாமரையை உத்து உத்துப் பாத்திருக்கான் ஆதவா.."

"என்னது..??..."

ஆதவனின் மீசை துடித்தது.. கை முஷ்டி இறுகியது..

"தாமரை சொன்னாளா..?"

"இல்லைடா.. உன் தங்கச்சி செவ்வந்திதான் சொன்னா.."

'தாமரை ஏன் சொல்லலை..?'

ஆதவனின் மனதை அந்தக் கேள்வி நிரடியது.. கன்னிப் பெண்ணொருத்தியை அயல் தேசத்திலிருந்து வந்திருக்கும் ஆங்கிலேயன் வித்தியாசமான முறையில் கூர்ந்து பார்த்திருக்கிறான்.. அதை அவள் உணராமல் இருப்பாளா..?

தனஞ்ஜெயனிடம் அந்தக் கேள்வியைக் கேட்டுவிட முடியாது என்பதில்.. தாமரையிடம் அந்தக் கேள்வியைக் கேட்டான் ஆதவன்.. அவள் விசுக்கென்று தலையைத் திருப்பி அவன் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தாள்.. பார்வைகள் கலந்ததில் ஆதவனின் மனதில் மோகத்தீ பற்றிக்கொண்டது.. அவன் தாபத்துடன் அவள் முகத்தை நெருங்கினான்.. அவள் விலகி உட்கார்ந்தாள்.. நினைத்தது நடக்காத கோபத்தில் ஆதவன் சிடுசிடுத்தான்..

"ஏண்டி..?"

"என்னைச் சந்தேகப் படறீங்களா..?"

ஊசியின் கூர்மையோடு நிதானமாக கேட்டாள் தாமரை...

"அடிச்சுப் பல்லைக் கழட்டிருவேண்டி.." உறுமினான் அவன்..

"அதான் உங்களை தீவிரவாதின்னு அண்ணன் சொல்லுது.."

"அவன் மிதவாதியாவே இருந்துட்டுப் போகட்டும்.. நான் தீவிரவாதியாவே இருந்துட்டுப் போறேன்.. இப்ப பேச்சு அதில்லை.."

"மகாத்மா மாதிரி மகான் பின்னால போனா உங்களுக்கு இம்புட்டுக் கோவம் வராது.. துப்பாக்கியத் தூக்கிக்கிட்டு நிக்கிற நேதாஜி பின்னாலே போறீங்க பாருங்க.. அதான் எதுக்கெடுத்தாலும் கோவம்.. எதுக்கெடுத்தாலும் விசாரணைன்னு சண்டைக்கு அலைகறீங்க.."

"நேதாஜியப் பத்தி உனக்கென்னடி தெரியும்..? ஒத்தை மனுசனா வெள்ளைக்காரன எதுத்து நிக்கிற துணிச்சல்காரருடி அவரு.. கட்சித் தலைமையைப் பிடுங்கிக்கிட்டு.. கட்சியை விட்டே அவரை வெளியேற வைச்சாங்க.. அவர் அசரலையே.. ஜனநாயக முறைப்படி காங்கிரஸ் கமிட்டியோட தலைமைப் பதவியை ஒரு தடவைக்கு ரெண்டு தடவை ஜெயிச்சவருடி அவரு.. ரெண்டாவது தடவை 1939-ல அவரு ஜெயிச்சப்ப காந்தி அத ஏத்துக்கலடி.. சுபாஷ் சந்திரபோஸோட வெற்றி தனக்குப் பெரிய இழப்புன்னு சொல்லிக்கிட்டு உண்ணாவிரதம் இருந்தாருடி காந்தி.. நேதாஜி என்ன பண்ணினாரு தெரியுமா..? ஒரு வார்த்த கூட மறுத்துப் பேசாம போட்டி போட்டு ஜெயிச்ச கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா பண்ணினாரு.. கட்சியை விட்டும் விலகினாரு.. காந்திக்குப் பின்னால காங்கிரஸ் இருக்கு.. தேசத் தலைவர்கள் இருக்காங்க தாமரை..! சுபாஷ்

சந்திரபோஸ் பக்கம் யார் இருக்கா..? ஆயிரக் கணக்கான இளைஞர் படை மட்டும்தான் இருக்கு.."

உணர்ச்சிப் பெருக்கோடு கூறினான் ஆதவன்..! அன்றைய கால கட்டத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு அவ்வாறுதான் இருந்தது.. இந்திய விடுதலைக்காக போராடிய காங்கிரஸில் மிதவாதிகள், அமிதவாதிகள் (தீவிரவாதிகள்..) என்ற இரு பிரிவுகள் ஏற்பட்டு விட்டன..

மிதிவாதிகள் சமாதானத்தை முன்னிறுத்தினார்கள்.. வன்முறையைத் தவிர்த்தார்கள்... ஆங்கிலேயரிடம் இணக்கமான முறையில் பேசி சுதந்திரத்தைப் பெறலாம் என்று கூறினார்கள்.. மகாத்மா காந்தி மிதவாதிகளின் தலைவராக இருந்தார்..

அமிதவாதிகள் (தீவிரவாதிகள்..) இதை எதிர்த்தார்கள்.. எமது நாடு, எமது உரிமை என்று சொன்னார்கள்.. வெள்ளைக்காரன் என்ன சுதந்திரத்தைத் தருவது..? நமது சுதந்திரத்தை நாமே கையில் எடுப்போம் என்பது இவர்களின் முழக்கமாக இருந்தது.. சுயராஜ்யம் எங்களின் பிறப்புரிமை என்று முழங்கிய பாலகங்காதர திலகர் அமிதவாதிகளின் தலைவராக இருந்தார்.. 1920-ல் இவர் இறந்து விட்டார்..

சித்தரன்ஜன்தாஸ் என்ற சி.ஆர்.தாஸ் திலகரின் வழி நடப்பவர்.. அவர் தீவிரவாதிகளின் தலைவராக மாற ஆரம்பித்ததில் காந்திக்கும், சி.ஆர். தாஸிக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட ஆரம்பித்தது..

சி.ஆர்.தாஸ் நேதாஜியின் குரு.. லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஐ.சி.எஸ் படிக்கப் போன சுபாஷ் சந்திரபோஸ்.. ஐ.சி.எஸ் தேர்வில் இந்தியாவிலேயே நான்காவது இடத்தில் 1920-ல் தேர்வாகி லண்டனிலேயே வேலையில் அமர்ந்தார்.. ஆனால் தனது தேசத்தை அடிமைப் படுத்தியிருக்கும் வெள்ளையரிடம் வேலை செய்யக் கூடாது என்று பதவியை லண்டனிலேயே துறந்து விட்டு.. இந்திய சுதந்திரப் போரில் பங்கு பெற விரும்புவதாக சி.ஆர் தாஸிற்கு கடிதம் எழுதினார்.. சி.ஆர்.தாஸ் ஓர் வழக்கறிஞர்.. தன் தொழிலை விட்டு விட்டு ஒத்துழையாமை இயக்கத்திற்கு தலைமை தாங்கி தேசப் பணியாற்றிக் கொண்டிருந்தவர்.. சுபாஷின் கடிதம் கிடைத்ததும் அதை ஏற்றுக் கொண்டதாக பதில் கடிதம் எழுதினார் சி.ஆர்.தாஸ்..

"லண்டனில் கிடைத்த ஒரே சந்தோசம், வெள்ளைக்கார சேவகன் என் ஷீவுக்கு பாலிஷ் போட்டது.." என்று கூறிய சுபாஷ் சந்திரபோஸ் 1921-ல் மும்பை வந்து சேர்ந்தார்..

இதே காலகட்டத்தில் தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பியிருந்த காந்தி இந்திய சுதந்திரப் போரில் ஒரு முக்கியமான அங்கமாக இருந்தார்.. சுபாஷ் சந்திரபோஸ் காந்தியைச் சந்தித்தார்.. ஒரு மணி நேரம் நீடித்த அந்த சந்திப்பில் இருவருமே தாம் எதிர் எதிர் அலை வரிசையில் இருப்பதை உணர்ந்து கொண்டார்கள்..

போர் வேகம் கொண்ட சுபாஷ், காந்தியின் கீழ் தொண்டாற்றுவதை விட சி.ஆர்.தாஸின் கீழ் தொண்டாற்றவே விரும்பினார்.. சி.ஆர்.தாஸ் சுபாஷின் திறமையை நன்கு அறிந்து வைத்திருந்தார்.. அவர் நிறுவியிருந்த தேசியக் கல்லூரியின் தலைவராக 22 வயதே நிரம்பிய சுபாஷ் சந்திர போஸை 1922-ல் நியமித்தார் சி.ஆர்.தாஸ்..

லண்டன் கேம்பிரிட்ஜில் படிக்கும் போது மேல் நாட்டு விடுதலைப் போர்களையும், பிரிட்டினின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்த சுபாஷ் சந்திரபோஸ் அவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்..

1922-ல் 'வேல்ஸ்' என்னும் பிரிட்டிஷ் இளவரசர் இந்தியாவுக்கு வருவதாக இருந்தது.. கொல்கத்தாவில் மறியல் நடந்தது.. தொண்டர் படைக்கு நேதாஜி தலைமை தாங்கினார்.. வெள்ளையரால் கைது செய்யப்பட்டார்.. அக்டோபரில் விடுதலையானார்..

அதற்குள் காந்தி ஒத்துழையாமை இயக்கத்தையும்.. வரிகொடா இயக்கத்தையும் வலுப்படுத்தி விட்டு.. சில காரணங்களுக்காக அந்தப் போராட்டங்களை கைவிட்டதில் பலத்த கண்டனங்கள் எழுந்தன.. அதன் எதிரொலியாக 1922-ல் சிறையிலிருந்து வெளியே வந்த சி.ஆர்.தாஸ் காங்கிரஸ் மகாசபையின் தலைவரானார்..

1928-ல் சைமன் கமிசனை எதிர்த்துப் போராடிய 'லாலா லஜபதிராய்' வெள்ளையர்களின் தடியடியில்

இறந்தார்.. அந்தச் செயலைச் செய்த 'சாண்டர்ஸ்' என்னும் ஆங்கிலேய அதிகாரியை பகத்சிங்கும்.. ராஜகுருவும் சுட்டுக் கொன்றனர்.. வெள்ளையர்களிடம் அகப்படாமல் தலை மறைவாகி விட்ட அவர்கள் இருவரும் 1929-ஏப்ரல் 8-ம் தேதியன்று சென்ட்ரல் அசெம்பிளி ஹாலில் சட்ட வரைவு கொண்டு வந்த போது குண்டு வீசியதில் அகப்பட்டுக் கொண்டார்கள்..

பகத்சிங்கின் செயலை சுபாஷ் ஆதரித்தார்... சமரசமற்ற போராளி பகத்சிங் என்று சொன்னார்.. காந்தியோ பகத்சிங்கின் செயலை வன்மையாக கண்டித்தார்.. பகத்சிங்கிற்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.. பகத்சிங்கை தூக்குத் தண்டனையில் இருந்து காந்தி காப்பாற்ற வேண்டும் என்று காங்கிரஸில் இருந்த அமிதவாதிகள் (தீவிரவாதிகள்..) எதிர்பார்த்தார்கள்.. ஏனென்றால்.. வெள்ளையருடன் சமரசமாக போய் விடும் காந்தியின் வார்த்தைகளுக்கு இர்வின் பிரபுவிடம் செல்வாக்கு இருந்தது.. காந்தி அதைச் செய்ய வில்லை என்றும்.. பகத்சிங்கின் தூக்குத் தண்டனைக்கு ஆட்சேபமில்லை என்று இர்வின் நீட்டிய பத்திரத்தில் கையொப்பம் இட்டு விட்டதாகவும் பரவிய செய்தியில் அமிதவாதிகள் (தீவிரவாதிகள்) கொதிப்படைந்தனர்.. காந்திக்கான எதிர்ப்பலை தீவிரவாதிகளிடம் உருவாகி விட்டது..

சுபாஷ் சந்திரபோஸ் துடிப்பான இளம் தலைவர்.. அதுவே மக்களை வசீகரித்தது.. சுபாஷின் செல்வாக்குக் கூடியது.. காந்தி அதை விரும்பவில்லை..

"குருதியைக் கொடுங்கள்... உங்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தருகிறேன்.."

சுபாஷ் சந்திர போஸ் முழங்கினார்.. இளைஞர்கள் இவர் பின்னால் படையெனத் திரண்டார்கள்..

"தமிழ் நாட்டில் பசும்பொன் முத்துராமலிங்கத்தோட தலைமையில 600 இளைஞர்கள் சுபாஷ் சந்திர போஸோட படையில இணைஞ்சாங்க.." என்றான் ஆதவன்..

"அதில நீங்களும் ஒருத்தர்.. அப்படித்தானே..?"

தாமரையின் கேள்விக்கு ஆதவனின் மௌனம்தான் பதிலாக கிடைத்தது.. அவன் எதையும் சொல்ல மாட்டான்.. நாட்டின் அரசியல் நிலவரங்களை அக்கு வேறு.. ஆணி வேராக பிட்டுப் பிட்டு வைப்பவன்.. சுபாஷின் இந்திய தேசிய ராணுவத்தைப் பற்றிக் கேட்டால் மட்டும் பதில் சொல்லவே மாட்டான்..

அவன் பின்பற்றிய தலைவரின் தீரம் அத்தகையது..

"நான் தீவிரவாதிதான்.. எல்லாம் கிடைக்க வேண்டும்.. அல்லது ஒன்றுமே தேவையில்லை.. என்பது தான் எனது கொள்கை.."

1938-ல் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக சுபாஷ் சந்திரபோஸ் தேர்ந்தெடுக்கப்பட்டபோது இவ்வாறு முழங்கினார்..

அதை அவன் நினைவு கூர்ந்த போது.. அவர்கள் உட்கார்ந்திருந்த புல்தரையில் இருந்து ஒரு புல்லைப்

பிடுங்கி.. கடித்த வண்ணம் அறியாமையுடன் தாமரை வினவினாள்..

“எல்லாம் சரிதான்.. அவரோட பேரு சுபாஷ் சந்திரபோஸ்தான..? பின்னே என்னத்துக்காக நேதாஜி.. நேதாஜி.. அப்படின்னு கூப்பிடறாக..?”

அவளது அறியாமை ஆதவனைக் கவர்ந்தது.. அதை வெகுவாக விரும்பி ரசித்தான்.. அவனது விழிகளில் தென்பட்ட சுவராஸ்யத்தில் அவளது கண்ணங்கள் சிவந்ததில் அவன் மனம் கர்வம் கொண்டது..

அந்த சுற்று வட்டாரத்தின் பேரழகியின் மனம் அவனிடம் வசப்பட்டிருப்பதில் அவனுக்குள் வெற்றிப் பெருமிதம் வந்தது..

“அது அவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம்டி..”

“யாரு கொடுத்தது..?”

“மகாகவி ரவிந்திரநாத் தாகூர்..!”

“அவர் யாரு..?”

“உனக்குத் தெரியாது.. அவர் பெரிய கவிஞர்.. 1938-ல் சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரஸ் தலைவரானதை பாராட்டி அவரை சாந்தி நிகேதனத்துக்கு கூப்பிட்டு கௌரவித்து ‘நேதாஜி..’ங்கிற பட்டத்தைக் கொடுத்தாரு.. நேதாஜின்னா என்ன அர்த்தம் தெரியுமா..?”

“யாருக்குத் தெரியும்..?”

"ஊருக்கேத் தெரியும்.. உனக்குத்தான் தெரியலை.. ஏண்டி இப்படி இருக்கிற..? இதையெல்லாம் தெரிஞ்சுக்க வேணாமா..?"

"எங்கே தெரிஞ்சுக்கிறது..? அப்பாவும் அண்ணனும் வாயைத் திறந்தா காந்திஜியப் பத்தித்தான் பேசறாங்க.. நேதாஜியப் பத்தி நீங்க பேசினாத்தான் உண்டு.. நீங்களோ மாசத்தில பாதி நாளு தலைமறைவாய் அலையறீங்க.. இதில யாரு இதைப் பத்தியெல்லாம் எனக்குச் சொல்றதாம்..?"

பிணங்கிய தாமரையின் கன்னத்தில் அவள் எதிர்பாராத நொடியில் முத்தமிட்டான் ஆதவன்.. இமைமூடி நடுங்கிப் போனவளின் தளிர்விரல்கள் ஆதரவாய் அவளை அதிர வைத்தவனின் கரத்தையே பிடித்துக் கொண்டன..

நோயும் மருந்தும் ஒன்றாக அமைவது காதலில் தான்.. அதைப்போல.. வேட்டையாடும் வேடனிடம் விருப்பத்துடன் மான் சிக்கிக் கொள்வதும் காதலில்தான் நடக்கும்..

"தாமரை.." கிறக்கத்துடன் அழைத்தான் ஆதவன்..

"ம்ம்ம்.." அவன் தோள் சாய்ந்து முணுமுணுத்தாள் அவள்..

"நீ என்னுடையவடி.." முரட்டுத் தனமாக அவளது முகம் பற்றிக் கூறினான் அவன்..

அழுந்தப் பற்றிய அவனது கரங்களில் உண்டான வலியில் தனிவித சுகம் இருப்பதை அனுபவித்து உணர்ந்து

அதில் திளைத்துப் போனவளாக கண்களில் மயக்கத்துடன் அவனைப் பார்த்தாள் தாமரை..

"இல்லேன்னு யாரு சொன்னதாம்..?"

"அந்த நினப்பு உன் மனசில இருந்திருந்தா எவனோ ஒரு வெள்ளைக்காரன் உன்னை உத்துப் பாத்த சேதியை ஓடி வந்து என்கிட்டச் சொல்லியிருக்க மாட்டியா..?"

"எதுக்கு..? குண்டு வீசி அவனைக் கொல்லறதுக்கா..?"

"தாமரை..!"

"போதும்ங்க.. மாசத்தில பாதிநாளு காணாம போயிடறீங்க.. நீங்க திரும்பி வார வரைக்கும் உசிரை கையில பிடிச்சுக்கிட்டு இருக்கிற எனக்குத்தான் அந்தத் துயரம் தெரியும்.. அவன் என்னவோ சாதாரணமாத்தான் பார்த்தான்.. செவ்வந்திதான் உத்து உத்துப் பாத்ததா சொல்லியிருக்கா.."

"எதையும் எளிசா எடுத்துக்காதே தாமரை.."

"அதை நீங்க எனக்குச் சொல்றீங்களா..? வேடிக்கைதான்... உயிரை எளிசா எடுத்துக்கிட்டு விளையாடிக்கிட்டு இருக்கிறவரு எனக்கு அறிவுரை சொல்றாரு.."

"இது வீர விளையாட்டுடி.. இதை விளையாடிப் பார்த்தவங்களுக்குத்தான் இதோட அருமை தெரியும்.. நேதாஜிகிட்ட கத்துக்கிட்ட விளையாட்டுடி இந்த விளையாட்டு.."

"எல்லாம் சரிதான்... நேதாஜின்னா என்ன அர்த்தமாம்..?"

"மரியாதைக்குரிய தலைவர்ன்னு அர்த்தம்.. அந்த மரியாதைக்குரிய தலைவரைத்தான் கட்சியை விட்டு விலக வைச்சாங்க.."

கண்சிவந்தான் ஆதவன்.. 1939-ல் நடந்த நிகழ்வு அது.. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இருந்த காங்கிரஸின் மகத்தான சேவையில் ஓர் கரும்புள்ளியாக அமைந்து விட்ட நிகழ்வு அந்த நிகழ்வு..

1939-ல் இரண்டாம் முறையாக காங்கிரஸின் தலைமை பதவிக்குப் போட்டியிட்டார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.. போஸின் செல்வாக்கு உச்ச கட்டத்தில் இருந்த காலகட்டம் அது.. அதை அறிந்த காந்தி ராஜேந்திர பிரசாத்தையும்.. நேருவையும் சுபாஷ் சந்திர போஸை எதிர்த்துப் போட்டியிடுமாறு வற்புறுத்தினார்.. அவர்கள் மறுத்து விட்டார்கள்.. பட்டாபி சீதாராமையாவை நிறுத்தினார்.. தேர்தலின் முடிவில் பட்டாபி சீதாராமையா 1371-வாக்குகளைப் பெற்றார்.. சுபாஷ் சந்திர போஸோ.. 1580 வாக்குகளைப் பெற்று தேர்தலில் வென்று காங்கிரஸ் கமிட்டியின் தலைமை பதவியில் அமர்ந்து விட்டார்..

காந்தி அதை விரும்பவில்லை... பட்டாபி சீதாராமையாவின் தோல்வி தனக்கான மிகப் பெரிய இழப்பு என்று பகிரங்கமாகவே தெரிவித்த காந்தி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார்.. அதனால் நேதாஜி கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா

செய்தார்.. கட்சியை விட்டும் விலகினார்.. ஃபார்வார்டு பிளாக் என்ற கட்சியைத் தொடங்கினார்..

"ஜனநாய முறைப்படி நடந்த கட்சித் தலைமைக்கான தேர்தலில் அதிக ஓட்டு வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட ஒரு தலைவரை தலைமைப் பொறுப்பில் இருந்தும்.. கட்சியிலிருந்தும் நியாயமற்ற முறையில் விலகச் செய்தவர் காந்தி.. அப்போதிருந்துதான் நேதாஜிக்கான துரோகங்கள் ஆரம்பமாகின.. இதைப் போய் உன் அண்ணனிடம் சொல்லு.."

"எதுக்கு..? உங்களுக்கு பொண்ணுக் கொடுக்க மாட்டேன்னு அண்ணன் சொல்லிடறதுக்கா..?"

"அவன் என்னடி உன்னைப் பெண் கொடுக்கிறது..? நான் வீடு புகுந்து தூக்கிட்டு வந்து தாலியைக் கட்டிர மாட்டேன்..?"

ஆதவன் மீசையை முறுக்கியதில் மயங்கிப் போனாள் தாமரை.. அவள் விழிகள் பிரதிபலித்த மயக்கத்தில் மூழ்கிப் போன ஆதவன் தாமரையை இழுத்தான்.. துளிர் கொடியாய் அவன்மீது சரிந்தவளை அள்ளிக் கொண்டவனின் கைகளில் பூக்குவியலாய் சிக்கிக் கொண்டாள் அவள்..

புல்வெளியில் சரிந்திருந்தவளின் மீது சரிந்தவனின் மனம் தேசத்தை மறந்து நேசத்தில் நுழைந்தது... பூவிலும் மெல்லிய அந்தப் பூங்கொடியின் தேக வனப்பில் தன் மனதை பறி கொடுத்தான் ஆதவன்.. தாமரையின் நெற்றியில் படிந்த அவனது முரட்டு இதழ்களின் வேகத்தில்

அவள் கிளர்ந்தாள்.. அவனது கழுத்தை வளைத்த அவளது கரங்கள் அவனுடைய பின்னந்தலையின் பிடறி முடியை இறுக்கிப் பிடித்ததில் அவளின் உணர்ச்சிப் போராட்டம் வெளிப்பட்டது..

ஆதவனின் இதழ்கள் நெற்றியிலிருந்து அவளது கன்னத்தில் உரசி இறங்கி அழுந்தப் பதிந்தன.. ஏரித் தண்ணீரில் மூழ்கியதைப் போல மூச்சுத் திணறியவளின் இதழ்கள் துடித்தன.. துடித்த அவள் இதழ்களைத் தேடி வந்து அவனது இதழ்கள் கவ்விக் கொண்டதில் விழி மூடி மனதிற்குள் அரற்றினாள் தாமரை.. அவன் கரங்கள் அவளைச் சுற்றி வளைத்து இறுக்கிக் கொண்டன..


தேகங்கள் பிணைந்து கொண்ட அந்தப் பொழுதின் கூடலுக்கு.. அந்தி வேளையின் சூரியன் மட்டுமே சாட்சியாக இருந்தன.. ஆதவன் தாமரையை ஆக்ரமித்தான்.. அவளும் அதை மறுக்காமல் உடன்பட்டாள்..

அவனிடம் அடைக்கலமாகி விடத் துடித்தவளை அடைக்கலம் கொள்ள அவனும் துடித்தான்.. எங்கோ கேட்ட குதிரையின் குளம்படி ஓசையும்.. துப்பாக்கியின் தோட்டா சப்தமும் அவர்களைக் கலக்க விடாமல் பதறிப் பிரிய வைத்தன..

“ஓடி விடுங்கள்..” தாமரை பதறினாள்..

ஆதவன் ஓடவில்லை.. அவளையும் இழுத்துக் கொண்டு ஊருக்குள் விரைந்தான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



3

சாகசங்களால் பின்னப்பட்ட
அந்த நாள்களை நீ மறந்தாயா..?

"**ஷ**ட் அப் தர்ஷிணி..! என்னைக்காவது ஒருநாள் என்கிட்டமாட்டுவ.. அப்ப இந்த வயலெட் யாருன்னு உனக்குக் காட்டறேன்.."

மங்கம்மா சபதம் போல வயலெட் சபதம் போட்டு விட்டுப் போய் விட்டாள்.. சற்று முன்பு தலையோடு தலைமோத கிசுகிசுப்பாக ரகசியம் பேசிக் கொண்டிருந்தவர்களை பரம எதிரிகளாக மாற்றி விட்டு எதுவுமே நடக்காததைப் போல தர்ஷிணியைப் பார்த்து சிநேகிதமாக (?) சிரித்து வைத்தாள் ரேகா..

"இப்ப மட்டும் இவ யாருன்னு தெரியாதா..?"

தர்ஷிணி கிடைத்தது சாக்கென்று ரேகாவுடன் கூட்டணி போட்டாள்.. அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்ற தர்ஷிணியின் மனோபாவத்தைத் தெள்ளத் தெளிவாக புரிந்து வைத்திருந்த ரேகா.. ஒட்டாத பார்வை பார்த்தாள்..

"உனக்குத் தெரியாது ரேகா.. இவ எப்பப் பார்த்தாலும் ஜி.எம்.மைப் பத்தி இல்லாததையும்.. பொல்லாததையும் பேசிக்கிட்டே இருப்பா.." தர்ஷிணி போட்டுக் கொடுத்தாள்..

"யாருகிட்ட..?" நிதானமாக கேட்டாள் ரேகா..

"என்கிட்ட இல்லை.." அரண்டு போனாள் தர்ஷிணி..

"ஊஹூம்..?"

ரேகாவின் சிரிப்பிலிருந்து அவள் தர்ஷிணியின் பேச்சை நம்புகிறாளா.. இல்லையா என்று தெரியாமல் குழம்பிப் போனாள் தர்ஷிணி... மற்றவர்களிடம் செல்லுபடியாகும் அவளது சாகசங்கள் ரேகாவிடம் செல்லுபடியானதே இல்லை..

"நிஜம்தான் ரேகா.. நீ இதைப் பத்தி ஜி.எம். கிட்டச் சொல்லு.."

"ஏன்..? நீ சொல்ல வேண்டியதானே..?"

முகம் மாறாமல் ரேகா மடக்கியதில் அசடு வழிந்தாள் தர்ஷிணி..

"ஹி..ஹி.. எனக்கெதுக்கு வம்பு..?"

"எனக்கு மட்டும் வம்பு வந்தா பரவாயில்லைங் கறியா..?"

மறுபடியும் மடக்கினாள் ரேகா.. இப்படி மடக்கி மடக்கி அவள் கேள்வி கேட்டதில் ஒடிந்து போகும் நிலைக்கு ஆளானாள் தர்ஷிணி..

'இந்தத் தாக்கு தாக்கறாளே..'

ஈனஸ்வரத்தில் புலம்பிய அவளது மனதின் புலம்பல் ரேகாவின் காதுகளை எட்டியதாலோ என்னவோ.. அவள்

தாக்கியவரை போதும் என்று நகர்ந்து விட்டாள்.. தர்ஷிணிக்கு வந்த தலைவலி போக வெகு நேரமானது..

இதைப் பற்றி யாமினியிடம் சொன்ன போது..

"வயலெட்டைக் கூட ஒரு வகையில் சேர்த்துரலாம்.. இந்த தர்ஷிணியைத்தான் எந்த வகையிலும் சேர்க்க முடியாது யாமினி.. அவள் டேன்ஜரஸ் கேட்டகிரி.." என்றாள் ரேகா..

"ஏன் அப்படிச் சொல்ற..?"

"வயலெட் எதையும் நேருக்கு நேரா பேசிருவா.. நீதானே இப்படிப் பேசினன்னு கேட்டா.. ஆமாம்ன்னு தைரியமா ஒப்புக்கிட்டு சண்டைக்கு வருவா.. தர்ஷிணி அப்படியில்லை.. பிளேட்டை மாத்திப் போட்டு மத்தவங்களை மாட்டி விடறதில அவ எக்ஸ்பர்ட்.."

ரேகா சொன்னதை யாமினி அனுராதாவிடம் சொன்னாள்.. மகளுக்காக பஜ்ஜி போட்டுக் கொண்டிருந்த அனுராதா.. சூடான பஜ்ஜிகளை தட்டில் போட்டு மகளிடம் நீட்டினாள்.. சமையல் மேடையில் ஏறி உட்கார்ந்து காலாட்டி தாயிடம் கதை பேசியபடி பஜ்ஜியை மொக்கிய மகளைக் காணும் போது அனுராதாவுக்கு மன நிறைவாக இருந்தது..

இதுபோல மகள் இருக்க வேண்டுமென்றுதானே அவள் ஆசைப்பட்டாள்..?

வேலைக்குப் போக ஆரம்பித்ததில் இருந்து யாமினியிடம் தென்படும் மாறுதலை அனுராதா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்..

"உன் பிரண்டு வெள்ளைக்காரனுக மாதிரி.."

அனுராதா பஜ்ஜி போட்டபடியே இயல்பாக சொன்னாள்.. யாமினியின் கை அப்படியே நின்று விட்டது..

'வெள்ளைக்காரன்..!'

அவள் மனதில் குதிரை ஓடியது.. அதில் சிகப்புக்கலர் சராயும் தொப்பியுமாக.. துப்பாக்கிகளுடன் வெள்ளைக்கார சிப்பாய்கள் சுட்டார்கள்.. எங்கோ தொலைதூரத்தில் கதறல் ஒலி கேட்டது...

"யாமினி..!"

அனுராதாவின் அதட்டலில் யாமினி மிரண்டு விழித்தாள்..

"இன்னும் ரெண்டு பஜ்ஜி போடவான்னு கேட்டா.. இந்த முழி முழிக்கிற..? என்ன..? பழைய மாதிரி மெகாலு பிடிச்சிருச்சா..?"

அனுராதாவின் முறைப்பில் யாமினி சுதாரித்துக் கொண்டாள்..

"அதில்லைம்மா.. வெள்ளைக்காரங்களுக்கும் நம்ம ரேகாவுக்கும் என்ன சம்பந்தம்ன்னு யோசிச்சேன்.." என்று சமாளித்தாள்..

"அவ்வளவுதானா..?"

நிம்மதியுடன் அடுப்பைப் பார்க்கக் கிளம்பின அனுராதாவுக்கு அது அவ்வளவோடு நிற்கும் விசயமில்லை என்று தெரியவில்லை..



4

பொங்கு தமிழ் பாரதத்தின்..
சங்க நாதம் கேட்டிடுவாய்..

"நோ.."

அதிகாரத்துடன் ஒலித்தது ராபர்ட்டின் குரல்.. குதிரையின் மீதிருந்த லாரன்ஸின் முகம் கனலாய் தகித்தது.. அவன் விளக்கம் சொல்ல முயன்றான்..

"சர்.. ஹி இஸ் வெரி ஸ்டோரன்ஜரஸ் மேன்.. யு நோ.."

"ஐ நோ ஆல்.."

லாரன்ஸின் விளக்கத்தை ஒற்றை வரியில் தடுத்து நிறுத்தி விட்ட ராபர்ட்டின் விழிகள் ஓடிக் கொண்டிருந்த ஆதவனைப் பார்க்கவில்லை.. அவன் கை பிடித்து இழுத்துக் கொண்டு போன தாமரையைப் பார்த்தன..

அவளை முதன் முதலாகப் பார்த்தபோது விரிந்திருந்த கூந்தல் இன்று நீண்ட பின்னலாக அசைந்தாடியதில் அவன் மனமும் ஆடியது..

"வாட் எ கேர்ள்..!" வாய் விட்டு முணுமுணுத்தான்..

"சர்..?" லாரன்ஸ் கேள்வியாக நோக்கியதில் தன்னைச் சமாளித்துக் கொண்ட ராபர்ட் லாரன்ஸை கேள்வி கேட்டான்..

"அவன் ஸ்டோரன்ஜஸ் பெல்லோன்னு எப்புடிச் சொல்ற..?"

"சர்.. அவன் ஐ.என்.ஏ-வைச் சேர்ந்தவன்.."

"ஐ..ஸீ..."

இழுவையாய் இழுத்த ராபர்ட்டிற்கு அந்த விவரம் தெரியும்.. அதைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் ஒரு மாவட்டத்தின்.. அதுவும் தென்னிந்தியாவின் முக்கிய நகரமான மதராஸ் மாவட்டத்தின் கலெக்டராக அவன் பதவியேற்றிருப்பானா..?

ஆதவனை அவன் நன்கு அறிவான்.. 'ஐ.என்.ஏ' எனப்படும் இந்தியன் நேசனல் ஆர்மியான இந்திய தேசிய ராணுவத்தில் ஆதவன் இணைந்திருப்பதை ஆங்கிலேயரின் உளவுப்படை அவனுக்கு அறிவித் திருந்தது.. நேதாஜியின் பரம விசுவாசி அவன் என்பதை ராபர்ட் தெரிந்து வைத்திருந்தான்.. காடாறு மாதம்.. நாடாறு மாதம் என்பதைப் போல.. ஆதவன் பொன் விளைந்த களத்தூரில் சிறிது காலம் இருப்பதையும்.. தலை மறைவாய் சிறிது காலம் இருப்பதையும் ஆதவனைப் பற்றிய புள்ளி விவரங்கள் தெரிவித்திருந்தன.. லாரன்ஸ் கூறியதைப் போல.. பிரிட்டிஷாருக்கு அவன் அபாயகரமானவன்தான் என்பதை அறிந்தும்.. அறியாதவனைப் போல ராபர்ட் ஆதவனைத் தப்ப விட்டான்..

அதற்கான காரணத்தை ராபர்ட்டின் மனம் அறியும்.. அந்தக் காரணம் ஆதவனின் கரம் பிடித்து ஓடிக் கொண்டிருந்தது..

'பியூட்டிபுல் வுமன்..! லைக் எ ஏன்ஜல்..!'

பிரமிப்புடன் நினைத்துக் கொண்டான் ராபர்ட்.. அவன் கண் முன் தாமரையின் நீண்ட கூந்தல் நிழலாடியது.. கலெக்டர் பங்களாவுக்குத் திரும்பியதும் ஜோஸபினைத் தேடிப் போனான்.. மெழுகுவர்த்தியின் ஒளியில் தெரிந்த யேசுவின் படத்தை நோக்கி கரம் குவித்து.. மண்டியிட்டு இமை மூடி ஜெபித்துக் கொண்டிருந்தாள் ஜோஸபின்.. தாயின் பிரார்த்தனையில் குறுக்கிட மனம் வராமல் அவள் பிரார்த்தித்து முடிக்கும் வரை காத்திருந்தான் ராபர்ட்..

இமை மூடி ஜெபித்துக் கொண்டிருந்த ஜோசபின் சிலுவைக்குறி இட்டபடி கண் விழித்தாள்.. எதிரில் நின்ற ராபர்ட்டைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது..

"மை டியர் சன்..!" என்றபடி எழுந்து நின்றாள்..

"கம்மான் மம்மி.." அவள் கைபிடித்து அழைத்துச் சென்று ரப்பர் நுரை பதிக்கப்பட்ட நாற்காலியில் அமர வைத்தான் ராபர்ட்.. நாற்காலி நுண்ணிய கலை வேலைப் பாடுகளுடன் இருந்தது..

அந்தி மயங்கி இருள் சூழ்ந்த அந்த வேளையில் கலெக்டர் பங்களாவின் கூரை முகப்பிலிருந்து தொங்கிய லாந்தர் விளக்குகள் ஒளி விட்டு பிரகாசித்தன.. வெளிச்சத்தில் தெரிந்த மகனின் முகத்தில் தெரிந்த ஜொலிப்பில் ஜோசபின் மனம் கனிந்தாள்..

"சொல் மகனே..! என்னிடம் சொல்ல ஏதேனும் விவரம் இருக்கிறதா..?" ஆங்கிலத்தில் வினவினாள்..

"ஆம் அம்மா..! என் மனதை ஈர்த்த விவரம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வந்திருக்கிறேன்.." ராபர்ட் ஆங்கிலத்தில் பதில் உரைத்தான்..

தாயும் மகனும் அவர்களின் தாய் மொழியான நுனி நாக்கு ஆங்கிலத்தில் உரையாட ஆரம்பித்தார்கள்..

"அம்மா..! சிறு வயதில் எனக்கொரு கதை சொல்வீர்கள்.. நினைவில் இருக்கிறதா..?"

"ராபர்ட்..! உன்னைப் பார்க்கும் போது அச்சிறு வயது பாலகனைப் போலதான் எனக்குத் தோன்றுகிறது.. அம்மாவிற்கு அவளுடைய மகன் வளர்ந்து வாலிபன் ஆனாலும் பாலகன்தான்.."

"நல்லது.. அப்படியென்றால் உங்களின் மகனான இந்த பாலகனுக்கு அந்தக் கதையைத் திரும்பச் சொல்லுங்களேன்.."

"எந்தக் கதையைச் சொல்லச் சொல்கிறாய் மகனே..?"

"அதுதான்.. நீண்ட கூந்தலுடன் கூடிய இளவரசியின் கதை.."

"அதுவா..?"

ஜோஸபின் வியப்புடன் மகனை நோக்கினாள்.. ஒரு மாவட்டக் கலெக்டர்.. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உயர் அதிகாரி... நீண்ட கூந்தலையுடைய இளவரசியின் கதையை நினைவு கூர்கிறான்..

'இவனுக்கு என்ன ஆனது..?'

"அதுவேதான் அம்மா..! உயர்ந்த கோட்டையின் உச்சியில் இருக்கும் மாடி அறையில் இளவரசி இருப்பாள்.. அவளுக்கு நீண்ட கூந்தல் இருக்கும்.. அவளைச் சந்திக்க வரும் இளவரசன் மாடி அறைக்கு ஏறி வர தன் கூந்தலைக் கீழே விடுவாள்.. அந்த இளவரசன் கூந்தலைப் பிடித்துத் தொற்றி கோட்டையில் கால் பதித்து ஏறி.. கோட்டையின் உச்சியிலிருக்கும் மாடியறையை அடைந்து விடுவான்.."

"அருமையான கதையல்லவா அது..! எப்படி மறக்கும்..? ஆனால் ராபர்ட்.. இன்று அக்கதையை நீ நினைவு கொள்வதற்கான காரணம் என்ன..?"

"சொன்னால் நம்ப மாட்டிர்கள் அம்மா..!"

"நீ சொல் மகனே..! சொல்வது நீயென்பதால் உனது அம்மா நீ சொல்லும் அனைத்து செய்திகளையும் நம்புவாள்.."

"அக்கதையில் வரும் இளவரசியின் நீண்ட கூந்தலைப் போல இங்குள்ள ஒரு கிராமத்தில் வசிக்கும் இளம் பெண்ணொருத்திக்கு மிக நீளமான கூந்தல் இருக்கிறது அம்மா..!"

"அப்படியா..?"

"ஆமாம்.. அவளது கூந்தல் தரையைத் தொடுகிறது.."

"பார்க்க எப்படி இருப்பாள்..?"

"தேவதையைப் போல இருப்பாள்.."

ராபர்ட்டின் கண்கள் கனவில் மிதந்தன.. அதை கண்டு கொண்ட ஜோஸபின் கவலை கொண்டாள்..

இந்தியாவுக்கு அவள் வந்து சில நாள்களே ஆகியிருந்தாலும்.. இந்தியர்களின் மனநிலையை அவள் துல்லியமாக கணித்து வைத்திருந்தாள்..

ஓலைக்குடிசையில் வாழ்ந்தாலும்.. அவர்கள் நாடு விட்டு நாடு பெண் கொடுக்க மாட்டார்கள்.. பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பிய கவர்னராக இருந்தாலும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள்..

இத்தனைக்கும் மேலாக.. வெள்ளையர்களை நஞ்சாக நினைத்து அவர்களை விரட்டியடிக்க சுதந்திரப் போராட்டத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த 1943-ஆம் ஆண்டின் காலகட்டத்தில் ஒரு வெள்ளைக்காரத் துரை ஆசைப்படுகிறான் என்று.. இந்திய நாட்டில் பிறந்த தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விடுவார்களா என்ன..?

'இதை ஏன் ராபர்ட் நினைத்துப் பார்க்கவில்லை..?'

ராபர்ட் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது வேறாக இருந்து வைத்தது..

"அவள் மஞ்சளும், சந்தனமும் கலந்த பொன் நிறத்தில் தகதகக்கிறாள் அம்மா..! என்ன ஒரு அழகு தெரியுமா..! நீங்கள் பார்த்தால் வியப்பில் மயக்கம் போட்டு விடுவீர்கள்.. அத்தனை அழகு..!"

ராபர்ட்டின் மயக்கம் நிரம்பிய வார்த்தைகள் ஜோசபினுக்குத் துயரத்தைத் தந்தன.. அவளுக்கு ராபர்ட்டை விட்டால் சொந்தம் என்று சொல்லிக் கொள்ள

எவருமே இல்லை.. ராபர்ட் அன்பான மகனாக இருந்தான்.. தாயின்மீது பாசத்தைப் பொழிந்தான்.. இந்தியாவில் பணி புரிய வேண்டிய கட்டாயம் வந்ததும்.. தாயையும் உடன் அழைத்துக் கொண்டுதான் இங்கிலாந்தை விட்டுக் கிளம்பினான்..

'இப்படிப்பட்ட என் மகனுக்கு வெள்ளை இனத்தில் பிறந்த பெண் மீது நாட்டம் வந்திருக்கக் கூடாதா..?'

ராபர்ட்டின் அழகான தோற்றத்திற்கும்.. உயர் அதிகாரி உத்தியோகத்திற்கும்.. ஆங்கில உயர் அதிகாரிகளின் பெண்கள் பலர் போட்டி போட்டுக் கொண்டு அவனுடன் பேசிப் பழகத் துடித்தார்கள்..

அவர்களின் வட்டாரத்தில் நடக்கும் விருந்துகளில் ராபர்ட்டுடன் நடனமாட ஒரு குழுவே காத்திருந்தது.. மாறி.. மாறி.. ஏதாவது ஒரு பெண் வந்து ராபர்ட்டுடன் பேசிக் கொண்டே இருப்பாள்.. அவனுடன் வெளியில் செல்ல ஆர்வம் காட்டும் பெண்களை அவன் ஏதேனும் ஓர் காரணம் சொல்லித் தட்டிக் கழித்து விடுவான்..

பொன்னிறக் கூந்தலும்.. செம்பழுப்பு நிறக் கண்களும்.. மாசு, மருவற்ற வெள்ளை மேனியுமாக.. அவனைச் சுற்றி வளைத்த வெள்ளைக்காரப் பேரழகிகளின் மீது ஏன் அவளின் மகன் மனதைச் செழுத்தவில்லை..? அவர்களில் எவரையாவது அவன் சுட்டு விரலை நீட்டிச் சுட்டிக் காட்டியிருந்தால்.. இமைக்கும் பொழுதிற்குள் அந்தப் பேரழகியின் பெற்றோருடன் கலந்து பேசி..

அவளுக்கும் ராபர்ட்டுக்குமான மணத்தேதியை ஜோசபின் முடிவு செய்திருப்பாளே..

அப்படிச் செய்யாமல் இந்தியாவின் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ஒரு கிராமத்துப் பெண்ணை நோக்கி ராபர்ட்டின் சுட்டு விரல் நீள்கிறதே..

"ஓர் சிறு பார்வையைக் கூட அவளால் எதிர் கொள்ள முடியவில்லை அம்மா..! நாணித் தலை குனிகிறாள்.. அவ்வளவு நாணம்..! அவளின் வெட்கத்தில் சிவந்த முகத்தில் சூரியனின் ஒளிர்வை நான் கண்டேன் அம்மா.."

கவிதை போலச் சொன்னவனின் கண்களில் மின்னிய காதலில் ஜோசபினின் கவலை அதிகரித்தது.. இதுபோன்ற உணர்வுகள் ராபர்ட்டின் மனதில் என்று துளிர்க்கும் என்று காத்திருந்தவள் அவள்.. அது துளிர்த்து வரும் நேரத்தில் அதை வளரவிடக் கூடாதே என்று பதைப்பவளும் அவள்தான்..

"ராபர்ட்.."

தயக்கத்துடன் மகனை அழைத்தாள் ஜோசபின்.. அவள் சொல்வதை மகன் எவ்வாறு புரிந்து கொள்வானோ என்ற பதட்டம் அவள் முகத்தில் வெளிப்பட்டது..

"சொல்லுங்கள் அம்மா.."

"நான் சொல்வதை நீ தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது.."

ஜோசபினின் பீடிகையில் ராபர்ட் வியப்படைந்தான்.. அது போன்ற பீடிகைகளை ஜோசபின் அதற்கு முன்பு

பேசியவளல்ல.. எதுவாக இருந்தாலும் நேரடியாகப் பேசும் வழக்கமுள்ளவள்..

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்..?"

"காரணம் உள்ளது மகனே..! நான் சொல்வது உன் நன்மைக்காகத்தான்.. அதை நினைவில் கொள்.."

"ஆகட்டும்.. என்னவென்று சொல்லுங்கள்.."

"ராபர்ட்..! மற்றவர்களைத் துன்புறுத்தக் கூடாது.. மனித நேயம் வேண்டும் என்று சொல்லிச் சொல்லித்தான் உன்னை வளர்த்தேன்.. நீயும் அவ்வாறுதான் இருக்கிறாய்.. இந்தியாவுக்கு கிளம்பி வரும் போது.. வேண்டா மென்று நான் தடுத்தேன்.. இங்குள்ள அரசியல் சூழல் ஆங்கிலேயருக்கு எதிராக இருக்கிறது என்று சொன்னேன்.. நீ கேட்கவில்லை.. அனைவருடனும் நட்பு பாராட்டும் உனக்கு எவ்விதமான கெடுதலும் நேர்ந்து விடாது என்று சொன்னாய்..."

"அதை மட்டுமா சொன்னேன்..?"

"மற்றொன்றையும் வலியுறுத்தினாய் மகனே..! மறக்கவில்லை அதை.. உன் இடத்திற்கு வரும் வேறு ஒரு அதிகாரி உன் போல மனித நேயத்துடன் இருக்க மாட்டான் என்று சொன்னாய்.. ஏற்றுக் கொண்டு கூட வந்தேன்.."

"அதனால் என்ன அம்மா..?"

"நீ வர்ணனை செய்யும் பெண்ணைப் பற்றி உன் மனதில் பாராட்டுதல் மட்டுமே இருந்தால் நான் கவலை கொள்ளத் தேவையில்லை ராபர்ட்.."

மிகவும் யோசித்து.. வார்த்தைகளைக் கோர்த்துக் கவனமாகச் சொன்னாள் ஜோசபின்.. அவள் சொன்னதற்கு.. ஆமாம்.. என் மனதில் இருப்பது பாராட்டுதல் மட்டும்தான் என்று ராபர்ட் சொல்லி விட்டால் அவள் கவலைகொள்ள வேண்டிய அவசியமே இருக்காது..

அவன் அப்படிச் சொல்லவில்லை.. மாறாக..

"பாராட்டுதலுக்கும் அதிகமாக வேறு ஏதும் இருக்கக் கூடாதா அம்மா..?" என்று புருவங்களை உயர்த்திக் கேட்டு வைத்தான்..

"ராபர்ட்.."

"எனக்கு அவளைப் பிடித்திருக்கிறது அம்மா.."

"அவ்வளவுதானே.."

நிம்மதியானாள் ஜோசபின்.. 'ஐ லைக் ஹெர்..' என்ற ஆங்கில வார்த்தையை எந்தப் பெண்ணைக் குறித்தும் இயல்பாக பயன் படுத்தலாம் என்ற வெள்ளைக்காரர்களின் கலாச்சாரத்தில் ராபர்ட்டின் 'ஐ லைக் ஹெர்..' என்ற வார்த்தை அவளுக்கு நிம்மதியைக் கொடுத்தது..

நெடுநேரம் அந்த நிம்மதியை நீடிக்க விடாமல் அதன் மென்னியைப் பிடித்தான் ராபர்ட்..

"ஐ திங்க் ஐ லவ் ஹெர்.."

"வாட்..?"

இடி விழுந்ததைப் போல நிலை குலைந்து போனாள் ஜோசபின்.. அந்தப் பெண்ணைப் பிடித்திருக்கிறது

என்று சொன்னவன் கூடவே.. அந்தப் பெண்ணை நான் காதலிக்கிறேன் என்று நினைக்கிறேன் அம்மா என்று சொன்னால் என்னது.. என்று அவள் பதற மாட்டாளா..?

"ஏன் இந்தப் பதட்டம் அம்மா..?"

"ராபர்ட்.. அவள் இந்தியப் பெண்.."

"இருந்து விட்டுப் போகட்டுமே.. நீங்கள் கூட வெள்ளையர்கள் உயர்வுன்னு நினைக்கறிங்களா..?"

"நான் நினைக்கவில்லை ராபர்ட்.. அந்தப் பெண்ணைப் பெற்றவர்கள் நினைப்பார்கள்.."

"எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கலாம்.."

போகாத ஊருக்கு வழி சொல்லிக் கொண்டிருப்பவனை என்ன செய்வது என்று புரியாமல் என்னைக் காப்பாற்றும் தேவனே என்று மனதுக்குள் அரற்றினாள் ஜோசபின்..

'ஐ கேன் கன்வின்ஸ் தெம்..'

எவ்வளவு எளிதாக சொல்லுகிறான்..? அது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல என்பதில் ஜோசபினின் நிம்மதி பறிபோனது.. ராபர்ட் மாடிக்குச் சென்று விட்டான்.. ஜோஸபின் ஜீஸஸிடம் சரணடைந்தாள்.. இரவு உணவின் போது.. சாப்பாட்டு மேஜைக்கு வந்த ராபர்ட் கலங்கிச் சிவந்திருந்த தாயின் முகத்தைப் பார்த்தான்.. அவள் மனம் புரிந்ததில்..

"டோன்ட் வொர்ரி மம்மி.." என்றான்..

"ராபர்ட்.. உன் மனதை மாற்றிக்கொள்.."

"எதற்காக..? அந்தப் பெண்ணைச் சேர்ந்தவர்கள் என்னை என்ன செய்து விடுவார்கள்..?"

"நீ ஆங்கிலேய உயர் அதிகாரி..! உன்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது.. அந்தக் கவலை எனக்கில்லை.."

"பின்னே..?"

"அந்தப் பெண்ணின் காதல் கிடைக்கவில்லை யென்றால் உன் மனம் வருத்தப்படுமே.. அதை நினைத்துத்தான் கவலைப் படுகிறேன்.."

ராபர்ட் நிமிர்ந்து தாயைப் பார்த்தான்.. ஊடுறுவும் அவனது பார்வையில் இருந்தது என்ன என்று ஜோஸபினால் கண்டு கொள்ள முடியவில்லை.. வறுக்கப்பட்ட ரொட்டியில் வெண்ணெயைத்தடவி தாயின் முன்னால் இருந்த தட்டில் வைத்தவன் மென்மையாகப் புன்னகைத்தான்..

"அவள் என்னை காதலிப்பாள் அம்மா.."

அவன் மனக் கண்ணில் ஆதவனின் கை பிடித்து ஓடிக் கொண்டிருந்த தாமரை வந்து நின்றாள்..

எந்த நம்பிக்கையில் அவன் அந்த வார்த்தைகளைச் சொன்னான்..?

அவனுக்கே தெரியவில்லை.. கட்டுதிட்டங்கள் நிறைந்த கிரமாத்தில்.. அந்தி சாயும் பொன்மாலைப் பொழுதில்.. புல்வெளியின் மீது அவளது காதலனைக்

கட்டியணைத்து சரிந்திருந்த யுவதியின் மனதில் அவன் மீதான காதலை எப்படி அவன் உண்டாக்குவான்..?

அதைப் பற்றியெல்லாம் ராபர்ட் யோசிக்கவே இல்லை.. அவன் முடிவில் அவன் திடமாக இருந்தான்..

"ஒருநாள் அவள் உங்களிடம் வருவாள் அம்மா.. என்மீதான காதலை ஒப்புக் கொள்வாள்.."

"ராபர்ட்.."

"இந்தியாவை விட்டு நான் செல்லும் போது.. என் கைபிடித்து என்னுடன் வருவாள்.."

"எங்கே..?"

"இங்கிலாந்திற்கு.."

ஜோசபினுக்கு சிரிப்பதா இல்லை வருந்துவதா என்று தெரியவில்லை.. நடக்க முடியாத ஒன்றை நடக்கும் என்று நிச்சயத்துடன் சொல்லும் ராபர்ட்டை மறுத்துப் பேச முடியாமல் தவித்தாள்..

"நமது கலாச்சாரம் வேறு ராபர்ட்.."

"இருக்கட்டுமே.."

"நமது மதம் வேறு.."

"அதனால் என்ன..?"

"நமது வாழ்க்கைச் சூழல் வேறு.."

"இன்னும் எத்தனையைத்தான் சொல்வீர்கள் அம்மா..?"

"வேறுபாடுகள் மட்டுமே உள்ள ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்ள நீ நினைக்கலாமா..?"

"என் மனம் அவளை நினைத்து விட்டதே.."

"கேத்தரினை நினைத்துப் பார்.."

ராபர்ட்டின் கையில் இருந்த முள் கரண்டி வாயருகே செல்லாமல் அப்படியே நின்று விட்டது.. பொன்னிறக் கூந்தலை பின்னுக்குத் தள்ளியபடி அவனுக்கு கையாட்டி விடை கொடுத்த கேத்தரின் அவன் மனதில் எழுந்தாள்..

"நான் உன்னைக் காதலிக்கிறேன் ராபர்ட்.."

"ஆனால் எனக்கு உன்மேல் காதல் வரவில்லையே கேத்தரின்.."

"காத்திருக்கிறேன் அதற்காக.."

சொன்னபடி காத்திருந்தாள்.. அவள் மீதான ஈர்ப்பு காதலால் உண்டானதா.. இல்லை நட்பினால் உண்டானதா என்று இனம் பிரித்துப் பார்க்க முடியாத ராபர்ட் இந்தியாவுக்கு கிளம்பி விட்டான்..

"நான் திரும்பி வர பல வருடங்களாகும்.."

"ஆகட்டும்.."

"எனக்காக நீ காத்திருக்க வேண்டாம் கேத்தரின்.. அது வீணான கனவு.. உனக்கான துணையை நீ தேடிக்கொள்.."

"அது நீதான் ராபர்ட்.."

இதைத்தவிர அவள் வேறு எதையும் பேச மாட்டாள் என்பதினால் ராபர்ட் பேச்சை மாற்றி விட்டான்.. அவனையே பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்த கேத்தரின்..

"நானும் உன்னுடன் இந்தியாவுக்கு வருகிறேனே.." என்று இறைஞ்சுவதைப் போலக் கேட்டாள்..

அவளை மறுக்கிறோமே என்று ராபர்ட்டுக்கு வருத்தமாகத்தான் இருந்தது.. அவளை பரிவுடன் பார்த்தபடி தலையசைத்தான்..

"வேண்டாம்.. இங்கேயே இரு.. உன் பெற்றோருக்கு நீ ஒரே மகள்.."

"எனக்கு நீ ஒரே காதலன்.."

"பைத்தியம் போல பேசாதே.. உனக்கான துணை நானல்ல.."


ராபர்ட் கிளம்பி விட்டான்.. அவன் மறுத்த கோபத்தை மனதில் வைத்துக் கொள்ளாமல் பிரயாணத்திற்கான அனைத்து உதவிகளையும் செய்தாள் கேத்தரின்.. ஜோசபினுக்குத் தேவையான பொருள்களைத் தேடித் தேடி வாங்கிக் கொடுத்தாள்.. பெட்டி படுக்கைகளை கட்டித் தந்தாள்.. அவர்களை வழியனுப்பக் கூடவே வந்தாள்.. கப்பலில் ஏறியவர்களுக்கு விடை கொடுத்து கையசைத்தாள்..

கேத்தரினின் விழிகளில் வழிந்த கண்ணீரை நினைத்துப் பார்த்த ராடபர்ட் அதற்கு மேலும் சாப்பிடப் பிடிக்காமல் எழுந்து விட்டான்..

"குட் நைட் மம்மி.."

அவன் தூங்கப் போய் விட.. ஜோசபின் தூக்கத்தை தொலைத்து விழித்திருந்தாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



4

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் செய்த நாள் அது..

வாணலியின் சூடான எண்ணையில்

"சொய்ங்.. சொய்ங்.." என்ற சப்தத்துடன் பஜ்ஜிகள் பொரிந்து கொண்டிருந்தன..

கேஸ்-ஸ்டவ்வின் அனலைக் குறைத்தபடி அனுராதா பேசலானாள்..

"வெள்ளைக்காரனுக்கும் உன் பிரண்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகுது..? வெள்ளைக்காரங்களோட நாட்டில வியாபாரம் பண்ற கம்பெனியில வேலை பார்க்கிற சம்பந்தம்தான் இருக்குது.. நான் அதைச் சொல்லலை.."

"வேற எதைம்மா சொன்னீங்க..?"

"வெள்ளைக்காரங்க இப்படித்தான்.. அவனுககிட்டக் காட்டிக் கொடுக்கிறவங்கள நம்ப மாட்டாங்களாம்.. அவங்களாலே வெள்ளைக்காரங்களுக்கு நல்லதே நடந்தாலும்.. அவங்களை வைக்கிற இடத்திலதான்

வைப்பானுகளாம்.. எதிரிகளை நம்பலாம்.. துரோகிகளை ஒருநாளும் நம்பக் கூடாதுங்கிறது அவங்க சொல்லி வைச்ச டயலாக்தான் யாமினி..”

“ஓ..”

யாமினியின் கண்களில் கனவு மிதந்தது.. அது அவளை சுதந்திரத்துக்கு முந்தைய ஆண்டுகளுக்கு இட்டுச் சென்றது.. எங்கோ..

‘வந்தே மாதரம்..’ என்ற முழக்கம் கேட்க.. அவளும்..

‘வந்தே மாதரம்..’ என்று முழங்கப் போனாள்..

நல்ல வேளையாக தட்டில் இருந்த சூடான பஜ்ஜியில் அவளது கை பட்டு விட்டது.. சூடு பட்ட கை அவளது சுயநினைவை இழுத்து வந்ததில் அவள் முழங்காமல் தப்பித்தாள்..

“இன்னைக்கு எங்ககிட்ட உங்க ஆளுகளைக் காட்டிக் கொடுத்ததைப் போல.. எங்களையும் ஓர்நாள் காட்டிக் கொடுக்க மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்ன்னு நாக்கைப் பிடுங்கிக்கிறதைப் போலக் கேப்பானுகளாம்..”

அனுராதா சொன்னதையே அன்று இரவு முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தாள் யாமினி.. அடுத்த சில நாள்களில் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸிக்கு சில வெளிநாட்டுக்காரர்கள் விஜயம் செய்தார்கள்..

சித்தார்த்தனைப் பார்க்க வந்தவர்களை எதிரிகளை முறைப்பதைப் போல முறைத்து வைத்தாள் யாமினி.. ஏன் அவ்வாறு செய்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை..

என்னவோ அவர்கள் அவளது சொத்தைப் பிடுங்கி விட்டதைப் போல பகையுணர்வு அவளுக்கு உண்டானது.. முறைப்புடன் நிமிர்ந்தவளை வியப்புடன் அவர்கள் பார்த்தார்கள்..

"சித்தார்த்ததைச் சந்திக்க வந்திருக்கிறோம்.."

தெளிவான ஆங்கிலத்துடன் சொன்னவர்களின் நேர்த்தியான உடையும்.. தோற்றமும்.. அவர்கள் அதி முக்கியமானவர்கள் என்பதை அறிவித்தும் யாமினி அலட்சியமாக அவர்களைப் பார்த்து..

"அப்பாயிண்மெண்ட் வாங்கியிருக்கீங்களா..?" என்று அதிகாரத் தொனியில் கேட்டாள்..

அவர்கள் முகத்தில் வியப்புப் படர்ந்தது.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"வில்லியம் வந்திருப்பதாக அவரிடம் சொல் பெண்ணே..!" என்றான் அவர்களில் ஒருவன்..

"வில்லியம்ன்னா.. அவருக்குத் தெரிஞ்சிருமா..? நீங்கயார்.. எங்கிருந்து வந்திருக்கீங்க.. என்ன விவரமாய் அவரைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு அத்தனையும் சொல்லுங்க.. அவருக்கு அனுப்பி வைக்கிறேன்.. சார் உங்களைப் பார்க்க அலோவ் பண்ணினா பாருங்க.."

அவர்களின் முகம் பார்க்காமல் யாமினி கம்யூட்டரின் சின்னத்திரையில் கவனமாகப் பேசப்பேச.. அவர்களின் முகம் மாறியது.. செல்போனை ஒருவன் எடுக்க.. வில்லியம் அவனைத் தடுத்தான்..

"இந்தப் பெண் அவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத்தான் செய்கிறாள்.."

அவன் பொறுமையாக அவனுடைய விசிட்டிங் கார்டைக் கொடுத்தான்.. இடது கையால் அதை வாங்கிக் கொண்ட யாமினி.. பியூனைக் கூப்பிட்டு அதைக் கொடுத்தாள்.. அதை வாங்கிக் கொண்டு நகர்ந்தவனை நிறுத்தி வைத்து கதை பேசினாள்..

"இதையும் கொண்டு போப்பா.."

பிரிண்ட் அவுட் எடுத்திருந்த பேப்பர்களை படு பொறுமையாக அடுக்கி.. பிரித்து.. பைல்களில் கோர்த்து.. அதைவிடப் பொறுமையாக ஃபைல்களை ஒன்று சேர்த்து பியூனிடம் அவள் கொடுத்த போது இருபது நிமிடங்கள் கடந்திருந்தன..

எப்போதும் அப்படிச் செய்பவளல்ல யாமினி.. இப்போது ஏனென்றே தெரியாமல் அந்த வெள்ளைக் காரர்களின் மீது அவளுக்கு வெறுப்பு.. வெறுப்பாக வந்தது..



5

எனது நாட்டில் இருப்பதற்கு.. உனக்கு வரியை ஏன் கொடுக்க வேண்டும்..?

"[illegible]ரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையேன்னு எவனோ சொன்னானாம்.. அந்தக் கதையாய் இல்ல.. இந்த வெள்ளைக்காரங்க கதை இருக்கு..?"

காத்து மேட்டில் நெல்லடித்துக் கொண்டிருந்த தணிகாசலம் சொன்னதற்கு.. நெல்கதிரை சுமந்து வந்து கொண்டிருந்த பெண்கள் 'களுக்' என்று வாய் பொத்தி சிரித்தார்கள்..

"எதுக்குடி இம்புட்டுச் சிரிப்பச் சிரிக்கிறவ..?" மருதாயி அதட்டினாள்..

"எல்லாம் ஒன் மகன் பேசற பேச்சக் கேட்டுத்தான் சிரிக்கிறோம் பாட்டி.." என்றாள் ஒரு பெண்..

"ஏன்ய்யா தணிகாசலம்... எதுக்கு இந்த சொல வடையைச் சொன்னசாமி...? பாரு... இந்தக் குமரிக கருதடிக்கிறத விட்டுட்டு கதை பேசி சிரிக்கிறத.." மருதாயி குரல் கொடுத்தாள்..

"வேற ஒன்னுமில்லம்மா.. நம்ம ஊருல நாம குடியிருக்கிறதுக்கு இவனுக்கு வரி கொடுக்கனுமாம்.. இங்கே இருக்கிற அம்புட்டு செல்வத்தையும் கொள்ளை யடிச்சு மூட்டை மூட்டையா அவங்க நாட்டுக்கு அனுப்புறானுக.. இன்னும் போதலைன்னு நம்மகிட்ட வரி கேட்டு கொடுமை பண்றானுக.." தனிகாசலத்தின் குரல் உயர்ந்தது..

வேலை செய்து கொண்டிருந்தவர்கள் வேலை பாதி.. பேச்சு பாதியாக அவருடன் வார்த்தையாடினார்கள்.. வேலையாள்களுடன் வேலையாளாக கலந்து நின்று வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த தணிகாசலம்.. அது களத்து மேடு என்பதை மறந்து காந்தியம் பேசிக் கொண்டிருந்தார்..

"போன வருசம் நம்ம மகாத்மாகாந்தி பொதுக் கூட்டத்தக் கூட்டிச் சொல்லிப் புட்டாரில்ல.."

"என்னன்னு..?"

"வெள்ளையனே வெளியேறுன்னு சொல்லிட்டாரு.."

தணிகாசலம் பெருமையாய் சொல்லிக் கொண்டிருந்த போது அங்கே வந்தார் மருதாச்சலம்.. இளைய மகனைக் கண்டதும் மருதாயிக் கிழவியின் முகத்தில் இளக்கம் வந்தது.. பாசத்துடன் மகனைப் பார்த்தாள்.. தணிகாசலத்தின் முகமோ கடுமையானது..

'இவன் எங்கே இங்கே வந்தான்..? வாயை வைச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டானே.. ஊருக்குள்ள எப்ப வந்தான்..?'

அவரது கணிப்பு தவறவில்லை.. வேட்டியை மடித்துக் கட்டியபடி களத்து மேட்டில் இருந்தவர்களைப் பார்த்த மருதாச்சலம்..

"ஆமாமாம்.. வெள்ளயனே வெளியேறுன்னு சொன்னதும்.. வெள்ளயன் அதுக்கென்னங்க ஐயான்னு கிளம்பிப் போயிட்டானாக்கும்..? தீர்மானம் போட்டு வருசம் ஒன்னாச்சு.. அவன் நகராம அடிச்சு வைச்ச சிலையாட்டம் நங்கூரம் போட்ட கப்பலாட்டம் இங்கனதான் உக்காந்திருக்கான்.. இவங்க கூட்டம் கூட்டமா போட்டு தீர்மானங்கள நிறைவேத்திக்கிட்டு இருக்க வேண்டியது தான்.. அவன் எனக்கென்னன்னு நம்ம இந்தியாவில இருக்கிற அம்புட்டுச் சொத்தையும்

சுரண்டி ஒன்னு சேர்த்து அவன் தேசத்துக்கு அனுப்பிக்கிட்டு இருக்க வேண்டியதுதான்.. இப்படியேதான் காலம் போகப் போகுது..” என்று சொன்னார்..

“அதுதானே..?” ஒரு பெண் டூகவாயில் கையை வைத்துச் சொல்லவும் தணிகாசலத்திற்கு கோபம் வந்து விட்டது..

“என்னது அதுதானேன்னு ராகம் பாடற..?” என்று அந்தப் பெண்மீது எரிந்து விழுந்தார்..

“இல்லைங்க ஐயா.. சின்னய்யா சொல்றதிலயும் ஒரு அர்த்தம் இருக்குதுங்களே..” அந்தப் பெண் சொல்ல..

“என்னது..? சின்னய்யாவா..? நாக்க இழுத்து வைச்சு நறுக்கிருவேன்.. எங்கன வந்து யாரு பேரைச் சொல்றவ..?” என்று சேலை முந்தானையை இழுத்துச் செறுகிக் கொண்டு மருதாயி சண்டைக்கு கிளம்பி விட்டாள்..

“இவன் வந்து நின்னாலே இந்த வினைதான்..”

அதற்கும் தம்பியை முறைத்த தணிகாசலம் தாயை சமாதானப் படுத்த முனைந்தார்..

“அம்மா.. இந்தப் பொண்ணு ஒன்னும் நம்ம அப்பா பேரைச் சொல்லலை..”

“பின்னே..? சின்னய்யான்னு நெத்திப் பொட்டில ஆணியடிச்சதைப் போல எம் முன்னாலேயே சொன்னாளேய்யா.. என் புருசனைப் பெத்த அம்மாவே மகனைப் பேரு சொல்லிக் கூப்பிடாது.. வா.. சாமி..

போ சாமின்னுதான் சொல்லும்.. இந்தச் சின்னக் கழுதை என்னன்னா சின்னய்யான்னு என்னமோ இவதான் பேரு வைச்சதைப் போலச் சொல்றாளே.. இவளை சும்மா விடச் சொல்றியா..?”

“அட ஏம்மா நீ வேற.. இவ சொன்னது வேறம்மா..”

“வேற பேரை சொல்லலைடா பெரியவனே..! சின்னய்யான்னு அழுத்தம் திருத்தமா உங்கப்பா பேரையில்ல சொன்னா.. சின்னய்யாவாம் சின்னய்யா.. சிறுக்கி மகளே..! இருக்குடி உனக்கு..”

“அம்மா.. உனக்கு கோடி புண்ணியமா போகும்.. நான் சொல்ல வர்றதைக் கேளு..”

“கேட்டேண்டா மகனே..! என் ரெண்டு காதாலயும் கேட்டேன்.. இந்த சின்னக் குட்டி என் புருசன் பேரைத்தான் சின்னய்யான்னு சொன்னா.. உங்கப்பாவுக்கு கழுத்தை நீட்டி இத்தனை வருசமாகுது.. பிள்ளைகளைப் பெத்து பேரன், பேத்தியையும் பார்த்துட்டேன்.. இன்னும் உங்கப்பா பேரைக் கேட்டா நேரடியாச் சொல்ல மாட்டேன்.. சின்ன.. ஐய்யன்.. ரெண்டையும் சேருங்கன்னு சொல்லுவேன்.. எட்டுக் குருத்துக்கு இளையவ இவ.. என் முன்னாடியே என் புருசன் பேரை சின்னய்யா.. சின்னய்யான்னு ஏலம் போடறா..”

மருதாயிக் கிழவி விட்டு விளாசிக் கொண்டிருந்தாள்.. மாட்டைப் பிடித்துக் கொண்டு களத்து மேட்டுப் பக்கம் வந்த சின்னய்யன்..

'ம்ஹீம்..' என்று மானசீகப் பெருமூச்சை விட்டார்..

தாயின் வாயை அடைக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த தணிகாசலம் தகப்பனைக் கண்டதும் காக்கும் கரங்கள் வந்து விட்டது என்று ஆனந்தம் கொண்டு..

"இதோ.. அப்பாவே வந்தாச்சு.." என்று கூவினார்..

மருதாயிக் கிழவியின் வாயில் அரைபட்டுக் கொண்டிருந்த பெண் சின்னய்யனைக் கண்டதும்..

"நீங்களே ஒரு நாயத்தைச் சொல்லுங்க பெரியய்யா.." என்று முறையிட்டாள்..

"அடியாத்தி.." மருதாயிக் கிழவி கன்னத்தில் கை வைத்து அதிசயித்தாள்..

"இம்புட்டு நேரமும் சின்னய்யா.. சின்னய்யான்னு சொல்லிட்டு என் புருசனைக் கண்டதும் பெரியய்யான்னு கதையை மாத்திப் போடறாளே.. இம்புட்டுச் சின்ன வயசில இம்புட்டுச் சித்துராங்கித் தனமா..?"

"ஒரு ராங்கித்தனமும் இல்லை.." எரிச்சலுடன் சொன்னார் சின்னய்யன்..

"ஏண்டி மருதாயி.. என் பேர சின்னய்யா.. சின்னய்யான்னு ஏலம் போட்டது நீயா.. இல்லை இவளா..?"

"நான் ஏலம் போட்டேனா...? கேட்டியாடா மருதாச்சலம்.. உங்கப்பா என் மேல பழி போடறதை.."

உக்கிரமாக முறைத்தபடி உக்கிரசிம்மனாக நின்று கொண்டிருந்த தணிகாசலத்திடம் புகார் சொன்னால் வேலைக்கு ஆகாது என்று இளைய மகனிடம் அடைக்கலம் புகுந்தாள் மருதாயி..

"அவன்கிட்ட என்னடி பிராது கொடுக்கிற..?" என்று அந்த வழியையும் அடைத்தார் சின்னய்யன்..

"ஒரு சின்னப் பொண்ணு.. நாக்கை அடக்காம.. நாக்குமேல பல்லப் போட்டு.. அச்சமில்லாம.. உங்கள சின்னய்யான்னு பேரச் சொல்லிக்கிட்டு இருக்கா.. அவள என்னன்னு கேட்காம நீங்க என் மேல பாயுறீங்களாக்கும்..?"

"அவ ஒன்னும் என் பேரச் சொல்லலைடி.. நீதான் இதுதான் சாக்குன்னு வார்த்தைக்கு வார்த்தை சின்னய்யா.. சின்னய்யான்னு என் பேரச் சொல்லிக்கிட்டு இருக்கே.."

"என்னது..?"

"என்ன நொன்னது..? தணிகாசலத்துக்கிட்ட மருதாச்சலத்தப் பத்திச் சொல்லனுமின்னா சின்னய்யான்னு சொல்லாம வேற எப்படிச் சொல்லுவா..?"

சின்னய்யனின் கேள்வியில் மருதாயி வாயை மூடிக் கொண்டாள்..

'இந்தச் சின்னய்யா.. அந்தச் சின்னய்யாவா..?'

எதுவுமே நடக்காததைப் போல அவள் அதட்டி வேலை வாங்க முற்பட்டதில் களத்து மேட்டில் இருந்த பெண்கள் ரகசியம் பேசி சிரித்துக் கொண்டார்கள்..

அதற்கும் அவர்களை அதட்டினாள் மருதாயி..

"சிரிக்கனும்னா சொல்லு.. முழ நீளத்துக்கு வாய் கிழியும்.. வேலைக் கழுதையத்தான் ஒன்னும் காணோம்.. அடிக் குமரிகளா.. சிரிப்பாணிய விட்டுப்புட்டு சோலிக் கழுதய பாருங்கடி.."

கிழவி விரட்டிய விரட்டலில் குமரிகளுக்கு மீண்டும் சிரிப்பு வந்து விட்டது..

"இந்தக் கிழவி ஏண்டி எப்பப் பார்த்தாலும் கழுதையைக் கட்டி இழுக்குது..?"

"உன்னைக் கட்டி இழுக்கறதுக்கு கழுதையைக் கட்டி இழுக்கிறது மேல்ன்னு நினைச்சிருச்சு போல.."

"அது நீயா இருக்கும்டி.."

"இல்லயில்ல நீதான்.."

பெண்களின் முணுமுணுப்பில் மருதாயிக் கிழவிக்கு கோபம் வந்து விட்டது..

"அங்க என்னடி காதைக் கடிச்சுக்கிட்டு இருக்கிறவளுக..? வேலய முடிக்க மாட்டிகளா..?"

கிழவி போட்ட சப்தத்தில் அந்தப் பெண்களின் பேச்சுச் சப்தம் குறைந்தது.. தணிகாசலம் மருதாச்சலத்தை நோக்கி முறைப்பைத் திருப்பினார்.. சின்னய்யன் மௌனமாக சின்னமகனைப் பார்த்தார்.. அவரது விழிகளில் பாசம் வழிந்தது..

வரப்பில் வந்து கொண்டிருந்த தனஞ்ஜெயன் மருதாச்சலத்தைக் கண்டதும் சந்தோசத்துடன்..

"எப்ப வந்தீங்க சித்தப்பா..?" என்றான்..

மகனின் வரவேற்பில் ஏற்கனெவே உக்கிரமூர்த்தியாக நின்றிருந்த தணிகாசலம் தாண்டவ மூர்த்தியானார்..

"ஆமாண்டா.. ஒன் சித்தப்பன் சீமைக்குப் போயி வேலை பார்த்துட்டு வந்திருக்கான்.. நீ ஆரத்தித் தட்டோட வரவேற்புக் கொடு.. எங்கே குண்டு போடப் போனானோ.. யானை வரும் முன்னே.. மணியோசை வரும் பின்னேங்கிற மாதிரி.. ஆதவன் ஊருக்குள்ள வாரப்பவே நினைச்சேன்.. பின்னாடியே அவனோட ஆசானும் தொடுத்துக்கிட்டு வருவான்னு.. நினைச்சதைப் போல வந்து நின்னுட்டான்.."

தணிகாசலம் மடமடவெனப் பொரிய.. அதுவரை மௌனமாக நின்றிருந்த சின்னய்யன்.. நிதானமான குரலில்..

"ஏம்ப்பா.. இவன் வரக்கூடாதா..?" என்று கேட்டார்..

"அப்பா.." திகைத்துப் போனார் தணிகாசலம்..

"எனக்கு ரெண்டு பிள்ளைகள்ப்பா.. மூத்தவன் நீ.. கல்யாணம் பண்ணி.. ரெண்டு பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும் ஆகி.. குடித்தனம் பண்ணிக்கிட்டு இருக்கே.. இளையவனான இவனோ.. தேசத்துக்கு தொண்டு பண்ணப் போறேன்னு நாப்பத்தி மூணு வயசாகியும் கல்யாணம் கட்டாம தனிமரமா நிக்கிறான்.. தேச பக்தியை நீ காண்பிக்கிற விதம் பேற.. இவன் காட்டற விதம் வேற.. இரண்டில எது மேல்ன்னு நீயோ.. நானோ

முடிவு பண்ணக் கூடாது தணிகாசலம்.. காலம்தான் முடிவு செய்யனும்.. தனக்குன்னு ஒரு பாதை போட்டு போய்க்கிட்டு இருக்கிறவன் பிறந்த ஊரையும்.. பெத்தவங்களையும் பார்க்க வர மாட்டானாப்பா..?"

சின்னய்யனின் ஆழமான கேள்வியில் தணிகாசலத்தின் மனம் புண்பட்டு விட்டது.. அவர் என்ன மருதாச்சலத்தின் எதிரியா..? தம்பி மீது பாசமில்லாதவரா..?

புரட்சி வழியில் போராடுகிறேன் பேர்வழியென்று வாழ்நாளில் பாதியை தலைமறைவாய் காலம் கழிக்கும் இளையவனிடம் அவர் கோபம் கொள்ளக் கூடாதா..?

"என் சொத்தில பாதி இவனோடதுப்பா.. நாம குடியிருக்கிற வீட்டில இவனுக்கும் உரிமையிருக்கு.."

"பாதிச் சொத்து எதுக்குப்பா..? முழுசையும் இவனே எடுத்துக்கட்டும்.. வீட்டில ஏன்ப்பா இவன் உரிமை கொண்டாடனும்..? மொத்த வீட்டிலயும் இவனே குடியிருந்துக்கட்டும்.. கையும்.. காலோட.. என் பெண்டாட்டி பிள்ளைகளைக் கூப்பிட்டுக்கிட்டு சொத்தையும், வீட்டையும் விட்டுக் கொடுத்திட்டு வெளியேற நான் தயாராக இருக்கேன்.. இவன் வீட்டில அடங்கியிருக்கத் தயாரான்னு கேட்டுச் சொல்லுங்க.."

கோபத்துடன் கேட்டு விட்டுத் துண்டை உதறித் தோளில் போட்ட தணிகாசலம் விடுவிடுவென நடையைக் கட்டி விட்டார்.. வேகமாகப் போன பெரிய மகனை வெறித்துப் பார்த்த சின்னய்யனுக்கு பெருமூச்சு வந்தது..

இளைய மகனை ஏறிட்டார்.. நெடுநாள் பார்க்காத தவிப்பு கண்களை நிறைக்க..

"இளைச்சுட்டியேப்பா.." என்றார்..

மருதாயி சேலை முந்தானையை சுருட்டி வாயில் வைத்து அழுக ஆரம்பித்து விட்டாள்.. தாயைத் தேற்றி ஆறுதலாகப் பேசினார் மருதாச்சலம்.. பித்தளைத் தூக்கில் இருந்த கேப்பைக் கூழைக் கரைத்துக் குடுத்தாள் மருதாயி.. வாங்கிக் குடித்த மருதாச்சலம்.. காலித் தூக்கை தாயிடம் குடுத்தார்..

மருதாயிக்கு மன நிறைவாய் இருந்தது..

இதுபோல தினமும் இளைய மகனின் பசியாற்ற அவளால் முடிந்தாள் எவ்வளவு நன்றாக இருக்கும்..?

அது முடியாது என்பதில் அவளுக்கு நின்ற அழுகை திரும்பவும் வந்தது.. மருதாச்சலம் வேடிக்கையாகப் பேசி தாயின் அழுகையை விரட்டி விட்டார்..

களத்து மேட்டில் நெல்லடித்து முடித்திருந்தார்கள்.. கூலி நெல்லை அளந்து விட்டு... மூட்டை கட்டிய தனஞ்ஜெயன் ஆள்களை வைத்து நெல் மூட்டைகளை வண்டியில் ஏற்றினான்..

"சீமைக்குப் போயி படிச்சுட்டு வந்தவுக.. உத்தி யோகத்துக்குப் போகாம.. உழவில இறங்கிட்டிங்களே.."

மனது பொறுக்காமல் சொன்ன வேலையாளைப் பார்த்த தனஞ்ஜெயன்..

"இதுவும் உத்தியோகம்தான்.." என்றான்..

"இல்லீங்க எசமான்.. என்னதான் ஆனாலும்.. உத்தியோகம்.. உத்தியோகம்தானுங்களே.. கால்காசு வேலையா இருந்தாலும் அது கவர்ண்மெண்ட் வேலையா இருந்தா அதுக்கான மதிப்பே தனியாச்சுங்களே.."

"அந்த கவர்ண்மெண்ட் நம்ம கவர்ண்மெண்டா இருக்கனும்.. வெள்ளைக்காரன் கவர்ண்மெண்டா இருக்கக் கூடாது.."

தனஞ்ஜெயனின் உறுதியான பேச்சிற்கு பாராட்டுதலாக கை தட்டினார் மருதாச்சலம்..

"சரியாச் சொன்னேடா தம்பி.. நம்ம நாட்டு வேலையைப் பாக்க.. வெள்ளைக்காரன்கிட்டக் கை கட்டி நிக்கனுமா..?"

தனஞ்ஜெயன் சிரித்து விட்டு.. மாட்டு வண்டிகளில் ஒன்றில் தாவி ஏறினான்.. மற்ற வண்டிகளில் வண்டிக் கொருவராக மற்றவர்கள் ஏறிக் கொள்ள வீட்டை நோக்கி வண்டிகள் நகர்ந்தன.. மாடுகளின் கழுத்தில் கட்டப் பட்டிருந்த பட்டையில் கோர்க்கப்பட்டிருந்த சலங்கையின் நாதத்தில் மெய் மறந்தார் மருதாச்சலம்..

'இது எங்களின் தேசம்..!'

அவருக்கு அறைகூவ வேண்டும் போல இருந்தது.. தூரத்தில் தெரிந்த கலெக்டர் பங்களாவில் பிரிட்டிஷ் கொடி பறந்தது.. அவரது கண்கள் சிவந்தன.. அதை அறுத்து எறியும் வெறி அவருக்குள் வந்தது..

தணிகாலசம் வீட்டில் இல்லை..

"கோபம் வந்தா அது தணிய பாலாற்றங்கரைக்குப் போயிருப்பான்.. திரும்பி வந்துருவான்.. நீ வாப்பா.. வெந்நீ வைச்சுத் தரேன்.. குளிச்சுட்டு வந்து சாப்பிடு.." மருதாயி இதமாகச் சொன்னாள்..

மருதாச்சலம் வீட்டுக்குள் போன போது.. மூச்சிரைக்க ஓடி வந்தாள் தாமரை.. அவள் முகத்தில் படர்ந்திருந்த அச்சத்தில் மருதாச்சலத்தின் நெற்றியில் கோடுகள் விழுந்தன..

"என்னம்மா..?" என்றார்..

அவளோ சித்தப்பாவைக் கண்ட குதூகலத்தில் அச்சத்தை காற்றில் பறக்க விட்டவளாய்..

"சித்தப்பா.." என்று அவர் தோளில் சாய்ந்தாள்..

மருதாச்சலத்தின் முகம் கனிந்தது.. பாசத்துடன் தன் அண்ணன் மகளின் கூந்தலைக் கோதி விட்டார்.. ஈரக் கைகளை முந்தானையில் துடைத்தபடி சமையலறையில் இருந்து வெளியே வந்த தங்கம்.. மருதாச்சலத்தைக் கண்டதும்.. மரியாதையுடன்..

"வாங்க சின்னவரே.." என்றாள்..

"ஆமாம் அண்ணி.." அவளைவிட அதிக மரியாதையுடன் பதில் சொன்னார் மருதாச்சலம்..

"சாப்பாடு ஆக்கியாச்சு.. இலையைப் போடவா..?"

"குளிச்சுட்டு வந்திடறேன் அண்ணி.."

"தாமரை.. சித்தப்பாவுக்கு வெந்நீ போடு.."

"ஆகட்டும்மா.."

தாமரை ஆதவனை மறந்து வீட்டுக்குள் ஓடினாள்.. மருதாச்சலம் மாடியேறினார்.. ந்டுவில் பரந்து விரிந்த பெரிய ஹாலும்.. இரண்டு பக்கங்களிலும் இருந்த அறைகளுமாக இருந்த மாடியில் அவரது அறைக் கதவு பூட்டப் பட்டிருந்தது.. தனஞ்ஜெயன் சாவியோடு வந்து நின்றான்.. சாவியை வாங்கிக் கொண்ட மருதாச்சலம்..

"இதை பூட்டி வைக்கனுமா தனா..?" என்றார்..

"திறந்து போட மனசு வரலை சித்தப்பா.. இது உங்களோட அறை.. இதுக்குள்ள மத்தவங்க நுழையக் கூடாது.."

எப்போது அவர் வந்தாலும்.. அவருக்காக ஒரு அறை அந்த வீட்டில் காத்திருக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லிய அண்ணன் மகனின் பாசத்தில் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார் மருதாச்சலம்.. அவர் கண்கள் பனித்திருந்தன..

அறை சுத்தமாக இருந்தது.. பெரிய கட்டிலில் மெத்தை தூசு இல்லாமல் சுத்தமான விரிப்புகளுடன் இருந்தது.. கட்டிலைச் சுற்றித் தூய்மையான கொசுவலை தொங்கிக் கொண்டிருந்தது.. அறையின் மூலையில் இருந்த மேஜையில் அவர் படிக்கும் புத்தகங்கள் அடுக்கி வைக்கப் பட்டிருந்தன.. அருகில் மேஜை விளக்கு..!

நாற்காலியில் சிறிதளவு கூட அழுக்குப் படாமல் பளிச்சென்று இருந்தது..

அறையைச் சுற்றிச் சுழன்ற அவரது பார்வையில்..

"தினமும் தாமரை இந்த அறையைத் திறந்து சுத்தம் பண்ணுவா.." என்றான் தனஞ்ஜெயன்..


அண்ணன் பிள்ளைகளின் அன்பில் கரைந்து போனார் மருதாச்சலம்.. அலமாரியைத் திறந்தார்.. அவருடைய உடைகள் துவைத்து மடித்து நேர்த்தியாக அடுக்கப் பட்டிருந்தன..

"இதுவும் தாமரையின் வேலைதான்.." தனஞ்ஜெயன் சிரித்தான்..

மருதாச்சலம் மாற்றுடையை எடுத்துக்கொண்டு.. மாடியை விட்டு கீழே இறங்கினார்... வீட்டின் பின் பக்கமிருந்த கிணற்றடியில் அவருக்காக வெந்நீர் விளாவி வைத்திருந்தாள் தாமரை.. அலுப்புத் தீரக் குளித்து.. உடை மாற்றி வந்தவருக்கு நெற்றியில் விபூதியை இட்டு விட்டாள் மருதாயி..

அவர்கள் சாப்பிடப் போனார்கள்.. பந்திப் பாய் விரிக்கப் பட்டிருந்தது.. அதன் முன்னால் வரிசையாக வாழையிலைகள் போடப் பட்டிருந்தன.. தணிகாசலம் ஒரு இலையின் முன்னால் உட்கார்ந்திருந்தார்.. அவருக்குப் பக்கத்தில் உட்காந்தார் மருதாச்சலம்.. அண்ணன் தம்பிகளின் பார்வைகள் சந்தித்துக் கொண்டன..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல்' ஆட்ட புத்திரம்



5

"செல்வம் கொழிக்கும் பாரதத்தை சிறையினிலே வைத்திருப்பது வேதனை"

சித்தார்த்தனின் அறைக் கதவைத் திறந்து கொண்டு போன பியூன் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான்..

"என்னப்பா..?" புரியாமல் கேட்ட யாமினியிடம்..

"எம்.. எம்.. எம்.." என்று தந்தியடித்தபடி அறைக் கதவை சுட்டிக் காட்டினான்..

புயல் வேகத்தில் கதவைத் திறந்து கொண்டு வந்தான் சித்தார்த்தன்..

"வில்லியம்ஸ்.. ஏன்ன இங்கே உட்கார்ந்திருக்கீங்க..?"

வரவேற்பில் உட்கார்ந்திருந்த வில்லியம்ஸையும் அவனது நண்பர்களையும் சித்தார்த்தன் பதறிய வேகத்தில் பியூனுக்கு குளிரும் காய்ச்சலும் வந்தது..

"நான் உங்களுக்கு தொல்லை சார்." தனது பயத்துடன் அலறினான்.

யாமினிதான் உட்கார்ந்து சொன்னாள். "வயலெட் தகுந்த நேரத்தில் யாமினியைப் போட்டுக் கொடுக்கும் தன் கடமையை செவ்வனே ஆற்றினாள்..

"வோட்கா?" உக்கிரமானான் சித்தார்த்தன்.

"யெஸ் சார்.. வில்லியம் வந்தவுடன் நான் உங்களுக்கு இன்பர்ம் பண்ணப் போனேன்.. பட்.. ஏற்கனவே ஒரு மூக்கியமான கிளையண்ட் பத்தி நான் இன்பர்ம் பண்ணினதுக்கு என் வேலையில் நீ இண்டர்பியர் ஆகாதேன்னு மூஞ்சியில அடிச்சதைப் போல யாமினி பேசிட்டா.. ஸோ.. இன்னைக்கு நடக்கிறதை நான் ஸைகட்டி வேடிக்கைப் பார்க்கிறேனைப் போல ஆகிருக்கு.."

வயலெட் சொல்லச் சொல்ல.. சித்தார்த்தனுக்கு கண் மண் தெரியாத கோபம் வந்து விட்டது.

"என்ன செய்து வைத்திருக்கிறேன்னு உனக்குத் தெரியுமா?"

அடிக்குரலில் அவன் சீறியபோது யாமினி நடுங்கிப் போனாள்..

ரத்தம் போல சிவந்த கண்களும்.. உறுமலுமாக அவன் அதுநாள்வரை அவள் பார்த்தறியாத சித்தார்த்தனாக இருந்தான்.

"இவர் இந்தக் கம்பெனியின் மூக்கியமான கிளையண்ட்.. பாரினிலிருந்து என்னைப் பார்க்க பிளைட் பிடிச்சு வந்திருக்கிறார்.. இவரோட ஒவ்வொரு செகண்டும் விலை மதிப்பில்லாதது.. அவரோட பொன்னான நேரத்தை நீ வீணடிச்சிருக்கிற."

அதற்கு முன்பு அவன் யாமினியை 'வா.. போ..' என்று ஏகவசனத்தில் பேசியதில்லை. அவன் தாழ்ந்த

குரலில் பேசியதால் அவனுடைய ஏக வசன அழைப்பு மற்றவர்களுக்குக் கேட்கவில்லையென்றாலும யாமினிக்கு அது கேட்டதே..

அவள் முகம் அவமானத்தில் கன்றி சிவந்து விட்டது.. அதை ரசித்தாள் வயலெட்.. செல்போனை காதுக்கு கொடுத்தபடி வந்து கொண்டிருந்த தாமோதரனைக் கண்டதும் யாமினியின் முகம் வெளுத்தது..

'சும்மாவே இவன் சாமியாடுவான்.. இப்போச் சரியான காரணம் சிக்கியிருக்கு.. சும்மாவா விடுவான்..?'

எப்போதும் தாமோதரன் மண்டகப்படி நடத்துவான்.. சித்தார்த்தன் காப்பாற்ற வருவான்.. இப்போதோ சித்தார்த்தனே மண்டகப்படியை ஆரம்பித்து வைத்திருக்கிறான்.. தாமோதரன் எப்படியெல்லாம் பேசப் போகிறானோ..

தாமோதரனுக்கு சரியான சான்ஸ் கிடைத்து விட்டது என்று தான் வயலெட்டும் கணித்தாள்.. இரட்டை நாயணமாக.. சித்தார்த்தனும் தாமோதரனும் கொடுக்கப் போகும் அர்ச்சனையை வேடிக்கை பார்க்க அவள் ஆவலுடன் காத்திருந்தாள்..

மும்முரமாக யாருடனோ பேசிக் கொண்டே வந்த தாமோதரன் ரிசப்சனில் இருந்த சூழலைப் பார்த்தவுடன் செல் போனைக் கட் பண்ணினான்.. ரேகாவிடம் ஏதோ கேட்டான்.. அவள் தாழ்ந்த குரலில் விளக்கம் சொல்லியதில் அவன் என்னவெல்லாம் கத்தப் போகிறானோ என்று யாமினி குன்றிப் போனாள்..

ரேகா பேசியதைக் கேட்டபடி யாமினி இருக்கும் திசையில் பார்த்தான் தாமோதரன்.. யாமினியின் மனம் அடித்துக் கொண்டது.. தாமோதரன் சித்தார்த்தனிடம் வந்தான்..

'பார்த்துக்கிட்டியா.. நீ செலக்ட் பண்ணின உன் செக்கரட்டரியின் லட்சணத்தை.. சொன்னால் கேட்டியாடா.. இன்னைக்கு இவ பண்ணி வைக்சிருக்கிற வேலைக்கு இந்த வில்லியம்ஸ் எத்தனை மலையில ஏறப் போகிறானோ.. இவளுக்கு அறிவு இருக்குதா இல்லையா சித்தார்த்.. பாரின்ல இருந்து ஒருத்தன் பறந்து வந்தா.. அவன் கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் இருக்கான்னு கேட்டிருக்காளே.. முதல்ல இவ சீட்டைக் கிழடா..'

இப்படித்தான் தாமோதரன் எகிறப் போகிறான் என்று எதிர்பார்த்தாள் யாமினி..



6

ஜாலியன் வாலா பாக் படுகொலையின் பகை முடித்தான் உத்தம் சிங்..!

தீட்சண்யம் மிகுந்த மருதாச்சலத்தின் பார்வையை தீர்க்கமான தணிகாசலத்தின் பார்வை எதிர் கொண்டது..

உடன்பிறந்த அண்ணன் தம்பிகளான அந்த இருவரிடமும் தேசபக்தி குடிகொண்டிருந்தது.. தணிகாசலம் காந்தி காட்டும் பாதையில் நடப்பவர்.. வன்முறையை விரும்பாதவர்.. மருதாச்சலமோ.. தனது

இருபத்தி நான்காம் வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறி சுபாஷ் சந்திர போஸின் நிழலாக மாறியவர்.

இவர் இளைஞர்களை கள்ளத்தோனில் கிராமங்களையத் தாண்டி சென்னைக்குப் போகிறவர்களே குறைவு என்றிருக்கும் போது மருதாச்சலம் மட்டும் அடிக்கடி மாயமாகி விடுவார். திரும்பி வருகிறவர் சொல்லும் உலகம் சுற்றும் கதைகளில் ஆர்வமாகிப் போன மருதாசலத்தின் நண்பரின் மகனான ஆதவன் மருதாக்சலத்தைப் பின்பற்ற. தணிகாசலத்தின் மகன் தனஞ்ஜெயன். தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்று தந்தையின் காந்தியத்தைப் பின்பற்றினான்..

மருதாச்சலத்தின் முயற்சியினால் தனஞ்ஜெயனும், ஆதவனும் லண்டனுக்குச் சென்று வக்கீலுக்குப் படித்தாகள்..

"இவன் உலகம் சுத்தினதில இது ஒன்னுதான் உருப்படியா நடந்திருக்கு." என்பார் தணிகாசலம்.

படித்து பட்டம் வாங்கிய இளைஞர்கள் இருவரும் சொல்லி வைத்ததைப் போல படிப்புக்குக் கிடைத்த வேலையைத் துறந்து விட்டு கிராமத்திற்குத் திரும்பினார்கள்..

"இதுக்கு ஏண்டி சீமைக்குப் படிக்கப் போகணும்?"

சிநேகிதகளைச் சீண்டி விட்டு பொறாமைத் தீயை அறறிக் கொள்வாள் வைரம்

ஆதவனின் அப்பாவான விசுவநாதனுக்கு மருதாச்சலத்தின் நேரடிப் பாடுகளில் நம்பிக்கை யுண்டு.

அவரும் மருதாச்சலமும் இணை பிரியாத நண்பர்கள் என்பதால் விசுவநாதன் மகனின் வாழ்வைப் பணயம் வைக்கிறார் என்று தணிகாசலம அவரைச் சாடுவதுண்டு..

அந்தச் சமயங்களில் எல்லாம் அமைதியாக பதில் சொல்லுவார் விசுவநாதன்.

"தேசத்தோட விடுதலைக்காக வாழ்க்கையையே அர்ப்பணித்தினு வாய் வார்த்தையில சொன்னா மட்டும் போதாது தணிகாசலம். செயலில் காட்டணும். அதுவும் அதைத்தான் செய்யறான்..."

"தேசத்தவனுக்கு இல்லாத அக்கறை எனக்கெதுக்கு" என்று அலுத்துக்கொள்வார் தணிகாசலமும்..

மருதாச்சலமும்.. ஆதவனும் ஒன்று போலக் காணாமல் போவதும்.. சென்றாவது ஓர்நாளில் திரும்பி வந்து நிறைவதும்.. அடிக்கடி அவர்கள் இல்லங்களில் நிகழும் நிகழ்வு..!

தங்கம் இலைகளில் பரிமாற ஆரம்பித்தாள். தாமரை பொரியலை வைத்துக் குழம்பை ஊற்ற.. மருதாயி சாப்பிட்டுக் கொண்டிருந்த அண்ணனின் எதிரே உட்கார்ந்து விசிற ஆரம்பித்தாள்..

"உலகப் போர் நடந்துக்கிட்டு இருக்குதும்மா.. உன் சின்ன மகனை அடங்கி வீட்டில இருக்கச் சொல்லு" தாயிடம் சொன்னார் தணிகாசலம்.

"யோசனை தன்னோடு வேலை செய்யுமிடங்களில் எல்லாம் சாப்பிட்டபடியே சொன்னார்..

தணிகாசலத்தின் முகம் சிவந்தது..

“இவன்தான் துப்பாக்கியைக் காட்டி இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுக்கப் போறானா..? காந்தி சொல்கிற அற வழியில நடந்தா தானாச் சுதந்திரம் கிடைக்கப் போகுது.. இவன் ஏம்மா தன்னைத்தானே அழிச்சுக்கப் பாக்கிறான்..?”

“தன்னைத்தானே அழிச்சுக்கிற மெழுகுவர்த்தி மத்தவங்களுக்கு ஒளியைக் கொடுக்கும்.. ஏன்..? இருபத்தியொரு வருசங்களுக்கு முன்னால நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு காத்திருந்து உத்தம்சிங் பழி தீர்க்கலையா..? ஜெனரல் டயரைச் சுட்டவன் தப்பிச்சு ஓடாம அங்கேயே தான் நின்னான்.. பழி தீர்க்கத்தான் சுட்டேன்னு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தான்.. அவனைக் காப்பாற்ற இந்திய தேசத் தலைவர்கள்ல யாரும் வரமாட்டாங்கன்னு அவனுக்கு நல்லாவே தெரியும்.. இருந்தும் சுட்டானே.. தூக்கில தொங்கினானே.. அவனைப் போல இருக்கிறவங்களால தான் வெள்ளையக்காரன் நம்ம அத்தனை பேரையும் போட்டுத் தள்ளாம வாலைச் சுருட்டிக்கிட்டு இருக்கான்.. தெரிஞ்சுக்கங்க..”

மருதாச்சலத்தின் முகம் தமையனை விட அதிகமாக சிவந்தது.. தாமரை சங்கடம் கொண்டாள்.. என்றோ ஓர்நாளில் வந்து போகும் சித்தப்பாவிடம் சண்டை போட வேண்டுமா என்றிருந்தது அவளுக்கு.. அதே சமயம் ‘யார் அந்த உத்தம் சிங்..?’ என்று அறியும் ஆவலும் அவளுக்கு ஏற்பட்டது..

மருத்தாச்சலத்தின் முன்னால் அவள் மண்டியிட்டு அமர்ந்தாள்.. கதை கேட்கும் ஆர்வத்துடன்..

"உத்தம்சிங்ன்னா யாரு சித்தப்பா..?" என்று கேட்டாள்..

"அவன் பெரிய தியாகிம்மா.." என்றார் மருதாச்சலம்..

தம்பி கூறும் அத்தனையையும் மறுத்துப் பேச வேண்டும் என்பதை ஒரு கொள்கையாகவே வைத்திருக்கும் தணிகாசலம் இதை மறுத்துப் பேசாததில் ஆச்சரியம் கொண்டாள் தாமரை..

அவளுக்கென்ன தெரியும்..? 'ஜாலியன் வாலாமாக் படுகொலை..' என்பது இந்திய மக்களின் மனதில் பதிந்திருக்கும் ஆறாத ரணம் என்பது..

"1919-ம் வருசம்மா.. அப்போ நீயும் பிறக்கலை.. தனாவும் பிறக்கலை.. சுதந்திரப் போராட்டம் தீவிரமாக இருந்த காலம் அது.."

"இப்பவும்தான் தீவிரமா இருக்கு.."

"இப்ப இருக்கிற தீவிரம் வேற.. அப்போ இருந்த தீவிரம் வேற.. அப்போல்லாம் இப்பச் செய்வதைப் போல ஆயுதங்களை அடிக்கடித் தூக்க மாட்டாங்க.. 1911-ம் வருசத்தில மணியாச்சி ஜங்சனில.. 'ஆஷ்' அப்படிங்கிற வெள்ளைக்கார கலெக்டரை 'வாஞ்சிநாதன்..' சுட்டுக் கொன்னாரு.."

"ஏன் சித்தப்பா..?"

"அதைப் பத்தி இன்னொரு நாள் சொல்றேன்.. இப்ப உத்தம்சிங்கைப் பத்திச் சொல்றேன் கேளு.. 1919-ம் வருசத்தில பஞ்சாப் அமிர்தசரசில.. 'ஜாலியன் வாலாபாக்' அப்படிங்கிற இடத்தில காங்கிரஸோட பொதுக் கூட்டம் நடைபெறுகிறதா இருந்தது.. அன்னைக்கு வைஸாகி நாள். அந்த நாளை அமிர்தசரசில் பிஷு நாளா கொண்டாடுவாங்க.. அது சீக்கியர்களோட புனித நாள்.."

"ம்ம்ம்.."

விழா நாளோட கொண்டாட்டத்திற்காகவும்.. பொதுக்கூட்டத்தில் பேசப் போகும் தேசத் தலைவாகள் பார்க்கிறதுக்காவும் ஏராளமான பெண்கள் குழந்தை குளோடு வந்திருந்தாங்க.. வயசில பெரியவங்க திரண்டு வந்திருந்தாங்க.. அவங்களுக்கெல்லாம் அரசியல் தெரியாது.. தேசத் தலைவர்களைப் பார்க்கணும்னு ஆர்வமா வந்திருந்தவங்கதான் அதிகம்.."

"ம்ம்ம.."

"திடீர்ன்னு" பார்த்தா சுவாமியிருந்த மேடையின் மேல குண்டுகள் பாயுது.. இடைவிடாம பாய்ந்த குண்டுகளினால பெண்கள், குழந்தைகள், வயசிலு பெரியவங்கன்னு தப்பிக்க முடியாம மாட்டிக்கிட்ட அப்பாவி மக்கள் செத்து விழுந்தாங்க.."

"ஐயோ"

கதை கேட்டுக் கொண்டிருந்த தாமரை கைகளால் வாயை மூடி பதைத்தாள்.. தனஞ்செயனும் உணர்ச்சிப்

மெதுவாக தன்னிடம் சமைத்தவற்றை தூங்கும் சமையலறை சுவரின் மீதுள்ள இடத்தில் வைத்தாள். மருதாயி விசிறி வீசுவதை நிறுத்திவிட்டு அப்படியே உட்கார்ந்து விட்டாள்..

தணிகாசலத்தின் தொண்டையை துக்கம் அடைத்தது.. செருமினார்.. மருதாச்சலம் தண்ணீர் தம்ளரை தணமயனின் பக்கம் நகர்த்தி வைத்தார்.. அவர் முறைபடுடன் தண்ணீரை குடித்தார்..

"பத்து நிம்சம்மா.. அந்த இடமே சுடுகாடாய் மாறிப் போயிருந்துச்சு.. ஒரு சிப்பாய்க்கு 33 தடவைன்னு 1650 முறை சுட்டதில ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் கொல்லப் பட்டாங்கம்மா.. அன்னைக்கு கூட்டம் நடக்கிறதா இருந்த இடத்தில கூடியிருந்த முக்காலுக்கு தண்ணி தொடுக்கிற வேலையைச் செய்துக்கிட்டு இருந்தான் உத்தம்சிங்.. அவன் கண் முன்னால இந்தப் படுகொலை நடந்தது.. அவனால அதை மறக்க முடியுமாம்மா..?"

"யாராலயும் மறக்க முடியாது சித்தப்பா.."

"உத்தம்சிங் பகத்சிங்கோட விடுதலைப் போராட்டத்தில் இணைந்திருந்தவன்.. 'ஜாலியுன் வாலாபாக் படுகொலை'யை நேரில் பார்த்தவன்.. அந்தப் படுகொலைக்கு பழிவாங்க சபதம் எடுத்துக்கிட்டான்.."

"பாவயில்லையே"

இப்படிச் சொல்லிவிட்டு தன் பணியைத் தொடர்ந்தாள் மருதாயி..

அவரும் தான் எதற்கு முறைக்க வேண்டும்..? உத்தம் சிங்கிற்கு ஏற்பட்ட உணர்ச்சி.. ஒவ்வொரு இந்தியனுக்கும் ஏற்பட வேண்டிய உணர்ச்சியல்லவா..?

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை..

"அந்தப் படுகொலைக்கான ஆர்டரைப் போட்டது ஜெனரல் ரெஜினால்ட் டயர் அப்படிங்கிற வெள்ளைக்கார கொடுங்கோலன்ம்மா.. அது பத்தின விசாரணையில இந்தியர்களை நடுங்க வைக்கனும்னு அந்த ஆர்டரைப் போட்டதாச் சொன்னானாம் டயர்.."

"ராட்சசன்.."

"அவனைப் பழிவாங்கக் காத்திருந்தான் உத்தம்சிங்.. ஒரு வருசம், இரண்டு வருசமில்லம்மா.. இருபத்தியொரு வருசம் காத்திருந்தான்.. 1919 ஏப்ரல்13ல் நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு.. 1940 மார்ச் மாதம் 13ம் தேதி பழி தீர்த்துட்டான்.."

"எப்படி சித்தப்பா..?"

"1940 மார்ச் 13ல் கேங்ஸ்டன் ஹாலில கிழக்கிந்திய சங்கம், மத்திய ஆசியசங்கம் ரெண்டும் சேர்ந்த கூட்டம் நடந்தது.. ஜெனரல் ரெஜினால்ட் டயர் இதில கலந்துக்கப் போனான்.. உத்தம்சிங் ஒரு புத்தகத்தில ரிவால்வர் மாதிரியே வெட்டி அதுக்குள்ள ரிவால்வரைய் வைத்து எடுத்துக்கிட்டுப் போனான்.. வெளிப் பார்வைக்கு அவன் புத்தகத்த கையில பிடிச்சுக்கிட்டுப் போகிற

மாதிரியே இருக்கும்.. உள்ளே துப்பாக்கி இருக்கிறது யார் கண்ணுக்கும் தெரியாது..”

“பலே..”

“ஜெனரல் டயர் மேடையில பேசறதுக்காக அவனோட நாற்காலியை விட்டு எழுந்திருச்சு மேடையைப் பாத்துப் போனான்.. காத்திருந்த உத்தம்சிங் ரிவால்வரை எடுத்து மேடையை நோக்கிப் போன டயரை ரெண்டு தடவை சுட்டான்.. டயர் உடனே செத்து விழுந்திட்டான்..”

“உத்தம்சிங்..?”

“தப்பிச்சு ஓடல.. நின்ன இடத்திலேயே நின்னான்..”

“எப்பேற்பட்ட வீரன்..!”

“இந்தியாவின் மானம் காத்தவன்ம்மா.. இந்தியர்கள் யானையைப் போல.. 20 வருசங்கள் கழித்துப் பழி தீர்த்தார்கள்ன்னு ஜெர்மனோட ரேடியோ செய்தி சொன்னது..”

“நம்ம நாட்டில என்ன சொன்னாங்க சித்தப்பா..?” ஆவலுடன் கேட்ட தாமரையை..

“தாமரை..” என்று அதட்டினார் தணிகாசலம்..

“ஏண்ணா சின்னப்புள்ளய அதட்டறிங்க..? பழி தீர்த்த மாவீரனுக்கு நம்ம நாட்டுத் தேசத் தலைவர்கள் சிலை வைத்தாங்களான்னு தெரிஞ்சுக்கனும்னு தாமரை ஆசைப்படுது.. அதை ஏன் கேக்க விடாம தடுக்கறிங்க..?”

மருதாச்சலத்தின் கேலி கலந்த கேள்வியில் தணிகாசலம் எதையும் பேச முடியாமல் தண்ணீரைத் தேடினார்..

இப்போது தனஞ்ஜெயன் தண்ணீர் தம்ளரை நகர்த்தி வைத்தான்.. அதை ஒரே மூச்சில் மடக்.. மடக்கென்று குடித்துக் காலி செய்தார் தணிகாசலம்..

"கேளுங்க தாமரை..! நம்ம நாட்டிலு என்ன சொன்னாங்கன்னா.. உத்தம்சிங் செஞ்சது மன்னிக்க முடியாத பெருங்குற்றம்ன்னு சொன்னாங்கம்மா.."

"அப்ப.. ஒன்னும் தெரியாத அப்பாவி மக்கள பத்து நிமிசத்துக்குள்ள கொன்னு குமிச்சானே அந்த ஜெனரல் டயர்..! அவன் செய்தது மன்னிக்க முடிந்த குற்றமா..?"

கொதிப்புடன் கேட்டு தாமரையிடம்..

"இத என்னோட அண்ணன்கிட்டக் கேளும்மா.." என்றார் மருதாச்சலம்..

அவர் அந்த வார்த்தைகளை தாமரையிடம் சொல்லிய விதத்தில் தணிகாசலம் நெகிழ்ந்தார்..

'உன் அப்பாவிடம் கேளு' என்று மருதாச்சலம் சொல்லவில்லை..

'என்னோட அண்ணன்கிட்டக் கேளுங்க' என்று தான் சொன்னார்.. அந்த வார்த்தைகளில்.. தொனித்த உரிமை கலந்த பாசத்தில் அவரது உள்ளம் உருகியது..

திருமணத்தத் தவிர்த்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர் மருதாச்சலம்.. தணிகாசலம்

ஒரு குடும்பம் இல்லாதவர் தனது அண்ணனின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாக நேசித்தார்.. ஊருக்குள் அவர்களைப் பற்றிப் பேசும் போது அண்ணன் பிள்ளைகள் என்று ஒருநாளும் அவர் சொன்னதில்லை.. என் மகன், என் மகள் என்றுதான் பேசுவார். அண்ணன் பிள்ளைகளிடம் பேசும்போது வாங்க அப்பா என்று தணிகாசலத்தைச் சுட்டிக்காட்டி தன்னைத் தனிமைப் படுத்திக் கொள்ள மாட்டார் அதே சமயத்தில் என் அண்ணன் என்று பிள்ளைகளிடம் சொல்லி.. தனக்கும் அண்ணனுக்குமான பாசப் பிணைப்பை இறுக்கிக் கொள்வார்..

இவன் மட்டும் என் பேச்சைக் கேட்டு வீட்டில தேங்கி நின்னா எவ்வளவு நல்லாயிருக்கும்.. தணிகாசலத்தின் மனம் கனத்தது..

"யாருமே உத்தம்சிங்கோட செயலைப் பாராட்டலையா சித்தப்பா..?" ஏக்கத்துடன் கேட்டாள் தாமரை

அவளது கவலை கலந்த ஏக்கத்தில் ஈர்க்கப் பட்டார் மருதாசலம்.. தேசபக்தி கொண்ட அந்தக் குடும்பத்தில் நாடடு நிலவரங்களைப் பெண்களிடம் பேச மாட்டாகள்..

"போராட்டமெல்லாம் ஆம்பளைகளுக்குத்தான்டா"

இது சின்னய்யனின் கண்டிப்பான உத்தரவு.. அவரும் அதைக் கடைபிடித்தார்.. மகன்களையும் அதைக் கடை பிடிக்க வைத்தார்.. அத்தனை புரட்சி பேசும் மருதாசலம்

வீட்டுப் பெண்களிடம் அந்தப் புரட்சியைத் திணிக்க முற்பட்டதில்லை..

அன்று நடைபெற்ற கொள்கை மோதல் போல.. அடிக்கடி நிகழும் கொள்கை மோதல்களில்.. அண்ணனும் தம்பியும் மோதிக் கொள்ளும்போது பேசப்படும் செய்திகளின் வாயிலாகத்தான் அந்த வீட்டுப் பெண்கள் நாட்டு நிலவரங்களை அறிந்து கொண்டிருந்தார்கள்..

குழந்தைத்தனம் மிகுந்த தாமரையின் முகத்தைப் பரிவுடன் பார்த்தார் மருதாச்சலம்.. அவர் மனம் கனிந்தது.. பிள்ளைமனம் கொண்ட மகளின் வாழ்வு வளமாக அமைய வேண்டும் என்று அவர் மனம் பிரார்த்தித்தது..

“எப்பயும் போல இப்பயும் உத்தம்சிங் செய்தது மாபெரும் குற்றம்ன்னு காந்தி கண்டிச்சாரு.. ஆனா அவருக்கு நீ செய்தது தீரச்செயல்டான்னு பாராட்டுக் கடிதம் எழுதினாரு சுபாஷ் சந்திர போஸ்..!”

‘இங்கேயும் போஸா..’

சுபாஷ் சந்திர போஸின் அதீத தைரியத்தை மனதுக்குள் மெச்சிக் கொண்டாள் தாமரை..! நினைத்ததை அஞ்சாமல் வெளியில் சொல்லும் போஸின் துணிச்சல் அவளைக் கவர்ந்தது.. அவளுடைய காதலனின் ஆதர்சக் கதாநாயகன் சுபாஷ்சந்திரபோஸ் என்பதில் அவள் போஸின் மீது மானசீகப் பற்றுக் கொண்டாள்..

“சந்தோசமா இருக்கு சித்தப்பா.. நம்ம நாட்டு மானத்தைக் காத்த தியாகியைப் பாராட்டவும் ஆள் இருக்காங்களே..”

"ஆனா.. காந்திக்கு அந்தப் பாராட்டில சந்தோச மில்லை தாமரை..! அவர் தப்புன்னு சொல்ற ஒரு செயலை.. சுபாஷ் சந்திபோஸ் சரின்னு பாராட்டினதில.. அவருக்கும் சுபாஷீக்குமான கருத்து மோதல் அதிகமானது.. ஏற்கனெவே அவங்க ரெண்டு பேருக்கும் இடையில இருந்த இடைவெளி பெரிசாச்சு.."

"உத்தம்சிங் என்ன ஆனார்..?"

"அவன்தான் தப்பியோட முயற்சி பண்ணலையே.. என்னோட தேசத்தின் மக்களைக் கொன்னு குவிச்ச ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு பழி தீர்க்கத்தான் சுட்டேன்னு அஞ்சாமல் வாக்குமூலம் கொடுத்தான்.. 1940 ஜீலை 31ம் நாள் தூக்கில போட்டுட்டாங்க.. அவனோட உடலை பெண்டோன் சிறை வளாகத்தில அடக்கம் பண்ணிட்டாங்க.."

"அடக்கடவுளே..! அவருக்கான காரியங்களைப் பார்க்க அஸ்தியைக் கொடுக்கலையா..?"

"அஸ்தி இருந்தா மட்டும் காரியம் நடந்திருமா..?"

"ஏன் சித்தப்பா இப்படிச் சொல்றீங்க..?"

"ஆனானப்பட்ட எம்டன்.. எம்டன்.. அப்படிங் கறோமே.. ஏன்.. அப்படிச் சொல்றோம்.."

"தெரியலையே சித்தப்பா.. ஒன்னு மட்டும் தெரியுது.."

"என்னதும்மா..?"

"எம்டன்னா ஜெகஜால கில்லாடின்னு அர்த்தம்ன்னு மட்டும் தெரியுது.."

மருதாச்சலம் சிரித்தார்... அண்ணன் மகளின் தலையை வாத்சல்யத்துடன் தடவிக் கொடுத்தார்.. பெருமையுடன் தாயைப் பார்த்தார்..

"பார்த்தியாம்மா.. என் பொண்ணோட அறிவை.."

இலையில் இருந்த சோற்றைக் கவளமாக்கி தொண்டையில் இறக்கிய தணிகாச்சலத்தின் கண்கள் பனித்தன.. குடித்தனம் பண்ணாமலே.. குழந்தைகளுக்குத் தகப்பனாகி நிற்கும் தனது தம்பியின் நினைவில் அவர் மனம் கனத்தது.. அவருக்குத் தெரியும்.. தனஞ்ஜெயனும், தாமரையும்தான் மருதாச்சலத்தின் உயிராய் இருக்கிறவர்கள் என்று.. அதனால்தான் அவர் தம்பியின் முன்னால் தனது பிள்ளைகளை 'எனது பிள்ளைகள்' என்று சொல்ல மாட்டார்.. 'நம்ம வீட்டுப் பிள்ளைகள்டா..' என்பார்.. மருதாச்சலம் மட்டும் வாய்க்கு வாய்.. 'என் மகன்.. என் மகள்..' என்று பெருமைப் பட்டுக் கொள்வார்.. எத்தனைதான் தம்பியின் மீது கோபப்பட்டாலும் தணிகாசலம் இதற்கு மட்டும் தடை சொல்லவே மாட்டார்..

"ஒன் பொண்ணுக்கென்னடா.. உலகத்தையே வித்துப்புட்டு வந்துருவா.. நீ சாப்பிடு.."

மகனிடம் வாஞ்சையாகப் பேசியபடியே குழம்பை ஊற்றினாள் மருதாயி.. சோற்றைப் பிசைந்தபடி

எம்டனைப் பற்றிய விளக்கத்தைச் சொல்ல ஆரம்பித்தார் மருதாச்சலம்.

"எம்டன்ங்கிறது வேற எதுவும் இல்லைம்மா.. ஜெர்மனியோட போர்க்கப்பலோட பேரு அது.."

"அடநெொப்புரானே..! நிசமாவாடா தம்பி..?" மருதாயி கன்னத்தில் கை வைத்து அதிசயித்தாள்..

"ஆமாம்மா.. அந்தக் கப்பலைச் செழுத்தினது யாரு தெரியுமா..?"

"யாருடா தம்பி..?"

"சென்பகராமன்ங்கிற தமிழர்.. தேர்ந்த தொழில் நுட்பக்காரர்.. அவர்தான் எம்டன் கப்பல்ல வந்து சென்னையில குண்டு போட்டார்.. அவரோட அஸ்தியை இந்தியாவில கரைக்க முடியல.."

"ஏண்டா..?"


மருதாச்சலம் விளக்கம் சொல்லப் போகும் போது தணிகாசலம் அதட்டினார்..

"பொழுது போன வேளையில அஸ்தி.. கிஸ்தின்னு என்னடா பேச்சு இது..? அம்புட்டுக் கதையையும் ஒரே நாளில கொட்டி முடிக்காம மிச்சம் வையி.. இன்னும் கொஞ்ச நாள் தங்குவேல்ல.. அப்போக் கதை சொல்ல உபயோகமா இருக்கும்.. இப்ப வாயை மூடிக்கிட்டு சாப்பிடற சோலியை மட்டும் பாரு.."

வாயை மூடிக்கொண்டு எப்படிச் சாப்பிடுவது என்று தாமரை தணிந்த குரலில் மருதாச்சலத்திடம் கேட்டாள்.. அவர் வாய் விட்டுச் சிரித்தார்..

தம்பியை முறைப்பதைப் போல நடித்த தணிகாசலத்தின் மனம் அந்தச் சிரிப்பில் நிறைந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



6

கடந்து போன காலத்தில்..
நடந்ததென்ன..? நீ சொல்லு..

தாமோதரனால் யாமினியின் வேலைக்கான சீட்டு கிழிபடப் போவதில் யாமினிக்கு யாதொரு வருத்தமும் இல்லை..

என்ன ஒன்று.. இனம் புரியாத ஓர் சொந்தத்தை அவளுக்குள் உண்டாக்கும் சித்தார்த்தனின் முகத்தை அவளால் பார்க்க முடியாமல் போய் விடும்.. அதுதான் அவளுக்குத் துயரம் தரும் விசயமாக இருந்தது..

'பார்த்து மட்டும் என்ன கிழிக்கப் போகிறேன்..?'

சோர்வுடன் நினைத்துக் கொண்டாள் யாமினி.. இன்னதென்று விளங்காத பந்தத்திற்கு எதிர்காலம் இருக்கப் போவதில்லை.. எதிர்காலமில்லாத ஓர் உணர்விற்காக ஏன் அவள் சுயமரியாதையை விட்டுக் கொடுத்து அந்தக் கம்பெனியில் நீடிக்க வேண்டும்..?

நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தாள் யாமினி.. அவளையே பார்த்தபடி அருகில் வந்தான் தாமோதரன்.. கண்களை மூடிக் கொண்டாள் யாமினி..

தாமோதரன் பேச ஆரம்பித்தால் எப்படியெல்லாம் பேசுவான் என்பது அவளுக்குத் தெரிந்த ஒன்றுதானே..

அவன் திட்டப் போகும் வார்த்தைகளை செவி மடுக்கக் காதுகளை கூர் தீட்டிக் கொண்டாள் அவள்..

"கூல் டவுன் சித்தார்த்.."

காதில் விழுந்த தாமோதரனின் வார்த்தைகளில் ஆச்சரியம் கொண்டவள் கண் திறந்து பார்த்தாள்.. தாமோதரன்தான் சித்தார்த்தனைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான்..

'என்னங்கடா இது..!'

நம்ப முடியாமல் கண் கொட்டினாள் யாமினி.. காண்பது கனவா.. இல்லை நனவா என்ற சந்தேகம் கிளம்பியதில் கையைக் கிள்ளிப் பார்த்தாள்.. வலித்தது..

'நிஜம்தான் போல இருக்கே..'

அது நிஜமாகத்தான் இருந்தது.. அவ்வளவு பெரிய வேலையை செய்து வைத்திருந்த யாமினியை ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அட்லீஸ்ட் முறைப்பதற்காகக் கூட அவள் பக்கம் திரும்பாமல் கடமையே கண்ணாக சித்தார்த்தனிடமும் வில்லியம்ஸிடமும் பேசிக் கொண்டிருந்தான் தாமோதரன்..

"ஆக்சுவலா அவங்க வேலையைக் கரெக்டா பண்ணினதுக்கு நீ அவங்களை அப்ரிசியேட் பண்ணனும்.."

"வேண்டாம் தாமு.. நான் செம கோபத்தில இருக்கேன்.."

"ஈஸிடா.. பாரு வில்லியம்ஸ் இதை எவ்வளவு ஸ்போர்டிவ்வா எடுத்துக்கிட்டார்.. அவர் கம்ப்ளெயிண்ட் பண்ணி.. நீ கோபப்பட்டா அதில ஓர் அர்த்தம் இருக்கு.. அப்படியில்லாம நீயா கோபப்பட்டா எப்படி சித்தார்த்..?"

"என் செக்கரட்டரிக்கு யாரை எப்படி ட்ரீட் பண்றதுன்னு தெரிய வேணாமா..? அது முக்கிய மில்லையா..?"

"அதை இவங்களுக்கு அப்புறமா டீச் பண்ணு.. இப்ப அதைவிட முக்கியமானது வில்லியம்ஸோட டீலிங்ஸை பேசி முடிக்கிறது.. முதல்ல இதைக் கவனி.."

தாமோதரன் சித்தார்த்தனின் கவனத்தை திசை திருப்பி அழைத்துப் போய் விட்டான்.. யாமினிக்கு ஆச்சரியம் அடங்க வேயில்லை..

'லட்டு போல சான்ஸ் கிடைச்சும் ஏன் இவன் கேட்ச் பண்ணிக்கலை..?'

யோசனையுடன் அமர்ந்திருந்தவளிடம் சித்தார்த்தன் அழைப்பதாக பியூன் வந்து சொன்னான்..

"அந்த வில்லியம் இருக்கானா..?" யாமினி தயங்கினாள்..

"அவங்கள்ளாம் அப்பவே போயிட்டாங்களே.. இந்த வழியாத்தானே போனாங்க..? நீங்க பாக்கலையா..?" என்றான் பியூன்..

அவள் எங்கே அவர்களைப் பார்த்தாள்..? அவள்தான் தாமோதரனைப் பற்றிய யோசனையில் உட்கார்ந்து விட்டாளே..

சித்தார்த்தனின் அறைக்குள் தாமோதரனும் உட்கார்ந்திருந்தான்.. இமைக்காமல் அவளையே உறுத்துப் பார்த்த சித்தார்த்தனின் பார்வையில் தரையைப் பார்த்தாள் யாமினி.. தாமோதரன் ஏதும் பேசவில்லை..

"உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?" சித்தார்த்தன் ஆரம்பித்தான்..

'வாங்க.. போங்கன்னு பேச ஆரம்பிச்சுட்டான்..' யாமினி நினைத்துக் கொண்டாள்..

"நீங்க என்ன செய்தாலும் நான் ஏன்னு கேட்க மாட்டேன்னு நினைச்சீங்களா..?"

தொடர்ந்து பத்துப் பதினாறு நிமிடங்களுக்கு அடைமழை போல பேசித் தீர்த்தான் சித்தார்த்தன்.. அசையாமல் உதட்டைக் கடித்தபடி நின்று கொண்டிருந்தாள் யாமினி.. சித்தார்த்தனின் கோபத்தைத் தாண்டி அவள் மனம் ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தது..



7

இன்னுயிர் ஈந்த என்னுயிர் நாட்டை.. வெள்ளையன் வந்து உரிமை கொண்டாடுவதோ..

வேப்ப மரத்தின் நிழலில் நின்ற தணிகாசலம்.. வேப்ப மரத்தின் காற்றை ஆழ்ந்து அனுபவித்தார்..

வேப்பஞ்சோலையின் குயில்கள் கூவியதில் அவருக்குள் ஆனந்தம் உண்டானது.. கொட்டிக் கிடந்த வேப்பப் பழங்களை சேகரித்துக் கொண்டிருந்தாள் ஒரு சிறு பெண்.. அவளருகில் அடுப்பெரிப்பதற்கான சுள்ளிக்கட்டு இருந்தது.. அந்தப் பழங்களைக் கொடுத்து பண்ட மாற்றாக வாங்கப் போகும் வேக வைத்த பயிறை நினைத்தபடியே இங்கும் அங்கும் ஓடிப் பழங்களை அள்ளிக் கொண்டிருந்தாள்..

'இந்தப் பழத்துக்கு எப்ப உரிமை கொண்டாடிக்கிட்டு வரப் போறானுகளோ..' தணிகாசலம் வேப்பங்குச்சியை ஒடித்தார்..

'நம்ம ஊரு ஆளுகளுக்கு நம்ம விளைபொருளோட மகிமை தெரியறதில்ல.. மஞ்சக்கிழங்கு கிருமி நாசினின்னு வெள்ளைக்காரன் வந்து நமக்குச் சொல்ல வேண்டியிருக்கு.. விளைய வைச்சது நாம.. உரிமையை வாங்கிக்கிட்டது அவனுகன்னு ஆகிப் போயிருச்சு.. வேப்பெண்ணையும் என்னைக்கு கை மாறப் போகுதோ..'

தணிகாசலம் வேப்பங்குச்சியை மென்றபடி வரப்பில் இறங்கி நடந்தார்.. செங்கல்பட்டு நீஞ்சல் மடுவிலிருந்து பொன் விளைந்த களத்தூர் கிராமத்தின் ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருந்த கால்வாயின் ஈரப்பசையை சுமந்து வந்த காற்று அவர் முகத்தில் மோதியது..

'இதையெல்லாம் ஒரு குறைவும் இல்லாமத்தான் வெள்ளைக்காரன் செஞ்சு வைச்சிருக்கான்..'

வேப்பங்குச்சியைக் கடித்துத் துப்பினார்.. வெளியில் தெறித்த எச்சிலில் வெள்ளைக்காரனின் மீதான அவரது கோபம் வெளிப்பட்டது..

தென்னேரியில் மழைக்காலங்களில் நீர் நிரம்பும் போது உபரிநீர் வழிந்தோடி செங்கல்பட்டின் அருகே உள்ள பாலாற்றில் கலக்கும் வகையில் 28 கி.மீ. தூரத்துக்கு இயற்கையாக நீஞ்சல் மடுவு கால்வாய் அமைந்திருந்தது..

இந்த மடுவில் ஊத்துக்காடு, தொள்ளாஷி, எழிச்சூர், கொளத்தூர், சேந்தமங்கலம், ஆப்பூர், விகால், பாலூர், வில்லியம் பாக்கம் ஆகிய ஏரிகளில் இருந்து வரும் உபரி நீரும் கலக்கும்..

நீஞ்சல் மடுவில் மழைகாலம் முடிந்த பிறகும் மூன்று, நான்கு மாதங்களுக்கு தண்ணீர் ஓடும்..

இந்தத் தண்ணீரை விவசாயத்துக்குப் பயன்படுத்த நீஞ்சல் மடுவில் ஆங்கிலேய அரசு ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பதில் தடுப்பாணை அமைத்தது.. தடுப்பாணை அருகே பொன் விளைந்த களத்தூர்

ஏரிக்கு நூற்றி அறுபத்தியேழு கன அடி தண்ணீர் செல்லும் வகையில் பத்து கி.மீ. நீளத்துக்கு கால்வாய் வெட்டப்பட்டது.. இதனால் விவசாயம் செழிப்பாக நடைபெற்றது..

'அப்பத்தானே எங்க முப்பாட்டன் சொத்துக்கு வெள்ளைக்காரன் நிலவரி போட முடியும்..'

செங்கல்பட்டு நீஞ்சல் மடு திறக்கப்படும் காலங்களில் வரும் தண்ணீர் பொன் விளைந்த களத்தூரின் ஏரியை வந்தடைந்து நிரம்பும்.. கண்ணுக்கு எட்டிய தொலைவு தண்ணீரால் நிரம்பியிருக்கும் ஏரியின் கரையில்.. இருபுறமும் மரங்களும்.. ஊடே ஏரிக்கரை பாதையுமாக இருக்கும்.. தணிகாசலம் ஏரிக்கரையில் ஏறி.. பாதையில் நடந்தார்..

எதிரில் உழவு மாட்டைக் கையில் பிடித்து.. ஏரைத் தோளில் போட்டு வந்து கொண்டிருந்த சுப்பையன் தணிகாசலத்தைக் கண்டதும் மாட்டின் மூக்கணாங்கயிறை இழுத்துப் பிடித்து நிறுத்தி.. தானும் நின்றார்..

வேப்பங்குச்சியை மென்றபடி வந்த தணிகாசலம் சுப்பையனைக் கண்டதும்.. வேப்பங்குச்சியின் துகள்களைத் துப்பி விட்டு..

"என்ன சுப்பையா.. விடிஞ்சும் விடியாம இருக்கிற கருக்கல்லில உழுகக் கிளம்பிட்டீரு..?" என்றார்..

கிழக்கில் உதித்திருந்த சூரியனின் கதிர்களைப் பார்த்த சுப்பையன்..

"இது கருக்கல்லா மச்சான்..?" என்றார்..

"பின்னே இல்லியா..?" தணிகாசலம் சிரித்தார்..

"மச்சானுக்கு வேணும்னா இது கருக்கல்லா இருக்கும்.. எங்களுக்கு இதுதான் விடிகாலை.."

சுப்பையன் சொன்னதும் தணிகாசலம் சுப்பையனின் முதுகிற்குப் பின்னால் எட்டிப் பார்த்தார்.. ஒன்றும் விளங்காத சுப்பையன்..

"என்ன மச்சான்.. அங்க என்னத்தைத் தேடுறீரு..?" என்றார்..

"நீங்க ஒத்தை ஆளாத்தானே நிக்கறீரு.. அப்புறம் என்னவோ.. ஊருபட்டக் கூட்டத்தக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்காப்புல எங்களுக்குன்னு சொல்லுறீரே..?"

"மச்சானுக்கு பகடி பேச நான் எம்புட்டுட் டேனாக்கும்..? நானாச்சும் இப்பத்தான் உழவு மாட்டக் கையில பிடிச்சுக்கிட்டு வயலப் பாத்து வந்துக்கிட்டு இருக்கேன்.."

"தோள்ல கிடக்கிற ஏரை மறந்துட்டீரே.."

"அதுசரி.. அதையேன் விட்டு வைப்பானேன்.. தோள்ல ஏரைப் போட்டுக்கிட்டு வயலுக்கு வந்துக்கிட்டு இருக்கேன்.. போதுமா..?"

"போதாதுன்னு சொல்றதுக்கு நீங்க என்ன சீர் செனத்தியையா வண்டி கட்டிக் கொண்டு வந்திருக்கீறீரு..?"

தணிகாசலத்தின் மனைவியான தங்கம்.. சுப்பையனுக்கு ஒன்றுவிட்ட சித்தப்பாவின் மகள்.. அந்த முறையில் தணிகாசலம் கேலியாக கேள்வி கேட்க.. சுப்பையனின் முகம் மலர்ந்து விட்டது..

'இந்தப் பகடிக்கு இவன் ஏன் முகத்தில் விளக்க ஏத்தி வைக்கிறான்..?' தணிகாசலம் யோசனையானார்..

"சீர் செனத்திய நீங்கதான் செய்யனும் மச்சான்.. இன்னும் சீர் வாங்குற மாப்பிள்ள நினைப்பிலயே இருக்கீங்களே.."

'இவன் என்னத்தச் சொல்றான்..?'

"அந்தக் கதையை அப்புறம் பார்ப்போம்.."

'எந்தக் கதைய அப்புறம் பார்க்கப் போறான்..?'

"இப்ப இந்தக் கதைக்கு வருவோம்.."

'இந்தக் கதை எந்தக் கதை..? அந்தக் கதை எந்தக் கதை..?'

"நானு கண்ணு முழிச்சு.. எழுந்திருக்கிறதுக்குள்ள மச்சான்.. காடு, கழனி, வாய்க்கா, வரப்பச் சுத்திப் பாத்துட்டு.. வேப்பங்குச்சியை மென்னபடி ஏரிக்கரை பாதையில எதிர்கால வருகீறே.. நீங்க எப்ப எழுந்திருச்சு கழனிப் பக்கம் வந்தீகளாம்..? நட்ட நடு சாமத்திலயா..?"

"ஹா.. ஹா.."

தணிகாசலம் உரக்கச் சிரித்தார்.. சலங்கையொலியின் சப்தம் கேட்டதில் அவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்..

ஒற்றை மாட்டுவண்டியொன்று வந்து கொண்டிருந்தது.. அவர்கள் ஒதுங்கி வழிவிட்டார்கள்.. வண்டி கடந்ததும் பாதைக்கு நடுவில் வந்த தணிகாசலம் 'அப்புறம்..?' என்ற பாவனையுடன் பார்த்தார்..

சுப்பையன் அவரிடம் எதையோ பேச விழைந்தார்.. அது தணிகாசலத்திற்கும் புரிந்தது.. விசயம் எதுவாக இருந்தாலும் சுப்பையனாகவே சொல்லட்டும் என்று அவர் பொறுமையாக காத்திருந்தார்..

"மச்சான்.."

"சொல்லுங்க.."

"சொல்லுறேன்னு தப்பா எடுத்துக்கக் கூடாது.."

"எதுக்கு இம்புட்டுத் தயக்கப்படறீக..? மனசில நினைச்சதை பட்டுன்னு கேட்டுப்புடனும்.. அதுதான் என்னோட வழக்கம்.."

"நீங்க படிச்சவுங்க.. காந்தியவாதி..! உலக விவரம் தெரிஞ்சவங்க.. நான் அப்படியில்லைங்க..."

"அதுக்காக பேச வந்ததைப் பேசக்கூடாதுன்னு எழுதி வைச்சிருக்கா..?"

"அப்படியில்லைங்க மச்சான்.. இது பட்டுன்னு போட்டு உடைக்கிற சமாச்சாரம் இல்லைங்க.."

சுப்பையன் மேலும் தயங்க.. தணிகாசலம் வந்த கோபத்தை அவரிடம் காட்ட இயலாதவராக வேப்பங் குச்சியின் மீது காட்டி மென்று துப்பினார்..

"ஆதவன் ஊருக்குள்ளாற வந்திருக்காப்புல போல இருக்கே.."

அங்கே தொட்டு.. இங்கே தொட்டு.. சுப்பையன் விசயத்திற்கு வந்துவிட.. தணிகாசலம் அதற்கு என்ன என்ற ரீதியில் மௌனப்பார்வை பார்த்தார்..

"உங்களுக்கே தெரியும் மச்சான்.. ஆதவன் சீமைக்குப் போய் படிச்சுட்டு வந்திருந்தாலும் ஊரு தங்கறதில்ல.."

"அதுக்கு..?"

"இப்புடி காடாறுமசாம்.. நாடாறு மாசம்ன்னு விக்கிர மாதித்தன் கணக்கா அலையறவனுக்கா உங்க பொண்ணைக் கட்டிக் கொடுக்கப் போறீங்க..?"

'கத்தரிக்கா முத்தி கடைவீதிக்கு வந்திருச்சு..'

இப்போது வேப்பங்குச்சியை மொத்தமாகவே மென்று துப்ப ஆரம்பித்தார் தணிகாசலம்.. அவருக்கு சுப்பையனின் பேச்சுப் போகும் திசையைப் பிடிக்கவில்லை.

'என் பொண்ண யாருக்கு கட்டிக் கொடுக்கனும்னு எனக்குத் தெரியாதா..? இவனெல்லாம் சொல்ல வந்திட்டான்..'

"மச்சானுக்குத் தெரியாததில்ல.. ஆதவனோட அப்பன் விசுவநாதன் உங்களுக்கு ஒன்னு விட்ட தங்கச்சி யோட புருசனா இருக்கலாம்.. உங்க தம்பி மருதாச்சலத்துக்கு சிநேகிதரா இருக்கலாம்.. அதுக்காக விசுவநாதன் வீட்டிலயே பொண்ணுக் கொடுத்து

பொண்ணெடுக்கனும்னு எந்த விதக் கட்டாயமும் மச்சானுக்கு இல்ல..”

“இப்ப என்னைக் கட்டாயப் படுத்தித்தான் பொண்ணு கொடுத்துப் பொண்ணெடுக்கிற சம்பந்தத்தப் பேசி முடிச்சிருக்காங்கன்னு யாரு உமக்குச் சொன்னது..? இந்த தணிகாசலத்தக் கட்டாயப்படுத்த இனிமேத்தான் ஒருத்தன் பிறந்து வரனும்..”

“பார்த்தீங்களா.. மச்சான் கோபப் படறீங்க.. நான் அப்புடிச் சொல்லலை மச்சான்..”

“வேற எப்புடிச் சொன்னீரு..?”

“மச்சான்.. அந்த விசுவநாதன் உங்களுக்குத் தங்கச்சி புருசன்னா நான் மச்சினன்.. அவன் வீட்டில பொண்ண எடுங்க.. என் வீட்டில பொண்ணக் கொடுங்க...”

“சுப்பையா..!”

“எதுக்கு மச்சான் சத்தம் போடறீங்க..? எனக்கு பொண்ணுக் கேக்கிற சொந்தமில்லையா... இல்ல.. என் மகனுக்குத்தான் உங்க பொண்ணக் கட்டிக்கிற தகுதி இல்லையா..? சீமைக்குப் போயி படிக்கலைன்னாலும்.. இந்தா இருக்கிற மதராஸ் பட்டினத்தில படிச்சுட்டுத்தான் வந்திருக்கான்.. அந்த ஆதவனப் போல பொழைக்கத் தெரியாம உலகத்தைச் சுத்திக்கிட்டு இருக்காம.. வெள்ளைக்காரன் கவர்ண்மெண்டில உத்தியோகம் பாக்கிறான்.. மதராஸ் பட்டினத்தில வீடு புடிச்சு உங்க மகக்கூட ஒஹோன்னு குடும்பம் நடத்துவான்.. என்ன சொல்றீங்க..?”

தணிகாசலம் எதுவும் சொல்லாமல் சுப்பையனை வெறித்துப் பார்த்துவிட்டு அவரைக் கடந்து போக முனைந்தார்.. சுப்பையன் தடுத்து நிறுத்தினார்..

"எனக்கொரு பதிலைச் சொல்லிட்டுப் போங்க மச்சான்.."

"இதப் போல நிறையத்தரம் நீங்க கேட்டு... அத்தனைதரமும் நான் பதிலைச் சொல்லியாச்சு சுப்பையா.. விடாப்பிடியா நீருதான் மல்லுக்கு நிக்கிறீரு.."

"என்னத்தச் செய்யச் சொல்றீங்க.. இந்த சுத்துப் பட்டிச் சீமையிலேயே சுந்தரவள்ளி உங்க பொண்ணுதான்.. கட்டினா தாமரையைத்தான் கட்டுவேன்னு என்மகன் ஒத்தைக் காலிலே நிக்கிறான்.."

"ஆகாத சோலிக்கு அச்சாரம் போடாம அவனக் கால மாத்தி நிக்கச் சொல்லும்.."

"மச்சான்.."

"நீரு எத்தனைமுறை கேட்டாலும் என்னோட பதில் இதுதான்.. என்மக தாமரையை விசுவநாதனோட மகன் ஆதவனுக்குத்தான் கட்டிக் கொடுப்பேன்.. பொண்ணுக் கொடுத்துப் பொண்ணெடுக்கனும்னு பேசி முடிச்சாச்சு.. அதில மாத்தமில்ல.."

"கல்யாணம் எப்போ..?"

"நடக்கிறப்ப சொல்றேன்.. வந்து விருந்து சாப்பிட்டுட்டு போங்க.."

"அதுக்கென்ன மச்சான்.. நீங்க கல்யாணத்த நடத்தறப்ப வந்து மொய் எழுதிட்டு கை நனைச்சுட்டு வாரேன்.. மொதல்ல கல்யாணத்தேதிய நீங்க குறிக் கனுமில்ல..?"

"சுப்பையா..!"

"ஒங்கிப் பேசினா உண்மை இல்லைன்னு ஆகிருமா மச்சான்..? உங்க மகன் தனஞ்ஜெயனுக்கும்.. ஆதவனோட தங்கச்சி செவ்வந்திக்கும் வேணும்னா கல்யாணம் நடக்கலாம்.. அதில எந்தச் சிக்கலுமில்ல.. ஆதவன் கதை அப்படியில்ல.. இன்னைக்கு காலம்பர ஊருக்குள்ள இருக்கிறவன்.. சாயந்திரம் வரைக்கும் ஊரு தங்கினா அதிசயம்தான்.. ஓடிக்கிட்டே இருக்கிறவனுக்காக எம்புட்டு நாளைக்கு உங்க பொண்ண வீட்டில வைச்சு அடை காக்கப் போறீங்க..?"

"காலம் பூராவும் அடை காக்கனும்னாலும் காப்பேன்.. சுப்பையா..! அவ என் மக..! கன்னிதெய்வமா என் வீட்டில இருக்கிறதுதான் அவ தலைவிதின்னா அப்படியே இருந்துட்டுப் போகட்டும்.. அதுக்காக கண்டவனுக் கெல்லாம் பொண்ணு தர மாட்டேன்.." பொட்டில் அடித்ததைப் போலப் பதில் சொன்னார் தணிகாசலம்..

"நான் கண்டவனா மச்சான்..?" சுப்பையாவின் முகம் கருத்து விட்டது..

"வெள்ளைக்காரன்கிட்டச் சம்பளம் வாங்குற மகனைப் பெத்து வைச்சிருக்கிற நீ.. எனக்குக் கண்டவன்தான்.. என் மகனும், ஆதவனும் படிச்சிருக்கிற

படிப்புக்கு கிட்டக்கூட உன் மகனால வர முடியுமா..? ஆளுற அரசாங்கம் நம்ம அரசாங்கமா இருந்திருந்தா.. என் மகனுக்கும், ஆதவனுக்கும் அரசாங் த்திலே பெரிய, பெரிய பதவியெல்லாம் கிடைச்சிருக்கும்.. வெள்ளைக்காரன் கொடுக்கிற உயர்பதவி வேணாம்ன்னு என் மகன் வேட்டிய மடிச்சுக் கட்டிக்கிட்டு கழனியில இறங்கிட்டான்.. ஆதவன் உலகத்த சுத்தி வர்றான்.. இவுக எனக்கு மகனாவும், மருமகனாகவும் கிடைச்சதுக்கு நான் பெருமைப்படறேன் சுப்பையா.."

தணிகாசலத்தின் முகம் ஒளிர்ந்தது.. சிவந்த கண்களுடன் மீசையை முறுக்கியபடி அவர் உறுமிய உறுமலில் சுப்பையா விக்கித்துப் போய் நின்று விட்டார்.

"மச்சான்.." அவர் குரல் இறங்கியிருந்தது..

"எனக்கும் ஆதவனுக்கும் கொள்கை வேறுபாடு இருக்குதான்.. அதுக்காக வாக்குக் கொடுத்தபடி அவனுக்குப் பொண்ணைக் கட்டிக் கொடுக்க மறுக்க மாட்டேன்.. என்வழி வேற.. என் தம்பி மருதாச்சலத்தோட வழி வேற.. அதுக்காக அவன் என் தம்பியில்லேன்னு ஆகிருமா..? அவனுக்கு ஒன்னுன்னா என் ரத்தம் துடிக்காதா..? அதுபோலதான் இதுவும்.. உலகத்தச் சுத்தி வர்ற போராளின்னு என் தம்பிக்கு ஒருத்தன் பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொன்னா எனக்கு எப்படியிருக்கும்..? அப்படித்தானே விசுவநாதனுக்கும் இருக்கும்..?"

"மச்சான்.."

"ஒப்புக்கிறேன் சுப்பையா.. என் மக உலகப் பேரழகிதான்.. அவளக் கட்டிக்கிறவன் தங்கத்தட்டில அவளைத் தாங்கனும்தான்.. அதுக்காக வெள்ளைக்காரன் கிட்ட வேலை பாக்கிற உன் மகனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்கனுமா..?"

"மச்சான்.."

"ஆதவன் உள்ளங்கையில அவளை வைச்சுத் தாங்குவான்.. உலகத்தையே சுத்தினாலும் அவன் மனசு பூராவும் தாமரையைத்தான் சுத்திக்கிட்டு இருக்கு.. தலைமறவா இருக்கானா..? இருக்கட்டும்.. என்னைக்கு இந்த நாட்டுக்கும் அவனுக்கும் ஒரு விடியல் பிறந்து நிம்மதியா என் கண்ணு முன்னால வந்த நிக்கிறானோ.. அன்னைக்கு அவனுக்கு என் மகளைக் கட்டிக் கொடுத்துக்கறேன்.. அதுவரைக்கும் அவன் ஓடிக்கிட்டே இருக்கட்டும்.. என்மக எங்க வீட்டிலேயே இருக்கட்டும்.."

தணிகாசலத்தின் திடமான.. முடிவான பதிலில் சுப்பையன் விசுவநாதனின் மீது பொறாமை கொண்டார்..

தாமரை போல பெண் கிடைப்பது இருக்கட்டும்.. தணிகாசலத்தைப் போல சம்பந்தி யாருக்கு கிடைப்பார்..?

"சொல்றேனேன்னு தப்பா எடுத்துக்காதீங்க மச்சான்.." சுப்பையன் மீண்டும் பீடிகையைப் போட்டார்..

"இதை ஒன்னச் சொல்லிருவீரு.. நீரு சொல்ற தெல்லாம் தப்பாத்தான் இருக்கு..?"

"உங்களுக்குத்தான் அது தப்பாத் தெரியுது மச்சான்.."

"இப்ப என்னதான் சொல்ல வருகிறீரு..?"

"அதில்ல மச்சான்.. நீங்களோ காந்தியவாதி..! உங்க மகனும் அப்படித்தான்.. ஆதவனோ சுபாஷ் சந்திபோஸின் பின்னால போகிறவன்.. அவன்மேல இம்புட்டுக் கரிசனம் காட்டறீங்களே.."

"காந்தியும் சுபாஷ் சந்திர போஸீம் எதிரிகள்ன்னு யாரு உமக்குச் சொன்னது..?"

"இல்லீங்களா..?"

சுப்பையன் அறியாமையுடன் கேட்டார்.. தணிகாசலத்துக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

"தெரிஞ்சாப் பேசனும்.. இல்லேன்னா வாயை மூடிக்கிட்டுப் போகனும்.. இதுதான் உம்மோட அறிவோட லட்சணம்..! காந்தியைப் பத்தி சுபாஷ் சந்திர போஸிக்கு நல்ல அபிப்ராயம் இருக்கு.. மதிப்பு இருக்கு.. மரியாதை இருக்கு.. சுபாஸைப் ப்த்தி காந்திக்கும் அப்படித்தான்.. நல்ல விதமாத்தான் சொல்லுவார்.."

"பின்னே எதுக்குப் பிரிஞ்சு நிக்கிறாங்க..?"

"நீரும் நானும் ஒன்னா நிக்க முடியுமா..?"

"எப்படி முடியும்..? நம்ம யோசனைக வேற வேறயாச்சே.."

"அங்கேயும் அப்படித்தான்.. இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கற விசயத்தில காந்தி வெள்ளைக்காரன் கூட சமாதானமாப் போயி விடுதலை வாங்கனும்னு நினைச்சாரு..

சுபாஷ் நீயென்ன கொடுக்கிறது.. நானென்ன வாங்கறது.. எங்க தேசத்தோட சுதந்திரத்தை நாங்களே எடுத்துக்கு வோம்ன்னாரு.. இப்படி வேறுபட்ட யோசனைகளால அவங்க பிரிஞ்சு நிக்கிறாங்க.. அதனால அவங்க எதிரிகளா ஆகிருவாங்களா..? நீரும் நானும் வேற வேற திசைகளில யோசிக்கிறதால எதிரிகளா ஆகிட்டோமா..?"

சுப்பையா அலறி விட்டார்.. அவருக்கு காந்தியைப் பற்றியும் சுபாஷ் சந்திர போஸைப் பற்றியும் தணிகாசலம் சொன்னது புரிந்ததோ இல்லையோ.. சுப்பையாவும் தணிகாசலமும் எதிரிகளா என்று அவர் கேட்டது மட்டும நன்றாகவே புரிந்தது..

"இல்லவே இல்லை மச்சான்.. அதெப்படி நீங்களும் நானும் எதிரிகளா ஆவோம்..? நீங்களோ ஊரில பெரிய மனுசன்..! நான் உங்க உறவு முறைக்காரன்.. தணிகாசலம் மச்சானோட மச்சினங்கிறதினாலதான் ஊருக்குள்ள பெருமையோட நடமாடிக்கிட்டு இருக்கேன்.. அதை இல்லைன்னு ஆக்கிப் புடாதீங்க மச்சான்.. தாங்க மாட்டேன்.."

'அம்மாது..'

தணிகாசலம் விழிகளால் எச்சரித்தபடி விலகி நடந்தார்.. காலைப் பொழுதின் இதமான மனநிலை கலைந்ததில் அவருக்குள் லேசான கோபம் வந்தது.. அவர் விலகி நடந்ததில் சுப்பையன் சீராக மூச்சைவிட்டார்..

பொன் விளைந்த களத்தூரின் பெரியமனிதரான தணிகாசலத்தின் உறவுமுறை என்பதை வைத்து மஞ்சள் குளித்துக் கொண்டிருந்த சுப்பையா.. அது கெட்டு விட்டால் என்ன செய்வார்..?

'பறக்கிறதுக்கு ஆசைப்பட்டு இருக்கிறத நழுவ விடத் தெரிஞ்சேனே..'

அவர் தன்னைத்தானே கடிந்து கொண்டு.. உழவு மாட்டுடன் கழனியைப் பார்த்து நடந்தார்..

ஏரிக்கரையை விட்டுத் தணிகாசலம் இறங்கிய போது.. எதிரே வேட்டியை மடித்துக் கட்டியபடி ஆதவன் வந்தான்.. தணிகாசலத்தைக் கண்டதும் அவசரமாக மடித்துக் கட்டிய வேட்டியை இறக்கி விட்டான்..

வெள்ளைக்காரனின் கண்ணில் விரலை விட்டு ஆட்டும் அந்த வீராதி வீரன் தந்த மரியாதையில் பூரிப்படைந்தார் தணிகாசலம்..

'இவனுக்குப் பொண்ணக் கொடுக்காம வேற எவனுக்குப் பொண்ணக் குடுப்பேன்..?'

வாத்சல்யத்துடன் சிரித்தார் தணிகாசலம்.. தேங்கி நின்ற ஆதவனிடம் வெகு பிரியமாக..


"எப்ப வந்தீங்க மாப்பிள்ளை..?" என்று கேட்டார்..

"வந்து ஒரு வாரமாச்சு மாமா.." பவ்யமாக பதில் சொன்னான் ஆதவன்..

"வந்தவுக வீட்டுப் பக்கம் எட்டிப் பாக்காம ஊரையே வலம் வர்றீங்களே.. வீட்டுப் பக்கம் எட்டிப் பாக்க வேணாமா..?"

துணிகாசலத்தின் கேள்வியில் அன்று மாலையே அவரின் வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்தான் ஆதவன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



7

நிழலாக வரும் உணர்வை..
நீ விரட்ட இயலாது..

மீண்டும்.. மீண்டும் யாமினியின் மனதில் எழுந்த கேள்வி ஒன்றுதான்..

அது.. எதற்காக தாமோதரன் அமைதி காக்கிறான் என்பது..

'என்னடா இது..? சித்தார்த்த கௌதம புத்தர் சீறிப் பாயறாரு.. தடியைத் தூக்கிக்கிட்டு தலையில சாத்த எப்படா சான்ஸ் கிடைக்கும்ன்னு தவமிருக்கிற தாமோதரத் தாண்டவராயன் அமைதி காக்கிறாரு..'

விசித்திரத்திலும் விசித்திரமான அந்த நிகழ்வை நினைத்து வியந்து கொண்டிருந்தாள் யாமினி.. அதிலும் முத்தாய்ப்பாக சித்தார்த்தனின் வசவு மழையை..

"சரி.. சரி.. விடுடா.." என்று தாமோதரன் நிறுத்திய போது வியப்பின் உச்சிக்கே போய் விட்டாள்..

"என்னடா நீயும் இவங்களுக்குச் சப்போர்ட் பண்ற..?"

"பொறுடா.. ஏன் இப்படிச் செஞ்சாங்கன்னு விசாரிப் போம்.."

"இதில விசாரிக்க என்ன இருக்கு..? திமிர்..! பொறுப்பான பதவியில இருக்கோம்.. நம்ம பவரைக் காட்டிப் பார்க்கலாம்ங்கிற திமிர்.. வேறென்ன..?"

"நீயா எதையாச்சும் சொல்லாதே.. மிஸ் யாமினி.. ஏன் அப்படிப் பண்ணினீங்க..?"

தாமோதரனின் கேள்விக்குத்

"தெரியலை சார்.." என்று கையை விரித்தாள் யாமினி..

"தெரியலையா..?" சித்தார்த்தன் கோபமாக.. தாமோதரன் யாமினியின் முகத்தையே உன்னிப்பாகப் பார்த்தான்..

"நீங்க சொல்ற பதில் சைல்டிஷா இருக்கு யாமினி.."

"ஐ நோ சார்.. பட் என்னோட ஆன்சர் இதுதான்.. என்னன்னே தெரியலை சார்... அந்த வெள்ளைக் காரங்களைப் பாத்தவுடனே எனக்கு எரிச்சல் எரிச்சலா வந்துச்சு.. அவங்களை வெறுப்பேத்தனும்னு தோணுச்சு.. அவங்க கேட்டதைச் செய்யக் கூடாதுன்னு வீம்பு வந்துச்சு.. இதெல்லாம் எதனால தோணுச்சுன்னு எனக்குத் தெரியலை சார்.."

சித்தார்த்தன் திகைத்தான்.. யாமினியின் முகத்தில் இருந்த உண்மையை ஊன்றிப் பார்த்தவனுக்கு இனம்

புரியாத பெருமிதம் எழுந்தது.. ஏனோ.. யாமினியின் செயலை பாராட்ட வேண்டும் போல அவனுக்கு தோன்றி வைத்தது..

"நீயும் ஆரம்பிச்சுராதே.. ஆபிசுக்கு ஒரு ஆள் இருந்தால் போதும்.."

இலகுவாகச் சொல்லிய தாமோதரனின் பேச்சில் சித்தார்த்தன் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்து..

"ஹி.. ஹி.." என்று சிரித்து வைத்தான்..

"சும்மாயிருடா.. பயமுறுத்தாதே.." என்ற தாமோதரன் யாமினியைப் பார்த்து..

"இதுதான் உங்க பிராப்ளம்ன்னா.. நீங்க இனிமே கவனமா இருந்துக்கப் பழகனும் யாமினி.. ஏன்னா.. நம்ம கம்பெனியோட முக்கியமான கிளையண்ட்ஸ் ஃபாரினர்ஸ் தான்.. அவங்களை டீஸ் பண்ணினா வேலைக்கு ஆகாது.." என்றான்..

"ஓகே சார்.. ஐ வில் கன்ட்ரோல் மை செல்ஃப்.." யாமினி சொன்னாள்..

"நீங்க போகலாம்.."

தாமோதரன் சொன்னவுடன் இவ்வளவுதானா என்று கேட்க நினைத்து வாயை இறுக்கி மூடிக் கொண்டு வெளியேறினாள் யாமினி..

அவள் பாட்டுக்கு அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்து.. அப்படியா.. இன்னும் கொஞ்சம் மாத்து வாங்க உனக்கு ஆசையா..? சித்தார்த்தா.. ஆரம்பிடா என்று

கௌதம புத்தரானவனை.. மறுபடியும் தாமோதரன் ருத்ர தாண்டவம் ஆட வைத்து விட்டால் என்ன செய்வாள்..?

யாமினி போனதும்.. அறையில் இருந்த நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களுக்குள் புரிதலான ஓர் உணர்வு விரவியிருந்தது..

"ஆச்சரியமில்ல..?"

"ஆமாண்டா சித்தார்த்.."

"உனக்கும் எனக்கும்தான் இப்படித் தோணுதுன்னா.. இவளுக்கும் அதே மாதிரி தோணியிருக்கு.."

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன்.."

தாமோதரனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்திருந்தன...

'இது எப்படி..?'

வெள்ளைக்காரர்களுடன் பிஸினெஸ் பண்ணும் சித்தார்த்தனுக்கு வெள்ளையர்களைப் பிடிக்காது.. அவர்களைக் கண்டால் கொலை வெறி வருகிறதென்பான்.. அதிசயத்திலும் அதிசயமாக தாமோதரனும் அதையே சொல்வான்.. இன்று யாமினிக்கும் அந்த உணர்வு வந்திருக்கிறதே..



8

எமது நாட்டின் சுதந்திரத்தை.. எடுத்துக் கொள்வது எமதுரிமை..!

"வீட்டில யாரு..?"

கிணற்றடியில் தண்ணீர் இறைத்துப் பித்தளைக் குடத்தை நிரப்பிய தாமரை.. தண்ணீர் தளும்பிக் கொண்டிருந்த குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்தாள்.. வீட்டுக்குள் போகத் திரும்பியவளின் காதில் அந்தக் குரல் விழுந்ததும்.. குடத்திலிருந்த தண்ணீரைப் போல அவளது மனமும் தளும்பியது..

"யாருமில்லாத வீட்டுக்குள்ள ஐயா எதுக்காக வந்திருக்காக..?"

தாமரையின் பதில் குரலில் ஆதவனின் மனம் துள்ளியது.. இப்படி அச்சமின்றி அவள் வம்புக்கு இழுக்கிறாளென்றால்.. வீட்டில் யாருமில்லை என்று அர்த்தமாகிறது என்று அவனுக்கா தெரியாது..?

உல்லாசமாக அவன் வீட்டுக்குள் போனான்.. இடுப்பில் தண்ணீர் குடத்துடன் அவள் பின்பக்க கிணற்றடியிலிருந்து வந்து கொண்டிருந்தாள்.. சமையல் கட்டை ஓட்டிய நடை வராண்டாவில் அவன் மறித்துக் கொண்டு நின்றான்.. ஜல்லிக் கட்டுக்காளையைப் போலத் திமிறிக் கொண்டு நின்றவனை கடந்து போக வழியில்லாமல் அவள் தேங்கி நின்றாள்..

"என்ன..?" விசமமாக அவன் கேட்டான்..

"ஐயாவுக்குத் தெரியாதாக்கும்..?" அவனை குறுகுறுவென்று பார்த்தபடி அவள் சொன்னாள்..

"தெரியலையே.." அப்பாவி போல கை விரித்தவனின் கண்கள் சிரித்தன.. அவளை மேய்ந்தன..

"இவரு ஒன்னும் தெரியாத சின்னக் கண்ணன்தான்.. நம்பிட்டோம்.." தாமரை நொடித்தாள்..

"அப்படின்னு நான் சொன்னேனாடி..?" அவளைப் பார்வையிலேயே பிய்த்துத் தின்றான் ஆதவன்..

உச்சிமுதல் உள்ளங்கால் வரை.. ஓர் அங்குலம் கூட விடாமல் மேய்ச்சல் நிலத்தைக் கண்ட காளையைப் போல மேய்ந்த அவனது பார்வையில்.. கிளர்ந்த தாமரை.. இடுப்பிலிருந்த குடத்தைச் சரித்துத் தண்ணீரை கையில் பிடித்து அவன் மீது வீசினாள்..

"ஏய்ய்..!"

முகத்தில் விழுந்த தண்ணீர் துளிகளில் நனைந்தபடி சிலிர்த்துச் சிரித்தான் அவன்..

"ஆளில்லாத வீட்டில வந்து அக்கிரமமா பண்றீங்க..? வழியை விடுங்க.." கோபமில்லாத கொஞ்சும் குரலில் கடிந்து கொண்டாள் தாமரை..

"அபாண்டமா பழி போடக் கூடாது.. அப்படியென்னடி நான் அக்கிரமத்தைப் பண்ணிப் புட்டேன்..?"

அவளை ஒரு மார்க்கமாக பார்த்தபடி அவன் ஆரம்பித்ததில் அவளது கள்ளத்தனம் கொண்ட கன்னி இதயம் எதிர்பார்ப்பில் படபடத்தது..

'படவா ராஸ்கல்..! சாக்குக் கிடைச்சிருச்சுன்னு என்னவெல்லாம் பேசப் போறானோ..'

அதைவிட அவன் என்னவெல்லாம் செய்யப் போகிறானோ என்ற நினைவில் அவள் குளிர்காய்ச்சல் வந்தவளைப் போல நடுங்கி வைத்தாள்..

"இப்படி கிட்ட வந்தேனாடி..?"

அவன் கிட்டவந்தான்.. எட்ட விலக முடியாமல் நடைவராண்டாவில் அகப்பட்டுக் கொண்டவள் பின்னடைந்தாள்.. சுவர் அணைவாய் தடுத்ததில் அதன் மேல் சாய்ந்து நின்றாள்.. தோதாகப் போய் விட்டது என்று அவன் அவள் மேல் சாய்ந்து நின்று அவள் முகத்தோடு முகத்தை வைத்து இழைந்தான்..

"இப்படித் தோள் மேல கை போட்டேனாடி..?"

அவள் காதோரமாக அவன் கிசுகிசுத்த போது உராய்ந்த மீசையின் உராய்வில் அவள் கிறங்கிப் போய் விழி மூடினாள்.. அவளது இடுப்பிலிருந்த குடம் நழுவவா என்றது..

தொய்ந்து சாய்ந்திருந்தவளின் இடுப்பிலிருந்த தண்ணீர் குடத்தை வெகு லாவகமாக ஒரு கைபிடியில் இறக்கி வைத்த ஆதவன் அவள் மீது படர்ந்து சாய்ந்தான்.. தாமரை தன்வசமிழந்தவளாக கிறங்கிப் போய் அவன் கைகளில் அடங்கினாள்..

ஆதவனுக்கு அடர்த்தியான பெரிய மீசை இருந்தது.. அவனுடைய பெரிய கண்களை உருட்டி விழித்து மீசையை முறுக்கினால் எப்பேர்பட்ட பராக்கிரமசாலியும் பயந்து நடுங்கி விடுவான்.. அப்பேற்பட்ட மீசைக்காரன்.. அவனது கண்களில் கிறக்கத்தைத் தேக்கி.. மீசை உராய தாமரையின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு..

"இப்படி முத்தம் கொடுத்தேனாடி..?" என்று கேட்டு வைத்தான்..

அந்த அடாவடிக்காரனின் அராஜகத்தில் தன்னை இழந்து கொண்டிருந்தாள் தாமரை..!

அவளது தேகமெங்கும் பரவிய அவனது கைகள் அத்துமீறின.. அந்த அத்துமீறல்கள் அத்தனையையும் பட்டியலிட்டு.. இப்படிச செய்தேனா என்று நியாயம் கேட்டு அவளை படுத்தி வைத்தான் அவன்.. ஒரு கட்டத்தில் பொறுக்க முடியாமல் அவன் வாய்பொத்தி தடுத்தாள் தாமரை..

"போதும்.. போதும்.. இப்படிச் செய்தேனா.. இப்படிச் செய்தேனான்னு கேட்டு அத்தனையையும் நடத்தியாச்சு.. இனிக் குடும்பம் நடத்த வேண்டியதுதான் பாக்கி.."

"அதையும் ஏண்டி பாக்கி வைக்கனும்..?"

தாகத்துடன் கேட்டவனின் மோகத்தில் அவளுடைய தளிர் மனம் பற்றிக் கொண்டது.. ஆசைத்தீயின் தணலை அணைக்கும் குளிர் நீராய் அவன் அவளே அப்பிக் கொண்டான்.. ஆளில்லாத தனிமையும்.. அவர்களுக்கான

வீடும்.. தடையற்ற சுதந்திரத்தை அள்ளி வழங்கியதில் அவளைப் பெண்டாள முற்பட்டான் ஆதவன்..

"தாமரை.:!"

வாசலில் கேட்ட மருதாச்சலத்தின் அழைப்பில் பதறி விலகினாள் தாமரை..

"ம்த்சு.."

சந்தோசம் தடைபட்டதில் எரிச்சல் கொண்டான் ஆதவன்.. அவன் கைகள் தாபத்துடன் தாமரையை இறுக்கி அவசரமாய் அணைத்து விடுவித்தன.. பரபரப்புடன் குடத்தைத் தூக்கக் குனிந்தவளின் கன்னத்தில் குனிந்து முத்தமிட்டவன் குடத்தைத் தூக்கி அவள் இடுப்பில் வைத்தான்..

மருதாச்சலம் வீட்டுக்குள் வந்தபோது.. ஆதவன் ஹாலில் இருந்த மரநாற்காலியில் மகா கண்ணியவானாக உட்கார்ந்திருந்தான்.. தாமரை அடுக்களைக்குள் மறைந்து விட்டாள்..

"வாப்பா ஆதவா..! எப்ப வந்த..?"

அவனை வரவேற்றபடி எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார் மருதாச்சலம்..!

"இப்பத்தான் வந்தேன் மாமா.." என்ற ஆதவனை அவர் பார்வை துளைத்தது..

"வீட்டில யாரையும் காணோமே.." மருதாச்சலத்தின் பார்வை வீட்டுக்குள் துழாவியது..

"அதைத்தான் நானும் நினைச்சேன் மாமா.. யாரையும் காணோமே.. போயிட்டு அப்புறமா வரலாமான்னு நினைச்சுக்கிட்டே இருந்தேன்.. நீங்களும் வந்துட்டிங்க.." ஆதவன் சொன்னான்..

"வீட்டைத் திறந்து போட்டுட்டு எல்லோரும் எங்கே போயிட்டாங்க..?" மருதாச்சலம் புருவங்களைச் சுருக்கினார்..

"என்னைக் கேட்டா..?" ஆதவன் பதிலுக்கு புருவங்களை உயர்த்தினான்..

"அதுக்கில்லப்பா.. அண்ணி திட்டமானவங்க.. வீட்டுக் கதவை திறந்து போட்டுட்டு வெளியில போக மாட்டாங்க.." மருதாச்சலம் விடாமல் ஆராய்ச்சியைத் தொடர்ந்து கொண்டிருந்தார்..

"வெள்ளைக்காரன் மேல குண்டு போடறதுக்குக் கூட நீங்க இந்த அளவுக்கு யோசிக்க மாட்டிங்க மாமா.. உங்க வீட்டுக் கதவு திறந்து கிடக்கிறதுக்கு நாள் பூரா யோசிப்பீங்க போல இருக்கே.." ஆதவன் அலுத்துக் கொண்டான்..

அப்படியும் மருதாச்சலம் அடங்கிய பாடில்லை.. கதவுக்குப் பின்னால் அவர் எட்டிப் பார்க்க முயல..

"அங்கே யாரிருக்கப் போறாங்க..?" என்று எரிச்சல் மண்டிய குரலில் கேட்டான் ஆதவன்..

அதற்கு மேலும் பொறுக்க முடியாத தாமரை கைகளில் மோர் தம்ளர்களோடு சமையல் கட்டிலிருந்து வெளிப்பட்டாள்..

"தாமரை இருக்கே.." மருதாச்சலம் சந்தோசப் படாமல் சந்தேப் பட்டதில்..

"ஆமாம்.. தாமரை இருக்கு.. கை காலெல்லாம் பத்திரமா இருக்கான்னு பார்த்துக்கங்க.." என்று இடக்காக சொன்னான் ஆதவன்..

"எதுக்குப்பா..?"

"நான் கடிச்சு முழுங்கியிருந்தா என்ன பண்ணுவீங்க..?"

"தொண்டைக் குழியில இருந்து தோண்டி எடுத்திர மாட்டேன்..? யாரு கிட்ட..?" மீசையை முறுக்கினார் மருதாச்சலம்..

"உங்ககிட்ட தொண்டையைக் காட்டிக்கிட்டுத்தான் நான் நிற்பேன் பாருங்க.. யாரு நானு..? ஆயிரத்துத் தொளாயிரத்து நாப்பத்தி ஒன்னுல வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் காத்தில கலந்த புகை போல மாயமா மறைஞ்சதைப் போல மறைஞ்சிர மாட்டேன்..? ஐ.என்.ஏக்காரன்கிட்டயே சவாலா..?"

ஆதவனின் சிலுப்பலில் மருதாச்சலம் வாக்கு வாதத்தை மறந்து புன்னகைத்தார்..

அவர் அப்படித்தான்.. சுபாஷ் சந்திரபோஸின் சாகசங்களைப் பற்றிய பேச்சு வந்தால் எவ்வளவு கோபமிருந்தாலும் மறந்து அந்தப் பேச்சில் ஆழ்ந்து விடுவார்..

"நிசம்தான் ஆதவா..! யாரால முடியும் அது..? பிரிட்டிஷ்காரன் வீட்டுக்காவலில வைச்சுப்புட்டான்.. வீட்டுக்குள்ள சுபாஷ் இருக்காருன்னு அவன் காவல் காத்துக்கிட்டு நிற்க.. போஸ் ஜனவரி பதினேலில் அவன் கண்ணுல விளக்கெண்ணயை ஊத்திட்டுத் தப்பிச்சுப் போயிட்டாரு.. அவனால கண்டுபிடிக்க முடிஞ்சதா.. இல்லையே.. தப்பிச்சுப் போனவரு பெஷாவர் வழியாக் காபூலைத் தொட்டு கைபர் கணவாய் வழியா நடந்து ஆப்கானிஸ்தானுக்குப் போயிட்டாரு.. அங்கேயிருந்து இத்தாலிக்குப் போயி.. அங்கேயிருந்த ஒரு கணவாய் வழியா ரஷ்யாக்குள்ள நுழைஞ்சு.. அங்கேயும் தங்காம பெர்லினுக்குப் போய் சேர்ந்தாரே.. இதை என்னன்னு சொல்றது..?"

"கிரேட் எஸ்கேப்புன்னு சொல்லுங்க.."

"அது கிரேட் எஸ்கேப்தான் ஆதவா.. எழுபத்தியொரு நாள்கள் உலகம் சுற்றி போக வேண்டிய நாட்டுக்குப் போய் சேர்ந்திட்டாரு.. அவரப் போல யாரிருக்கா..?"

"சத்தமாச் சொல்லிராதீங்க மாமா.. உங்க அண்ணன் காதிலயும்.. அண்ணன் மகன் காதிலயும் இந்தப் பேச்சு விழுந்து தொலைச்சிருச்சுன்னா.. எனக்குப் பொண்ணுத் தர மாட்டேன்னு சொல்லிருவாங்க.."

மருதாச்சலத்திடம் சொல்லியபடி.. அவருக்குத் தெரியாமல் தாமரையைப் பார்த்து மின்னல் வேகத்தில் இமையை சிமிட்டி வைத்தான் ஆதவன்.. அவளுக்கு 'ஜிவ்' வென்று ஆகிவிட்டது..

'கள்ளன்..' நடுங்கும் கைளுடன் மருதாச்சலத்திடம் மோர் தம்ளரை நீட்டினாள்..

போலைப் பற்றிய பூரிப்பிலிருந்த மருதாச்சலம் அண்ணன்மகளின் நடுங்கும் கரங்களில் புருவங்களை சுருக்கினார்..

"ஏம்மா இப்படி நடுங்கற..?"

போலை மறந்து அவர் ஆதவனை துளைக்கும் பார்வை பார்த்ததில் தாமரையின் நடுக்கம் அதிகமானது..

அலட்டிக் கொள்ளாமல் மோர் தம்ளரை வாங்கிக் கொண்ட ஆதவன்.. மருதாச்சலத்திடம்..

"என்னமோ.. நாங்க பெரிய இவனுகன்னு இந்த வெள்ளைக்காரனுக சொல்லிக்கிறானுகளே.. வீட்டுக் காவலில இருந்து நேதாஜி முஸ்லீம் பெரியவரைப் போல மாறுவேடத்தில தப்பிச்சுட்ட விவரம் இவனுகளுக்குத் தெரியவே தெரியாது.. உலகம் சுத்தற வாலிபனா நம்ம ஆளு ஜெர்மனிக்குப் போய் சேர்ந்த செய்தியை மார்ச் இருபத்தியெட்டில ஜெர்மன் பத்திரிக்கைகள் எழுதின பின்னாலதான் இவனுகளுக்கு விவரமே தெரிஞ்சுச்சு.. இப்படியாப்பட்டவனுகதான் நம்மள அடிமைப் படுத்தி வைச்சிருக்கானுக.. நாமளும் கூழைக்கும்பிடு போட்டு குட்டுடா வெள்ளைக்காரான்னு தலையைக் குனிஞ்சு குடுத்துக்கிட்டு இருக்கோம்.." என்று கண்கள் சிவக்கப் பேசினான்..

மருதாச்சலம் தாமரையை மறந்து நாட்டு நிலவரத்தில் இறங்கி விட்டார்.. அதுதான் சமயமென்று தாமரை சமையற்கட்டுக்குள் ஓடி விட்டாள்... சற்று முன் ஆதவனுடன் தனித்திருந்த பொழுது அவள் நினைவில் வந்து இம்சித்தது.. அவளால் மருதாச்சலத்தின் முன்னால் இயல்பாக நிற்க முடியவில்லை..

'எல்லாம் இவனால் வந்தது..'

சமையல் கட்டின் மூலையிலிருந்த மனைப் பலகையில் உட்கார்ந்து.. அடுப்பிற்குள் விறகைத் தள்ளினாள் தாமரை.. அங்கிருந்து அவளால் ஆதவனைப் பார்க்க முடிந்தது.. அவளது முறைப்பில் அவன் புருவங்களை உயர்த்தினான்.. அவள் மயங்கிப் போனாள்..

'இப்பவும் அடங்கறானான்னு பாரேன்..'

திட்டிய மனது.. மறுபடியும் அவனைப் பார்க்கத் தூண்டியது.. பார்த்தாள்.. அவளது பார்வையை எதிர் பார்த்திருந்தவனைப் போலக் கண்கள் மின்ன அவள் பார்வையை கவ்விக் கொண்டது அவன் பார்வை..

தாமரைக்குள் என்னவோ நிகழ்ந்தது.. அவனில்லாத நாள்களில் அவனையே நினைத்து தவிக்க வைக்கும் அருகாமைகளைத் தந்துவிட்டு ஓடும் அந்தப் போராளியின் பின்னால் அவளது மனமும் ஓடியது... ஆதவனின் அருகாமையிலேயே இருக்க வேண்டும் என்று துடித்தாள் தாமரை.. அவளது துடிப்பை உணர்ந்தவனைப் போல நொடிக்கொருதரம் அவளைப்பார்த்தபடி மருதாச்சலத்திடம் பேசிக் கொண்டிருந்தான் ஆதவன்..

நாட்டின் அரசியல் நிலவரங்களை அக்கு வேறு.. ஆணி வேராக.. அலசி ஆராய்ந்து கொண்டிருந்தவனை.. அடுப்பை மூட்டியபடி அள்ளிப் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தாள் தாமரை.. சுள்ளிகளை விறகுகளுக்கு அடியிலும்.. பக்கவாட்டிலும் செருகி.. அவள் பற்ற வைத்த நெருப்பு பற்றிக் கொண்டது... அவளைத் தொட்டு விளையாடிய ஆதவனின் பார்வையின் ஸ்பரிசத்தில் அவளது கன்னி மனமும் பற்றிக் கொண்டது..

'பாக்கிற பார்வையைப் பாரேன்..'

அடுப்பின் புகை போல அவள் மனமும் புகைந்தது.. மூக்குத்துகுழலை எடுத்து.. விறகு அடுப்புக்குள் நீட்டி ஊதினாள் தாமரை.. புகை விலகி.. நெருப்பு எரிந்தது.. ஆதவனைப் பார்த்தாள்.. அவன் மருதாச்சலம் கூறிய ஏதோ ஒன்றை ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தான்..

சிரித்துக் கொண்டிருந்தவனின் அதீத கவர்ச்சி அவளை ஈர்த்தது.. அடுப்பில் சோற்றுக்கான உலை நீரை ஏற்றி வைத்த வண்ணம் ஏக்கத்துடன் ஆதவனைப் பார்த்தாள்.. அவன் நெற்றியில் விழுந்த முடியைப் பின்னுக்குத் தள்ளியபடி மருதாச்சலத்திடம் பேசிக் கொண்டிருந்தான்.. அந்த முடியில் விரல் விட்டு அளைய அவள் மனம் துடித்தது..

முரட்டு முடி அவனுக்கு..

'முடி மட்டுமா முரடு..?' தாமரை உதட்டைக் கடித்து உணர்வுகளை அடக்கிக் கொண்டாள்..

அவனது முடியைக் கலைத்து விளையாடுவதில் அவளுக்கு விருப்பம் மிக அதிகம்..

"உன்னைப் பார்க்க வரனும்னா தலையைக் கலைச்சு விட்டுத்தான் வந்து சேரனும்டி.. சீவிக்கிட்டு வந்தா வேலைக்கு ஆகாது.." என்பான் அவன்..

அந்த முரட்டு முடி அடங்குவேனா என்று அவனது முன் நெற்றியில் படிந்திருந்ததில் தாமரையின் கை துருதுருத்தது..

கொதித்த உலைநீர் அவளது துருதுருத்த கைகளுக்கு வேறு வேலை இருப்பதை அறிவுறுத்தியதில் அரிசியை அளந்து பித்தளைக் குண்டாச்சட்டியில் எடுத்துக் கொண்டாள்.. அதைக் கழுவியபடி அடுப்பிலிருந்த விறகை இழுத்து தீயின் வேகத்தை மட்டுப் படுத்தினாள்.. அரிசியைக் களைந்து குண்டாச் சட்டியில் போட்டாள்..

உலைநீர் சளசளவென சப்தம் எழுப்பியது.. ஹாலில் பேசிக் கொண்டிருந்த ஆதவனின் பேச்சுச் சப்தமும் கேட்டது..

"ஹிட்லரைப் பாக்கிற துணிச்சல் யாருக்கு வரும் மாமா..? அதெல்லாம் நம்ம ஆளுக்கு மட்டும்தான் வரும்.. ஒரு சர்வாதிகாரி கூட சரிசமமா உக்காந்து பேசினவரில்ல சுபாஷ் சந்திரபோஸ்.."

"அவர் சாகசங்களின் நாயகன் மாப்பிள்ளை..! தனியொரு மனுசனா இந்த வெள்ளைக்காரனுகளுக்கு சவால் விட்டுக்கிட்டு இருக்கிறவரு.. உலகமே அவரைக் கவனிக்குது.."

மருதாச்சலம் மெய் மறந்து சொல்லிக் கொண்டிருந்த போது..

"கூடவே உங்க ரெண்டு பேரையும் சேத்துக் கவனிக்குது.." என்று கோபமாக உறுமியபடி உள்ளே வந்தார் தணிகாசலம்..

கூட வந்த தனஞ்ஜெயன் ஆதவனைப் பார்த்துச் சிரித்தான்.. மகளைக் கட்டிக் கொள்ளப் போகும் மாப்பிள்ளையாயிற்றே என்று தணிகாசலமும் தலையை அசைத்து வைத்தார்..

"ஜெர்மனியோட ஹிட்லர் இந்தியாவுக்கு எதிரி.. அவனைப் பத்தி உசத்தியாப் பேசினா.. அரசாங்கம் உங்களை சும்மா விடாது.. நினைப்புல வைச்சுக்கங்க.."

"ஹிட்லர் இந்தியாவுக்கு எதிரியில்லை அண்ணா.. பிரிட்டிஷ்காரனுக்குத்தான் எதிரி.. இந்த அரசாங்கம் நம்மளோடது இல்ல.. வெள்ளைக்காரனோடது.."

"எனக்கு இது தெரியாது பாரு.. நீ சொல்லிக் கொடுக்கிற.. நம்ம நாட்டுப் போராட்டத்த ஜெர்மனிக்கு ஏன் கொண்டு போகனும்..?"

"எதிரிக்கு எதிரி நண்பன்னு நம்ம கிராமத்தில சொல்றதில்லயா..? அதுதான் இதுவும்.. ஹிட்லர் பிரிட்டிஷ் காரனுக்கு எதிரி.. அவன்கிட்ட இந்திய விடுதலைக்கு ஆதரவு கேட்டாரு போஸ்.. ஹிட்லரும் இந்திய விடுதலைக்கு உதவறதா சொல்லிட்டான். நாட்டை விட்டு வெளியேறி அண்டை நாடுகள்ல உதவி கேட்காம..

இருந்த இடத்திலேயே கூட்டம் போட்டுக்கிட்டு இருக்கிறவங்களுக்கு போஸோட நடவடிக்கைகளைப் பாத்தா ஏதோ போல வித்தியாசமாத்தான் தோணும்..”

“ஆமாமாம்.. ஒரு சர்வாதிகாரிகிட்ட உதவி கேட்கிறவன் எப்படி இருப்பான்..? நாளைக்கு இவனே ஒரு சர்வாதிகாரியா மாறுவான்.. தேவையா நமக்கு..?”


“போஸைப் பத்தி இப்படியும் ஒரு பிரச்சாரம் நடக்குதுண்ணே.. எங்களுக்கும் இது தெரியும்.. பேசறவங்களுக்கு என்ன தெரியும்..? ஆயுதப் போராட்டத்துக்கான உதவியைக் கேட்டு ஹிட்லரை போஸ் சந்திச்சப்ப.. ‘இந்தியாவின் வருங்கால சர்வாதிகாரியே வருக..’ன்னு ஹிட்லர் கை கொடுத்தாராம்.. அதுக்கு ‘வருங்கால சுதந்திர இந்தியாவை உருவாக்க மட்டுமே உங்களின் உதவியை நாடி வந்திருக்கிறேன்..’னு போஸ் உடனடியா பதில் சொன்னாராம்.. தெரியாம எதையும் பேசக் கூடாது..”

“சும்மா போஸ்.. போஸ்ன்னே சொல்லாதேடா.. பிரிட்டிஷ் காரனுக்கு எதிரா ராஷ் பிஹாரி போஸால் உருவாக்கப்பட்டு செயல் பாடமல் இருந்த இந்திய தேசிய ராணுவத்த மீள் உருவாக்கம் செய்து அதன் தலைவரானவர்தான் உங்க போஸ்.. ஐ.என்.ஏ எப்படி உருவாச்சு..? தானாவா உருவாச்சு..?”

“காங்கிரஸ் கூட தானா உருவாகலை.. அதை உருவாக்கவும் நமக்கு வெள்ளைக்கார பெண்மணியோட உதவிதான் தேவைப்பட்டுச்சு..”

அண்ணனும் தம்பியும் எதிரும் புதிருமாக.. கிழக்கும் மேற்குமாக மோதிக் கொண்டதை.. இளைஞர்கள் மௌனசாட்சியாக வேடிக்கை பார்த்தபடி பேசாமல் இருந்தார்கள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



8

உனையும் எனையும் இணைத்த கீதம்-நம் உயிராய் மாறிய தேசியகீதம்..

சென்னை ஹை கோர்ட்டின் வாசலில் நின்ற காரில் சித்தார்த்தனும் தாமோதரனும் ஏறிக் கொண்டார்கள்.. தாமோதரன் காரை ஓட்ட.. சித்தார்த்தன் சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து..

"ஊப்ப்.." என்று வாயைக் குவித்து காற்றை ஊதினான்..

"என்னாச்சுடா.. அந்த லாயர் படுத்தி எடுக்கறாரா..?"

"ம்ம்ம்.. சீக்கிரமா இந்த லீகல் பிராப்ளத்தை முடிச்சுட்டாத் தேவலைடா தாமு.. நெக்ஸ்ட் ஸ்டெப்ப எடுக்கனும்.."

"முடிஞ்சுரும்.. டோன்ட் வொர்ரி.."

தாமோதரன் காரை வளைத்துத் திருப்பினான்.. ஹை கோர்ட்டு கட்டிடத்தைப் பார்த்த சித்தார்த்தன்..

"பிரிட்டிஷ்காரன் கட்டி வைச்ச கட்டிடம்.." என்றான்..

"ஒருவகையில வெள்ளைக்காரன் சிறந்த நிர்வாகிடா.. அட்மினிஸ்ட்ரேசனில அடிச்சுக்கிட்டு சிதறிக் கிடந்த இந்தியாவின் சிற்றரசுகளை அவங்கதான் ஒன்றுபடுத்தி ஒட்டு மொத்த இந்தியாவா நம்மகிட்டக் கொடுத்தாங்க.."

"இன்னொன்னையும் பாராட்டனும்.. மதவிசயங்களில அவங்க தலையிடல... நம்ம காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்கு வைரநகை ஒன்னை ராபர்ட் கிளைவ் காணிக்கையாக கொடுத்திருக்கானே.."

"போரில் வெற்றி பெற்றதற்கு காணிக்கையா செழுத்தினானாம் சித்தார்த்.. எங்கப்பா சொல்லுவாரு.."

"அவர்தான் வரதராஜப் பெருமாள் கோவிலிலேயே குடியிருப்பாரே.." சித்தார்த்தன் சிரித்தான்..

"அதைச் சொல்லு..." கூடச் சேர்ந்து சிரித்தான் தாமோதரன்..

அவர்கள் இருவரின் மனதிலும் காஞ்சிபுரம் வந்து நின்றது.. விச்ராந்தியாக ஊர் பக்கம் சென்று வெகு நாள்களாகி விட்டது என்று தாமோதரன் சொன்னான்.. சித்தார்த்தன் ஆமோதித்தான்..

"ஒருநாள் எல்லா வேலைகளையும் ஏறக்கட்டிப் போட்டுட்டு ஊருப் பக்கம் போயிட்டு வரனும்.."

தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் தாமோதரன்.. சித்தார்த்தன் தாமோதரனின் பெற்றோரைப் பற்றி விசாரித்தான்.. குடும்ப விவரங்களைப் பற்றிப் பேசிக்

கொண்டிருந்தவர்களின் பேச்சு மறுபடியும் வெள்ளைக் காரர்களிடம் வந்து நின்றது..

"லண்டனில காலடியாத் திரிந்த ராபர்ட் கிளைவ் என்பவன் இந்தியாவுக்கு கிழக்கிந்திய கம்பெனியோட குமாஸ்தாவா வந்து வெறும் முந்நூறு சிப்பாய்களை வைச்சுக்கிட்டு ஆற்காட்டைப் பிடித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு வித்திட்டானாம் சித்தார்த்.. நம்ப முடியுதா..?"

"இப்படிச் சொல்வது பொய்யின்னு இங்கிலீஷ்காரங்க எழுதி வைச்சுட்டுப் போயிருக்கிற புத்தகங்களே சாட்சி சொல்லும் தாமு... அவங்க இந்தியாவில நடந்ததை தேதிவாரியா எழுதி வைச்சுட்டுப் போயிருக்காங்க.."

"பிரிட்டிஷ்காரனின் முதல் படையெடுப்பு ஆற்காடு படையெடுப்பில்ல.. தேவி கோட்டை மேலதான் முதன் முதலா அவங்க படையெடுத்திருக்காங்க.. கொள்ளிடத் தோட முகத்துவாரத்தில் இருக்கிறதால நாலாபக்கமும் தண்ணீ சூழ்ந்திருக்கிறதால தீவுக் கோட்டைன்னு சொல்வாங்களாம் சித்தார்த்.. படிப்படியா அது தேவி கோட்டையா மாறியிருக்கு.."

"நம்ம ஊரில படிப்படியா பேர் மாறுகிறதைப் பத்திச் சொல்லனுமா என்ன..? காலடிப் பேட்டையோட பிகினிங் நேம் என்னன்னு தெரியுமாடா..?"

"எங்கப்பா சொல்லுவார்.. 'கோலட் பெட்' டாம்.. 'கோலட்'ங்கிற வெள்ளைக்கார கவர்னர் தன்மையாப்

பழகினாராம்.. அதனால அந்தப் பகுதி மக்கள் அவர் பெயரையே அவங்க ஊருக்கு வைச்சாங்களாம்.. அங்கே கல்யாண வரதராஜப் பெருமாள் கோவிலை 'கோலட் பெட்' தான் கட்டினாராம்.. அந்தக் கோவிலில இருக்கிற மூலவர் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலில இருக்கிற மூலவரைப் போல அச்சு அசலாய் அப்படியே இருக்கிறாராம்.."

"வெள்ளைக்காரங்களில நல்லது பண்ணின வங்களும் இருக்காங்க தாமு.. உடன்கட்டை ஏறுகிற 'சதி'ங்கிற பழக்கத்தை ஒலித்தது.. குழந்தைத் திருமணத்தை தடுத்ததுன்னு சொல்லிக்கிட்டேப் போகலாம்.. அவங்கள்ளாம் விதி விலக்குதான்.. மெஜாரிட்டி பிரிட்டிஷ்காரங்க ஆணவத்தோட.. ஆளுமை மனப்பான்மையோடதான் இருந்திருக்காங்க.. நம்ம ஆளுக கிட்ட ஒத்துமை இல்லைடா.."

"அப்படி இருந்திருந்தா வெள்ளைக்காரன் உள்ளே வந்திருப்பானா..? காட்டிக் கொடுக்கிறதில கின்னஸ் ரிகார்டை படைச்சாங்க.. அவனுக சாதுரியமா போட்டு வாங்கி உள்ளார வந்து சட்டமாக உக்காந்துக்கிட்டானுக.. அதுக்கப்புறமா விழிப்பு வந்து விரட்டியடிக்க ஒன்னாச் சேர்ந்தாங்க.."

என்னவோ பக்கத்தில் இருந்து பார்த்தைப் போலப் பேசிக் கொண்ட அந்த நண்பர்கள் இருவருக்கும் நடப்புக் காலம் மறந்து விட்டது.. வெள்ளைக்காரர்களை விரட்டிய யடித்த அந்தக் காலத்திற்கே அவர்கள் சென்று விட்டார்கள்..



9

இரட்டைக் குழல் துப்பாக்கியில்.. பிரிவினையே ஏன் வந்தது..?

சடங்கு வீட்டிலிருந்து வெளியே வந்து வீதியில் இறங்கிய மருதாயியும்.. தங்கமும்.. பட்டுப்புடவையும் நகைகளுமாக மல்லிகைப் பூவுடன் மனம் கமழ நடந்தார்கள்.. விசேச வீட்டிற்கு சென்று வந்ததன் அடையாளமாக அவர்களின் நெற்றியில் சந்தனக்கீற்று பளிச்சிட்டது..

"தெருவடைச்சுப் பந்தப் போட்டு என்ன செய்ய..? மாமன்காரன் சீர்வரிசை ஒரு மூலையைக் கூட அடைக்கல.." என்றாள் மருதாயி..

"அதுக்குள்ள அந்த ஆனந்தவள்ளி அளந்த அளப்பு இருக்கே.. எங்க அண்ணன் வீட்டுச் சீதனத்த ஊர்வலமா கொண்டு வந்தா இந்த பொன் விளைந்த களத்தூர் நிறைஞ்சிரும்ன்னு சொன்னா.." கையை ஆட்டி ஆட்டிப் பேசினாள் தங்கம்..

"முதல்ல அவ வீட்டு நடையில இருக்கிற மூலையை நிரப்பச் சொல்லு.." நொடித்தாள் மருதாயி..

"அந்தப் பெருமை குறைஞ்சிருச்சுன்னுதான் இப்ப இன்னொரு பெருமையை ஆரம்பிச்சு வைச்சிருக்கிறா.."

"என்னவாம்..?"

"அவ பொண்ணக் கட்டிக்க அவளோட அண்ணன் மகன் மதராஸீ பட்டினத்தில இருந்து வரப் போறானாம்.."

"இதென்னடி கூத்தா இருக்கு.. இப்பத்தான அவ பொண்ணு சமைஞ்சிருக்கா.. மறுசடங்கு ஆகிறதுக்குள்ள பரிசத்தப் பத்திப் பேசறாளே.. வன்கொடுமையாயில்ல இருக்கு.."

"இல்லயாம்.. கொள்ளைப் பெருமையா இருக்காம்.."

"இதில பெருமப்படறதுக்கு என்ன இருக்கு..?"

"சமைஞ்ச கையோட அவ பொண்ணக் கட்டிக் கொடுக்கப் போகிறாளாம்.. மத்தவங்களப் போல வயசுக்கு வந்த பொண்ண ரெண்டு வருசம்.. மூணு வருசம்ன்னு வீட்டில நிப்பாட்டி வைக்கலையாம்."

தங்கத்தின் குரல் விசனத்தில் தோய்ந்திருந்தது.. மருமகளின் மன வருத்தத்தை எளிதாக கண்டு கொண்டாள் மருதாயி.. அந்த ஆனந்தவள்ளியை என்ன செய்தால் தகும் என்று அவளுக்குள் கோபம் பீறிட்டது..

பெருமை பீற்றுகிறேன் பேர்வழியென்று மருதாயிக் கிழவியின் தங்கமான மருமகளின் மனதை அவள் நோகடிப்பாளா..?

"கோட்டிக் கழுதை..!"

மருதாயி திருநெல்வேலிச் சீமையில் பிறந்து வளர்ந்தவள்.. பொன் விளைந்த காத்தூருக்கு வாக்கப்பட்டு வந்தாலும் திருநெல்வேலிப் பாசையின் வீச்சை விட்டு

விடாமல் கட்டிக் காப்பாற்றுபவள்.. கோபம் வந்தால் அவள் வாயில் கோட்டிக் கழுதைதான் வந்து நிற்கும்..

"அவ கோட்டியில்ல அத்தை.. விவரமானவ.. என்னைச் சொல்லிக் காட்டறா.." தங்கத்தின் கண்கள் கலங்கின..

"அவ சொல்றான்னு நீ கண்ணைக் கசக்கிற பாரு.. உன்னைச் சொல்லனும்.. இப்ப என்ன ஆகிருச்சு..?"

"இன்னும் என்ன ஆகனும்..? இவள்ளாம் சொல்றாப்புல என் பொழைப்பு இருக்குதே அத்த.."

"உன் பொழைப்புக்கு ஒரு குறைச்சலும் இல்ல தங்கம்.. சும்மா மனசைப் போட்டு உழப்பிக்காத.."

"அவ நம்ம தாமரையை மனசில வைச்சுக்கிட்டு ஜாடை பேசறா அத்தை.."

"எனக்கு அது புரியலைன்னா நினைக்கிற..? ஓடற ஆத்துல ஒன்பது சுழியக் கண்டு பிடிச்சுடறவ இந்த மருதாயிக் கிழவி.. அந்த ஆனந்தள்ளி போடற ஆலவட்டத்தக் கண்டு பிடிக்க மாட்டேனா என்ன..? நான் அதுக்குச் சொல்லலை தங்கம்.. நம்ம தாமரை வயசுக்கு வந்து ஒரு வருசம்தான் ஆகுது.. பதினாலு வயசுப் பொண்ணு.. இதுக பேசுதுன்னு சின்னதிலேயே கட்டிக் கொடுத்துட்டா ரெண்டே வருசத்தில இடுப்பில ஒன்னு.. வயித்தில ஒன்னுன்னு வந்து நிக்கும்.. பொறுத்துக் கட்டிக் கொடுக்கலாம்மா.."

"அதுக்குள்ள இந்த ஆனந்தவள்ளியோட மக இடுப்பில ஒன்னு வயித்தில ஒன்னுன்னு வந்து நின்னிருவா போல இருக்கே அத்தை.. தாமரையை விட ஒத்தை வயசுச் சின்னவ.. குடும்பம் குழந்தைன்னு அவ நின்னு.. நம்ம தாமரை கன்னிப் பொண்ணா நின்னா பாக்கிற சனம் என்ன சொல்லும்..?"

"தணிகாசலத்துக்கு பொண்டாட்டியா ஆனவ பேசற பேச்சா இது..? அவன் எதையெதையோ யோசிக்கிறான்.. புரியாத விசயங்கள எல்லாம் பேசித் தள்ளறான்.. அவன் கட்டின பெண்டாட்டி.. இம்புட்டு சின்ன விசயத்துக்கு மனசைப் போட்டு வருத்திக்கிறான்னா இந்தக் கொடுமைய எங்கே போயிச் சொல்றது..?"

"உங்க மகனுக்கென்ன அத்தை.. நாட்டைப் பத்தியே பேசிக்கிட்டு இருப்பாரு.. வீட்டைப் பத்தி நினைச்சுப் பாக்க மாட்டாரு.. அக்கம் பக்கத்தில இருக்கிறவக எப்புடிப் பேசுறாகன்னு எனக்குள்ள தெரியும்..?"

"வாழற வீட்டைப் பாத்தா நாலு பேருக்கு பொறாமை வரத்தான் செய்யும்.. ஊருக்குப் பெரிய வீடு.. உரசிப் பாக்க நினைக்கிறாக.. கழுதையை விட்டுத் தள்ளுவியா..? அதை விட்டுட்டு அந்த ஆனந்த வள்ளியெல்லாம் ஒரு ஆளுன்னு அவ பேச்சை பெரிசாப் பேச வந்திட்ட.. பதினாறு வயசாகாம என் பேத்தியக் கட்டிக் கொடுக்க நான் தயாரா இல்ல.. சொல்லிப்புட்டேன்.."

மருதாயி கடிந்து பேசியதில் மௌனமானாள் தங்கம்.. தண்ணீர் குடத்துடன் எதிரே வந்த பாரிஜாதம்..

"என்னக்கா.. ஆனந்தவள்ளி வீட்டுச் சடங்குக்கு போயிட்டு வரீங்களா..?" என்று தங்கத்திடம் கேட்டு வைத்தாள்..

"அதை உங்க அக்காகிட்ட மட்டும்தான் கேப்பியா..? கூட வர்ற என்னைப் பாத்துக் கேக்க மாட்டியா..?" மருதாயி முடித்துக் கொண்டாள்..

"ஏன் அத்த.. உங்களப் பாத்துக் கேக்கிற அளவுக்கு நான் பெரிய மனுசியா ஆகிட்டேனா என்ன..? சின்னக் கழுதைக வேள்வி கேட்டா நீங்க கோட்டிக் கழுதைன்னு பேரு வைச்சிருவீகளே.. அதான் அக்காகிட்ட மட்டும் கேட்டேன்.." என்றாள் கெட்டிக்கார பாரிஜாதம்..

"இதில எல்லாம் விவரமா இருங்கடி.." ஒரு மார்க்கமாக பாரிஜாதத்தை ஏற இறங்கப் பார்த்தபடி சொன்னாள் மருதாயி..

"சடங்கு வீட்டுக்கு நீ போகலையா..? அடுத்த வீதியில இருக்கிற நாங்களே போயிட்டு வந்துட்டோம்.. அடுத்த வீடில இருக்கிற நீ அங்கேயே கிடையாய் கிடக்காம தண்ணிக்குடத்த சுமந்துக்கிட்டு வர்ற.. என்னத்தச் சொல்ல..?" என்றாள் தங்கம்..

"என்னக்கா பண்றது..? நீ வாக்கப்பட்டு வந்திருக்கிறதப் போல பணக்கார வீட்டுக்கா நான் வாக்கப்பட்டு வந்திருக்கேன்..? உனக்கு என் மாமன் வீட்டுக் குள்ளேயே கிணத்தைத் தோண்டி வைச்சிருக்காரு.. எனக்கு அப்படியா..? தண்ணி வேணும்னா நாலு வீதி

தள்ளி இருக்கிற கிணத்தில போயி இறைச்சுக்கிட்டில்ல வரனும்..?" பொறாமை பொங்கப் பொங்கப் பேசித் தள்ளினாள் பாரிஜாதம்..

"இதத்தான் நரிய நாட்டாம பண்ண விட்ட திசைக்கு ரெண்டு ஆடு கேட்கும்ன்னு பழமொழி சொல்லுவாங்க.." ஏளனமாக உதட்டை மடித்துக் கடித்தபடி கூறினாள் மருதாயி..

பாரிஜாதத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.. அவளைக் கண்டாலே மருதாயி வீசும் ஒரு மார்க்கப் பார்வைகளில் அல்லோகலப்பட்டுப் போயிருந்தாள் அவள்.. தணிகாசலத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்கு ஏக்கப் பெருமூச்சு வந்து தொலைக்கும்.. அந்த ஏக்கப் பெருமூச்சை எப்படியோ கண்டு கொண்டு..

"ஏலே தணிகாசலம்.. பாத்துப் பத்திரமா போயிட்டு வாலே.. ஊரு கெட்டுக் கிடக்கு.. வயசுப் பிள்ளைகளுக்குத் தகப்பன்னு நீ நினைக்கலாம்.. ஊரு நினைக்காது.. தங்கம் பெத்த என் மருமக வீட்டில உனக்காக காத்துக்கிட்டு இருக்கிறப்ப தகர டப்பா பக்கம் பார்வயப் பத்த விட்டுறாதேடா மகனே.." என்று மருதாயிக் கிழவி பேசும் ஜாடைப் பேச்சில் அரண்டு போய்விடுவாள் பாரிஜாதம்..

அப்பேற்பட்ட மருதாயிக் கிழவியின் எதிரே.. அவளது மருமகளைப் பார்த்துப் பொறாமைப் பட்டால் அவள் சும்மாவா விடுவாள்..? பழமொழியை எடுத்து விட்டு பாரிஜாதத்தை வெளுத்துக் கட்ட மாட்டாளா..?

‘கிழவிக்கு இருக்கிற குசும்பப் பாரேன்..’

பாரிஜாதத்தின் முகம் சிவந்தது.. ஒரு பேச்சுக்குக்கூட தணிகாசலத்தைப் பற்றிப் பேசக்கூடாது என்று மருதாயிக் கிழவி கங்கணம் கட்டிக் கொண்டு வழியை மறித்தால் எப்படி..?

“ஏன் அத்த.. அப்புடி எத்தன ஆட்ட நான் ஓட்டிக்கிட்டுப் போயிட்டேன்..?” அவள் நியாயம் கேட்டாள்..

“நீ ஆட்ட விட்டுருவ ஆத்தா.. ஆளையில்ல கணக்குப் பண்ணப் பாப்ப.. நீ எதை ஓட்டிக்கிட்டுப் போகப் பாப்பேன்னு எனக்குத் தெரியாதா..?” மருதாயி நெட்டி முறித்தாள்..

கிழவியிடம் பேசினால் வேலைக்கு ஆகாது என்று பாரிஜாதம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

‘நான் ஓட்டிக்கிட்டு போக நினைச்சா உன் மகன் வந்துட்டுத்தான் வேற வேலயப் பாப்பாரு..’

எரிச்சலுடன் தங்கத்தைப் பார்த்தவளுக்கு எதையாவது சொல்லி அவள் மனதை வருந்த வைக்க வேண்டுமென்ற காந்தல் ஏற்பட்டது..

அது எப்படி.. ஊரையே மடித்து வெற்றிலை பாக்காய் போட்டு விடும் மருதாயிக் கிழவி.. தங்கத்தை மட்டும் தாங்கு.. தாங்கு எனத் தாங்கி சீராட்டுகிறது..?

பாரிஜாதத்திற்கு பொறாமையான பொறாமை ஏற்பட்டது.. கொந்தளித்த பொறாமையுடன்..

"ஏன்க்கா.. நம்ம சுப்பையா அண்ணன் மகனுக்கு தாமரையைப் பொண்ணு கேக்கிறாகளாமே.. அதுக்கு நம்ம மாமா பொண்ணு தர மாட்டேன்னு சொல்லிட்டாராமே.. நிசமா..?" என்று சீண்டினாள்..

"நம்ம மாமாவா..?" மருதாயி ஏற்ற இறக்கத்துடன் கேட்டாள்..

"இது என்ன அத்த.. பேசற அத்தனை பேச்சிலயும் குத்தம் கண்டு பிடிக்கிறீங்க.. உங்க மகன் எனக்கு மாமனில்லாம அண்ணந்தம்பி முறையாவா ஆகணும்..?" காட்டத்துடன் கேட்டாள் பாரிஜாதம்..

"அப்ப பொத்தாம் பொதுவில நம்ம மாமன்னு பேசாம வெறுமனே மாமா சொன்னாராமேன்னு பேசிப் பழகு.. உனக்குத்தான் மாமன்.. இவளுக்கு புருசன்.. நினப்பில இருக்கட்டும்.." எச்சரித்தாள் மருதாயி..

"விடுங்கத்த.. அவ யதார்த்தமா பேசறா..." பாரிஜாதத்திற்காக பரிந்து கொண்டு வந்தாள் தங்கம்..

"யாரு..? இவ..? யதார்த்தமா பேசறா..? கிழிஞ்சது போ.. இவ யதார்த்தம்ன்னா.. யதார்த்தத்துக்கே ஒரு மருவாதி இல்லாமப் போயிரும்.." எரிச்சலுடன் சொன்னாள் மருதாயி..

"என்னவோ.. வாய்க்கு வந்ததை பேசித் தள்ளுரா.. அதப்போயி பெரிய விசயமா பேச வேணாம் அத்தை.. நீ சொல்லு பாரிஜாதம்.. உனக்கு இதை யாரு சொன்னது..?"

"சுப்பையா அண்ணன்தான் சொன்னாரு.."

"ஆமா.. அந்த போக்கத்தவன்.. இவளக் கூப்பிட்டு விவரம் சொல்லி ஆலோசனை கேட்டான்.. இவ சொல்றான்னு நீயும் கேட்டுக்கிட்டு நிக்கறியே தங்கம்.."

"அவரு போக்கத்தவரு இல்ல அத்த..! இந்த பொன் விளைந்த களத்தூர்ல நூறு மூட்டை நெல்லடிக்கிற விவசாயிதான்.. மதராஸீ பட்டினத்தில வேல பாக்கிற அவரு மகனக் கட்டிக்கிட்டா தாமரை ஒரு குறைவுமில்லாம வாழலாமேன்னு எங்கிட்ட ஆதங்கப் பட்டாரு.. அதத்தான் அக்காகிட்ட நானும் சொன்னேன்.. நம்ம தாமரையோட வயசில இருக்கிற பொண்ணுக எல்லாம் கல்யாணம் கட்டிக்கிட்டு புருசன் வீட்டுக்கு வாழப் போயிருச்சுக.."

இதைச் சொல்லும் போது தங்கத்தின் முகத்தை ஜாடையாகப் பார்த்துக் கொண்டாள் பாரிஜாதம்.. அதில் மின்னல் கீற்றாய் தெரிந்து மறைந்த துயரத்தின் ரேகையில் அவள் மனதில் பூரிப்பு விரவியது.. அன்றைக்கு உறங்கப் போகும் உறக்கம் நிம்மதியான உறக்கமாக இருக்கும் என்று அவள் மனம் சொல்லியது.

"சந்தோசம் பொங்குதில்ல..?"

மருதாயிக் கிழவியின் பார்வை அவளை ஊடுறிவியது.. இந்தக் கிழவி இருப்பதை மறந்து விட்டு சந்தோசப்பட்டு விட்டோமே என்று சுதாரித்துக் கொண்டாள் பாரிஜாதம்..

"எப்படியத்த சந்தோசம் வரும்..? நம்ம தாமரை இப்படி வீட்டோட இருக்கிறப்ப என் மனசில சந்தோசம் வருமா..?" பாரிஜாதம் மூக்கை உறிஞ்சினாள்..

"இந்த வேசத்த வள்ளி கல்யாணம் நாடகத்தில போட்டேன்னு வையய்யி.. கை தட்டல் அள்ளிக்கிட்டுப் போகும்.. அத விட்டுட்டு பொன் விளைந்த களத்தூர் வீதியிலே போட்டு வைச்சா என்னத்தக் கிடைக்கும்..?"

"என்னத்த சொல்றீக..?"

"என்னத்தையோ சொல்றேன்.. தாமரைக்கு இப்ப என்ன வயசாச்சு..? பதிமூணு முடிஞ்சு பதினாலு நடக்குது.. இதெல்லாம் ஒரு வயசா..? இந்த வயசில இவ மட்டுமா கட்டிக் கொடுக்காம கன்னியா வீட்டில இருக்கா..? செவ்வந்தி இல்லையா..? வைரம் இல்லையா..? ஏன்..? இம்புட்டு வித்தாரம் பேசறியே.. உனக்கு எந்த வயசில கல்யாணமாச்சு..?"

மருதாயி மடக்கியதில்.. இடுப்புக் குடம் கனப்பதாகக் கூறினாள் பாரிஜாதம்.. அவ்வளவு நேரமாக இடுப்பிலிருந்த குடத்தின் நினைவேயில்லாமல் இருந்தவளுக்கு திடிரென்று இடுப்புக் குடத்தின் நினைவு வந்ததில்..

"நினைச்சேன்.." என்று உதட்டைச் சுழித்தாள் மருதாயி..

"இல்லத்த.."

"என்ன நொல்லத்த..? அந்தக் காலத்திலேயே உனக்குப் பதினெட்டு வயசிலதான் பரிசமே போட்டாக.. உன் வயசில எல்லாம் எங்க தங்கம் தணிகாசலத்துக்கு ஆண் ஒன்னு பொண்ணு ஒன்னுன்னு ரெண்டு புள்ளைகளைப் பெத்துக் கொடுத்துட்டா.. நீயெல்லாம்

இந்தக்காலத்துச் சின்னப் பிள்ளைகள வழுப்பம் செப்: வந்துட்ட.."

"அடடா.."

"என்னது..?"

"அடுப்பில குழம்ப வைச்சுட்டுத் தண்ணிக்கரைக்குப் போனேன் அத்த.. குழம்பு என்ன கதியாச்சோ தெரியலையே.."

"அதான.. இம்புட்டு நேரமும் வாய் வளர்த்துக்கிட்டு நீ நின்னப்ப குழம்பு ஞாபகம் வராதே.. இப்ப நீ மாட்டிக்கிட்ட உடனே குழம்பு ஞாபகம் வந்திருமே.. இதத்தான் வித்தாரக் கள்ளி விறகொடிக்கப் போனான்னு சொல்லுவாக.."

அதற்கு மேலும் அங்கு நின்றிருந்தால் விறகுக்குப் பதிலாக அவளை மருதாயிக்கிழவி ஒடித்து அடுப்பில் வைத்து விடுவாள் என்பதினால் ஓட்டமும் நடையுமாக வீட்டைப் பார்த்துக் கிளம்பி விட்டாள் பாரிஜாதம்..

"வாம்மா வீட்டுக்கு.. வழியில தண்ணிக் குடத்த வைச்சுக்கிட்டு ஒருத்தி வந்துரக் கூடாதே.. உடனே அவ பேசற நியாயத்தைக் கேட்க ஆரம்பிச்சிருவ.."

"அத்தை.."

"சொல்லு.."

"சுப்பையா அண்ணன் அவரோட மகனுக்கு நம்ம தாமரையைப் பொண்ணு கேட்ட விசயத்த ஏன் உங்க

மகன் என்கிட்டச் சொல்லலை..? ஒரு வார்த்தை சொல்லியிருந்தாத்தான் என்ன..? நம்ம நாட்டுக்கு உரிமை கிடைக்கனும்னு மேடை போட்டுப் பேசறாரே.. அவரோட வீட்டில இருக்கிற பொண்டாட்டிக்கு பெத்த புள்ளைக மேல உரிமை இருக்குன்னு ஏன் அத்தை நினைக்க மாட்டேங்கிறாரு..?"

தங்கத்தின் கசப்பான கேள்வியில் தலையில் கை வைத்தாள் மருதாயி.. நினைத்ததை நிறைவேற்றி விட்டாள் பாரிஜாதம் என்று அவளுக்குப் புரிந்தது.. இனி இதைப் பற்றிய எண்ணம் தங்கத்தின் மனதில் பற்றிக் கொள்ளும்.. அது தணிகாசலத்திற்கும் தங்கத்திற்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும்..

'புருசன் பொண்டாட்டி ஒத்துமையா இருந்தா.. முறைமைக்காரிகளுக்கு பொறுக்க மாட்டேங்குது..'

இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்வது என்ற வழக்கமான கேள்வியை மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் மருதாயி..

"மறைக்கனும்னு அவன் நினைச்சிருக்க மாட்டான் தாயி.. அதைச் சொன்னா வீணா உன் மனசில சஞ்சலம் ஏற்படும்ன்னு நினைச்சிருப்பான்.."

"என்ன சஞ்சலம் வந்திரப் போகுது அத்தை..? நாட்டுக்கும் வீட்டுக்கும் இவரு எதுக்காக முடிச்சப் போடறாரு..?"

"தங்கம்..."

"வெள்ளைக்காரன் எப்பப் போறது..? எப்ப நாம வாழறது..? நான் பிறந்ததில இருந்து பாத்துக்கிட்டுத்தான் இருக்கேன்.. கொடியப் பிடிச்சு கோசம் போட்டுக்கிட்டே இருக்கோம்.. அவன் நகந்த பாடாய் இல்லை.."

"அதுக்கு..?"

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க அத்தை.. உலகம் பூரா சுத்தி வந்தவருதான் என் கொழுந்தனாரு.. அவருக்கு நிம்மதியா ஒரு வாய் சோத்தைச் சாப்பிடற கொடுப்பினை இருக்கா..? சீமைக்குப் போயி படிச்சுட்டு வந்தவன்தான் என் மகன்.. ஒன்னும் தெரியாதவனெல்லாம் கோட்டு சூட்ட மாட்டிக்கிட்டு கவர்ண்மெண்டு சம்பளம் வாங்கறப்ப.. என் மகன் மட்டும் கதர் வேட்டியக் கட்டிக் கிட்டு.. விவசாயம் பண்ணிக்கிட்டு இருக்கான்.. வாழ வேண்டிய வயசில இருக்கிறவ என் மக.. உங்க சின்ன மகனப் போல ஒரு போராளிக்கு நிச்சயமாகிட்டு எப்பக் கல்யாணம்ன்னு தெரியாம வீட்டில உக்காந்திருக்கிறா.. பொழைக்கிற பொழைப்பை விட்டுக் கொடுத்திட்டு பொழைக்கத் தெரியாம வாழ்ந்துக்கிட்டு இருக்கோம் அத்தை.."

"இதை மட்டும் தணிகாசலம் கேட்டிருக்கனும்.."

தங்கம் பேசவில்லை.. கொந்தளித்த மனதோடு வேகத்தைக் கூட்டி விரைவாக நடந்தாள்.. ஓட்டி வந்த

மருமகள் விட்டு விலகி நடப்பதில் மருதாயிக் கிழவி மனவருத்தம் கொண்டாள்..

'இந்த எடுபட்ட பரங்கிக்காரன் இங்கன வந்து குந்திக்கிட்டு நாட்டு மக்கள வாழ விடாம வருத்தி எடுக்கிறானே..'


மனச்சடைவுடன் வீட்டை நெருங்கிய மாமியார் மருமகளின் காதில் வீட்டுக்குள் நடந்த வாக்குவாதம் வந்து விழுந்தது..

'என் மருமக பொன் விளைந்த களத்தூர்ல பொழைக்கிற வழியைப் பாக்கச் சொல்றா.. என் மகனுக என்னடான்னா ஜெர்மனி வரைக்கும் போயி மல்லுக்கு நிக்கிறானுக..'

மருதாயி கிழவிக்கு சிரிப்பதா.. அழுவதா என்று தெரியவில்லை.. ஷிடுவிடென்று வீட்டுக்குள் நுழைந்த தங்கம்.. ஆதவனைப் பார்த்து 'வாங்க மருமகனே..' என்ற வரவேற்பை உதிர்க்காமல் அடுக்களையைப் பார்த்து நடந்தாள்..

அதில் ஆதவனின் முகம் சுருங்கியது.. தணிகாசலம் யோசனையாய் மகனைப் பார்த்தார்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



9

அன்று சிந்திய ரத்தத்தினால்..
இன்று விடுதலை கண்டோம்..

காஞ்சி வரதராஜப் பெருமாளின் கோவில் பிரகாரத்தில் சுற்றி வந்து கொண்டிருந்தார் ஈஸ்வரன்..

"ஈசூ.." கைதட்டல் ஒலி கேட்டது..

'எவன்.. அவன்..?' திரும்பிப் பார்த்தார் ஈஸ்வரன்..

"என்னாப்பா.. ஏகாம்பரேஸ்வரர் கோவிலச் சேந்தவன் வரதராஜப் பெருமாள் கோவில் பக்கம் வந்திருக்க..?"

கேள்வி கேட்ட பிரகாசம் ஈசுவரனின் நெருங்கிய நண்பர்.. ஈஸ்வரனைப் போலவே ரிட்டையராகி.. பென்சன் பணத்தில் மாதச் செலவுகளை அடக்கி வாழ்பவர்..

"ஏம்ப்பா.. எதை வைச்சு நான் ஏகாம்பரேஸ்வரர் கோவிலை மட்டும் சேர்ந்தவன்னு முடிவுக்கு வந்த..?"

"ஈஸ்வரன் ஏகாம்பரேஸ்வரர் கோவிலைச் சேர்ந்த வனாத்தான இருக்க முடியும்..? ஹா.. ஹா.."

தனது நகைச்சுவையை ரசித்துத் தானே சிரித்து மகிழ்ந்து போன பிரகாசத்தை மருந்துக்குக் கூடச் சிரித்து வைக்காமல் விசித்திரமாக உற்றுப் பார்த்து ஒரு வழி பண்ணினார் ஈசுவரன்..

நொந்து போனார் பிரகாசம்..

'இவன் என்ன கேட்டகிரி..?'

அத்தனை வருடங்களாக நெருங்கிப் பழகும் அவராலேயே நண்பனின் குணத்தை கணிக்க முடிய வில்லை..

தாமோதரனிடம் கேட்டிருந்தால்.. இது உங்களுக்குத் தேவைதானா அங்கிள் என்று பிரகாசத்திடம் கேட்டிருப்பான்..

என் அப்பாவுக்காவது.. சிரிக்கத் தெரிகிறதாவது.. என்று தெளிவு படுத்தியிருப்பான்..

அப்படி மகனாலேயே கணிக்க முடிந்த நண்பரைக் கணிக்கத் தெரியாதவராக பிரகாசம் ஜோக்கடித்து மாட்டிக் கொண்டார்..

"ஜோக்கடிச்சா சிரிக்கனும் ஈஸ்வரா.." என்ற பிரகாசத்திடம்..

"நீ ஜோக்கடிச்சியா..? எப்ப..?" என்று கேட்டு சோதித்து வைத்தார் ஈஸ்வரன்..

"ஏண்டா இப்படியிருக்க..?"

"எப்படியிருக்கேன்..?"

"மனுசனாப் பிறந்தவனுக்குச் சிரிக்கத் தெரியனும்டா ஈஸ்வரா.."

"அதுக்கு முதல்ல அந்த மனுசனை சிரிக்க வைக்கிறது மாதிரி ஜோக்கடிக்கவும் உனக்குத் தெரியனும்டா பிரகாசம்.."

'இவன் கிட்டப் போய் சிரிப்பை எதிர் பார்த்தேன் பார்.. ன்னைச் சொல்லனும்..'

சிரிப்பு ஈஸ்வரனுக்கு தேவைப்படாத ஒன்று ன்பதால் அதைத் தவிர்த்து வேறு பேச்சை பேச நினைத்தார் பிரகாசம்.. அதற்கான ஆரம்ப முயற்சியாய்..

"என்னப்பா வேண்டிக்கிட்ட..?" என்று கேட்டார்..

"இந்த உலக மக்கள் நல்லா இருக்கனும்ன்னு வேண்டிக்கிட்டேன்னு சொன்னா நீ நம்பவா போற..?" டக்காக கேட்டு வைத்துத் தான் ஈசுவரன் என்பதை ருவ் பண்ணினார் பிரகாசத்தின் ஆருயிர் நண்பர்..

"இது வேறயா..?"

"ஆமாண்டா.. பின்ன என்ன..? கோவிலுக்கு வந்து சாமிகிட்ட என்ன வேண்டிக்குவாங்க..? நான் நல்லாயிருக்கனும்.. என் குடும்பம் நல்லாயிருக்கனும்.. அப்படின்னுதானே வேண்டிக்குவாங்க..? நான் மட்டும் மாத்தியா வேண்டிக்கப் போறேன்..?"

'நீ செஞ்சாலும் செய்வேடா..'

நினைத்ததை வெளியில் சொல்லாமல் நண்பருடன் இணைந்து நடந்தார் பிரகாசம்.. சிரிக்கக் கூலி கேட்கும் ஈஸ்வரனின் முகத்தைப் பார்த்தபோது அவருடன் வாழ்ந்து தாமோதரனுக்கும் அன்னையாகி விட்ட அம்பிகாவின் சாதனையின் மீது அவருக்கு எல்லை கடந்த பிரமிப்பு ஏற்பட்டது..

இந்த பிரமிப்பை தாமோதரன் கேள்வியாக தனது அன்னையிடம் கேட்டதை பிரகாசம் பலமுறை கேட்டிருக் கிறார்..

“எப்படிம்மா இவரைப் போயி கல்யாணம் பண்ணிக் கிட்டிங்க..?”

“நான் பண்ணிக்கலைடா.. வீட்டில பண்ணி வைச்சிட்டாங்க..”

“பெட்டியைத் தூக்கிட்டு பிறந்த வீட்டுக்குப் போயிருக்கலாமில்ல..?”

“தனியாப் போகச் சொல்றியா..?”

“துணைக்கு நானும் வரேன்ம்மா..”

மகனின் ஆலோசனையில் அம்பிகாவுக்கு சிரிப்பு வந்துவிடும்.. அவள் செல்லமாக மகனின் முதுகில் மொத்துவாள்..

“அடிதாண்டா வாங்கப் போற.. அப்பாவை விட்டு அம்மாவை பிரிஞ்சு போகச் சொல்கிறதுக்குத்தான் நீ பிள்ளையாய் பிறந்து வந்தியா..?”

“ம்ஹீம்.. உங்க நல்லதுக்கு சொன்னா அடிக்க வருவீங்களா..?”

விளையாட்டாய் முகத்தைத் தூக்கி வைத்துக கொள்ளும் தாமோதரன் தனது அம்மாவிற்கு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது கொடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப் போவதாக சொல்லிய கதையையும் பிரகாசம் அறிவார்..



10

வளம் பொங்கும் எம் திருநாட்டை வெள்ளையனிடம் விட்டு வைப்பதா..?

"நான் கிளம்பறேன் மாமா.."

ஆதவன் எழுந்து கொண்டான்.. தணிகாசலத்தின் யோசனையான பார்வையின் உத்தரவைப் புரிந்து கொண்ட தனஞ்ஜெயன் கூடவே எழுந்து தோழனின் தோளில் கைபோட்டு இழுத்தான்..

"வாடா.. மாடிக்குப் போய் பேசலாம்.."

"வீட்டில வேலையிருக்குடா தனா.."

"எல்லா வெட்டி முறிக்கிற வேலையையும் தூக்கி மடப்பில போடு.. இன்னைக்கு ஒரு நாளு வேலை செய்யலைன்னா ஒன்னும் ஆகாது.. நீ வா போகலாம்.."

வற்புறுத்தி ஆதவனை இழுத்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டான் தனஞ்ஜெயன்.. தாமரைக்கு அழுகை வந்தது.. தங்கம் ஆதவனை அவமதித்து விட்டதாக அவள் நினைத்தாள்.. அதை தணிகாசலத்தின் கோபம் உறுதிப் படுத்தியது..

"வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளிய 'வா'ன்னு கூப்பிடற வளமைகூட மறந்து போச்சா..?" உறுமினார் அவர்..

"நான் கவனிக்கலை.." விட்டேற்றியாய் பதில் சொன்னாள் தங்கம்..

தாமரையின் கண்களில் தெரிந்த அதிர்ச்சியில் மருதாயி வேதனை கொண்டாள்.. பெண்களுக்கான வாழ்க்கை என்பது பனிரெண்டு வயதில் திருமணம் செய்து கொண்டு பதினைந்து வயதில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டு நிற்பதுதானா..?

வாழ்ந்து முடித்திருந்த அந்தக் கிழவிக்கு வாழ்க்கை யென்பது அதற்கும் மேலே என்று புரிந்திருந்தது.. வாழ்க்கையின் பகுதியில் இருக்கும் தங்கத்துக்குத்தான் புரியவில்லை..

"பேச்சு நல்லாயில்ல தங்கம்.. கவனிக்கலைன்னா என்ன அர்த்தம்..? வந்திருக்கிறது வெறும் விருந்தாளி மட்டுமில்ல.. நம்ம வீட்டுக்கு வரப் போகிற மருமகப் பிள்ள.. நினைப்பில வைச்சுக்க.."

"நினைப்பில மட்டும்தான் வைச்சுக்க முடியும்.. நடப்பிலதான் ஒன்னையும் காணோமே.."

முணுமுணுப்பதைப் போல முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சத்தமாகச் சொன்னாள் தங்கம்..

"என்னது..?" தணிகாசலம் வெகுண்டார்..

"பொறுங்கண்ணே.." மருதாச்சலம் தலையைக் கொடுத்து தமையனை அமைதிப் படுத்தினார்..

"என்னத்தப் பொறுக்கச் சொல்றடா.. இவ பேசறதைக் கேட்டேல்ல.."

"அண்ணிக்கு ஏதோ மனச்சடைவு... அதில பேசறதைக் குத்தமா எடுத்துக்கக் கூடாதுண்ணே.." மருதாசலம் சமாதானம் சொன்னார்..

"எதுக்கு மனச்சடைவு வரனும்ங்கிறேன்.. இவளுக்கு என்ன குறை வைச்சேன்..? சடங்குக்குப் போனவ.. முகத்தத் தூக்கி வைச்சுக்கிட்டு வாரதுக்கான காரணமென்ன..?"

தணிகாசலம் பாட்டுக்கு சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.. தங்கம் பதில் சொல்லாமல் அடுப்பில் சட்டியை வைத்து குழம்புக்கு தாளிக்க ஆரம்பித்து விட்டாள்..

தாமரையின் கண்கள் கண்ணீரில் மிதந்தன.. மருதாச்சலத்தின் மனம் சங்கடமடைந்தது.. அண்ணன் மகளின் துயரம் காண அவருக்குச் சகிக்கவில்லை.. அண்ணியிடம் விளக்கம் கேட்கவும் முடியாமல் தாயை அதட்டினார்..

"என்னாச்சும்மா..? எந்த வம்பை விலைக்கு வாங்கிட்டு வந்தீங்க..?"

மருதாச்சலத்தின் கோபத்தில் மருதாயி வாய் திறந்து..

"இல்லைடா சின்னவனே..!" என்று பேச ஆரம்பித்த போது.. தங்கம் உக்கிரமாக கொழுந்தனை முறைத்தாள்..

"ஆமாம் தம்பி..! இந்தா இருக்கிற சடங்கு வீட்டுக்குப் போயி நாங்க வம்பை இழுத்துக்கிட்டு வர்றோம்.. நீங்க உலகமெல்லாம் சுத்தி வெள்ளைக்கொடியை பறக்க

விட்டுட்டு வர்றீங்க.. உங்க அண்ணனும் அண்ணன் மகனும்.. எந்த வம்புதும்புக்கும் போகாம வீட்டுச் சோலியப் பாத்துக்கிட்டு இருக்காங்க.. பேச வந்துட்டீங்க..”

“அண்ணி..”

“வீட்டப் பத்தின கவலையில்லாம நாட்டைப் பத்தின கவலையெடுத்தவுக.. வீட்டுப் பொம்பளைகளை அதட்ட வர்றீகளா..?”

இதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாதவராக மருதாச்சலம் தமையனைப் பார்த்தார்.. அவர் மீசையை முறுக்கியபடி..

“வீட்டுல உப்பில்லையா..? புளியில்லையா..? அரிசியில்லையா..? பருப்பில்லையா..? இல்ல.. நீ உடுத்திக்கிட்டுப் போக பட்டில்லையா..? மாட்டிக்கிட்டுப் போக தங்க நகையில்லையா..? எதுடி உங்கிட்ட இல்லாம போச்சு..?” என்று கர்ஜித்தார்..

“நிம்மதியில்லாமப் போச்சு..” வெடித்தாள் தங்கம்..

“நிம்மதியில்லையா..?”

“ஆமாம் சாமி.. நிம்மதிதான் இல்ல.. ஏன்னா எனக்கு இந்த வீட்டில மதிப்பில்ல.. மருவாதியில்ல.. என்னமோ பெரிசா அது இல்லையா.. இது இல்லையான்னு நீட்டி முழக்கறீகளே.. தங்கக் கூண்டில அடைச்சு வைச்சு ரெக்கையை வெட்டி விட்டதைப் போலத் தானே என்னோட நிலைமையும் இருக்கு..? இந்த

வீட்டில அடுப்பங்கரையைக் கட்டிக்கிட்டு அழுகிற வேலைக்காரிதான நானு..?"

தங்கத்தின் ஆற்றாமையில் திகைத்துப் போனார் தணிகாசலம்.. மருதாயிக் கிழவிக்கு எரிச்சலான எரிச்சல் வந்தது..

"அது ஒன்னுமில்லடா தணிகாசலம்.. எல்லாமே கிடைச்சிட்டா அதை வைச்சு வாழ வகை தெரியனுமில்ல.. அது உன் பொண்டாட்டிக்குத் தெரியல.. கூறு கெட்ட மாடு ஏழுகட்டுப் புல்லத் தின்னுச்சாம்.. அந்தப் பொழைப்பா இவ பொழைப்பு இருக்கு.. இவ பொழைக்கற பொழைப்பப் பாத்து பொறாமைப் பட்டுக் காய்ஞ்சு போன எவளோ முருத்தி வத்திக்குச்சியை உரசிப் போட்டா.. இவ பக்குன்னு பத்திக்கிட்டு வந்து உன்கிட்ட வேக்காடக் காண்பிக்கிறா.. விட்டுத் தள்ளு.." என்றாள்..

"இது விட்டுத் தள்ளற சமாச்சாரமில்லம்மா.. யாரு.. என்னத்தைச் சொன்னாங்கன்னு இவ இம்புட்டுப் பேச்சைப் பேசறா.."

"கோட்டிக்கழுதை..! சொல்வார் பேச்சைக் கேட்டுக்கிட்டு கண்ணைக் கசக்குதுடா தம்பி.. நீயும்தான் சுப்பையா மகனுக்கு தாமரையைக் கேட்ட விசயத்த இவகிட்ட சொல்லியிருக்கனுமா இல்லையா..?"

மருதாயி சொன்னதைக் கேட்டதும் தாமரையின் கையிலிருந்த வெங்கலக் கும்பா நழுவி தரையில் விழுந்தது..

"நொங்கியிருச்சான்னு பாரு.."

மருதாயிகிழவி அதட்டியதில் தாமரை குனிந்து கும்பாவைக் கையிலெடுத்துப் பார்த்தாள்.. லேசான கீறல்தான்..

"நல்லவேளை.. கும்பா தப்பிச்சுச்சு.. நீ மாடிக்குப் போயி உன் சித்தப்பன் துணிகள மடிச்சு அலமாரியில வைய்யி.."

மருதாயிக்கிழவி பேத்தியை துரத்தினாள்.. அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்க வேண்டும் என்று ம்னம் துடித்தாலும் பாட்டியின் கட்டளையை மீற முடியாமல் அரை மனதாக அங்கிருந்து அகன்றாள் தாமரை..

"உங்களுக்கு அறிவே இல்லம்மா.." தாயை கடிந்து கொண்டார் மருதாச்சலம்..

அவருக்கு அண்ணன் மகளின் வருத்தம் கண்டு கோபம் கோபமாக வந்தது..

"தாமரையை முன்னாடி வைச்சுக்கிட்டா இந்தப் பேச்சை பேசுவீக..?"

"ஆமடா மகனே..! அப்படியொரு நேர்த்திக் கடன்தான் இந்தக் கிழவிக்கு.. வீட்டுக்கு வரப் போகிற மருமகனை இந்த மக முன்னாடிதான் 'வாங்க'ன்னு ஒரு வார்த்தைக் கேட்காம உன் அண்ணி உள்ளே வந்தா.. இந்த மகளை முன்னாடி வைச்சுக்கிட்டுத்தான் உன் அண்ணனும் அண்ணியும் சண்டை போட்டுக்கிட்டாக.. உனக்கு அதெல்லாம் தெரியாது.. என்ன காரணம்ன்னு

ரியாம முழிச்சுக்கிட்டு இருக்கிற உன் அண்ணன் காரனுக்கு நான் விளக்கம் சொன்னது மட்டும்தான் தெரியும்..”

நீட்டி முழக்கிய மருதாயி.. இந்தக் கொடுமையை எங்கே போய் சொல்ல என்ற அவளது வழக்கமான கேள்வியைக் கேட்டு வைத்தாள்.. என்னிடம் சொல்லு என்று சொல்ல முடியாமல் மருதாச்சலம் வாயை மூடிக் கொண்டார்..

தணிகாசலத்தின் முகம் மாறியிருந்தது.. புருவங்கள் சுருங்க அவர் மனைவியை முறைத்தார்.. தங்கம் நிமிரவில்லை.. தன் போக்கில் அடுப்பு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்..

“சொல்ல வேண்டிய விசயமா இருந்தா சொல்லியிருப்பேன்ம்மா.. இது சொல்ல வேண்டிய விசயமில்லை.. அதான் சொல்லலை..”

தங்கத்தைப் பார்த்தபடியே அவர் சொல்ல.. விறகை ஊதிக் கொண்டிருந்த தங்கம் விசுக்கென்று நிமிர்ந்தாள்..

“சொல்ல வேண்டிய விசயமில்லேன்னு எதை வைச்சு முடிவு பண்ணினாராம் அத்தை..? அதையும் கேட்டுச் சொல்லுங்க..”

“தாமரைக்குன்னு ஒருத்தனைப் பேசி முடிச்சாச்சு.. அவனுக்குத்தான் தாமரைன்னு ஆன பின்னால மத்தவுக பொண்ணுக் கேக்கிறத வீட்டில வந்து சொல்லிக்கிட்டிருக்க

முடியுமாம்மா..? அது தாமரையோட மனச வேதனைப் படுத்தாதா..?"

"பேசி முடிச்சவுக கட்டிக் கொடுத்திருக்கனும்.. சும்மா வெறும் பேச்சையே பேசிக்கிட்டு வயசுக்கு வந்த பொண்ண வீட்டில வைச்சிருந்தா மாப்பிள்ளைய வைச்சிருக்கிறவுக பொண்ணுக் கேக்கத்தான் செய்வாக.."

தங்கத்தின் முகம் ஜிவுஜிவுவென ஜொலித்தது.. அடுப்பின் தணலால் அந்தத் தோற்றம் ஏற்பட்டிருக்கக் கூடுமோ என்று தணிகாசலத்தால் மனதைச் சமாதானம் செய்து கொள்ள முடியவில்லை.. தங்கத்தின் வார்த்தைகளில் வெகுண்டார்..

"கேட்டிங்களாம்மா உங்க மருமக சொல்ற நியாயத்த.."

"விட்டுத் தள்ளுய்யா.. பொண்ணப் பெத்தவ புலம்பித் தள்ளரா.. இந்தக் காதில வாங்கி அந்தக் காதில விடு.."

"இது விட்டுத் தள்ளர சமாச்சாரமில்லம்மா.. என் மகளுக்கு ஆதவன்தான் மாப்பிள்ளை.. இதில எந்த மாற்றமும் கிடையாது.. உங்க மருமகளுக்கு சொல்லி வையுங்க.."

தங்கத்தைப் பார்த்தபடியே அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் தணிகாசலம்.. நிமிர்ந்து கணவனைப் பார்த்த தங்கத்தின் விழிகளில் பொருமலுடன் கூடிய துவேசம் தெரிந்ததில் திகைத்துப் போனார்.. அப்படியொரு

துவேசத்தை தங்கத்தின் விழிகளில் அவர் கண்டதே இல்லை..

சோற்றுப் பானையை பொத்தல் போட்ட தட்டை வைத்து மூடி கைபிடித் துணியைக் கொண்டு தூக்கி எரியாத அடுப்பில் வைத்த தங்கம்... பித்தளைக் குண்டாச்சட்டியை அடுப்பின் கீழ் வைத்து சோற்றுப் பானையை சரித்து கன கச்சிதமாக குண்டாச் சட்டிக்குள் பொருத்தி சரிய வைத்தாள்..

வெந்திருந்த சோற்றிலிருந்த வடி தண்ணீர் வடிய ஆரம்பித்தது.. அரிவாள் மனையை தரையில் போட்டு கால் மடக்கி அமர்ந்தவள் காய்களை நறுக்க ஆரம்பித்தாள்.. அவளுடைய முகத்திலிருந்த துவேசம் மட்டும் மறைய வேயில்லை..

எதிரிக்காரனைப் பார்ப்பதைப் போல பார்த்து வைத்த மனைவியின் பார்வையில் பல்லைக் கடித்தார் தணிகாசலம்.. எதிரில் மருத்தாசலம் இருந்ததில் அவரது சுயமரியாதை சிலிர்த்தது.. தங்கம் வாயை மூடிக் கொண்டிருந்தாலாவது அவர் எழுந்து போயிருப்பார்.. வீட்டிற்குள் யுத்தம் மூண்டிருக்காது.. அப்படியில்லாமல் அவள் வாயைத் திறந்து தொலைத்தாள்..

“ஊருல உலகத்தில இருக்கிறதைப் போல நாமளும் வாழ்ந்துட்டுப் போயிரனும்.. கணக்கு வழக்கில்லாம சொத்து இருந்து என்ன பண்ண..? அதை வைச்சுப் பகுமானமா வாழத் தெரியலையே.. காந்தி.. காந்தின்னு..

படிச்சுட்டு வந்த புள்ளையையும் கதரக் கட்ட வைச்சாச்சு.. முக்காத்துட்டுக்கு புரயோசனமில்லாதவனெல்லாம் மதராஸீப் பட்டணத்தில பேரும்.புகழுமா பொழைக்கிறான்.. இங்கன என்னடான்னா இருக்கிற பேரயும் புகழையும் வேணாம்ன்னு சொல்லியாச்சு.. எதையாச்சும் சொல்லப் போனா விடுதலைப் போராட்டம்ன்னு என் வாயை அடைச்சுடறது... கவர்ண்ட்மெண்டு வேலையில செல்வாக்கா வாழறத விட்டுப்புட்டு.. ஒத்துழையாமை பண்றோம்ன்னு வேலய வேண்டாம்ன்னு சொல்லிட்டு வந்தாச்சு.. ஒன்னுக்குமத்தவனெல்லாம் கோட்டு சூட்டு தொப்பின்னு ஊருக்குள்ள உலா வர்றப்ப.. சீமைக்குப் போயி படிச்சுட்டு வந்த எம் மகன் கதரு வேட்டிய மடிச்சுக் கட்டிக்கிட்டு கழனியில இறங்கியிருக்கான்.. இதெல்லாம் யாராலே.. தேசம்.. தேசம்ன்னு.. தெருமுக்கில போடற கோசத்தயெல்லாம் வீட்டுக்குள்ள வந்து போடறதாலே.. ”

அடக்கி வைத்திருந்த ஆற்றாமையைக் கொட்டிக் கவிழ்த்து விட்டாள் தங்கம்.. அவளுக்கும் ஓர் மனமிருந்தது.. அவள் மகன் சீமைக்குச் சென்று படித்து வந்த பெருமையை ஊர் முழுவதும் தம்பட்டம் அடித்துப் பீற்ற நினைத்தாள் அவள்.. தனஞ்ஜெயன் கோட்டும் சூட்டும்.. குல்லாவுமாக.. வெள்ளைக்கார துரை போல மோட்டார் காரில் வந்து இறங்க வேண்டும்.. அதை ஊரே கூடி நின்று அதிசயத்து பிரமிப்புடன் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.. அதற்கேற்றாற் போல.. ஊரிலிருந்த பெண்கள் தங்கத்தைக் காணும் போதெல்லாம்..

"உனக்கென்ன தங்கம்.. மகனும் சீமைக்குப் படிக்கப் போயிருக்கு.. மருமகனா வரப் போகிறதும் சீமைக்குப் படிக்கப் போயிருக்கு.. திரும்பி வந்ததுமே ரெண்டு பேருமே மதராஸிப் பட்டினத்தில பெரிய உத்தியோகத்தில உக்காரப் போறாக.. அதுக்கப்புறமும் நீ இந்த பொன் விளைந்த களத்தூர்லயா குப்பை கொட்டப் போற.. மதராஸீ பட்டினத்தில மோட்டார் காரில இல்ல பவனி வரப் போற.." என்று சொல்லி உசுப்பேற்றி வைத்திருந் தார்கள்..

அவர்கள் சொல்லச் சொல்ல.. மதராஸீ பட்டினத்தில் வாழப்போகும் அந்த வாழ்வைப் பற்றிய கனவு தங்கத்தின் விழிகளில் படமாக விரியும்.. இங்கும்.. அங்கும் ஓடும் டிரம் வண்டிகள்.. சாலையின் ஓரங்களில் வரிசை கட்டி ஒளிர் விடும் விளக்குகள்.. மாலை நேரங்களில் சென்று வரக் கடற்கரை..! ஓய்வு நாள்களில் உல்லாசமாக படகுச் சவாரி செய்ய நதி..!

ஆஹா..! மதராஸீப் பட்டினத்தில் மிகப் பெரிய அதிகாரியின் அம்மாவாக வாழும் வாழ்க்கை எத்துனை இனிமையானது..!

தங்கம் மதராஸீப் பட்டினத்துக்கு ஓரிருமுறை சென்று வந்திருக்கிறாள்.. திருமணமான புதிதில் மத்ராஸீப் பட்டினத்தில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேச வந்த தேசத் தலைவர்களைக் காட்டுகிறேன் என்று தணிகாசலம் அவளை அழைத்துப் போயிருந்தார்.. தேசத்தலைவர்களை

அவர் கவனிக்க.. தங்கம் மதராஸீ பட்டினத்தின் அழகைக் கவனித்தாள்..

'வாழ்ந்தா இப்படியாப்பட்ட பட்டினத்தில் வாழனும்..'

நெடுமூச்சு விட்ட மனைவியிடம் காந்தியைப் பற்றிய பெருமைகளை எடுத்துரைத்த வண்ணம் பொன் விளைந்த களத்தூருக்கு பற்றிக் கொண்டு வந்தார் தணிகாசலம்.. தங்கம் மதராஸீப் பட்டினத்தை மறக்க நெடுநாள்கள் ஆயின...

அடுத்து தங்கத்தால் மதராஸீப் பட்டினத்தின் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்க முடியவில்லை.. அவளும் மனதைத் தேற்றிக் கொண்டு பொன் விளைந்த களத்தூரில் குப்பை கொட்டப் பழகிக் கொண்டாள்.. அந்தச் சமயத்தில்தான் தனஞ்ஜெயனும் ஆதவனும் கடல் கடந்து படிக்கச் சென்றார்கள்..

பிள்ளைகளை வழியனுப்ப மறுபடியும் மதராஸீப் பட்டினத்தின் மண்ணை மிதித்தவளுக்கு பெருமை தாங்கவில்லை.. அவளுடைய புருசன் தராத பட்டினத்து வாழ்வை மகன தரப் போகிறான் என்று அவள் கனாக் கண்டாள்..

அந்தக் கனவிலும் மண் விழுந்தது.. சீமைக்குப் படிக்கப் போன தனஞ்ஜெயனும், ஆதவனும் வெள்ளைக்காரனின் கவர்ண்மென்டில் வேலை பார்க்க மாட்டேனென்று வேலையை உதறிவிட்டு வீடு வந்து சேர்ந்தார்கள்..

"இதுக்கு என்னத்துக்கு வேலை மெனக்கெட்டு கப்பலேறி சீமைக்குப் படிக்கப் போகனும்..?"

எதுடா சாக்கென்று காத்திருந்த கண்மணிகள் கேலி பேசியதில் தங்கம் இடிந்து போய் விட்டாள்..

அவளுடைய எதிர்ப்பை வெளிக்காட்ட முடியாமல் அந்த வீடே தேசபக்தியில் மூழ்கியிருந்தது..

காந்தியா. சி.ஆர் தாஸா..? நேருவா.. சுபாஷ் சந்திர போஸா..? எவர் வழி சரியானது என்ற வாக்குவாதம்தான் உடன் பிறந்த அண்ணன் தம்பிகளுக்கு இடையில் வருமே தவிர.. தேசபக்தி என்பதில் அவர்கள் இருவரும் ஓர் மனதாக ஒன்று பட்டு நின்றார்கள்..

அவர்கள் செய்வது சரியா என்று சின்னய்யனிடமும்.. மருதாயிகிழவியிடமும் நியாயம் வைக்கப் போனால்.. அவர்கள் மகன்களுக்கு மேலே வெள்ளைக்காரர்களின் வன்கொடுமைகளைப் பற்றி எடுத்துச் சொல்லி... அத்தகைய கொடூர குணம் கொண்ட வெள்ளைக் காரர்களை விரட்டியடிக்க வீடுதோறும் விடுதலைப் போராட்ட வீரர்கள் கிளம்ப வேண்டும் என்று நியாயம் வைத்தாகள்..

அதற்கு மேல் பேசினால் வேலைக்கு ஆகாது என்று தங்கம் தனது கனவுகளைத் தாரை வார்த்து விட்டு வாயை மூடிக் கொண்டு வாழப் பழகி விட்டாள்..

தரிசான அவளது மதராஸீப் பட்டினத்துக் கனவுகளுக்குத் தண்ணீரைப் பாய்ச்சுவதைப் போல...

சுப்பையா மகனுக்கு தாமரையைப் பெண் கேட்டிருக்கும் செய்தி காதில் வந்து விழுந்திருக்கும் போது அவள் மனம் பொங்காதா..?

சுப்பையாவின் மகன் மதராஸீப் பட்டினத்தில் வேலை பார்க்கிறான்.. விடுமுறை நாள்களில் பொன் விளைந்த களத்தூருக்கு வரும்போது கோட்டும், சூட்டும், குல்லாவும் அணிந்து வருகிறான்.. அவனது பேச்சில் ஆங்கிலம் வந்து போகிறது.. அவனை மணந்து கொண்டால் தாமரை மதராஸீப் பட்டினத்தில் வாழ்க்கை நடத்தலாம்.. தங்கம் விழி விரியப் பார்த்த டிரம் வண்டிகளில் தாமரை பயணம் செய்யலாம்.. கடற்கறையில் காற்று வாங்கலாம்.. உயர்ந்த பாலத்தின் அடியில் ஓடும் நதியில் படகுச் சவாரி செய்யலாம்.. பொன் விளைந்த களத்தூருக்கு மோட்டார் காரில் வந்து போகலாம்.. இது அத்தனைக்கும் மேலாக.. மகள் வீட்டிற்குச் செல்லும் சாக்கில் தங்கமும் மதராஸீப் பட்டினத்திற்குப் போய் வரலாம்.. மாதக் கணக்கில் அங்கு தங்கலாம்...

இவை அத்தனைக்கும் வழிவிடாத கணவரின் மீது அவளுக்குத் துவேசம் வராமல் என்ன செய்யும்..?

தனஞ்ஜெயனாவது கதரைக் கட்டினாலும் கண் முன்னால் இருக்கிறான்.. ஆதவன் அப்படியில்லை.. எந்த நேரமும் வெடி குண்டு, துப்பாக்கி என்று பேசிக் கொண்டிருப்பான்.. மாதக் கணக்கில் தலை மறைவாகி


விடுவான்.. நினைத்தால் வருவான்.. சொல்லாமல் கொள்ளாமல் போய் விடுவான்..

மருதாச்சலம்தான் அவனுக்கு வழிகாட்டி என்பார் தணிகாசலம்..

'கொழுந்தனாருக்கு என்ன..? கல்யாணமா.. காட்சியா..? பொண்டாட்டின்னு ஒருத்தி இருக்காளா..? எதப் பத்தியும் யோசிக்காத தனிக்கட்டை..! அவருக்கு இந்த ஓட்டம் சரிப்படும்.. என் மகளைக் கட்டிக்கப் போகிறவனுக்குச் சரிப்படுமா..?'

அடுப்பில் கொதித்த குழம்பைப் போல தங்கத்தின் மனமும் கொதித்தது.. மதராஸீப் பட்டினத்தில் அருமையாக மகளை வாழ வைக்காமல் தடுத்துக் கொண்டிருக்கும் கணவரை மனமார வெறுத்தாள் தங்கம்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



10

விடியலை வேண்டித்தானே..
விடிவதற்குள் சுதந்திரம் பெற்றோம்..?

ஈஸ்வரன் கோவில் கோபுரத்தை பார்த்து மனதுக்குள் ஏதோ வேண்டிக்கொண்டார்.. கூட நடந்த பிரகாசத்துக்கு சன்னமான பொறாமை வந்தது.. ஈஸ்வரன் கண்களை மூடி வேண்டிக் கொண்டிருந்தார்..

'என்னமோ காஞ்சி வரதராஜப் பெருமாளு இவனுக்கு மட்டும் சொந்தம் போல பிலிம் காட்டறானே..'

தாள முடியாமல் போன பிரகாசம்..

"போதும்ப்பா... பெருமாள மத்தவங்களும் கும்பிடனும்.. கண்ணைத் திற.." என்றார்..

கண் திறந்த ஈஸ்வரனின் பார்வை உனக் கென்னத்துக்குடா இம்புட்டுப் பொறாமை என்று கேட்டது.. அவரது பார்வையின் கூர்மையில்..

"ஏம்ப்பா.. என்னமோ பெருமாளு உன்கூடப் பேச வர்றதைப் போல இல்ல சீன் காட்டற..?" என்று சமாளித்தார் பிரகாசம்..

"இப்படித்தான் வெள்ளைக்காரன் காலத்தில நம்ம சென்னைப் பட்டினத்துக்கு கவர்னரா வந்த 'ஜோசப் கோலட்'ங்கிறவன் வீர ராகவன்ங்கிற நம்ம ஊரு ஆளப் பாத்துக் கேட்டு வைச்சான்.. அதனால என்ன நடந்தது தெரியுமா..?"

"சென்னைப் பட்டினமா..?

"அதாம்பா.. இப்ப சென்னையா இருக்கிறது அந்தக் காலத்தில மதராஸீப் பட்டினமா இருந்துச்சு.. ரெண்டையும் சேர்த்து சென்னைப் பட்டினம்ன்னு சொன்னேன்.."

"இதைப் பாருடா.. உனக்குச் சேர்க்கக் கூடத் தெரியுமா..?"

"நான் யாரைப் பிரிச்சிருக்கேன்..?"

"அதில்லப்பா.."

"என்ன நொதில்லப்பா.."

"தெரியாமச் சொல்லிட்டேம்ப்பா.. நீ என்ன நடந்துச்சுன்னு சொல்லு.."

நைசாக பேச்சை மாற்றி கதை கேட்பதைப் போல தப்பிக்க முனைந்தார் பிரகாசம்.. உன்னை எனக்குத் தெரியாதா என்று பார்த்து வைத்தார் ஈஸ்வரன்.. அந்தப் பார்வையில் நெளிந்த பிரகாசத்தை போனால் போகிறது பிழைத்துப் போகட்டும் என்று கருணையின் அடிப்படையில் விட்டு விட்ட ஈஸ்வரன் கதை சொல்ல ஆரம்பித்தான்..

"முந்நூறு வருசங்களுக்கு முன்னால 1717-ல ஜோசப் கோலட்ங்கிற வெள்ளைக்காரன் மெட்ராஸ் பட்டினத்துக்கு கவர்னரா வந்தான்.. அப்போ அங்கே உள்ளூர் நிர்வாகத்தில உதவி செய்ய வீரராகவர்ங்கிற குமாஸ்தா வேலைக்கு வந்தார்.. கவர்னர் கூடவே இருந்ததில வீரராகவர் மேல ஜோசப் கோலட்டுக்கு பிரண்ட் ஷிப் வந்துருச்சு.."

"இதப் பாருடா.."

"இருந்தாலும் வீர ராகவர்கிட்ட ஜோசப் கோலட்டுக்கு ஒரு பிரச்னை இருந்துச்சு.."

"அதானே பார்த்தேன்.."

"வீர ராகவர் தீவிரமான பெருமாள் பக்தர்.. நம்ம காஞ்சிபுர வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அடிக்கடி

வந்துருவாரு.. இதனால ஆபிசுக்கு லேட்டாப் போவாரு.. அது கோலட்டுக்குப் பிடிக்கல.. வீர ராகவருக்கு புத்தி சொல்ல நினைச்சானாம் அந்த கோலட்..”

“இதில புத்தி சொல்ல என்னப்பா இருக்கு..?”

“வெள்ளைக்காரனுக்கு அது தெரியலையே.. அவன் என்னவோ பெரிய இவனாட்டம் வீர ராகவரைக் கூப்பிட்டு நீங்க பெருமாளுக்காக இப்படி உருகறீங்களே.. இந்த செகண்டில காஞ்சியில உங்க பெருமாள் என்ன செய்துக் கிட்டு இருக்கார்ன்னு கேட்டானாம்.”

“வெள்ளைக்காரனுக்கு இருக்கிற மிதப்பப் பாத்தியா..”

“அதுக்கு கண்களை மூடி உக்காந்துட்ட வீர ராகவர்.. பெருமாள் அந்த செகண்டில் தேரில உலா வந்துக்கிட்டு இருக்கிறாதாவும் அவரோட தேர்ச்சக்கரம் சேத்துல சிக்கிக் கிட்டதாவும் அதை மீட்கும் வேலைகள் நடந்துக்கிட்டு இருக்குன்னும் சொல்லியிருக்கார்..”

“நிஜமாவா ஈஸ்வரா..?”

“ஆமாம்ப்பா.. வீரராகவர் சொன்ன தகவல் சரியான்னு கோலட் காஞ்சிபுரத்தில இருந்த அதிகாரிகளைக் கேட்டப்ப அவங்க ஆமாம்ன்னு சொன்னாங்களாம்ப்பா..”

புல்லரித்துப் போய் விட்டது பிரகாசத்திற்கு.. இப்படியும் நடந்திருக்கிறதென்று அறிந்ததில் அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்.. வெள்ளைக்காரனான ஜோசப் கோலட்டிற்கும் புல்லரித்தது என்று ஈஸ்வரன் சொன்னார்..

"கோலட்டுக்கு ஜிம்முன்னு ஆகிப் போயிருச்சு.. வீர ராகவர் மேல மதிப்பு வைச்சு அவரோட வீட்டுக்குப் பக்கத்திலேயே பெருமாள் கோவிலைக் கட்டிக் கொடுத்தாராம்.."

"பரவாயில்லையே.. வெள்ளைக்காரன் நம்ம ஊருக்கு வந்து பெருமாள் கோவிலைக் கட்டிக் கொடுத்திருக்கான்.. எந்தக் கோவிலுப்பா அது..?"

"திருவொற்றியூருக்குப் பக்கத்தில காலடிப் பேட்டையில இருக்கிற கல்யாண வரதராஜப் பெருமாள் கோவில்தான் அது.. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலப் போலவே அது கட்டப் பட்டிருக்குது.. மூலவர்கூட அச்சு அசல் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலோட மூலவர் போலவே இருப்பார்.."

"காலடிப் பேட்டையில கோலட் கட்டின பெருமாள் கோவில்..! இது கூட நல்லாயிருக்கே.."

"அந்த ஊருக்கு 'கோலட் பெட்'ன்னு அந்த வெள்ளைக்காரன் பேரைத்தான் வைச்சிருந்தாங்களாம்ப்பா.. நம்மாளுகதான் எப்பேர்ப்பட்ட பேரையும் ஒருவழி பண்ணிருவாங்களே.. கோலட் பெட்.. காலடிப் பேட்டையா மாறிப் போயிருச்சு.."

"வெள்ளைக்காரன் பேரை ஒருவழி பண்ணனும்னு நினைச்சிருப்பாங்க.."

பிரகாசம் என்னவோ ஒரு பேச்சுக்காகத்தான் சொல்லி வைத்தார்.. அந்தப் பேச்சுக்கு ஈஸ்வரன் வாய் விட்டுச் சிரித்ததில் அவர் வாய் தானாக 'ஆ' வென்று பிளந்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தியது..



11

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் செய்ய இயலாது..

பாலாற்றங்கரையின் அடர்ந்த வனப்பகுதிக்குள் நுழைந்தான் ஆதவன்.. காட்டுக் கொடிகள் பின்னிக் கிடந்த பாதையில் சரளமாக நடந்தன அவனது கால்கள்.. கொடிகள் அடர்ந்த புதர் ஒன்றில் புகுந்தான்.. புதருக்குள் படிகளுடன் கூடிய சுரங்கப்பாதை இறங்கியது.. குகையில் போய் முடிந்தது..

குகைக்குள் அவன் வயதில் சில இளைஞர்கள் இருந்தார்கள்.. ஆதவனைக் கண்டதும் கட்டித் தழுவி நலம் விசாரித்தார்கள்.. தாடி மீசையுடன் வந்த காளியப்பன்..

"நேதாஜி நலமா..?" என்றான்..

"நலம்தான்.. இரண்டாம் உலகப் போர் அச்சு நாடுகளுக்குச் சாதகமாக இருப்பதால்.. அவர்களின் உதவியோடு கூடிய சீக்கிரத்தில் இந்தியாவுக்கு விடுதலையை வாங்கிக் கொடுத்து விடுவார்.."

"நல்லது.. அவர் வெளிநாட்டில் யுத்தம் புரியட்டும்.. நாம் உள்நாட்டு யுத்தத்தை ரகசியமான முறையில் செய்போம்.."

"நான் சீக்கிரமாகவே திரும்பிப் போயாகனும்.. காளியப்பா.."

"போவதற்கு முன்னால் அந்த ராபர்ட்டை சுட்டுத் தள்ளிட்டுப் போய்விடு.."

காளியப்பன் சொல்வதை அங்கிருந்த இளைஞர்கள் கவனமாக கேட்டுக் கொண்டார்கள்.. குகையின் உட்புறப் பகுதியில் நீட்டிக் கொண்டிருந்த பாறையின் விளிம்பில் காளியின் படம் இருந்தது.. வீரம் சொட்டும் காளி..! படத்தின் முன்னால் விபூதி குங்கும் வைக்கப் பட்டிருந்தது.. கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள்.. காளியப்பன் ஒரு காகிதத்தை எடுத்து வந்தே மாதரம் என்று எழுதினான்.. குங்குமத்தைத் தண்ணீரில் கரைத்து காகிதத்தில் தெளித்தான்... தெளிவானத் திட்டக் கோடுகளை காகிதத்தில் வரைய ஆரம்பித்தான்..

"இந்த வீட்டிலதான் அவன் தனிமையா வேலை செய்ய வருவான்.."

"கூட காவல் இருக்குமா..?"

"இருக்காது.. தீவிரமா கண்காணிச்சுட்டோம்.. இந்த இடத்தில கட்டுக்காவல் இருக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கானாம்.. கூட லாரன்ஸ்ங்கிற கொடூரபுத்தி படைச்சவன் மட்டும்தான் இருப்பான்.."

"திமிர் காளியப்பா.. இது அவங்களோட அடிமை பூமிங்கிற திமிர்.. இங்கே அவனை எதிர்க்க யார் வரப் போகிறாங்கிற திமிர்.."

ஆதவன் கண் சிவந்தான்.. கூட இருந்த வாலிபர்கள் அவரவர் வழியில் கைமுஷ்டியைக் காற்றில் குத்தியும்.. தரையில் குத்தியும் கோபத்தை வெளிப்படுத்தினர்..

"இது நமது பூமி ஆதவா..!"

"இதையேதான் சுபாஷ் சந்திரபோஸீம் சொல்கிறார்.."

"வெள்ளையர்கள் நம்மை அண்டிப் பிழைக்க வந்தவர்கள்.."

"இன்னைக்கு நம்மையே ஆளத் துணிந்து விட்டார்கள்.."

"அவர்களை விரட்டியடிப்போம்.."

"அதில் ஓர் அங்கமாக இந்த ராபர்ட்டைச் சுட்டுத் தள்ளுவோம்.. இவன் இருக்கும் தைரியத்திலதான் அந்த லாரன்ஸ் நம்மவர்களைக் கேவலமா நடத்தறான்.."

"அவனை விடக் கூடாது.."

"கூடவே ராபர்ட்டையும் விடக் கூடாது.."

தரையில் விரிக்கப்பட்டிருந்த விளக்கப் படத்தைச் சுற்றி அவர்கள் கவிழ்ந்தார்கள்.. தெளிவான திட்ட மிடலுக்குப் பின்னர் பிரிந்தார்கள்.. இடைவெளி விட்டு ஒவ்வொருவராக புதரில் இருந்து வெளிப்பட்டு வெவ்வேறு திசைகளில் நடந்து மறைந்தார்கள்..

ஆதவன் பாலாற்றங்கரையில் சிந்தனையோடு நடந்தான்.. நதியைத் தாண்டி தொலைதூரத்தில் போர் விமானம் தெரிந்தது.. அது அவனை 'வா'வென்று அழைத்தது..

'எதற்காக இங்கே வந்தேன்..? ராபர்ட்டைக் கொல்லவா..?'

ஆற்று மணலில் சரிந்து மல்லாந்து படுத்து வானம் பார்த்தான்.. மேகங்கள் இல்லாத அந்தி வானம் தெரிந்தது.. கண்களை மூடினான்.. தாமரை தெரிந்தாள்..

'உன்னைப் பாக்கத்தானேடி ஓடோடி வந்தேன்..?' அவன் விழிகள் சிவந்தன..

அவனுக்காக காலம் முழுவதும் காத்திருப்பாள் என்று எவளை அவன் எண்ணிக் கொண்டிருக்கிறானோ.. அந்தத் தாமரை அவனுக்குக் கைக்கு எட்டாத தூரத்தில் விலகிக் கொண்டிருக்கிறாளோ என்ற சஞ்சலம் அவன் மனதில் எழுந்தது..

அவளைப் பார்க்க முடியாமல் முழுதாக இரண்டு நாள்கள் ஓடிவிட்டதில் அவன் மனதில் பாறாங்கல் ஏறி அமர்ந்திருந்தது.. அவளைத் தேடி அவள் வீட்டிற்குச் செல்லலாம்.. அந்த உரிமை அவனுக்கிருந்தது.. ஊரறிய பரிசம் போடாவிடினும்.. வாய்ச் சொல்லால் நிச்சயிக்கப் பட்டவன்.. அவனுக்கில்லாத உரிமையா..?

ஆனால் அந்த உரிமையை தங்கத்தின் வெறுப்பு நிரம்பிய பார்வை விரட்டியடிக்கிறதே..

தங்கத்திடம் மாற்றம் தென்படுவதை ஆதவ்னின் புத்தி உணர்ந்து விட்டது.. அதன் பின் அவனால் தாமரையைத் தேடி அவள் வீட்டு வாசல்படியை மிதிக்க இயலாமல் போய் விட்டது..

"மன்னிச்சுக்க மாப்பிள்ளை.."

மருதாச்சலம் அவனைத் தேடி வந்து சொன்னார்.. சித்தப்பன் சொன்னதையே தனஞ்ஜெயன் வேறு விதத்தில் சொன்னான்..

"எதையும் மனசில வைச்சுக்காதேடா ஆதவா.. நீ எப்பவும் போல நம்ம வீட்டுக்கு வந்து போய்க்கிட்டு இரு.."

முடியுமா..? ஆதவனால் அது இயலுமா..?

ஆதவன் தணிகாசலத்தின் வீட்டிற்குப் போவதை நிறுத்தி விட்டான்.. தாமரையைத் தேடி அவன் நெஞ்சம் தகித்தது.. அவளுடன் பேச முடியாத இரண்டு இரவு பகல்கள் வந்து போனதில் அவன் உன்மத்தம் பிடித்தவனைப் போலானான்..

இரண்டாம் உலகப் போரில் சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவும் ஆதரவளித்த அச்சு நாடுகளின் கை ஓங்கி நின்றது.. அதே நிலை தொடர்ந்து நீடிக்குமா என்று தெரியாத நிலையில் மதராஸ் பட்டினத்தின் வெள்ளைக்கார ஆட்சியாளனைப் பற்றிய சில தகவல்களைத் திரட்ட வேண்டிய பணி அவனுக்கிடப் பட்டிருந்தது.. இருவர் செய்ய வேண்டிய அந்த வேலையை மருதாச்சலமும், ஆதவனும் செய்ய வேண்டுமென்று தலைமை முடிவெடுத்தது.. அவர்கள் இருவரும் காஞ்சிபுரத்தின் அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதினால் அந்தப் பணியை அவர்களால் சிறப்பாக செய்து முடிக்க முடியுமென்று தலைமை கருதியது..

எதிர்பாராமல் பிறந்த ஊருக்குத் திரும்பக் கிடைத்த வாய்ப்பில் ஆதவன் மகிழ்ந்து போயிருந்தான்.. செய்ய வேண்டிய வேலைகளை பொன் விளைந்த களத்தூரில் இருந்தபடியே செய்யலாம் என்ற அனுமதி கிட்டியிருந்ததில் அவன் தாமரையைப் பார்க்க ஆவலுடன் வந்திருந்தான்.. அவனுடைய ஆவலுக்குக் குறையாத ஆவலுடன் அவனை தாமரை எதிர்கொண்டதில் காதலை இழந்து விடாத பூரிப்பு அவன் நெஞ்சில் விரவி நின்றது.. அதே பூரிப்பு அன்று ஆட்டம் காண ஆரம்பித்திருந்தது..

'ஒருவேளை தாமரை எனக்குக் கிடைக்கலேன்னா..?'

அவனால் நினைக்கக் கூட முடியவில்லை.. அவன் தாமரையை நேசித்தான்.. விவரம் தெரிந்த வயதிலிருந்து அவனுக்கு அவள்தான் என்று இனம் காட்டப்பட்டக் காதலியை வெறித்தனமாக நேசித்தான்.. கூடவே தேசத்தையும் சேர்த்து அவன் நேசித்ததால் அவளை விட்டுப் பிரிந்து சுபாஷ் சந்திர போஸின் பின்னால் போய் விட்டான்..

'அதனால் தாமரை என்னை விட்டுப் போய் விடுவாளோ..'

அவன் நெஞ்சில் வேதனை சூழ்ந்தது.. கண்களை மூடிக்கொண்டான்..

'அத்தான்..'

ஆசையும், உரிமையுமாக தாமரை அவனை அழைக்கும் குழைவான குரல் அவன் காதுகளில் ஒலித்தது..

விழி திறந்து பார்த்தான் அந்தக் குரலுக்குரியவள் அங்கு இல்லை..

"தாமரை.."

அவன் சப்தமாக முணுமுணுத்தான்.. அவளைக் காண வேண்டும் என்ற வெறி நேரம் செல்லச் செல்ல அதிகரித்து தொலைத்தது..

அவனும் தனஞ்ஜெயனும் ஒரே வருடத்தில் ஓரிரு நாள்கள் முன்பின்னாக பிறந்தவர்கள் என்று ஆதவனின் அப்பா விசுவநாதன் அடிக்கடிச் சொல்லுவார்..

"ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபது.. அப்போத்தான் சுபாஷ் சந்திரபோஸ் லண்டன்ல படிச்ச ஐ.ஸி.எஸ் படிப்புக்கு கிடைச்ச வேலையை வேணாம்ன்னு உதறிட்டு தேசத்தோட விடுதலைப் போராட்ட இயக்கத்தில தன்னோட பங்கும் இருக்கனும்னு இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.. அதே வருசத்திலதான் நீயும் தனஞ்ஜெயனும் பொறந்தீங்க.. அப்போத் தெரியாதுடா ஆதவா.. நீங்க ரெண்டு பேரும் அவரைப் போலவே கடல் கடந்து படிப்பீங்க.. வெள்ளைக்கார கவர்ண்மென்டோட வேலை வேணாம்ன்னு உதறித் தள்ளுவீங்க.. நீ சுபாஷின் இந்திய தேசிய ராணுவத்தில சேருவ.. தனஞ்ஜெயன் காந்தியவாதியா மாறுவான்.. இப்படி எதுவுமே தெரியாது.. நினைச்சுப் பார்த்தா எல்லாமே ஆச்சரியமாத்தான் இருக்கு.."

ஆச்சரியம்தான்.. எல்லாமே ஆச்சரியம்தான்.. அவனுக்காகவே பிறந்தவளைப் போல.. அவனைக் காணும்

போதெல்லாம் கண்களைக் கொட்டி.. புன்னகை புரியும் தாமரையின் பிரியமும் ஆச்சரியமானதுதான்..

அவள் குழந்தை.. அவனைவிடப் பத்து வயது சிறியவள்.. இருபத்தி நான்கு வயது வாலிபனின் மனதில் வெளிப்படும் காதல் உணர்வுகளை அவ்வளவு எளிதாக புரிந்து கொள்ள முடியாதவள்.. இருந்தும் அவனைக் கண்டதும் அவள் விழிகளில் வெட்கம் நிரம்பி வழியும்.. இவன்தான் உனக்குக் கணவனாக வரப் போகிறவன் என்று குழந்தைப் பிராயத்திலிருந்து அவளைச் சுற்றியுள்ளவர்கள் சொல்லி வளர்த்ததில் அவளது பிஞ்சு மனதில் அவனைப் பற்றிய நினைவு ஆழமாக பதிந்து விட்டது..

ஆதவனும் தனஞ்ஜெயனும் ஒரே வருடத்தில் பிறந்ததைப் போல செவ்வந்தியும் தாமரையும் ஒரே வருடத்தில் பிறந்தாலும்.. எட்டு மாத இடைவெளியில் பிறந்தவர்கள்.. ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பதில் பிறந்த இருவரில் செவ்வந்தி தாமரையை விட எட்டு மாதங்கள் மூத்தவள்..

அப்படியே கண்மூடிப் படுத்து விட்ட ஆதவனின் நெற்றியில் தளிர் விரல்களின் ஸ்பரிசம் பட்டது.. அதன் தொடு உணர்வில் தொட்டவளை இனம் கண்டு கொண்ட ஆதவன் கள்ளூரும் போதையுடன் கண்விழிக்காமலே தொட்டவளின் கையைப் பற்றி இழுத்தான்..

"அத்தான்.." என்று குரலுடன் அவன்மீது பூக்குவியல் ஒன்று சரிந்து விழுந்தது..

அவன் மீது சரிந்து விழுந்து கவிழ்ந்திருந்தவளை ஆதவனின் கைகள் சுற்றி வளைத்துக் கொண்டன.. கண்திறந்து பார்த்தான்.. அவன் முகத்துடன் முகம் வைத்திருந்தவளின் அதரங்களை அவனது அதரங்கள் முரட்டுத்தனமாக கவ்விக் கொண்டன..

தடாலடியான அவனது ஆக்ரமிப்பில் பேச்சிழந்தளுடன் பிணைந்திருந்தவன் ஆற்று மணலில் புரண்டான்.. தாமரை அவன் மீது சரிந்திருந்த நிலை மாறி இப்போது தாமரையின் மேல் அவன் சரிந்து பரவியிருந்தான்..

மூச்சுத் திணறிய முத்தத்தில் முகம் சிவந்திருந்த வளை நெடுநேரம் கழித்து விடுவித்த ஆதவன் அவள் முகமெங்கும் முத்த மழையைப் பொழிந்து ஈரமாக்கினான்.. வேட்கையுடன் தழுவிக் கொண்டவனின் இறுக்கமான அணைப்பில் அவளது எழும்புகள் நொறுங்குவதைப் போல வலித்து வைத்தது..

தாகம் கொண்டவனின் கைகள் அவளில் தேடுதலை மேற்க்கொண்டதில் தாமரையின் உணர்வுகள் தத்தளித்தன..

"வேண்டாம் அத்தான்..?" பலவீனமாக அவள் தடுத்தாள்..

"வேண்டாமா..? நான் உனக்கு வேண்டாமா..?" தாபத்துடன் அவன் சீறினான்..

"அப்படி நான் சொன்னேனா.." தொய்வுடன் அவள் கேட்டாள்..

"வாய் விட்டுச் சொல்லலைடி.. உன் நினைப்பும் செய்கையும் அப்படித்தான் சொல்லுது.." ஆதவன் குமுறினான்..

"பழி போடாதீங்க அத்தான்.." நடுக்கத்துடன் அவனைத் தழுவிக் கொண்டாள் தாமரை..

காதலனின் சந்தேகத்தைப் போக்க என்ன வழியென்று தெரியாதவளாக அவள் நெருக்கத்தை அதிகப் படுத்தியது ஆதவனுக்கு வசதியாகி விட்டது.. அவளது பலவீனமான மறுப்பில்லாமல் வெகு எளிதாக அவன் முன்னேறினான்.. சூடான அவனது மூச்சுக் காற்றை தாமரையின் கன்னங்கள் உணர்ந்தன.. துப்பாக்கிப் பிடித்து காய்ந்த அவனது உள்ளங்கைகளின் சொரசொரப்பில் அவளது மேனி முழுவதும் இன்பவலி கொண்டது..

"தாமரை.."

அவன் ஆவேசத்துடன் கிசுகிசுத்தான்.. வெறி கொண்ட அவனது ஆக்ரமிப்பில் அடங்கியிருந்தவள் மெலிதான குரலில்..

"ம்ம்ம்.." என்று முணுமுணுத்தாள்..

"இப்பவே உன்னைப் பெண்டாளப் போறேன்.."

உறுதியான அவனது குரலில் திகைத்துப் போனாள் தாமரை.. அவனை மறுக்கவும் முடியாது.. அவன் கேட்பது அனைத்தையும் தரவும் முடியாது என்ற நிலையில் என்ன சொல்லி அவனை தடுத்து நிறுத்துவது என்று தெரியாமல் தடுமாறிப் போனாள்..

காட்டாற்றின் வேகம் கொண்டவன் அவள் காதலன்.. அவள் பருவம் எய்திய சில நாள்களில் அவளை விட்டுப் பிரிந்து சென்றவன்.. இன்று மங்கைப் பருவத்தில் அவள் காலடி வைத்திருக்கும் தருணத்தில் திரும்பி வந்திருக்கிறான்..

மொட்டு அரும்பாகி பூவாகப் பூத்து நிற்கும் அழகில் மயங்கிப் போனவனால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியவில்லை...

பிரிந்திருந்த நாள்களிலும் அவன் அருகே இருப்பதைப் போலத் தனது கடிதங்களில் உணர்த்தி யிருந்தவன் அவன்..

தாமரைக்கு நேரடியாக அவன் கடிதங்களை எழுத முடியாது என்பதால் செவ்வந்திக்கு கடிதம் எழுதும் போது.. தாமரைக்கு என்று மூடப்பட்ட ஒரு கவரின் மீது எழுதி.. தங்கைக்கு எழுதும் கடிதத்துடன் சேர்த்துப் பெரிய கவரில் வைத்து.. தங்கையின் விலாசத்தை எழுதி அனுப்பி விடுவான்..

சமர்த்தான செவ்வந்தி.. தமையன் அவளை நம்பி அனுப்பியிருக்கும் கவரை உடைத்துப் படிக்காமல் அப்படியே கொண்டுபோய் தாமரையிடம் கொடுத்து விடுவாள்.. அந்தக் கடிதத்தை திரும்பத் திரும்பப் படித்து உருகிப் போவாள் தாமரை..

அப்படிக் கடிதத்திலேயே உருக வைத்தவனின் கைகளில் ஒன்றியிருப்பவளால் உருகிக் கரையாமல் தப்பிப் பிழைக்க முடியுமா..?

“தாமரை..”

கரகரத்த அவன் குரலின் தாகம் அவளை அள்ளிப் பருகப் போவதை உணர்த்தியது.. தாமரை துவண்டாள்..

“நாங்கள் காத்திருப்போம் அத்தான்..” என்றாள்..

“நாங்களா..?” சிரித்தான் ஆதவன்..

“நீ மட்டும்தான் என் காதலி தாமரை.. இன்னொருத்தியை மனசாலும் நினைக்க முடியலைடி.. அது ஏன்னும் தெரியலை.. உன் அழகில மயங்கிட்டேன்னு நினைக்காதேடி.. அதையும் தாண்டிய ஒன்னு.. உன்கிட்ட என்னைக் காந்தம் போல இழுக்குது.. இந்தப் பிறவியில நீ மட்டும்தான் எனக்குன்னு என் காதோட சொல்லுது..”

‘இந்தக் காதலுக்கு இரையாகமால் எப்படித் தவிர்ப்பது..?’ தவித்தாள் தாமரை..

“நாங்கள்ன்னா.. நானும் உங்க குழந்தையும் அத்தான்..” சன்னமான குரலில் அவள் சொன்னாள்..

சொல்லித்தான் ஆக வேண்டும்.. அவன் கேட்பதை அவள் கொடுத்து விட்டால் என்ன நிகழும்.. என்னவிதமான சூழலில் அவள் நிற்க வேண்டும் என்பதை அவன் புரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்.. அதை மறந்த அவனது ஆவேசத்திற்கு தாமரை அடி பணிந்து விட்டால் விப்ரிதமான பின் விளைவுகள் நேர்ந்து விடும்...

“குழந்தையா..?”

அத்து மீறியிருந்த ஆதவனின் கைகள் தேங்கி நின்றன.. அவள் முகத்தோடு முகம் பதித்திருந்தவன் முகத்தை உயர்த்தி அவள் முகத்தை உன்னிப்பாக கவனித்தான்..

"என்னடி சொல்ற..?"

"உண்மையைத்தான் சொல்றேன் அத்தான்.. இன்னைக்கு நடக்கப் போகிறதில ஒருவேளை நான் உங்க குழந்தைக்கு அம்மாவாகிட்டா.. உங்களுக்காக நான் தனிமையில் காத்திருக்க வேண்டிய துன்பம் இருக்காது அத்தான்.. உங்க குழந்தையும் என் கூடக் காத்திருக்குமில்ல.. அதைத்தான் சொல்றேன்.." தாமரை விலகவில்லை..

ஆதவன் முகம் மாறினான்.. அவளை விட்டு விலகாமல் அவள் தோளில் முகம் புதைத்து சரிந்தாலும் முன்போல அவளை ஆள முற்படவில்லை.. அத்து மீறலைத் தொடரவில்லை..

"நீ விவரமானவடி.." குற்றம் சாட்டினான்..

"இந்த விவரம் உங்களுக்கில்லையா..?" பதிலுக்கு அவளும் குற்றம் சாட்டினாள்..

மெய்தானே..? உலகத்தையே வலம் வருகிறவனுக்கு இந்த விவரம் தெரியாமல் போனது ஏன்..?

"கெட்டிக்காரிடி நீ.." ஆதவன் உரத்த குரலில் சிரித்தான்..

அந்தி மயங்கிய அந்த இருள் வேளையில் பாலாற்றங்கரை நடமாட்டமில்லாமல் அவர்களுக்கான அந்தரங்கப் பொழுதை அள்ளித் தந்து கொண்டிருந்தது.. பறவைகள் ஆற்றோர மரங்களின் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்ததில் எழுந்த கலவையான ஒலி.. அவர்களின் இன்பமான சந்திப்பிற்கான இசையைப் போல இருந்தது..

ஆதவன் புரண்டு தாமரையின் கூந்தலில் சூடியிருந்த மல்லிகை மலரின் வாசத்தை முகர்ந்தான்.. அவனுக்குள் உண்டான கிளர்ச்சியில்..

"கொல்லுறேடி.." என்று உறுமினான்..

"நானா..?"


"நீதான்.. கட்டிக்கலாம் வா.. இப்பவே இந்த ஆற்றோரக் கோவிலில் உனக்குத் தாலியைக் கட்டறேன்.. ஆத்தங்கரை மணலில் முதலிரவை முடிக்கலாம்.. அதுக்கப்புறமா இந்த ஆதவனோட குழந்தையை இடுப்பில சுமந்துக்கிட்டு எனக்காக நீ காத்திருக்கலாமில்ல..?"

அவனது விழிகளின் தாபத்தில் உருகிப் போனாள் தாமரை..

ஏன் கூடாது என்று தாமரைக்குத் தோன்றியது.. என்றைக் கிருந்தாலும் ஆதவன்தான் அவளுடைய புருசன்.. அவன் கட்டும் தாலிக்குத்தான் அவள் கழுத்தை நீட்டுவாள்

என்றிருக்கும்போது எதற்காக அவள் தயங்க வேண்டும்..? தங்கத்தின் மனதில் தோன்றியிருக்கும் மதராஸீப் பட்டினத்தின் வாழ்வைத் தாமரையால் ஏற்றுக் கொள்ள முடியுமா..? ஆதவனுக்குப் பெண்டாட்டியாகி அவள் முன்னே போய் நின்றால் தாமரையை அவளால் என்ன செய்ய முடியும்..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



11

அன்று சிந்திய குருதிக் கடல்..
சுட்டித் தந்த சுதந்திரம் இது..

ஈஸ்வரனால் கூடச் சிரிக்க முடியும் என்பதை அன்று தான் கண்டார் பிரகாசம்.. அதிசயப்பட்டுப் போனவரின் மனதில்..

'இதனாலதான் இந்த மனுசன்கூட அம்பிகா தங்கச்சி குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கோ..' என்ற நினைவு வந்தது..

"வாயை மூடுய்யா.. ஈ போயிரப் போகுது.."

இலகுவாக பேசி பிரகாசத்தின் ஆச்சரியத்தை அதிகப் படுத்தினார் ஈஸ்வரன்.. நண்பர்கள் கோவிலை விட்டு வெளியே நடந்தார்கள்..

"எங்கேப்பா போகிற..?" என்றார் பிரகாசம்..

"வீட்டுக்குத்தான் போறேன்.. வேற எங்கேயும் போகிற பழக்கம் எனக்கு இல்லப்பா.. நான் ஏகபத்தினி விரதன்.." ஈஸ்வரன் விட்டடிக்கிறேன் பேர்வழியென்று பிரகாசத்தை சோதித்து வைத்தார்..

'என்னடா இது.. எனக்கு வந்த சோதனை..!'

நொந்து போன பிரகாசம் ஈஸ்வரனை ஏற இறங்க முருமார்க்கமாக பார்த்து விட்டு..

'ஒரு பத்தினி இந்த மனுசன்கூட குப்பை கொட்டறதையே உலக சாதனைன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. இதில இந்த மனுசன் ஏகபத்தினி விரதன்னு பெருமை வேற பேசறான்.. பல பத்தினி விரதனா இவனிருக்கனும்னு நினைச்சாலும் எந்தப் பத்தினி இவன் கூடக் கும்மியடிக்க வரப் போறா.. எல்லாமே ஏமாளி அம்பிகாவப் போல இருப்பாங்களா..?' என்று நினைத்துக் கொண்டார்..

"என்னப்பா இப்புடிப் பாக்கிற..?" சந்தேகத்துடன் கேட்டார் ஈஸ்வரன்..

"ஹி..ஹி.. சும்மாதான் பார்த்தேன்ப்பா.." வழிந்தார் பிரகாசம்..

"நீ சும்மா பாக்கிற ஆளா..? நம்ப முடியலையே.."

நம்பாத பார்வையுடன் வீட்டைப் பார்த்து நடையைக் கட்டி விட்டார் ஈஸ்வரன்..

"ப்பா.. எப்பேற்பட்ட ஆளுய்யா இவன்... தப்பிச்சேண்டா சாமி.." பிரகாசம் தப்பிப் பிழைத்தவராக அவர் வீட்டை நோக்கி நடையைக் கட்டினார்..

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் 'கச்சி..' என்றும் 'கச்சிப் பேடு..' என்றும் வழங்கப்பட்டு வந்த நகரம்.. மெல்ல.. 'காஞ்சனம்..' என்ற பெயர் பெற்று மருவி 'காஞ்சி' என்று ஆனது.. காஞ்சனம் என்றால் பொன்னால் ஆன நகரம் என்று பொருள்..

காஞ்சிபுரத்தின் அழகைக் கண்டபோது அதைப் பொன்னால் ஆன நகரம் என்று வரலாறு வர்ணிப்பதில் மிகையேதுமில்லை என்றே ஈஸ்வரனுக்குத் தோன்றியது..

அவருடைய வீடு இருக்கும் தெரு முனையை அணுகிய போது அவரைக் கடந்து சென்ற ஆட்டோ ஒன்று சடன்பிரேக் போட்டு நின்றது.. ஈஸ்வரன் அப்படியே நின்று விட்டார்..

'ஸ்கெட்ச் போட்டு என்னைத் தூக்க எவனும் வந்திருக்கானோ..'

பிரகாசம் மட்டும் ஈஸ்வரனின் பக்கத்திலிருந்து இந்த நினைப்பைப் பற்றி அறிந்திருந்தால்...

'தாங்க முடியலைடா சாமி..' என்று தெருவோரக் கடையின் சுவரில் தலையை மோதியிருப்பார்..

'இந்த மனுசனைத் தூக்க ஸ்கெட்ச் போட்டு வந்திருக்கிற மூஞ்சி எதுன்னு பார்த்துப்புடனும்..' என்று ஆட்டோக்காரனின் முகத்தை சாதலியின் முகத்தைப்

பார்க்கும் காதலனைப் போல உற்று உற்றுப் பார்த்து வைத்திருப்பார்..

நல்லவேளையாக.. இதுபோன்ற கொடுமைகளுக்கு ஆட்படாமல் தப்பிப் பிழைத்து அவர் வீடு நோக்கிப் போய் விட்டார்..

"ஆட்டோ வேணுமா சார்..?"

ஆட்டோக்காரன் எட்டிப் பார்த்துக் கேட்டதும் அவனை மொத்து மொத்தென்று மொத்தினால் என்ன என்ற வெறி கிளர்ந்தது ஈஸ்வரனுக்கு..

'ஏண்டா சவாரிபிடிக்கிறத ஆளைத் தூக்கறதைப் போலவா அரள வைச்சு செய்வீக..?' ஆட்டோக்காரனை முறைத்தவர்..

"வேணாம்ப்பா.. வீடு வரைக்கும் வந்திட்டு.. தெரு முனையில ஆட்டோப் பிடிச்சுப் போனா தகராறாகிரும்.." என்றார்..

"சொந்தக்காரங்க சண்டை போடுவாங்களா சார்..?"

"எம் பொண்டாட்டிதான் சண்டை போடுவாப்பா.."

"என்னது..? நீங்க யார் வீட்டுக்குப் போறீங்க..?"

"என் வீட்டுக்குத்தான் போறேன்ப்பா.."

இது தேறாத கேஸ் என்பதில் ஆட்டோக்காரன் முறைப்பெண்ணைப் போல ஈஸ்வரனை விட அதிகமாக அவரை முறைத்து விட்டு ஆட்டோவைக் கிளப்பிக் கொண்டு போனான்..

'இவன் என்னடா.. எம்பொண்டாட்டிய விட அதிகமா எம்மேல கோபப்படறான்.. தெருவில இறங்கி நடந்தாக் கூட அது தப்பா..?'

ஆதங்கப்பட்டபடி அவருடைய வீடு இருந்த தெருவில் திரும்பினார் ஈஸ்வரன்.. வீட்டு வாசலில் காய் வாங்கிக் கொண்டிருந்த அம்பிகாவும் அப்போதுதான் திரும்பி அவரைப் பார்த்து வைத்தாள்..



12

கண்ணீரும் செந்நீரும்..
கலந்து பாய்ந்த விடுதலைப் போரிது.

இரடங்கியிருந்தது.. சில வீடுகளில் மட்டும் எண்ணை விளக்குகளின் கண்சிமிட்டல் தெரிந்தது.. திண்ணைகளின் மாடங்களில் ஒளிர்ந்த அகல் விளக்குகளும் எண்ணை தீர்ந்து போய் தூங்க ஆரம்பித்திருந்தன.. வீட்டு வாசல்களில் பாய் விரித்தும் கயிற்றுக் கட்டிலைப் போட்டும் படுத்திருந்தவர்களின் குறட்டை சப்தம் இப்போதைக்கு அவர்கள் எழுந்திருக்க மாட்டார்கள் என்று அடித்துக் கூறியது... ஆதவன் வீதியில் இறங்கி நடந்தான்.. தெருவில் திரிந்த நாய்களில் சில குரைக்க முற்பட்டன... அவன் குனிந்து கல்லை எடுத்து வீசியதில் குரைக்க மறந்து ஓடின...

நட்டு நடுநிசியில் அச்சமின்றி ஊரெல்லையைத் தாண்டுவது ஆதவனுக்குப் புதிதான ஒன்றல்ல...

இருளோடு கலந்து வாழப் பழகியவன் அவன்.. ஏனோ தெரியவில்லை.. அன்றைய நடுநிசி அவனுக்கு சாந்தியை அளிக்கவில்லை..

தாமரையை கூடமுடியாத கோபம் அவன் மனதில் குடியிருந்தது.. குழந்தையைப் பற்றி அவள் கூறியவுடன் தாலி கட்டத் துடித்தானே.. அவள் சம்மதம் போல முகத்தை வைத்துக் கொண்டதில் அவள் இணங்கி விட்டாள் என்று பரபரப்புக் கொண்டானே.. அவள் இணங்கவில்லையே...

"நம்ம கல்யாணம் முடிஞ்சுரும் அத்தான்.. உங்க ஆசைப்படி இந்த ஆத்தங்கரை மணலிலே என்னைத் தொட்டுக் கலந்துருவீங்க.. கொஞ்ச நாளில விட்டுப்புட்டு ராணுவத்துக்குப் போயிட்டாலும் உங்க புள்ளை கூட நான் காத்திருப்பேன்.. அது ஆதவனோட குழந்தைன்னு யாருக்கேத் தெரியும்கிறதில எந்தப் பழிச்சொல்லும் எனக்கு வராது..."

"அப்புறம் என்னடி..? வா..."

ஆதவன் வேட்கையோடு அவளை அதட்டினான்.. அவளைக் கசக்கி முகரத் துடித்தான்.. இழுத்தவனின் கைகளை பொறுமையுடன் அவள் விலக்கி விட்டாள்.

"நம்மளுக்கு வழி பிறந்திரும்... செவ்வந்திக்கு..?"

அவளின் ஒற்றைக் கேள்வியில் பொங்கிக் கொண்டிருந்த அவன் உணர்வுகள் கரையுடைக்காமல் தேங்கி நின்றன...

"சொல்லுங்க அத்தான்.. எங்கப்பா தேசம் பெரிசுன்னு நினைக்கிறவரு.. இந்த தேசத்துக்குன்னு இருக்கிற கலாச்சாரத்தை மதிக்கிறவரு.. ஓடிப் போன பொண்ண ஒருநாளும் மன்னிச்சு வீட்டில சேத்துக்க மாட்டாரு.. ஏழு எருக்கலையைக் கிள்ளி வைச்சு.. பொண்ணைத் தள்ளி வைச்சிருவாரு.. பொண்ணுக்கே அந்த நிலைமைன்னா.. பொண்ணைக் கட்டின மருமகனை எந்த நிலைமையில வைப்பாரு..? அன்னம், தண்ணி பொழங்காம விலக்கி வைச்சிர மாட்டாரா..? காச வெட்டிப் போட்டு சொந்தத்த முறிச்சுக்க மாட்டாரா..? அன்னம், தண்ணி பொழங்காத வீட்டில இருந்து எங்க அண்ணனுக்குப் பொண்ணு கட்டுவாரா..? ஒரு நாளும் கட்ட மாட்டாரு.. எங்கண்ணன் உங்களைப் போல இல்ல.. காந்தி வழியில நடக்கிறது.. அப்பா பேச்சை மீறாது.."

ஆதவன் கோபத்துடன் தாமரையைத் தள்ளி விட்டான்... அவள் மணலில் புரண்டு விழுந்தாள்..

வெண்ணிற நிலவின் ஒளியில் வானத்திலிருந்து ஒரு தேவதை மண்மீது விழுந்து கிடப்பதைப் போல இருந்தது அவள் மண்ணில் சரிந்திருந்த காட்சி...

"ராட்சசி...!" அவன் குமுறினான்.

"மயக்கித் தொலைக்கிறேயேடி.. கொஞ்சமாவது இரக்கமிருக்கா..? இப்ப என்ன கழுதைக்கு உங்க அண்ணனைப் பத்தின ராமாயணத்தைப் படிக்கிற..? என்னைத் தட்டிக் கழிக்கத்தானே..?"

"தட்டிக் கழிச்சிட்டு நான் எங்கே போகப் போகிறேன்..?" நிதானமாக அவள் கேட்டாள்.

"மதராஸப் பட்டினத்தில வாழப் போனாலும் போவ.. யாரு கண்டது..? அம்மாவோட ஆசை அதுதான..? ஒண்ண மட்டும் நினப்பில வைச்சுக்கடி.. நான் ஆதவன்..! மண்ணையும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.. எனக்கு நிச்சயமான பெண்ணையும் விட்டுக் கொடுக்க மாட்டேன்.. எவனாவது உன் நிழலை நெருங்க நினைச்சாக் கூட அவனை வெட்டிப் போட்டுட்டு உன்னைத் தொட்டுத் தூக்கிட்டுப் போயி தாலியைக் கட்டுவேன்.. தெரிஞ்சுக்கடி.."

"தெரியாமலா இத்தனை நாளா உங்களையே நினைச்சுக் காத்திருக்கேன்..? செவ்வந்திக்கு கண்ணுக்கு முன்னாலேயே என் அண்ணன் இருக்கு.. எனக்கு..? கண் காணாத தேசத்தில துப்பாக்கிக் குண்டுகளோட புகைக்கு மத்தியில இல்ல நீங்க இருக்கீங்க.. நல்லபடியா நீங்க திரும்பி வரனும்னு உயிரைக் கையில பிடிச்சுக்கிட்டு நான் துடிக்கிற துடிப்பப் பத்தி எனக்கில்ல தெரியும்..?"

தாமரை விம்பினாள்... ஆதவனின் ஆவேசம் சற்றுத் தணிந்தது.. குனிந்து அவளுக்கு கை கொடுத்தான்.. அவனது இரும்புக் கையை இறுக்கிப் பிடித்தவளின் தளிர் விரல்களை அவனது கை அழுத்திப் பிடித்து வலியை உண்டாக்கியது.

"முரடு..." அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்.. ஆதவனின் கண்கள் மின்னின.. அவளது

தளிர் விரல்களின் பஞ்சு போன்ற மென்மையைத் தடவிக் கொடுத்தது அவனது கை..

"எழுந்திருடி..." சுண்டி எழுப்பினான்..

நிமிர்ந்து உட்கார்ந்தவளின் மடியில் சரிந்து விழுந்தான்.. அந்த முரட்டுப் போராளியின் முகத்தை ஏந்திக் கொண்ட தாமரையின் விழிகளில் காதல் வழிந்தது..

"இப்படியே என் மடியில் நீங்க இருந்தா எம்புட்டு நல்லாயிருக்கும்...?" ஏக்கத்துடன் கேட்டாள்.

ஆதவனின் மனம் வலித்தது.. சின்னஞ்சிறு பெண்ணின் மனதில் பொங்கும் ஆசைகளை உணராமல் அவளைப் புண்படுத்தி விட்டக் குற்ற உணர்வுடன் அவள் கையை விரித்து உள்ளங்கையில் முகம் பதித்து முத்தமிட்டான்.

"அத்தான்..."

சிலிர்த்துப் போன தாமரையின் கை அவன் முகத்தை வருடியது... அடங்காமல் முகத்தில் விழுந்து மறைத்த கேசத்தைக் கோதியது.. அவள் விழிகளில் உதித்த கண்ணீர் துளிகள் உதிர்ந்து அவன் முகத்தை நனைத்து அவள் காதலை நிரூபணம் செய்தன...

"அழுகாதே தாமரை..."

"முடியலை அத்தான்...! உங்களுக்கு மட்டும்தான் என்னோட வாழனும்கிற ஆசையிருக்கா...? எனக்கு இல்லையா..? எத்தனை நாள் இந்த ஆத்தங்கரையில்

தனியா உக்காந்து நீங்க வந்திருவீங்களான்னு அந்த வழியைப் பார்த்திருக்கேன் தெரியுமா..? நீங்க வரலை... மனசு உடைஞ்சு போயிரும்.. ராத்திரி முழுக்க சத்தமில்லாம அழுவேன்.. காலையில மனசு திரும்பவும் ஆத்தங்கரைக்கு என்னைத் துரத்தும்.. பிரிவுங்கிறது நரகம் அத்தான்..."

தாமரையின் குரல் தேம்பியது.. ஆதவனின் கை அவளது இடுப்பை வளைத்தது.. அவளது மேனி நடுங்கியதை உணர்ந்தவன் எழுந்து அவளை மடியில் சாய்த்துக் கொண்டான்.. குனிந்து அவளின் நெற்றியில் முத்தமிட்டான்.. சோகத்தோடு கூடிய கிறக்கம் அவனைத் தொற்றிக் கொண்டது.. கிளர்ந்த உணர்வுகளுக்குப் பதில் கொடுக்க முடியாமல் அவள் துடித்து அவனைத் தழுவிப் புதைந்தாள்...

"தூண்டிற் புழுவினைப் போல் - வெளியே
சுடர் விளக்கினைப் போல்...
நீண்ட பொழுதாக - எனது
நெஞ்சந் துடிக்குதடி....
கூண்டுக்கிளியினைப் போல் - தனிமை
கொண்டு மிகவும் நொந்தேன்...
வேண்டும் பொருளையெல்லாம் - மனது
வெறுத்து விட்டதடி...."

கண்ணீரில் கரைந்த அவளது கானத்தில் ஆதவனின் மனதில் இருந்த கோபம் அழிந்து போனது.. காணக் கிடைக்காத அவள் காதலில் அவன் உருகிப் போனவனாக அவள் மீது கவிழ்ந்தான்..

அன்று வெகுநேரம் அவனுடன் பேசிக் கொண்டிருந்தாள் தாமரை.. ஆதவனுக்கு வியப்பாக இருந்தது.. அந்தி சாயும் நேரத்தில் வந்தவள் இருட்டி வெகு நேரமாகியும் வீடு திரும்ப எண்ணாமல் அவனுடன் நேரத்தைக் கழித்ததில் ஆச்சரியப்பட்டுப் போனான்..

'என்னாச்சு... நேரமாச்சுன்னு புலம்பாம என்கூடப் பின்னிப் பிணைஞ்சு கிடக்கிறா...?'

கேள்வி கேட்கவும் யோசித்தான்.. அவன் கேட்கப் போய் நேரத்தை மறந்து அவனுடன் குழாவிக் கொண்டிருப்பவள்.. நேரம் நினைவுக்கு வந்து சிட்டாகப் பறந்து போய்விட்டாள் என்ன செய்வது..?

அவளுடன் கழிக்கும் மணித்துளிகளை இழக்க அவன் விரும்பவில்லை.. இரண்டு நாள்களாக அவனைப் பார்க்க முடியாமல் அவள் தவித்த தவிப்பை அவள் விவரித்த போது.. அவனைப் போலவே அவளும் துடித்துக் கொண்டிருந்ததை அவன் புரிந்து கொண்டான்..

தாமரை ஆதவனின் முகத்தோடு முகம் வைத்துக் தேய்த்தாள்.. கன்னத்தோடு கன்னம் வைத்து உரசினாள்.. அவன் கழுத்தை வளைத்து இறுக்கிக் கொண்டு அவன் காதில் ரகசியம் பேசினாள்.. அவன் மார்பில் முகத்தைப் புரட்டி சல்லாபம் செய்தாள்.. அவன் விரல்களோடு விரல் பிணைந்து பொய் கோபம் காட்டினாள்.. அவன் காலோடு கால் பிணைந்து ஒன்றினாள்.. அவன் தேகம் முழுவதும் முத்தங்கள் பதித்து திக்கு முக்காட வைத்தாள்..

மொத்தத்தில் கலவியில்லாத கலவியை அவனுக்கு அளித்தாள்.. ஆதவனின் ஆசையென்னும் அகோரப் பசிக்கு இரையளித்தாள்..

ஆதவன் நேரத்தை மறந்தான்.. அவளுடன் சரசம் பேசி கிறங்கிக் கிளர்ந்துத் தழுவிப் பிணைந்து.. முத்த மழையில் நனைந்து.. அவளையும் நனைய வைத்து... புணராமல் புணர்ந்து மயங்கிக் கண் மூடிக் கிடந்தான்..

கட்டித் தழுவியிருந்த காதலர்களின் மத்தியில் பறந்து வந்து செருகி நின்றது அந்தத் தோட்டா...!

துப்பாக்கியின் "டூமில்..." என்ற ஓசையில் பிணைந்திருந்த காதலர்கள் பிரிந்து எழுந்தார்கள்..

"கேட்ச் ஹிம்..."

குதிரையில் அமர்ந்திருந்த லாரன்ஸ் உரக்கச் கூவினான்... ஆவனுடன் இருந்த மற்ற குதிரைகள் அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தன..

"ஓடி விடுங்கள்..."

வழக்கம் போல ஆதவனை மட்டும் ஓடச் சொல்லித் தாமரை பதறினாள்.. ஆதவன் கோபத்துடன் பல்லைக் கடித்தான்..

"உன்னைவிட என் உயிர் பெரிசாடி..?"

"எனக்கொன்னும் ஆகாது.. நீங்க போங்க..."

"அடச்சீ.. வாயை மூடு.. பேசாம வா..."

ஆதவன் தாமரையை இழுத்துக் கொண்டு ஆற்றோர மரங்களுக்கு இடையில் ஓடினான்.. அத்தனை நாள்களாக அவனை சுதந்திரமாக உலவ விட்ட ஆங்கிலேயர்கள் திடீரென முற்றுகையிட்டு வளைத்துப் பிடிக்க முயல்வதற்கு என்ன காரணம் என்பதைத்தான் அவன் அறிவானே..

'ராபர்ட்டைக் கொல்ல நாங்க திட்டம் தீட்டியிருக்கிறத இவனுக தெரிஞ்சுக்கிட்டானுக...'

முன்பு போல இப்போது அவனால் தப்பித்து ஓட முடியவில்லை.. தாமரை களைத்திருந்தாள்.. அவனுடைய வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் மூச்சிரைத்து தரையில் சரிந்து சரிந்து விழுந்தாள்.. அவளை எழுப்பிக் கொண்டு ஓட படாதபாடு பட்டான் ஆதவன்..

"கில் ஹிம்..."

லாரன்சின் துப்பாக்கி மீண்டும் முழங்கியது.. அவன் ஆதவனைக் கொல்லச் சொல்கிறான் என்பதை புரிந்து கொண்ட தாமரையின் உயிர் துடித்தது...

தரையில் ஓடும் ஆதவனைக் குதிரையில் வரும் வெள்ளைக்காரச் சிப்பாயிகள் எளிதில் பிடித்து விடுவார்கள் என்பதில் அவளின் அடிவயிறு கலங்கியது...

"இப்போல்லாம் முக்கியமான தீவிரவாதிகளை அதிலும் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்களைப் பிடிக்க இந்திய ராணுவத்தில இருக்கிற சிப்பாய்களை வெள்ளைக்காரனுக கூப்பிட்டுக்கிற தில்லைப்பா... வெள்ளைக்காரச் சிப்பாய்களைத்தான் கூப்பிட்டுக்கிறாங்க.."

தனஞ்ஜெயன் சிலதினங்களுக்கு முன்னால் தனிகாசலத்திடம் சொல்லிக் கொண்டிருந்ததை அவள் கேட்டிருந்தாள்..

"ஏண்டா...?"

"பயம்ப்பா.. இந்திய ராணுவம்.. இந்திய தேசிய ராணுவத்தை ஆதரிக்குது.. அவங்க மேல குண்டு வீச யோசிக்குது.. அது வெள்ளைக்காரனுகளை பயமுறுத்தி வைச்சிருக்கு.. இந்திய தேசிய ராணுவத்தோட இந்திய ராணுவம் ஒன்னாச் சேர்ந்திரும்ன்னு வெள்ளைக் காரனுகளோட உளவுத்துறை தகவல் சொல்லியிருக்காம்.. அப்படி ரெண்டும் ஒன்னா இணைஞ்சட்டா இந்தியாவில் ஒரு வெள்ளைக்காரன்கூட மிஞ்ச மாட்டான்ங்கிறதில பிரிட்டிஞ்காரன் அரண்டு போயிருக்கான்.."

"இது கூட நல்லாயிருக்கே..."

"ஆமாம்ப்பா... இரண்டாம் உலகப் போரில இந்திய ராணுவத்த பிரிட்டிஷ்காரன் ஈடுபடுத்தியிருக்கான்.. இதப் போல இன்னொரு போர் வந்தா.. எந்த அளவுக்கு இந்திய ராணுவம் பிரிட்டிஷ் பக்கம் நிற்கும்ங்கிற கேள்விக்குறி அவங்க மனசில விழுந்துருச்சுப்பா..."

அதனால்தான் ஆதவனைப் பிடிக்க வெள்ளைக்கார சிப்பாய்களுடன் லாரன்ஸ் வந்திருக்கிறானோ..? இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த ஆதவனைப் பிடிக்க இந்திய சிப்பாய்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று கணித்திருப்பானோ..?

தாமரை ஓடியபடியே மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.. அவளது நடை தளர்ந்தது.. முற்றிலும் ஓய்ந்து போனவளாக ஓர் மரத்தடியில் சரிந்து கண்களை மூடி விட்டாள்..

"தாமரை.." ஆதவன் அவளை உலுக்கினான்..

"ரெண்டு நாளாச் சாப்பிடலை அத்தான்..." ஈனஸ்வரத்தில் அவள் முணுமுணுத்தாள்..

"ஏண்டி..?" ஆதவன் அதிர்ந்தான்..

"உங்களைப் பார்க்க முடியலை அத்தான்.. சாப்பிடப் பிடிக்கல..."

"என் தாமரை...!"

ஆதவனின் கண்கள் கலங்கி விட்டன.. சாப்பிடாத வயிறோடு அவனைத் தேடி அவள் வந்திருக்கிறாள்.. அவனுடைய கோபத்தைப் பொறுத்துக் கொண்டு கூடாமல் கூடியிருக்கிறாள்..

"என்மேல உனக்கு இவ்வளவு ஆசையா...?"

அவள் நெற்றியில் முத்தமிட்ட ஆதவன் அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டான்.. அரை மயக்கத்துடன் அவள் மறுத்தாள்..

"இல்லை அத்தான்.. என்னைத் தூக்கிட்டு ஓட உங்களுக்கு நேரமில்லை..."

"அதுக்காக..?" கோபத்துடன் சினந்தான் ஆதவன்..

"உன்னை இங்கேயே விட்டுட்டு ஓடச் சொல்றியா..? அதை சுப்பையா மகன்தான் செய்வான்.. இந்த ஆதவன் செய்ய மாட்டான்.."

தாமரையை ஏந்தியபடி மறைந்து மறைந்து ஓடினான் ஆதவன்.. குதிரைகளின் குளம்படிச் சத்தம் நெருங்கியது.. தாமரையின் மனம் பதறியது...

"கண்ட இடத்தில் சுடச் சொல்லி உத்தரவாம்..."

குரூரத்துடன் சொன்ன வைரம் அவள் மனதில் வந்தாள்..

"வெள்ளைக்காரங்க மத்தியிலே உன்னோட அருமை அயித்தான் ஆதவனுக்குத்தான் அம்புட்டு கிராக்கியாம்.. சுட்டுத் தள்ளறவங்களுக்கு பரிசு கொடுக்கிறதா சொல்லியிருக்காங்களாம்..."

ஆதவனைப் பற்றிய செய்திகளை கொஞ்சம் கூட இரக்கமில்லாமல் சிநேகிதியிடம் சொன்னவள் அவள்.. செவ்வந்திதான் வைரத்தை அதட்டிவிட்டு தாமரையை சமாதானம் செய்தாள்..

"இவளுக்கு அண்ணணைக் கண்டா ஆகாதுடி..."

"ஏன்..?"

"என்னத்தைச் சொல்ல..? இவ மனசில அண்ணன் மேல நினைப்பிருந்திருக்கும் போல.. அதை என்கிட்ட சொல்லித் தொலைச்சிருந்தா.. வேணாம்டி.. அண்ணன் விவகாரமானவன்னு தடுத்திருப்பேன்... இந்தக் கழுதை

அப்படிச் செய்யாம நேரா அண்ணன்கிட்டயே உளறி வைச்சிருச்சு..”

“நிசமாவா...?”

தாமரைக்கு மனம் தாங்கவில்லை.. உயிருக்குயிராய் பழகிக்கொண்டிருக்கும் சிநேகிதியின் காதலனைக் களவாட ஒருத்தி முயல்வாளா..?

“இவ செய்வா..” என்றாள் செவ்வந்தி..

“உன் அண்ணன் என்னடி சொன்னாரு..?” மனம் துடிக்கக் கேட்டாள் தாமரை..

“ஓடியே போயிரு... தாமரையோட உயிர் சிநேகிதிங்கிறதால சும்மா விடறேன்.. வேற ஒருத்தின்னா முகரையைப் பேர்த்திருப்பேன்.. இந்த ஜென்மத்தில ஒருத்தி எனக்குப் பெண்டாட்டியா வரனும்னா.. அது தாமரையா மட்டும்தான் இருக்க முடியும்.. அவளத்தான் நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு தெரிஞ்ச பின்னாலும் என்கிட்டே வந்து இப்படிப் பினாத்தறியே.. நீயெல்லாம் எதில சேர்த்தின்னு கேட்டு விட்டிருக்கு...”

தாமரையின் மனம் நிறைந்து விட்டது... அந்த நொடியில் அவள் மனம் அடைந்த ஆனந்த அமைதியை பெண் மனதால்தான் புரிந்து கொள்ள முடியும்.. செவ்வந்தி புரிந்து கொண்டவளாக புன்னகை செய்தாள்..

“அண்ணன் மனசில நீ மட்டும்தாண்டி.. அதுதான் இவ மனசில ஆங்காரத்தை உண்டு பண்ணியிருக்கு..”

எது வைரத்தின் மனதில் ஆங்காரத்தை உண்டு பண்ணியதோ.. அதுவே தாமரையின் மனதில் ஆதவனின் மீதான அளவு கடந்த காதலை உண்டு பண்ணியது.. நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கும் போராளியான அவனை நேசிக்க வைத்தது.. இன்று காண்பவன் மறுநாளில் காணாமல் போய் விடுவான் என்ற நிச்சயமற்ற நிலையிலும் அவனுக்காக காத்திருக்கச் செய்தது...

"டூமில்..."

நெருங்கிவிட்ட குதிரைகளில் ஒன்றின் மீது உட்கார்ந்திருந்த வெள்ளைக்காரன் சுட்ட துப்பாக்கிக் குண்டு.. ஆதவன் மறைந்திருந்த மரத்தை உரசிக் சென்றது.. தாமரை நிலை குலைந்தாள்.. ஆதவனின் உயிர் ஆபத்தில் சிக்கியிருப்பதில் அவளது பேதை மனம் துடிதுடித்தது..

சற்றுத் தொலைவில் மரங்களுக்கு இடையே ஒளிந்திருந்தவனை யதேச்சையாகப் பார்த்தவளுக்குள் அந்த யோசனை உதயமானது..

"அண்ணா..." என்றாள்...

"எங்கே..?" ஆதவன் திரும்பிப் பார்த்தான்

"அதோ அங்கே..."

எவனோ ஒருவன் வெள்ளைக்காரர்களின் துப்பாக்கிக்கு அஞ்சி ஒளிந்திருந்த மரத்தைச் சுட்டிக் காட்டினாள் தாமரை...

ஆதவன் அந்த மரத்தை அடைந்தான்.. ஒளிந்து கொண்டிருந்தவன் பாவம்.. வியர்த்துப் போய் விட்டான்.. வெள்ளைக்காரர்கள் துரத்திக் கொண்டிருக்கும் போராளி அவனிடம் பேச வந்ததில் அரண்டு போனவனாக மரத்தின் பின்னால் பதுங்கிக் கொண்டான்..

“தனா...?”

ஆதவனின் அழைப்பிற்கு பதிலாய்....

“ம்ம்ம்...” என்ற முணுமுணுப்பு மட்டுமே கேட்டது.

“பார்த்தீங்களா.. அண்ணன் வந்துருச்சு.. என்னை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போயிடும்.. என்னைப் பத்தின கவலையில்லாம இறக்கி விட்டுட்டு நீங்க தப்பிச்சுப் போயிருங்க..”

“தனா மட்டும் தனியா உன்னைத் தூக்கிட்டுப் போயிருவானா...?”

அப்போதும் ஆதவன் வாதம்தான் செய்தான்.. தாமரையை விட்டுவிட்டு ஓடவில்லை.. தாமரைதான் வற்புறுத்தினாள்..

“நீங்க தனியா என்னைத் தூக்கிட்டு ஓடறப்ப அண்ணன் தூக்கிட்டு ஓடாதா..? உங்களைப் போல அண்ணனும் சுதந்திரப் போராட்ட வீரர்தான்.. மறந்துராதீங்க...”

“சேர்ந்தே போகலாமேடி...”

“வெள்ளைக் காரங்களோட குறி நீங்கதான்.. அண்ணனும், நானுமில்ல.. தர்க்கம் பண்ணாம தப்பிக்கப் பாருங்களேன்...”

ஆதவன் தயங்கி நின்றான்.. தாமரை தனது பிரம்மாஸ்திரத்தை பிரயோகித்தாள்..


"என் மேல் ஆணை.. நீங்க இந்த விடத்தை விட்டு முடியாகனும்.."

பிரம்மாஸ்திரம் தனது வேலையை செவ்வனே செய்து முடித்தது.. தயங்கிய ஆதவன்.. மரத்தைப் பார்த்து..

"பத்திரம்டா தனா.. தாமரையைக் கூப்பிட்டுக்கிட்டு வீட்டுக்குப் போயிரு.. இங்கே நிக்காதே..." என்று சொல்லி விட்டு ஓட ஆரம்பித்தான்.. மரம் பதில் சொல்லவில்லை.. எப்படிப் பதில் சொல்லும்..? ஒளிந்து கொண்டிருந்தவன் முடி வெகு நேரமாகி விட்டதே...

தாமரை தனித்து நின்றாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



12

வெள்ளையரை விரட்டி விட்டோம்...
கொள்ளையரை விட்டு வைத்தோம்...

அண்ணலும் நோக்கினான்.. அவளும் நோக்கினாள்.. கண்ணோடு கண் கலந்ததில் காதல் வரவில்லை.. நொடிப்புத்தான் வந்தது..

"இந்தா இருக்கிற கோவிலுக்குப் போயிட்டு வர இத்தனை நேரமா..?"

"சீக்கிரமா வந்து என்ன பண்ணப் போறேன்...?"

"எதுவும் பண்ண வேண்டாம் சாமி.. கோவில்ல இருந்து மார்க்கெட் வழியாத்தான வந்திருப்பீங்க... ரெண்டு காய்கறிகயை வாங்கிட்டு வந்தா வரதராஜப் பெருமாள் வேணாம்ன்னு சொல்லிருவாரா..?"

"வாசல்லேயே காய்கறி வண்டி வருது.. அப்புறம் என்ன...?"

"இங்கே நாப்பது ரூபாய்க்கு வாங்கற காயை அங்கே இருபது ரூபாயில் வாங்கிரலாமே..."

அம்பிகா ஈஸ்வரனிடம் நொடிக்க.. அவருக்குப் பதில் காய்கறி வண்டிக்காரன் சண்டைக்கு வந்தான்..

"ஏம்மா.. அங்க விக்கிற காயை இங்க கொண்டு வந்து தாரதுக்கு ஆள் கூலி.. வண்டி வாடகையெல்லாம் யாரும்மா தருவாங்க..? நீங்களா தருவீங்க..?"

"நல்லாயிருக்கே உன் நியாயம்... நான் ஒருத்தி மட்டும்தான் உன்கிட்டக் காய் வாங்கறேனா..? இந்த ஏரியாவே வாங்குது..."

"அதான்.. உங்க ஒரு ஆளுகிட்ட மட்டும் காசை வசூலிக்காம ஒட்டுமொத்த ஆளுககிட்டயும் வசூல் பண்றதுக்காக இருபது ரூபா காயை நாப்பது ரூபாய்னு விக்கிறேன்.. வேணாம்ன்னா சொல்லுங்க.. ஒட்டு மொத்த காசையும் உங்ககிட்டேயே வசூல் பண்ணிக்கிறேன்..."

"தேவைதான் எனக்கு... நீ காயை ஒழுங்கா நிறுத்துப் போடு..."

அம்பிகா எரிச்சலுடன் காயை வாங்கிக் கொண்டு ீட்டுக்குள் போனாள்.. பின்னாடியே போன ஈஸ்வரன்..

"காய்கறிக்காரன் என்ன நமக்கு ஒட்டா... உறவா..? ீ பேசினா கேட்டுக்கிட்டுப் போறதுக்கு..? வீட்டுக் ாரனைப் பேசணும்னா வீட்டுகுள்ளாரக் கூப்பிட்டுக்கிட்டு ந்து விளாசித் தள்ளனும்டி.. அத விட்டுட்டு வீட்டு ாசல்லேயே கச்சேரியை ஆரம்பிச்சா இப்படித்தான்.. ாய்கறி வண்டிக்காரன் கூட சண்டைக்கு வருவான்..."
ன்றபடி சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டினான்..

"அடியாளு வைச்சிருக்கிற திமிரு...?" அம்பிகா கோபத்துடன் சமையலறைக்குள் போய் காய்கறிப் பையை ாக்கிப் போட்டாள்..

"அடியாளு..? நானு..? வைச்சிருக்கேன்..? ஏண்டி ீ வேற.. வெறும் ஆள நான் கூப்பிட்டாக்கூட ஏன்னு கேக்க மாட்டான்.. இதில் அடியாளு.. 'யெஸ் பாஸ்'ன்னு ந்து ஆஜராகப் போறானா..? என் லெவலுக்குத் தக்கபடி பேசு.."

"என்னத்தப் பேச..? பெத்தது ஒன்னு.. அதுவும் ஆம்பளைப் புள்ளையாப் போச்சு... பொண்ணப் பெத்திருந்தாலாவது இந்நேரத்துக்கு கல்யாணத்தைப் ண்ணிக் கண் குளிரப் பார்த்து.. கிட்டக்கவே குடித்தனம் வைச்சிருப்பேன்.. உள்ளூரு மாப்பிள்ளையா தேடிப் பிடிச்சுப் பெண் கொடுத்திருப்பேன்.. இப்ப என்னடான்னா.. ஆம்பளப்புள்ள வீடு தங்காம சென்னைக்கு ஓடிப்

போயிருச்சு... அழகுபெத்த வீடு... நீங்களும் கூட வாங்கம்மான்னு கெஞ்சுது.. எங்கே...? காஞ்சிபுரத்தில் என்னைக் கட்டிக் கொடுத்திட்டாங்க... என்னைக் கட்டிக்கிட்ட மனுசனோ காஞ்சியை கட்டிக்கிட்டு இதைவிட்டு வெளியே வர மாட்டேன்னு அடம் பிடிக்கிறாரு.. அவருக்கு நேரா நேரத்துக்கு ருசிருசியா ஆக்கிப் போட காய்கறிக்காரன் கூட நான் சண்டைக்கு நிக்க வேண்டியிருக்கு.. தானாப் பொங்கிச் சாப்பிட்டாத்தான் புத்தி வரும்ன்னு கிளம்பிரனும்.. அப்பத் தெரியும் இந்த அம்பிகாவோட அருமை...”

பாத்திரத்தை உருட்டியபடி புலம்பிக் கொண்டிருந்தாள் அம்பிகா.. சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஈஸ்வரன் எழுந்து சமையலறையின் நிலைப்படியை பிடித்தபடி எட்டிப் பார்த்தார்.. திரும்பிப் பார்த்த அம்பிகா பல்லைக் கடித்தாள்..

‘ஹீரோன்னு இந்த கிழவனுக்கு நினைப்பு.. போஸ் கொடுக்கிறதப் பாரேன்..’

“இப்ப உனக்கு என்ன வேணும்..? சென்னப்ப நாயக்கரோட பட்டினத்துக்குப் போகனும்.. அவ்வளவு தானே..? போயிட்டு வா..”

“சென்னைன்னா.. சென்னப்ப நாயக்கரோட பட்டினம்ங்கிறாரு.. காதும் பிட்டுக்குச்சா...?”

“அதெல்லாம் பிட்டுக்கலை.. நட்டக் குத்தலாத்தான் இருக்கு.. கிழக்கிந்தியக் கம்பெனிக்காரங்க சென்னப்ப

நாயக்கர் கிட்டயிருந்து வாங்கின கோட்டையை விரிவாக் கட்டினாங்களாம்.. அந்தக் கோட்டையைச் சுத்தி உண்டான நகரத்த சென்னப்ப நாயக்கரோட நினைவா.. சென்னைப் பட்டினம்ன்னு சொன்னான்ங்களாம்.. பின்னாலே அந்தப் பட்டினம் மதராஸப் பட்டினமா மாறுச்சாம்.. இப்ப பழையபடி சென்னையிலே வந்து நிக்குது...”

“இப்ப வரலாறு பாடம் நடத்துங்கன்னு நான் கேட்டேனா..?”

“கேக்கலைதான்.. சொல்லனும்னு தோணுச்சு.. சொன்னேன்...”

“நீங்க சொல்றதைக் காது கொடுத்துக் கேட்க ஆள் வேணும்ன்னுதான என்னை இந்த வீட்டோட கட்டிப் போட்டு வைச்சிருக்கீங்க...”

“நீயா நினைச்சுக்கற.. உன் மகன்கிட்ட போகனும்னு நினைச்சா தாராளமா போயிட்டு வான்னு என்னைக்கோ சொல்லிட்டேன்..”

“தனியாவா...?”

“இம்புட்டு வாய் பேசற.. தனி என்ன தனி...?”

அம்பிகாவுக்கு வந்த கோபத்தில் கையில் இருந்த பாத்திரத்தைத் தூக்கிக் கடாசினாள்.. அது வேகமாக பறந்து போனது..

“கேட்ச்...” வீட்டுக்குள் வந்த தாமோதரன் அதைப் பிடித்தான்.



13

தியாகத்தின் செங்கல்களில் கட்டப்பட்ட கோட்டை இது...

இரவு முழுதும் தூக்கமில்லாமல் தவித்தான் ஆதவன்.. விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் தணிகாசலத்தின் வீட்டிற்கு ஓடினான்.. வாசலில் எதிர்பட்ட தங்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. வேறு ஒரு சமயமாக இருந்திருந்தால் ஆதவன் வந்த வழியில் திரும்பியிருப்பான்.. அப்போது அப்படிச் செய்ய அவனால் முடியவில்லை.. மனம் முழுவதும் தாமரையைப் பற்றிய கவலை அப்பிக் கொண்டிருந்ததில் அவன் தங்கத்தின் புறக்கணிப்பைக் கண்டு கொள்ளாமல் வீட்டுக்குள் போனான்.. சமையலறையை ஒட்டிய நடை வராண்டாவில் கால் நீட்டி அமர்ந்து.. தோலுடைத்த துவரம் பருப்பை முறத்தில் கொட்டிப் புடைத்துக் கொண்டிருந்த மருதாயி..

"வாப்பா பேராண்டி..." என்று வாய் நிறைய வரவேற்றாள்..

"தனா எங்கே பாட்டி...?" ஆதவனின் கண்கள் தாமரையைத் துழாவின..

"மச்சிலதான் இருக்கான்.. தாமரையும் அங்கேதான் இருக்கா... போய்ப்பாரு..." சூசகமாக பேத்தியின் இருப்பிடத்தைத் தெரிவித்தாள் மருதாயி..

இரண்டிரண்டு படிகளாக தாவியேறினான் ஆதவன்.. எதிரே இறங்கிக் கொண்டிருந்த மருதாச்சலத்தின் மீது மோதி நின்றான்.. சீடனின் வேகத்தை சிலாகிக்கும் முறுவல் மருத்தாச்சலத்திடமிருந்து வெளிப்பட்டது.

"இப்பத்தான் வந்தியா..?" என்று கேட்டார்..

"ஆமாம் மாமா.. தனா எங்கே..?"

"மாடியிலதான் இருந்தான்.." மருதாச்சலம் இறங்கி விட்டார்..

மாடியில் கால் வைத்த ஆதவன் தாமரையைத் தேடினான்.. அங்கிருந்த அறைகளில் தாமரை இல்லை.. தனஞ்ஜெயன்தான் அவனுடைய அறையில் புத்தகம் படித்துக் கொண்டிருந்தான்..

"நேத்து ராத்திரி என்னடா ஆச்சு..?" பரபரத்த ஆதவனிடம்..

"என்ன ஆச்சு..?" என்று புருவங்களை உயர்த்தினான் தனஞ்ஜெயன்.. ஆதவனுக்கு பகீர் என்று இருந்தது..

'இவன் என்ன இப்படிக் கேக்கிறான்...?'

"தாமரை எங்கேடா...?" பதறினான்..

"இங்கே இருக்கேன்..."

அறைவாசலில் பதில் வந்தது.. அவசரமாக திரும்பிப் பார்த்த ஆதவன் ஒரே தாவலில் அவளருகே போய் நின்று அவள் முகத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டான்.. அவளை முழுதாக கண்டு விட்ட மகிழ்ச்சியில் அவன் விழிகள் கலங்கி விட்டன..

உயிர்த்துடிப்போடு பார்த்தவனின் விழிகளை... உயிர்ப்பில்லாமல் பார்த்தாள் தாமரை...

ஓய்ந்து போயிருந்த அவளது தோற்றத்தை ஆதவனின் விழிகள் கண்டு கொண்டன.. அவன் புருவங்கள் நெரிந்தன..

"உனக்கு ஒன்னுமில்லையே..." ஊடுறுவியது அவன் பார்வை..

"இவளுக்கென்ன..?" புத்தகத்தை மடித்து வைத்து விட்டு எழுந்து வந்த தனஞ்ஜெயன் கேட்டான்..

"என்னடா இப்படிக் கேக்கிற.. நேத்து நீதானே இவளைக் கூப்பிட்டுக்கிட்டு வந்த..?" ஆதவன் படபடத்தான்.

"இல்லேண்ணா..." தாமரை இடைமறித்தாள்..

"நேத்து இவரைப் பார்க்கப் போயிருந்தேன்... களைப்பா இருந்துச்சு.. அதைத்தான் சொல்றார்.. நீ போ.."

"தாமரை..." ஆதவன் அதட்டினான்..

தனஞ்ஜெயன் நகராமல் அங்கேயே நின்றான்.. அவன் முகத்தில் குழப்பம் நிலவியது.. ஆதவன் என்ன கேட்கிறான்...?

"நீ சொல்லு தனா... தாமரையை நீதான கூப்பிட்டுக்கிட்டு வந்த...?"

எங்கிருந்து என்றுதான் தனஞ்ஜெயன் கேட்கப் போனான்.. அதற்குள் தாமரை முந்திக் கொண்டாள்..

நடுநிசியைத் தாண்டிய வேளையில் தள்ளாடியபடி வீட்டின் பின்புறக் கதவை திறந்து உள்ளே போன தாமரை.. கதவைப் பூட்டி விட்டு.. அப்படியே படிக்கட்டில் சரிந்து உட்கார்ந்து விட்டாள்... மாடியிலிருந்து இயற்கை உபாதைக்காக இறங்கி வந்த தனஞ்ஜெயன் தங்கையைக் கண்டதும்...

"என்னம்மா.. இங்க உக்காந்திருக்கா..? தூங்கலையா.?" என்று கேட்டான்..

"தூக்கம் வரலைன்னா.. காற்றாட உக்காரலாம்ன்னு வந்தேன்.. அம்மாகிட்டச் சொல்லிராதே.. திட்டும்.." தாமரை மெதுவான குரலில் சொன்னாள்.

வீட்டின் பின்பக்கக் கதவை திறந்து அவள் ஆற்றங்கரைக்கு போனது தனஞ்ஜெயனுக்கோ.. வீட்டில் இருந்த மற்றவர்களுக்கோ தெரியாது.. இமைக்கு இமை தெரியாமல் அவள் திரும்பியதையோ.. திறந்து வைத்து விட்டுப் போயிருந்த பின்புறக் கதவின் வழியாக வீட்டுக்குள் வந்து கதவை தாழ் போட்டு விட்டு படியில் உட்கார்ந்து விட்டதையோ தனஞ்ஜெயன் அறியவில்லை.. அதனால் அவன் கோர்வையாகப் பேசிய தாமரையின் பேச்சை நம்பி விட்டான்..

"சரி சரி.. காத்து வாங்கின வரைக்கும் போதும்.. உள்ளே போய் படு..."

"ம்ம்ம்..."

எழுந்த தாமரை தள்ளாடி கீழே விழப் போனாள்.. தாங்கிப் பிடித்துக் கொண்ட தனஞ்ஜெயன்..

"உடம்புக்கு என்ன தாமரை..?" என்று கவலைப் பட்டுப் போனான்..

"தூக்கக் கலக்கம் அண்ணா..." அதற்கும் ஒரு பதிலை வைத்திருந்தாள் தாமரை...

"என்ன பெண்ணம்மா நீ.. இப்படியா தூக்கக் கலக்கத் தோட காத்து வாங்க வருவ..? வா..."

தனஞ்ஜெயன் கைத்தாங்கலாக தங்கையை அழைத்துக் கொண்டு போய்.. மருதாயி படுத்திருந்த அறையில் சத்தமில்லாமல் படுக்க வைத்தான்..

அதை நினைவு படுத்தினாள் தாமரை..

"நேத்து ராத்திரி நீதானேன்னா கூப்பிட்டுக்கிட்டு வந்த..? அதைச் சொல்லுறாரு போல..."

அது ஆதவனுக்கு எப்படித் தெரியும் என்று தனஞ்ஜெயன் கேட்கப் போன போது..

"அண்ணன்தான் கூப்பிட்டுக்கிட்டு வந்துச்சு... அம்மா, பாட்டிக்குத் தெரியாம என்னை படுக்க வைச்சிருச்சு.." என்று ஆதவனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் தாமரை..

"தனா..."

தணிகாசலத்தின் குரல் கேட்டதில் ஆதவனிடம் கேட்க நினைத்த கேள்வியை மறந்துவிட்டு.. தனஞ்ஜெயன் விரைந்து விட்டான்.

தனித்து நின்ற ஆதவன் தாமரையை ஆவலுடன் பார்த்தான்.. அவள் வெறுமையுடன் பதிலுக்கு பார்த்து

வைத்தாள்.. அந்த வெறுமையில் ஆதவனின் மனம் துணுக்குற்றது..

'ஏன் இப்படி எதையோ பறிகொடுத்தவளைப் போல இருக்கா..?'

அவள் கையைப் பற்றினான்.. அவள் உருவிக் கொண்டதில் புருவங்களை உயர்த்தினான்..

"சோர்வா இருக்கு அத்தான்..."

தாமரையின் உடனடியான வார்த்தைகளில் அவன் மனம் சமாதானமடைந்தது.. அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.. கொதித்தது..

"என்னடி.. காய்ச்சல் இருக்கு..?" பதைத்தான்..

"கசாயம் வைச்சுக் குடிச்சாச் சரியாகிரும்..." அதற்கும் தாமரையிடம் பதில் இருந்தது..

"கிளம்பறேண்டி.. நீ பத்திரமா வீடு வந்து சேர்ந்திருக்கனுமேன்னுதான் பதட்டமா இருந்துச்சு... உன்னைப் பார்த்துட்டேனில்ல... இனி நிம்மதியாக் கிளம்புவேன்.." என்றான் ஆதவன்..

தாமரையின் விழிகளில் அதிர்வு வந்ததில் ஆதவனின் மனம் திருப்தியானது.. அவனைப் பிரிவதில் அவனது காதலி துயரம் கொள்கிறாள் என்பதில் அவனுக்குள் கர்வம் வந்தது.

"பயப்படாதே.. ஊரை விட்டுப் போகலை... இங்கே ஒரு வெள்ளைக்காரனுக்கு முடிவு கட்ட வேண்டியிருக்கு..

அதை முடிச்சுட்டு திரும்பி வந்துருவேன்.. உன்னைப் பாத்துட்டுத்தான் ஊரை விட்டுப் போவேன்.."

"வெள்ளைக்காரனா...? எவன் அவன்..?"

"ராபர்ட்..."

தாமரையின் முகம் பார்க்காமல் சூரியனைப் பார்த்து நேரத்தைக் கணித்தபடிச் சொன்னான் ஆதவன்... அவன் மட்டும் அந்த நொடியில் தாமரையின் முகத்தைப் பார்த்திருந்தால் அவளிடம் தென்பட்ட மாற்றத்தைத் துல்லியமாக கண்டு பிடித்திருப்பான்..

நுணுக்கமான உணர்வுகளைக் கொண்டு வேயப் பட்டது பெண்மனம் அதன் ஆழத்தில் ஒளிந்திருக்கும் உணர்வுகளை அவ்வளவு எளிதாக கண்டு உணர்ந்து விட முடியாது...

அவற்றை ஆதவன் உணர்ந்து விடுவான்.. அவனுடைய ஆற்றல் அத்தகையது... தாமரையின் விழிகளைப் பார்த்தே அவள் மனதை படித்து விடும் வல்லமை கொண்டவன் அவன்...

"அவரை என்ன செய்யப் போறிங்க..?" தாமரையின் குரல் நடுங்கியது..

"அவரா..?" ஆதவன் ஒரு திணுசாக வினவினான்..

"அவன்..." பிழைதிருத்தம் செய்தாள் தாமரை..

"இம்ம்.. இப்படியே பேசிப்பழகு.. ஆதவனின் காதலி வெள்ளைக்காரனை 'அவர்'ன்னு சொல்லக் கூடாது.."

"சொல்லலை.."

"அவனை கொல்லப் போகிறோம்.."

"போகிறோம்ன்னா...?"

"போகிறோம்ன்னா.. போகிறோம்தான்.."

"நீங்க தனியாப் போகலையா..?"

"அதைத்தான் நானும் சொன்னேன்... மத்தவங்க கேட்கலை.. அதனால கூட்டாத்தான் போறோம்..."

"என்னைக்கு...?"

"இன்னைக்கு ராத்திரி..."

"நீங்க போனா அவன் தனியா அகப்பட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்பானா...? ஜில்லா கலெக்டர்... எக்கச்சக்கமான பாதுகாப்பு இருக்கும்... திரும்பவும் ஆபத்தைத் தேடிப் போகனுமா..?"

"போய்த்தான் ஆகனும்.. அதோட இன்னைக்கு ராத்திரி அவன் தனியாத்தான் இருப்பானாம்..."

"ஏன்...?"

"ஏதோ முக்கியமான திட்டமாம்டி... சர்ச்சுக்குப் போயிட்டு வர்றப்ப... வழியில இருக்கிற தோட்டத்துப் பங்களாவில் தனியா இருக்கனும்னு சொல்லியிருக்கானாம்.. வீட்டுக்குப் போனா பிரிட்டிஷ்காரனால வேலையைப் பார்க்க முடியாதாம்.."

"அப்படித் தனியா இருக்கிறவனச் சுடனுமா..?"

"என்னடி நீ.. காந்தியைப் போல நியாயம் பேசற..? ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்னாம் வருசத்தில நீயும் பிறக்கல.. நானும் பிறக்கல.. அப்பவே மணியாச்சி ரயில் நிலையத்தில வெள்ளைக்கார கலெக்டர் 'ஆஷ்'ங் கிறவனை நம்ம தமிழ்நாட்டு சிங்கம் வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்னாரு.. நாடே அவரை பாராட்டுச்சு.. நம்ம காந்தி என்ன சொன்னாரு தெரியுமா..? வெளியூருக்குப் போக ரயிலில் உட்கார்ந்திருக்கப்ப.. திடிர்ன்னு ஆஷை சுட்டுக் கொல்லலாமான்னு கடுமையா வாஞ்சிநாதனைக் கண்டிச்சாரு.. இத விட கொடுமை என்னன்னா... ஆஷீக்கு நினைவிடம் கட்டனும்னு சொன்னாரு.. ஆஷீக்கு நினைவிடம் கட்டினாங்க.. அங்கேயே தன்னைத் தானே சுட்டுக்கிட்டுச் செத்துப் போன வாஞ்சிநாதனை அம்போன்னு விட்டுட்டாங்க.. அதப் போலயில்ல நீ பேசி வைக்கிற..."

தாமரை எதையோ சொல்லப் போனாள்.. அதைச் சொல்ல முடியாத நிராசையுடன் தலையை அசைத்தாள்.. அவள் விழிகளில் தேங்கி நின்ற துயரத்தை ஆதவன் வேறுவிதமாக பொருள் கொண்டான்..

"வாஞ்சிநாதனைப் போல நானும் தன்னைத் தானே சுட்டுக்குவேனோன்னு துயரப்படறியா...?"

அவனது ஆதுரமான கேள்வியில் தாமரை அழுது விட்டாள்.. அவளை மார்போடு அணைத்துக் கொண்டான்.. ஆதவன்.. சூடான அவளது கண்ணீரில் அவனது சட்டை நனைந்தது..

அப்படியெல்லாம் ஆகாது என்று ஆதவன் அவளைத் தேற்றவில்லை.. அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான்.. மௌனமாக அவளைப் பார்த்தான்..

கலங்கியிருந்த அவளது விழிகளும்.. சுடித்த உதடுகளும் அவனிடம் சொல்லத் துடித்தது எதை என்று புரியாமல் அவன் திகைத்தான்.. அவளிடம் அதைக் கேட்க வாய் திறந்த போது..

"ஆதவா..." என்றபடி மருதாச்சலம் அங்கே வந்து விட்டார்..

"உங்க அப்பாவைக் கூடச் சமாளிச்சிரலாம்... சித்தப்பாவைச் சமாளிக்கிறது ரொம்பக் கஷ்டம்டி..." முணுமுணுத்த ஆதவன் தாமரையை விட்டு விலகி நின்றான்..

குளித்து முடித்து.. ஈரத் தலையைத் துண்டால் துவட்டியபடி அங்கே வந்த மருதாச்சலம்..

"என்னோட வெள்ளைச் சட்டையை பார்த்தியாம்மா..?" என்று தாமரையிடம் கேட்டார்..

"உங்க அறையில அலமாரியில இருக்கு சித்தப்பா.. துவைச்சு... மடிச்சு.. பெட்டி போட்டு வைச்சேன்.."

"வந்து எடுத்துக் கொடு..."

ஆதவனின் விழிகள்... 'நான் சொல்லலை...' என்றதில் மிக லேசான புன்முறுவல் ஒன்று தாமரையின் இதழ்களில் வந்து போனது.. ஆதவனின் புருவங்கள்

முடிச்சிட்டன.. இது போன்ற ரகசிய பாஷையில் அவள் உதட்டைச் சுழிப்பாள்.. அவன் இமையைச் சிமிட்டுவான்.. கள்ளத்தனமான காதல் ஊற்று அவர்களுக்கு இடையே பெருக்கெடுத்து சங்கமிக்கும்...

'அந்தத் தாமரையா இவள்..? ஒரு ராத்திரிக்குள்ள எப்படி இப்படி மாறிப் போனா...?'

ஆதவனின் மனம் சஞ்சலம் கொண்டது.. அவன் தாமரையிடம் தனித்துப் பேச விரும்பினான்.. அதற்கு இடையூறாக மருதாச்சலம் மலை போல நின்றார்.. தாமரையாவது தயங்கி நின்றிருக்கலாம்.. எப்போதும் அவள் அப்படி நிற்பவள்தான்.. அன்று என்னவோ மருதாச்சலம் ஆணையிட்டதும் சிட்டாகப் பறந்து விட்டாள்..

"இன்னைக்கு ராத்திரிதானே...?"

மருதாச்சலத்தின் வினாவில் ரகசியம் பொதிந்திருந்தது.. அவர் எதைப்பற்றிக் கேட்கிறார் என்பதைப் புரிந்து கொண்டவனாக ஆதவன்..

"ம்ம்ம்..." என்று தலையை அசைத்தான்..

"பத்திரம்... இந்த வாரத்தில நாம கிளம்பியாகனும்.."

"ம்ம்ம்..."

"திட்டம் சரியா இருக்கில்ல...?"

"இருக்கு.."

"வெற்றியோட திரும்பி வா..."

"ம்ம்ம்..."

மருதாச்சலம் பேசியதற்கு ஒற்றை வார்த்தையில் பதில் சொல்லியபடி அவரைத் தொடர்ந்து சென்றான் ஆதவன்.. அவர் அறையில் தாமரை இருப்பாளே.. தனித்துப் பேச முடியாவிட்டாலும் ரகசியப் பார்வையை யாவது பார்த்து வைக்கலாமே...

தாமரை இருந்தாள்.. மருதாச்சலத்தின் அலமாரியைத் திறந்து பெட்டி போடப்பட்ட வெள்ளைச் சட்டையை எடுத்துக் கொடுத்தாள்.. ஆதவனின் ஆழ்ந்த பார்வையை சந்திக்காமல் வேறுதிக்கில் இலக்கின்றி வெறித்து வைத்தாள்.

'திரும்பறாளான்னு பாரேன்...' ஆதவனுக்கு கோபம் வந்தது..

அவனது கோபத்தைக் கண்டால் அஞ்சி நடுங்கும் அவனுடைய காதலி.. அன்று மட்டும் எவர்மீது வந்த கோபமோ என்று அசையாத நெடுமரமாய் நின்று அவன் கோபத்தை அதிகப்படுத்திக் கொண்டிருந்தாள்..

"இதை அலமாரியில வைச்சிரும்மா..."

தடித்த புத்தகம் ஒன்றைக் கொடுத்தார் மருதாச்சலம்.. வாங்கி வைத்தவளின் பார்வை அலமாரியில் இருந்த புகைப்படத்தின் மீது படிந்தது.. ஆர்வமாய் எடுத்துப் பார்த்தாள்..

"இவங்க யாரு சித்தப்பா...?"

மருதாச்சலம் புகைப்படத்தைப் பறித்தார்... அதிலிருந்தவர்களை ஒர்முறை பார்த்து விட்டு

துணிகளுக்கு அடியில் புகைப்படத்தைப் பத்திரப் படுத்தினார்..

"நான் எதுவும் தப்பாக் கேட்டுட்டேனா சித்தப்பா..?"

தாமரையின் குற்ற உணர்வில் ஆதவனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது..

"இதில் மறைக்கிறதுக்கு என்ன இருக்கு..? அவங்க முறைப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க மாமா.." மருதாச்சலத்திடம் ஆட்சேபித்தான்..

"இருக்கலாம் ஆதவா.. ஆனா அவங்க கல்யாணத்தைப் பத்தி இந்த உலகத்துக்கு அவங்க சொல்லாம நாம சொல்லக் கூடாது.."

"எத்தனையோ ரகசியங்களை தாமரையுடன் பகிர்ந்துக் கிட்டு இருக்கோம்.. இதையும் சொல்லலாம்.. தப்பில்லை.. கேளு தாமரை.. போட்டோவில இருக்கிறது நேதாஜியும்.. அவர் மனைவி எமிலி ஷெங்கலும்.."

"என்னது..?" தாமரை விழிவிரித்தாள்..

"அவங்களைப் பார்த்தா வெளிநாட்டுக்காரங்க மாதிரி தெரியுதே.."

"உண்மைதான்.. எமிலி ஷென்கல் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்தவங்கதான்.. ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக.. இந்திய ஆன்மீகத்தை மிக ஆழமாக நேசிக்கிற நேதாஜி.. பிறந்ததில் இருந்தே இந்து தர்மம், ஞானமார்க்கம், துறவறம்ன்னு இருக்கிற நேதாஜி..

விவேகானந்தரை தன்னோட மானசீக குருவாக ஏற்றுக் கொண்டிருக்கிற நேதாஜி.. பதினாறு வயசிலேயே ஞான வழிக்காக ஆசானைத் தேடி வீட்டை விட்டு வெளியேறி இரண்டு மாதங்கள் அலைந்து வாரணாசியில் ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி பிரம்மானந்தரைச் சந்தித்து அவரின் அருளைப் பெற்ற நேதாஜி.. எப்போதும் தன்னிடம் இருக்கிற சின்னப் பையில் பகவத்கீதையையும் துளசி மாலையையும் வைத்திருக்கிற நேதாஜி.. வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த வேற்று மதத்தைச் சேர்ந்த எமிலி ஷெங்கலைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார்.."

"எப்படி அத்தான்..?"

"அதுதான் காதல்.. அவர் அனைத்து மதங்களையும் நேசிக்கிறவர் என்பதும் இன்னொரு காரணம்.. நேதாஜி பிரம்மானந்தரைச் சந்திச்சப்ப யாருக்கெல்லாம் பிரம்மானந்தரின் அருள் கிடைக்கிறதோ.. அவர்களின் வாழ்வே மாறிவிடும்.. எனக்கும் அவரது அருளில் ஒருதுளி கிடைத்தது.. என் வாழ்வை தேசத்திற்காக அர்ப்பணித்து அதன் பலனைப் பெறப் போகிறேன்னு சொன்னார்.. சொன்னதைப் போலவே 1897-ல் பிறந்தவர்.. அவரோட 40 வயசு வரைக்கும் கல்யாணம் பண்ணாமலே தேசத்துக்காக போராடிக்கிட்டு இருந்தார்.. 1935-ல் முசோலினியைச் சந்தித்து இந்தியாவின் விடுதலைக்கான இத்தாலியின் உதவியைக் கேட்டார்.. அந்தச் சமயத்தில நோய்வாய் பட்டார்.. எமிலி ஷெங்கல் அவரைக் கவனிச்சுக்கிட்டாங்க.. பரிவில காதல் வந்திருச்சு.. 1937-ம் வருசம் தன்னோட

நாப்பதாவது வயசில எமிலி ஷெங்கலை ரகசிய கல்யாணம் பண்ணிக்கிட்டாரு.."

"ஏன் ரகசியக் கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டாரு..?"

"ஏனா..? ஊருக்கெல்லாம் பாக்கு வைச்சு அழைச்சு கல்யாணம் பண்ணிக்கிற நிலைமையிலேயா அவரிருக்காரு.. கூமுட்டை..! ஒளிஞ்சு மறைஞ்சு போராடிக்கிட்டு இருக்கிற போராளியோட கடுமையான பயணத்தில பாலைவனச் சோலையா வந்தவங்க எமிலி ஷெங்கல்.. இரண்டு வருசம்தான் அவங்க சேர்ந்து வாழ்ந்திருப்பாங்க.. அனிதான்னு பெண் குழந்தையொன்னு பிறந்திருக்கு.. குழந்தையைக் கொஞ்சக்கூட முடியாம ஜெர்மனியில இருந்து நீர்மூழ்கிக் கப்பல்ல ஜப்பானுக்குத் தப்பிப் போனாரு.. அப்போப் பார்த்ததுதான்.. இன்னும் எமிலியால நேதாஜியப் பார்க்கவே முடியலை.. எப்போத்தான் பார்க்கப் போகிறாங்களோ.."

எப்போதுமே எமிலியால் நேதாஜியைப் பார்க்க முடியாமலே போகப் போகிறது என்பதை அறியாமல் பேசினான் ஆதவன்..

எமிலியால் மட்டுமில்லை.. எவராலுமே நேதாஜியைக் காண முடியாமல் போய் விடக் கூடும்.. பிரிட்டிஷாரின் கண்களில் பொடியைத் தூவி கண்கட்டு வித்தை செய்து காற்றில் கரைந்த கற்பூரம் போல மாயமாய் மறைந்த நேதாஜி.. பின்னாளில் அதைப் போலவே மறையப் போகிறார்.. இந்த உலகம் அவர் உயிருடன் இருக்கிறாரா

இல்லையா என்ற உண்மையை அறிய முடியாமலே போய் விடக் கூடும் என்பதையெல்லாம் அறியாமல் அந்த இந்திய தேசிய ராணுவத்தின் சிப்பாய் அவனுடைய சாகசத் தலைவரின் இரண்டு வருட இல்வாழ்க்கையைப் பற்றித் தாமரையிடம் விவரித்துக் கொண்டிருந்தான்..

"அவர் எமிலியோட வாழ்ந்தது இரண்டு வருசம்ன்னா.. அவரோட குழந்தை அனிதாவைத் தூக்கிக் கொஞ்சியது இரண்டே மாதம்.. இரண்டு மாசக் கைக் குழந்தையா அனிதா இருந்தப்ப மனைவியையும், மகளையும் பிரிஞ்சு போராடக் கிளம்பிப் போயிட்டாரு.. அவருக்கு முன்னாலே நானும் உன் சித்தப்பாவும் ஒன்னுமேயில்லை தாமரை.. அவர் அப்பேர்ப்பட்டவர்.."

ஆதவனின் குரல் நெகிழ்ந்தது.. அதை ஆமோதிப்பதைப் போல மௌனமாக தலையை அசைத்தார் மருதாச்சலம்.. அங்கே நெகிழ்ச்சியான சூழல் நிலவியது.. மருதாச்சலமும் ஆதவனும் அவர்களின் தலைவரைப் பற்றிய நினைவுகளில் ஆழ்ந்து விட்டனர்.. கனத்த அந்த மௌனத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டது தாமரையின் குரல்..


"அப்போ.. இந்தியாவில பிறந்தவங்க வெளிநாட்டுக் காரங்களைக் கல்யாணம் செய்துக்கலாமா..?"

தூக்கிவாரிப் போட்டது ஆதவனுக்கு... மருதாச் சலத்தைக் கேள்வியுடன் பார்த்தவனின் விழிகளில் கண்டனம் தெரிந்தது..

"உனக்கெதுக்கு இந்த சந்தேகம்..?"

சந்தேகமாக கேட்ட ஆதவனுக்குப் பதில் சொல்லாமல் படியிறங்கிப் போய் விட்டாள் தாமரை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



13

சென்பகராமனின் சரித்திரத்தை.. 'ஜெய் ஹிந்த்' என்ற முழக்கம் முழங்கும்..

"இதைப் பாருடா.."

கேட்ச் பிடித்த பாத்திரத்தைச் சுழற்றியபடியே தாமோதரன் ஆச்சரியப் பட்டான்..

'இவன் யாரைப் பார்த்துப் பாருடான்னு சொல்றான்..?'

ஈஸ்வரனுக்குள் சந்தேகம் முளைத்தது.. அந்த வீட்டில் தாமோதரனைத் தவிர ஆண்பிள்ளையென்று அவர்தான் இருந்தார்.. அவரைத்தான் அவன் 'பாருடா' என்று சொன்னானா..?

தாமோதரனிடம் இதைக் கேட்கவும் முடியாது என்பதில் டென்சன் ஆனார் ஈஸ்வரன்..

"ஏம்மா.. பேசாம இந்தியக் கிரிக்கெட் டீமில நீங்க சேர்ந்துக்கலாமே.. இப்படிப் பட்டயக் கிளப்பறீங்க.."

"பேசாமப் போயிருடா.. நானே செம கடுப்பில இருக்கேன்.."

"போகவா சொல்கிறீங்க..? ஆஹா..! நீங்களே இப்படிச் சொன்ன பின்னாலே நான் டாட்டாச் சொல்லாம இருந்தா நல்லா இருக்காது.. டாட்டா.. பை.. பை..! சென்னைக்குக் கிளம்பறேன்.."

தாமோதரன் கிளம்புவதைப் போலப் பாவ்லா செய்தான்.. அம்பிகா அவனையே இமைக்காமல் பார்த்தாள்.. தாமோதரனின் விளையாட்டுத் தனம் அவனுக்கு டாட்டாச் சொல்லிவிட்டு ஓடியே போய் விட்டது..

"ம்மா.."

அவன் கன்றுக்குட்டி தாய்ப்பசுவிடம் கொஞ்சுவதைப் போலக் கொஞ்சியபடி அம்பிகாவிடம் போனான்.. அவள் விழிகளில் கண்ணீர் அரும்பு கட்டியிருந்ததில் கிளீன் போல்டாகி கெஞ்ச ஆரம்பித்து விட்டான்..

"ஸாரிம்மா.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.."

"பெத்தவ நினைப்பில்லாம பிரண்டே கதின்னு சென்னையிலேயே தனிக்குடித்தனம் பண்ற.. ஆடிக்கொரு தரம் அமாவாசைக்கொருதரம்ன்னு காஞ்சிபுரத்துப் பக்கம் எட்டிப் பாக்கிற.. அதிலயும் பேசற பேச்சில சுழுவ எடுத்துக்கிட்டு திரும்பி ஓடுவியா..?"

அம்பிகா நியாயம் கேட்டுக் கொண்டிருந்தாள்.. தாமோதரன் சொன்ன 'பாருடா'வில் உழன்று

கொண்டிருந்த ஈஸ்வரனின் மனம் 'பாருடா..'வை விட்டு விட்டு.. அம்பிகா கூறிய 'பெத்தவ..'ளிடம் தாவியது..

'இவ மட்டும்தான் பிள்ளையைப் பெத்தவளா.. நான் பெத்தவன் இல்லையா.. அது என்ன 'பெத்தவ..'ன்னு தன்னை மட்டும் முன்னால வைச்சுக்கிறது.. பெத்தவங்கன்னு மொத்தமா சொல்றதுக்கு என்ன கேடு..?' அவரால் இதையும் வாய் விட்டுக் கேட்க முடியவில்லை.. அவருடைய ஈகோ தடுத்ததில் மனைவியை முறைத்து வைத்தார்..

அம்பிகாவுக்கு மகன் வந்திருக்கும் சந்தோசம்.. அவள் கணவரின் முறைப்பைக் கவனிக்காமல் மகனின் தலை முடியைக் கலைத்துத் தனது உரிமை கலந்த பாசத்தை நிலை நாட்டிக் கொண்டிருந்தாள்.. ஈஸ்வரனின் பொறாமை அதிகமானது..

"போதும்.. போதும்.." மனைவியை அதட்டினார்..

அவளோ அலட்டிக் கொள்ளாமல் மகனைக் கொஞ்சுவதில் மும்முரமாக இருந்தாள்.. தாமோதரனும் அவளுடன் கூட்டணி போட்டுக் கொண்டு கொஞ்சி மகிழ்ந்ததில் ஈஸ்வரன் கடுப்பாகிப் போனார்..

"வந்தவனுக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போடறதை விட்டுட்டு வெட்டியா என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு..?"

அந்த வெட்டிப் பேச்சில் அவரையும் இணைத்துக் கொள்ளாமல் தாயும் மகனுமாக பேசி மகிழ்கிறார்களே என்ற காண்டு அவருக்கு..

"எங்கம்மா என்ன சமையல்காரியா..?"

தாமோதரன் புருவங்களை உயர்த்தியதில்.. ஆஹா..! அவசரப்பட்டு மகன் ஆட்சேபிக்கக் கூடிய வார்த்தைகளை விட்டு விட்டோமே என்றிருந்தது ஈஸ்வரனுக்கு..

அதற்காக அப்படியில்லேப்பா என்று விளக்கம் சொல்லவும் அவரால் முடியவில்லை.. அவரைத்தான் காத்து கருப்பு பிடிப்பதைப் போல ஈகோ பிடித்து வைத்திருந்ததே..

"நீங்க கரண்டியக் கீழே போடுங்கம்மா.." தாமோதரன் ஆணையிட்டான்..

"போட்டேன்.." அம்பிகா கரண்டியைத் தூக்கிக் கடாசினாள்..

"கிச்சனை விட்டு வெளியே வாங்கம்மா.." என்றான் தாமு..

"வந்தேன்.." குதித்துக் கொண்டு வெளியில் வந்தாள் அம்பிகா..

"நாம இப்ப வெளியே போகப் போறோம்.. ரெடியாருங்க.." தாமோதரன் சொன்னதும்..

"இதோ.." என்று ஓடவும் போனாள்..

'எங்கே போகப் போகிறாங்க..? சென்னைக்கா..?'

ஈஸ்வரனை கிலி பிடித்துக் கொண்டது... மகனைப் பார்க்கப் போக வேண்டுமென்று அனத்திக்

கொண்டிருந்தவள் மகனைக் கண்டதும் புருசனை அம்போவென விட்டுவிட்டுக் கிளம்பி விடுவதா..?

"ஏண்டா.. நீ காஞ்சிபுரத்துக்கு எதுக்கு வந்த..?" மகனிடம் பாய்ந்தார்..

"இதென்னப்பா வம்பா இருக்கு.. என்னைப் பெத்தவங்களப் பாக்க வந்தேன்.." என்றான் தாமோதரன்..

"பாக்க வந்தியா.. பிரிக்க வந்தியா..?" ஈஸ்வரன் கேட்ட கேள்வியில்..

"எம்டனுக்கு இருக்க குசும்பப் பாத்தியாடா.." என்றாள் அம்பிகா..

தாமோதரன் சிரித்து விட்டான்.. அம்பிகாவிடம் சரளமாகப் பேசுகிறதைப் போல ஈஸ்வரனிடமும் அவன் பேசுவான்தான்.. அவர்தான் முகத்தைத் தூக்கிக் கொண்டு முகமூடியைப் போட்டுக் கொள்வார்..

"சிரிப்பக் கிளப்பாதீங்கப்பா.. நாம வெளியே போய் ஹோட்டலில சாப்பிட்டுட்டு வரலாம்ன்னுதான் அம்மாவைக் கிளம்பச் சொன்னேன்.. எப்பவோ ஒரு தடவை உங்களைப் பாக்கவர்றேன்.. அப்பயும் உக்காந்து பேச முடியாம அம்மா கிச்சனில அடைஞ்சு கிடக்கனுமா..?"

"அதெல்லாம் இந்த எம்டனுக்குத் தெரியாது.."

"எம்டன்.. எம்டன்ங்கறிங்களே.. அந்த எம்டன் எதுன்னு உங்களுக்குத் தெரியுமாம்மா..?"

"எதுவா..? அது வில்லங்கம் பிடிச்ச மனுசனில் லையா..?" இல்லை என்ற தாமோதரன் எம்டனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்..



14

ஊரடங்க ஆணையிட்டால்.. 'ஊம்' என்று தூங்கிடுவோமோ..?

ஊரடங்கு உத்தரவை வெள்ளைக்கார ஆட்சியாளர்கள் பிறப்பித்திருந்தார்கள்.. இந்திய மக்கள் இரவினிலே வெளியே நடமாடக் கூடாது.. ஆயுதம் வைத்துக் கொள்ளக் கூடாது.. அந்த உத்தரவு வெள்ளையர்களுக்கானதல்ல.. அவர்கள் இரவுகளில் அச்சமின்றி வீதிகளில் அலைவார்கள்.. துப்பாக்கியும் கையுமாக இருப்பார்கள்..

"பேடிகள்.." கோபத்துடன் முணுமுணுத்தான் ஆதவன்..

ஊரடங்கு உத்தரவை போட்டு விட்டால் மட்டும் ஊரை அடக்கி விட முடியுமா..? அடிமைப்பட்டுக் கிடப்பவர்கள் ஆயுதம் ஏந்தாமல் இருப்பார்களா..?

'கோழைகள்..! ஆயுதம் ஏந்தாதே என்று கட்டி வைத்துக் கசையடி கொடுக்கும் வீராதி வீரர்கள்..!'

ஆதவனின் ரத்தம் கொதித்தது.. ஊர் எல்லையைத் தாண்டி விட்டான்.. எங்கோ சாமக்கோழி கூவும் சப்தம்

கேட்டது.. அணிந்திருந்த வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டவன் விரைந்து நடந்தான்.. தொலைவில் ஒரு மரம் தெரிந்தது..

அந்த மரம்தான் ஆதவனும்.. அவனுடைய தோழர்களும் ஒன்று கூட நிர்ணயிக்கப்பட்ட இடம்.. மரத்தடியில் வந்த நின்றவன் சுற்று முற்றும் பார்த்தான்.. கோட்டானின் கர்ண கடூரமான கூவல் கேட்டது..

'ரகு வந்துட்டான் போல..'

அண்ணாந்து பார்த்தான்.. மரத்தின் இலைகளுடன் இலைகளாகப் பதுங்கியிருந்த ரகு கீழே குதித்தான்..

"கால்சராய் போட்டுக்கிட்டு வந்திருக்கலாமில்ல..?" ஆதவனின் வேட்டியைப் பார்த்தவன் கேட்டான்..

"பொன் விளைந்த களத்தூர்ல வேட்டியோட வெளியில கிளம்பினாத்தான் சுந்தேகம் வராது.. பக்கத்தில இருக்கிற ஆத்தங்கரைக்கோ.. கம்மாய்க் கரைக்கோ போகிறோன்னு நினைச்சுக்குவாங்க.. கால்சராய்ன்னா ஊரெல்லையைத் தாண்டப் போகிறான்னு கண்டு பிடிச்சுருவாங்க.."

"என்னமா யோசிக்கறேடா.. யாரு நீ.. நேதாஜியோட படைச் சிப்பாயாச்சே.. கண்கட்டு வித்தையைப் பத்தி உனக்குச் சொல்லியாத் தரனும்..? கண்ணிலே விளக்கெண்ணையை ஊத்திக் காவல் காக்கிறவர்களோட கண்ணிலே மண்ணைத் தூவறதில நீ கில்லாடியாச்சே.."

சன்னமான குரலில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது தூரத்தில் குயில் கூவியது.. பதிலுக்கு கோட்டானும் கூவியது..

"கோட்டானுக்கு குயில் நண்பன்டா.." ரகு சிரித்தான்..

சற்றுப் பொழுதில் கோட்டானைத் தேடி குயில் வந்து விட்டது.. அய்யனார் சிலை போல வாட்டசாட்டமான தேகமும் முறுக்கு மீசையுமாக அந்தக்குயில் இருந்தது..

"போகலாமாடா..?" குயில் கேட்டது..

"போகலாம்.. போகலாம்.. தோட்டத்துப் பங்களாவில அந்த ராபர்ட்டு நமக்காக ரொம்ப நேரமா காத்திருக் கானாம்டா காத்தவராயா..!"

"ஹா.. ஹா.."

அவர்கள் விரைவாக நடந்தார்கள்.. தோட்டத்துப் பங்களாவை அணுகியதும் திட்டமிட்டபடி மூவரும் மூன்று திசைகளில் பிரிந்தார்கள்.. ரகு சுவரேறிக் குதித்து பங்களாவின் முன்பக்கக் கதவருகே சென்றான்.. காத்தவராயன் மரத்தின் மீது ஏறித் தாவிக் குதித்து பங்களாவின் பக்கவாட்டுக் கதவுக்குப் பக்கத்தில் போனான்.. நீண்டிருந்த மரத்தின் கிளைகளில் தவழ்ந்த ஆதவன் பங்களாவின் கூரையின் மீது தாவினான்..

ஏற்கனவே அவர்கள் தோட்டத்து பங்களாவை நோட்டமிட்டுத் தெள்ளத் தெளிவாக திட்டம்

தீட்டியிருந்தார்கள்.. அதன்படி ஆதவன் கூரையின் சீமை ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கி விட்டான்..

ஒரே நேரத்தில் நண்பர்கள் மூவரும் மூன்று திக்கிலிருந்து வெளிப்பட்டு ராபர்ட்டைச் சூழ்ந்து கொள்ள வேண்டும்.. யோசிக்கப் பொழுதில்லாமல் ராபர்ட் மலைத்துப் போயிருக்கும் போது சுட்டு விட்டுத் தப்பித்து விட வேண்டும்..

திட்டம் தெளிவாக இருந்தது.. இதைப் போல அவர்கள் திட்டம் தீட்டி இறங்கிய காரியங்கள் அனைத்திலும் வெற்றியையே கண்டிருந்தார்கள்.. அன்றும் வெற்றி நிச்சயம் என்று குதித்த ஆதவன் ஸ்தம்பித்தான்.. ராபர்ட்டை ஸ்தம்பிக்க வைக்க வேண்டும் என்று அவன் நினைத்தால்.. அங்கே ராபர்ட் ஆதவனை ஸ்தம்பிக்க வைத்து விட்டான்.. ஆதவன் குதித்ததும் அங்கே அனைத்து விளக்குகளும் பிரகாஷமாக எரிந்தன.. ஆதவனின் கண்கள் கூசின.. கைகளால் அவன் கண்களை மறைத்தான்..

தனியொருவனாக தூக்கக் கலக்கத்துடன் இருப்பான் என்று அவர்கள் எதிர்பார்த்த ராபர்ட்.. வெள்ளைக்கார சிப்பாய்கள் படைசூழ துப்பாக்கியும் கையுமாக நின்றான்..

"ரகு..! காத்தவராயா..! தப்பிச்சிருங்க.."

தன்னுயிரைப் பொருட்படுத்தாமல் சப்தம் எழுப்பினான் ஆதவன்.. பங்களாவின் முன்வாசலில் இருந்த ரகு சுவரில் தாவி ஏறினான்.. பக்கவாட்டு வாசலில்

இருந்த காத்தவராயன் மரத்தில் சரசரவென்று ஏறினான்.. அவர்கள் குதித்து ஓடும் சத்தம் கேட்டது.. வெள்ளைச் சிப்பாய்களில் பாதிப்பேர் அவர்களைக் குதிரைகளில் துரத்தினார்கள்.. மீதிப்பேர் ஆதவனைச் சுற்றி வளைத்திருந்தார்கள்..

அந்த நிலையிலும் ஆதவன் கையில் பிடித்திருந்த துப்பாக்கியால் ராபர்ட்டின் மார்பை நோக்கிக் குறி வைத்தான்..

"ஷீட் ஹிம்.."

ஆதவனைச் சுற்றி வளைத்திருந்த சிப்பாய்களில் ஒருவன் கூவினான்.. அனைத்துத் துப்பாக்கிகளும் ஆதவனின் மார்பைக் குறி வைத்தன.. ராபர்ட் சிரித்தான்..

"கிவ் யுவர் பிஸ்டல்.." ஆதவனிடம் கை நீட்டினான்..

"தர முடியாதுன்னா என்னடா பண்ணுவ..?" ஆதவன் சிலிர்த்தான்..

ராபர்ட்டின் விழிகளில் வியப்புடன் கூடிய பாராட்டு தெரிந்தது..

"நீ மிகவும் தைரியமானவன்.." ஆதவனின் தைரியத்தை மெச்சினான்..

"இந்தியர்கள் தைரிய மானவர்கள்தான்.. எங்கள் நாட்டுக்குள் வியாபாரப் போர்வையில் நுழைந்து எங்களையே அடிமைப் படுத்தி ஆள்கின்ற தைரியம் ஆங்கிலேயருக்கு இருக்கும் போது.. எங்கள் நாட்டைக்

காக்கும் தைரியம் எங்களுக்கு இருக்காதா..?" ஆங்கிலத்தில் சீறினான் ஆதவன்..

"இருக்கட்டும்.. தாராளமாக இருக்கட்டும்.. எனக்கு அதில் ஏதும் ஆட்சேபனை இல்லையே.. பின் எதற்காக என்னைக் கொல்ல கூரையிலிருந்து குதித்து வந்தாய்..?"

"உன் அனுமதியையும், ஆட்சேபனையையும் எவரும் கேட்கவில்லை.. இது எங்களின் தாய்நாடு.. எங்களை ஆளும் உரிமை உங்களுக்கு இல்லை.. உன் நாட்டுக்கு ஓடிப் போய்விடு.."

"இல்லையென்றால்..?"

"இன்று நீ தப்பியது போல என்றும் தப்பிக் கொண்டிருக்க முடியாது.."

"பயமுறுத்துகிறாயா..?"

"எச்சரிக்கிறேன்.."

"முதலில் நீ தப்பித்து வீடு திரும்புவாயா என்பதை யோசி.. என்னைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம்.."

"நான் போகாவிட்டால் என்ன..? எனக்குப் பின்னால் என்னைப் போல ஒருவன் உன்னைக் கொல்ல வருவான்.. பகத்சிங்கை தூக்கில் போட்டீர்கள்.. உத்தம்சிங் வரவில்லையா..? ஜாலியன் வாலாபாக்கின் பகையை முடிக்கவில்லையா..? அதுபோல்தான் இதுவும்..! தொடர் கதையாக தொடரும்.."

"என்றுதான் முடியும்..?"

"என்று இந்தியா அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாகுமோ.. அன்றுதான் இந்த யுத்தம் முடியும்.."

"அப்படியொரு நாள் வருமென்று நினைக்கிறாயா..?"

"வராவிட்டால் வர வைப்போம்.. ஜெய்ஹிந்த்..!"

"நீ இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவன் அல்லவா.. இப்படித்தான் பேசுவாய்.."

"தெரிகிறது அல்லவா.. உனது ஊருக்கு மூட்டையைக் கட்டிவிடு.."

"அப்படியா சொல்கிறாய்..?"

ராபர்ட் கோபமில்லாமல் ஆதவனுடன் பேசிக் கொண்டிருந்ததில் வெள்ளைக்கார சிப்பாய்களின் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது..

ரகுவையும், காத்தவராயனையும் துரத்திச் சென்ற வெள்ளைக்காரச் சிப்பாய்கள் அவர்கள் தப்பி விட்ட செய்தியுடன் திரும்பி வந்தார்கள்..

"மார்வலஸ்..!" அதை வெகுவாக ரசித்துச் சிலாகித்தான் ராபர்ட்..

வெள்ளைக்காரா சிப்பாய்கள் ஒருவர் முகத்தை மறுவர் பார்த்துக் கொண்டார்கள்.. ஆதவனைச் சுட்டுத் தள்ளாமல் ராபர்ட் விட்டு வைத்திருப்பதில் அவர்களுக்கு உடன்பாடில்லை..

"உனது நண்பர்கள் தப்பி விட்டார்கள் ஆதவன்.. உன்னால் தப்ப முடியுமென்றா நினைக்கிறாய்..?"

"தப்ப வேண்டுமென்று நினைத்தால் எப்படியும் நான் தப்பித்து விடுவேன்.. நேதாஜியின் சீடன் நான்.."

"ஓ..! நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உனக்கு குருவா..? அவர் என்ன சாதித்து விட்டார்..?"

"இந்தியர்களான எங்களை எதிர்க்க வெள்ளைக்கார சிப்பாய்களை நிறுத்தி வைத்திருக்கிறாயே.. இந்திய சிப்பாய்களை ஏன் நிறுத்தவில்லை...? இதுவே நேதாஜி செய்த சாதனை..!"

கண்களில் தீப்பொறி பறக்கக் கூறிய ஆதவனின் வார்த்தைகளில் இருந்த உண்மையில் இலகுவாக அவனுடன் உரையாடிக் கொண்டிருந்த ராபர்ட் கூட முகம் மாறினான்..

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பதில் ஆரம்பித்த இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷின் சார்பாக இந்திய ராணுவமும் ஈடுபடுத்தப் பட்டது.. அப்போதுதான் ஒரு உண்மையை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டார்கள்..

அது.. இந்திய ராணுவத்திற்கு இந்திய தேசிய ராணுவத்திடம் பரிவு இருக்கிறது என்பது..

அந்த உண்மையில் அரண்டு போன பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அவர்களைக் காக்கும் பொறுப்புக்களில் இந்திய சிப்பாய்களை நியமிக்காமல் வெள்ளைக்கார சிப்பாய்களை நியமிக்க ஆரம்பித்தார்கள்.. இக்கட்டான நேரங்களில் இந்திய சிப்பாய்களை நம்ப முடியாது

ன்பதில் அவர்கள் ஆடிப் போயிருந்தார்கள்.. அந்த அரட்டலை வெள்ளையர்களின் மனதில் விதைத்து விட்டது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்..

"இவனை விட்டு வைக்க வேண்டாம்.."

வெள்ளைக்கார சிப்பாய்கள் கூச்சலிட்டார்கள்.. சுடப் போனவர்களை தடுத்து நிறுத்தினான் ராபர்ட்..

"லீவ் ஹிம்.." என்றான்..

"சர்..?"

சிப்பாய்களால் நம்பவே முடியவில்லை.. கொல்ல வந்தவனை விட்டுவிடச் சொல்லி ஜில்லாக் கலெக்டர் ஆணை பிறப்பிக்கிறானா..?

"இவனை விட்டு விடுங்கள்.. இது என் ஆணை.."

வெள்ளைச் சிப்பாய்கள் விலகி நின்றாலும் ஆதவன் அந்த இடத்தை விட்டு நகர மறுத்தான்..

"ஹ..! நீ செய்யும் உயிர் தானத்தில் நான் பிழைத்து வாழ்வதா..? அதற்கு வேறு ஆளைப் பார்.."

"இது தானம் அல்ல நண்பனே..! நன்றி..!"

"நீ எனக்கு நண்பனல்ல.."

"விரோதியும் அல்ல.."

"வெள்ளையர்கள் அனைவருமே எங்களின் விரோதிகள்தான்.."

"இது போர்க்களமில்லை.. நான் உன்னுடன் போராட விரும்பவில்லை.. போய் விடு.."

ராபர்ட்டின் வற்புறுத்தலில் ஆதவனின் புருவங்கள் முடிச்சிட்டன.. இது சாதாரண நிகழ்வல்ல என்பதை

வக்கீலுக்குப் படித்திருந்த ஆதவன் உணர்ந்திருந்தான்.. சீமையில் அவன் படித்த தேச வரலாறுகள் ஒருநாட்டின் நிர்வாகத்தைப் பற்றி அவனுக்குப் பிட்டுப் பிட்டு வைத்திருந்தன..

ஆதவ்ன கொல்ல வந்தது ராபர்ட் என்ற தனி மனிதனையல்ல.. ராபர்ட் என்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஜில்லாக் கலெக்டரை.. கொல்ல வந்தவனை பிடித்து வைக்காமல் தப்பிக்க விட்டு விட்டால் அதைக் குறித்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் விசாரணைக்கு ராபர்ட் பதில் சொல்லியாக வேண்டும்.. அங்கிருந்த வெள்ளையர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விசுவாசமானவர்கள்.. ராபர்ட்டிற்கு விசுவாசமானவர்கள் அல்ல.. அவர்களும் விசாரணையில் பங்கெடுத்தாக வேண்டும்.. விசாரணையின் போது ராபர்ட் ஆதவனைத் தப்பிப் போகச் சொன்னதை அவர்கள் நிச்சயமாக பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் சொல்லி விடுவார்கள்.. அப்போது ராபர்ட் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடுமையான கண்டனத்திற்கு ஆளாக நேரலாம்.. அதிலும் ஆதவன் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவன்..

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி ஒன்பதில் ஆரம்பித்து அன்றும் நடந்து கொண்டிருந்த இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் நேச நாடுகளின் பக்கம் இருந்தது..

வெள்ளைக்காரனை விரட்ட இதுவும் ஒரு வழியென்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நேச நாடுகளை எதிர்க்கும் அச்சு நாடுகளின் பக்கமாக இந்திய தேசிய ராணுவத்துடன் போராட ஆரம்பித்து விட்டார்..

எதிரிக்கு எதிரி நண்பன்..!

இதுதான் நேதாஜியின் சித்தாந்தமாக இருந்தது.. அதில் நேச நாடுகளுக்கு நேதாஜியின் மீது கோபமான கோபம்.. பிரிட்டிஷ் அரசாங்கம் நேதாஜியைக் கண்டவுடன் கடித்துத் தின்று விடும் கடும் வெறியில் இருந்தது..

இந்த லட்சணத்தில் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த ஆதவனை ராபர்ட் தப்பிக்க விட்டு விட்டால் பிரிட்டிஷ் அரசாங்கம் ராபர்ட்டிற்கு கை கொடுத்துப் பாராட்டுப் பத்திரமா வழங்கும்..?

"ஏன்..?" ஆதவன் நேருக்கு நேராகக் கேட்டான்..

"வாக்குக் கொடுத்திருக்கிறேன்.." என்றான் ராபர்ட்..

"யாருக்கு..?"

"யாருக்கோ..?"

"நான் தப்ப விரும்பவில்லையென்றால்..?"

"உன்னைக் கொல்ல எனக்கு விருப்பமில்லை ஆதவன்.. என் இடத்திற்கு துணிச்சலுடன் வந்து நின்றிருக்கும் உன்னை.. எனது சிப்பாய்கள் சுற்றி வளைத்துச் சுட்டால் பிரிட்டிஷாருக்கு வீரமில்லை என்று உன் நேதாஜி சொல்லுவார்.."

"அதற்காகத்தான் என்னைத் தப்பி விடச் சொல்கிறாயா..?"

"அதற்காகவும்தான் சொல்கிறேன்.."

எது எப்படியிருந்தாலும்.. ராபர்ட்டின் வார்த்தைகளில் ஓர் உண்மை இருந்தது.. ஆதவன் தனியாக நின்றான்.. வெள்ளையர்கள் அவனை சுற்றி வளைத்திருந்தனர்..

"நீயும் தனியாகத்தான் இருந்தாய்.."

"ஆனால் என் பங்களாவில் இருந்தேன்.."

நேரத்தைக் கடத்துவதில் யாருக்கு என்ன லாபம் என்று யோசித்தான் ஆதவன்.. விடியல் வரும் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து விட்டன.. விடிந்த பின்னால் ராபர்ட்டே நினைத்தாலும் ஆதவனை அவனால் தப்ப விட இயலாமல் போகலாம்.. ராபர்ட்டைப் போட்டுத் தள்ள வந்தவன் நினைத்ததை நடத்தி முடித்திருந்தால் சிறைபடுவதில் ஓர் அர்த்தமிருக்கிறது.. நினைத்ததை நடத்த முடியாதபோது சிறைபட்டு ஆகப் போவதென்ன..?

"நான் தப்பிப் போனாலும் உன்னைக் கொல்ல நினைக்கிற எங்களின் திட்டம் மாறாது.."

"மாற வேண்டாம்.. போய் வா.."

'என்ன ஆள் இவன்..?'

அனுமானிக்க முடியாத கடுப்போடு அங்கிருந்து வெளியேறி விட்டான் ஆதவன்.. விரைந்து நடந்து பாலாற்றங்கரையின் காட்டுப் பகுதிக்குள் நுழைந்தான்.. பின் தொடர்ந்து யாரும் வரவில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு புதரில் புகுந்தான்.. உள்ளே இறங்கிய படிகளின் முடிவில் இருந்த குகையில் அவனுடைய நண்பர்கள் இருந்தனர்.. குகையின் துவாரத்தில் செறுகப் பட்டிருந்த தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் ரகுவும் காத்தவராயனும் தெரிந்தனர்.. வந்து விட்டாயா என்று ஆதவனைக் கட்டிக் கொள்ளாமல் முறைத்தனர்..

திட்டம் தோல்வியடைந்து விட்டதில் கோபமாக இருக்கிறார்கள் போல என்று நினைத்துக் கொண்டான்

ஆதவன்.. தாடியும் மீசையுமாக வந்த காளியப்பனின் முகத்தில் கடுமை நிலவியது..

"திட்டம் தோல்வியுற்று விட்டது.." ஆதவன் சொன்னான்..

"எப்படித் தோல்வியுற்றது..?" இறுக்கமான முகத்துடன் காளியப்பன் கேட்டான்..

"நாங்கள் போகும் போது அவன் கட்டுக் காவலுடன் இருந்தான்.."

"அதுதான் எப்படின்னு கேக்கறேன்..?"

காளியப்பனின் கடுமையில் ஆதவன் சுற்றியிருந்த நண்பர்களின் முகங்களைப் பார்த்தான்.. அவர்களின் விழிகளில் குற்றச்சாட்டு தெரிந்தது.. எதற்காக அந்த கோபம் என்று புரியாமல் ஆதவன் திகைத்தான்.. அவன் என்ன செய்தான்..?

"புரியலை.."

"புரியும்படியே கேட்கிறேன்.. கலெக்டர் அந்த தோட்ட பங்களாவில் தனியாத்தான் இருப்பான்ங்கிறது நமக்குக் கிடைத்த தகவல்.. தனியா இல்லாட்டியும் ராத்திரி வேளையிலே வெள்ளைக்காரச் சிப்பாய்களின் படையோட இருக்க மாட்டான்.. பங்களாவைச் சுத்தி நாலு சிப்பாய்கள் காவல் காக்க.. அவன் படுத்து நிம்மதியா தூங்கிக்கிட்டு இருந்திருக்கனும்.. ஆனா அப்படி இல்லையே.. என்னவோ துப்பாக்கியைத் துக்கிக்கிட்டு நீங்க மூணு பேரும் சுட வரப் போறதை தெரிஞ்சு வைச்சிருந்தவனைப் போல அவன் படையோட நின்னு உங்களுக்கு வரவேற்புக் கொடுத்திருக்கானே.. எப்படி..? நீ வீட்டுக்குள்ளே குதிச்சதும் லைட்டுகளை எரிய விட்டிருக்கானே.. அப்ப நீ வரப்போகிறது அவனுக்கு தெரிஞ்சிருக்கு.."

'எப்படி..?' ஆதவனுக்கும் புரியவில்லை..

அவர்களின் திட்டம் வெளியே கசிவதற்கான வாய்ப்பே இல்லை.. அங்கே இருந்தவர்கள் ரகசியம் காப்பதற்கான சத்திய பிரமாணத்தை எடுத்தவர்கள்.. உயிரே போனாலும்.. கூட்டத்தின் ரகசிய பிரமாணங்களை வெள்ளைக்காரர்களிடம் சொல்ல மாட்டார்கள்..

'பின்னே எப்படி அவனுகளுக்கு தகவல் தெரிஞ்சது..?'

யோசித்து யோசித்து ஆதவனுக்கு தலைவலி வந்ததுதான் மிச்சம்.. ஒரு மண்ணும் புரியவில்லை.. மற்றவர்களோ அவனை வெட்டவா.. இல்லை.. குத்தவா என்ற ரீதியில் முறைத்து வைத்தார்கள்..

"நமது திட்டம் அவனுக்குத் தெரிஞ்சிருக்குங்கிறதை ஒப்புக்கறேன்.. ஆனா யார் சொன்னது..?" ஆதவனின் கேள்விக்கு..

"நீதான் சொன்ன.." என்றான் காளியப்பன்..

"நானா..?" அதிர்ந்தான் ஆதவன்..

"சொன்னது நீதான் ஆதவா..! அதில் சந்தேகமில்ல.. சொல்லிய இடம்தான் வேற.."

"அப்படின்னா..?"

"நன்றாக யோசித்துப் பார்.. நமது திட்டத்தை உனக்கு நெருக்கமான யாரிடம் நீ சொன்னாய்..?"

யாரிடம் சொன்னான்..? ஆதவனும் மூளையைக் கசக்கிப் பிழிந்து யோசித்தான்.. தாமரை அவன் மனதில் வந்தாள்..

'அவளா..?' அவன் மீண்டும் அதிர்ந்தான்..

'இருக்காது..' அவன் மனம் நம்ப மறுத்தது..

அவன் முகத்தையே உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்த ரகு ஆதவனுக்குப் பக்கத்தில் வந்தான்.. விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்..

"நினைப்பு வந்திருச்சா..?" என்று கேட்டான்..

"ரகு.." ஆதவனின் குரல் நடுங்கியது..

"மனசைத் திடப் படுத்திக்கடா.." ரகு இரக்கத்துடன் சொன்னான்..

"ஏன்..?" ஆதவன் துடித்தான்..

"நம்மை காட்டிக் கொடுத்தது வேறு யாருமில்லை.. உன் காதலிதான்.." என்ற குரல் வந்ததும்..

"காத்தவராயா..!" என்று அலறினான் ஆதவன்..

குத்துக்காலிட்டு உட்கார்ந்திருந்த காத்தவராயன் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.. அவன் பொய் சொல்ல மாட்டான்.. அடாது பழி போட மாட்டான் என்பதில் ஆதவனின் நெஞ்சம் குலுங்கியது..

"கத்தாதே ஆதவா.. உண்மை இதுதான்.."

"தாமரையை இதில இழுக்காதே ரகு.."

"அவதான் தானா உள்ளே வந்திருக்கிறா.. இந்தத் திட்டத்தப் பத்தி அவகிட்ட நீ சொன்னயா இல்லையா..?"

"சொன்னேன்தான்.."

"அதுக்கப்புறமும் ஏண்டா மறுத்துப் பேசற..?"

"எப்படிடா..? எந்தப் பெண்ணாவது தான் கட்டிக்கப் போகிற காதலனைக் காட்டிக் கொடுப்பாளா..?"

கேள்வி கேட்ட ஆதவனைப் பார்த்த ரகுவின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் துணுக்குற்றான் ஆதவன்..

"தான் கட்டிக்கப் போகிற இந்நாள் காதலனைக் கொல்லத் திட்டம் போட்டிருக்கிற முந்நாள் காதலனைக் காட்டிக் கொடுப்பாள்.."

"ரகு..."


ஆதவனின் விரல்கள் ரகுவின் கழுத்தில் அழுந்திப் பதிந்து நெரிக்க ஆரம்பித்தன... அவன் மூச்சுத் திணறினாலும் நேர்கொண்ட பார்வையுடன் அப்படியே நின்றான்.. மற்றவர்களும் ஆதவனை விலக்க முனைய வில்லை.. ஆதவனின் பிடி தளர்ந்தது.. அவனும் தளர்ந்து சரிந்து அமர்ந்தான்..

"உண்மை கசக்கும்தான்.. ஆனா ஆதவா.. உன்னோட தாமரை எதுக்காக நேத்து சாயங்காலம் பாலாற்றங்கரையில ராபர்ட்டை சந்திச்சுப் பேசினான்னு எங்களுக்கு உன்னால சொல்ல முடியுமா..?"

"என்னது..?..?"

அசைவற்று சிலையாய் நின்று விட்டான் ஆதவன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



14

கத்தியின்றி ரத்தமின்றிப்..
பெற்றதல்ல இந்த சுதந்திரம்..

"எம்டன்னா கில்லாடின்னு அர்த்தம்மா.. அந்தக் கில்லாடி மனுசனில்ல.. ஒரு போர்க் கப்பல்..!"

தாமோதரன் சொன்ன செய்தியில்..

"என்னது..??..!!" என்று விழி விரித்தாள் அம்பிகா..

"ஆமாம்மா.. 'எம்டன்'ங்கிறது போர்க்கப்பல்தான்.. முதலாம் உலகப் போர் 1914-ல ஆரம்பிச்சுச்சு... 1918-ல முடிஞ்சுச்சு.. அந்தப் போரில பிரிட்டிஷ்காரங்களுக்கு எதிரா ஜெர்மனி சண்டை போட்டுச்சு.. அந்தச் சண்டையில ஏகப்பட்ட போர்க்கப்பல்களை இறக்குச்சு.. அந்தப் போர்க் கப்பல்கள்ல ஒன்னுதான் 'எம்டன்..'"

"ஊம்..?"

முகவாயில் கை வைத்து அதிசயித்து கதை கேட்டாள் அம்பிகா.. ஈஸ்வரனுக்கும் 'எம்டன்..' கப்பலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசையாகத்தான் இருந்தது.. அதுநாள் வரை 'எம்டன்' என்றால் எவனோ ஒரு ஜெகஜால கில்லாடி என்றுதான் அவரும் நினைத்திருந்தார்.. அந்த 'எம்டன்' மனிதனல்ல.. ஒரு போர்க்கப்பல்..! என்ற விவரத்தில் அவருக்கு சுவராஸ்யம் ஏற்ப்பட்டது..

ஈஸ்வரன் புராண சம்பந்தமான புள்ளி விவரங்களை அள்ளி வீசுவதில்தான் கை தேர்ந்தவர்.. இதுபோன்ற போர் சம்பந்தமான விவரங்களில் பூஜ்யம்..!

அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அம்மாவும் மகனும் வெட்டிக்கதை பேசுவதைப் போல அவர் முகத்தை வைத்துக் கொண்டார்.. அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கெடுக்க வேண்டாமே என்றுதான் அவர் உட்கார்ந்திருக்கிறாராம்.. மற்றபடி.. மனைவியும் மகனும் பேசிக் கொண்டிருக்கும் கதையில் ஒன்றும் அவருக்கு இண்ட்ரெஸ்ட் இல்லையாம்..

மிதப்பான அவர் முகத்தை ஜாடையாகப் பார்த்துக் கொண்ட தாயும் மகனும் சங்கேதமாய் சிரித்து அவருக்கு கடுப்பை உண்டாக்கினார்கள்..

“1914-ம் வருசத்தில செப்டம்பர் மாதம் 22-ந் தேதி செவ்வாய்கிழமை.. செண்பகராமன்ங்கிற தமிழர் மீனவனைப் போல மாறுவேசத்தில சென்னைக் கடற்கரையில வந்து வேவு பார்த்திட்டுப் போறாரு..”

“இரு.. இரு.. செண்பகராமன்ங்கிற தமிழரா..?”

“ஆமாம்மா..”

“அவருக்கு ஜெர்மனியில என்ன வேலை..?”

“அவர் கப்பல் வேலைகளில எக்ஸ்பர்ட்டானவர்ம்மா.. முதல் உலகப் போரில ஜெர்மானிய போர்க்கப்பல்கள் எதிர்ப்பு நாடுகளுக்கு பெருத்த சேலன்ஜா இருந்ததுக.. எப்படி..? நம்ம செண்பகராமனோட திறமையினாலம்மா.. 1920-ல் நேதராஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய விடுதலைப் போராட்டத்தில குதிச்சப்ப.. நேதாஜி யோட சேர்ந்துக்கிட்டு.. ‘ஜெய்ஹிந்த்..!’ங்கிற கோசத்தை உருவாக்கியது செண்பகராமன்தான்..”

ஈஸ்வரன் அசட்டையாக கேட்பதைப் போல நடிக்க வேண்டும் என்பதை மறந்தே போனார்.. வெகு சிரத்தையாக அவர் கதை கேட்க ஆரம்பித்ததில் அம்பிகாவும், தாமோதரனும் ரகசியமாக சிரித்துக் கொண்டார்கள்..

“இந்தியா பிரிட்டிஷ்காரங்க வசத்தில இருந்துச்சு.. அவர்களுக்கு ஆட்டம் காண்பிக்க நினைச்சது ஜெர்மனி.. 1914-ல் செப்டம்பர் மாதம் 22-ந் தேதியில எஸ்.எம்.எஸ். எம்டன்ங்கிற ஜெர்மானிய போர் கப்பல் சென்னையை

நெருங்குச்சு.. கடைசி செகண்டில விசயம் தெரிஞ்ச இங்கிலீஷ்காரங்க சென்னை சிட்டியையே இருட்டுக்குள்ள முங்க வைச்சாங்க..”

“எப்புடிடா..?”

அம்பிகாவின் அப்பாவித்தனமான கேள்வியில் அவளை இருட்டுக்குள் மூழ்க வைத்து எழுப்பிக் காட்டினால் என்ன என்ற கோபம் வந்தது ஈஸ்வரனுக்கு..

தாமோதரன் அப்படியில்லை.. பொறுமையாக விளக்கம் சொன்னான்..

“லைட்டையெல்லாம் ஆஃப் பண்ணிட்டா சிட்டியே இருட்டுக்குள்ள முங்கிருமில்லம்மா..?”

“அட..! ஆமாம்..”

‘புத்திசாலி..!’ மனதுக்குள் மெச்சிக் கொண்டார் ஈஸ்வரன்..

மகன் இருக்கும் போது அதை வெளிப்படையாகச் சொல்ல அவர் என்ன முட்டாளா..? எல்லாத் தாய்மார்களுக்கும் மகன்கள்தான் படைத் தளபதிகள் என்பதை அறியாத கூமுட்டையா அவர்..? அப்படி படைபலத்துடன் இருக்கும் தாயிடம் நிராயுதபாணியான தகப்பன் நேரடியாக மோதுவானா..?

“புல் தடுக்கி பயில்வான்களும் இந்த உலகத்தில இருக்கிறாங்கங்கிறத வெள்ளைக்காரங்க புரூவ் பண்ணினாங்க.. அத்தனை விளக்குகளையும் அணைச்சு வைச்சவங்க.. ஹை கோர்ட்டு விளக்கை மட்டும் அனைக்காம விட்டுட்டாங்க..”

“ஏண்டா..?”

"அப்போ ஹைகோர்ட்டு லைட்டுதான் கலங்கரை விளக்கமா இருந்துச்சும்மா.. இருட்டில வர்ற கப்பல்களுக்கு வழிகாட்டற கலங்கரை விளக்கு 'எம்டன்..' கப்பலுக்கும் வழியைக் காட்டினதில் குறிபார்த்து குண்டு வீசிட்டான் ஜெர்மன்க்காரன்.."

ஈஸ்வரனுக்கு கண் முன்னால் அந்தச் சம்பவம் நடப்பதைப் போலவே இருந்தது.. அவர் உடல் சிலிர்த்தது..



15

துப்பாக்கிக் குண்டுகளால்.. படைக்கப்பட்ட சரித்திரம்..

"தாமரை ராபர்ட்டைடப் பார்த்தாளா..?"

"பார்க்கலை.. சந்திச்சா.."

"ரகு.." ஆத்திரத்துடன் அலறினான் ஆதவன்..

"என்கிட்டக் கத்தற்தில எந்த பிரயோஜனமும் இல்ல ஆதவா.. உன் அத்தைமக ரத்தினத்துக்கிட்டப் போயி இந்தக் கத்தலக் கத்து.."

"அபாண்டமா ஒரு பெண் மேல பழியைப் போடாதே.."

"என் வீட்டிலயும் பெண்கள் இருக்காங்க.. ஏன்..? நம்ம பாரத மாதாவையே ஒரு பெண்ணாத்தானேடா நாம உருவகிச்சிருக்கோம்.. நான் போய் வீண்பழி போடுவேனா..?"

ஆதவன் தளர்ந்து குகைப் படிக்கட்டில் சரிந்து உட்கார்ந்தான்.. குனிந்திருந்த அவன் முகத்தில் கோடி

உணர்வலைகள் வந்து சென்றன.. ஈருடல் ஒருயிராக இல்லாமல்.. ஒருடல் ஒருயிராக அவனுடன் கலந்த தாமரையா ராபர்ட்டைச் சந்திக்கச் சென்றாள்..?

ஒரு முடிவோடு தலை நிமிர்ந்தவனின் முகம் பாறையைப் போல கடினமாக இறுகியிருந்தது..

"உனக்கெப்படி இது தெரியும்..?"

"எனக்கு மட்டுமில்ல.. காத்தவராயனுக்கும் இது தெரியும்.. நாங்க ரெண்டு பேரும் பாலாத்தக்கரையில நடந்துக்கிட்டிருந்தோம்.. துரத்தில தாமரை வந்தா.. உன்னைப் பார்க்க வந்திருப்பான்னு எங்களுக்குல்ல பேசிச் சிரிச்சுக்கிட்டோம்.. கொஞ்ச நேரத்தில பாத்தா மோட்டார் கார் வருது.. என்னடா இதுன்னு பதுங்கிக்கிட்டோம்.. அதில இருந்து நம்ம ஜில்லாக் கலெக்டர் இறங்காறான்.. இறங்கினவன் ரொம்ப நாளா பழகினவனப் போல நேரா தாமரையைப் பார்த்துப் போனான.."

"தாமரை ஓடலையா..?"

"ஏண்டா நீ வேற.. நாங்களே கருமாயப் பட்டுப் போயிருக்கோம்.. இதில நீ வேற விளக்கெண்ணையைப் போல பேசி வைச்சேன்னு வையய்யி.. நண்பன்னு பாக்க மாட்டேன்.. கேட்டுக்கடா.. ராபர்ட்டைப் பாத்ததும் உன்னோட தாமரை பயந்து ஓடலை.. அவனைத்தான் எதிர்பார்த்து காத்திருந்ததைப் போல எதிர்கொண்டு வரவேற்றா.. போதுமா..? சொல்ல வேணாம்ன்னு பாத்தா இவன் தொண்டைக்குழியில இருக்கிறத தோண்டி எடுக்கிறான்.."

"அவளுக்கு பொன் விளைந்த களத்தூரில இருக்கிறவர்களக் கூடத் தெரியாதுடா ரகு.. வீட்டு

வாசலத் தாண்டி தோழிகளோட குளத்தங்கரைக்கும்.. ஆத்தங்கரைக்கும் நீச்சலடிச்சுக் குளிக்கப் போவா.. பாலாத்தங்கரைக்கு நான் வந்தாத்தான் வருவா.. பச்சை மண்ணுடா.. என்னைத் தவிர வேற நினைப்பு அவ மனசில வராதுடா ரகு..”

“நம்பிக்கிட்டே இரு.. இப்ப மட்டும் ராபர்ட்டோட நினைப்பு எப்படி அவ மனசில வந்துச்சு..?”

“அவளுக்கு ராபர்ட்டைத் தெரியாதுடா..”

“அப்பக் கண்ணால பாத்த நாங்க சொல்கிறது பொய்ங்கிறியா..?”

“கண்ணால் காண்பதும் பொய்.. காதால் கேட்பதும் பொய்ன்னு நம்ம பெரியவங்க சொல்லியிருக்காங்க..”

“அப்ப தீர விசாரி..”

“ரகு..”

“உன்னோட தாமரை பாலாத்தங்கரைக்கு நேத்துச் சாயங்காலம் வந்தா.. ராபர்ட்டைச் சந்திச்சா.. அவங்க ரெண்டு பேரும் ஏதோ ரகசியமா பேசிக்கிட்டாங்க.. அதிக நேரம் பேசலைங்கிறது உண்மைன்னாலும் ஒன்னு ரெண்டு வார்த்தைகளை ரொம்ப நாளாப் பழகினவங்களப் போல ரகசியமா அவங்க பேசிக்கிட்டது உண்மை..”

‘என்ன இது..?’

ஆதவனின் மனம் அதிர்வில் இருந்தது.. தாமரையைக் குறித்த இதுபோன்ற வார்த்தைகளை ரகுவைத்தவிர வேறு யார் சொல்லியிருந்தாலும் அந்த இடத்திலேயே கொன்று புதைத்திருப்பான்..

சொல்வது ரகுவாகப் போய் விட்டானே..

"ரகு.. ஆதவனை விடு.."

காளியப்பன் கண்டிப்புடன் சொன்னான்... ரகு உதட்டைக் கடித்துக் கொண்டு மௌனமானான்.. காத்தவராயனோ உக்கிரமூர்த்தியைப் போல ஆதவனைப் பார்வையால் எரித்துக் கொண்டிருந்தான்..

"ஆதவனுக்கு இதைவிட பெரிய வேலைகள் காத்திருக்கு.. அவன் இந்திய தேசிய ராணுவத்துக்குத் திரும்பியாகனும்.. ராபர்ட்டத் தீர்த்துக் கட்டற வேலையை நாம பாத்துக்கலாம்.. ஆதவன் இரண்டாம் உலகப் போரில பங்கெடுக்கிற வேலையைப் பார்க்கட்டும்.."

காளியப்பன் சொல்லச் சொல்ல.. ரகுவின் முகத்தில் முர் சுழிப்பு வந்தது.. ஆதவனுக்குப் புரிந்து விட்டது.. இனி ராபர்ட்டைக் கொல்ல வேண்டிய திட்டத்தில் அவனால் இடம் பெற முடியாது.. அந்த நம்பகத்தன்மையை அவன் இழந்து விட்டான்..

'எப்பேர்பட்ட தண்டனை இது..?'

இதைவிட ராபர்ட்டைக் கொன்று விட்டு அவனுடைய சிப்பாய்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகியிருக்கலாமே என்று துடித்துப் போனான் ஆதவன்..

"ஆதவனுக்கு விடை கொடுப்போம்.. பொன் விளைந்த களத்தூரில் ஏற்பட்ட தோல்விக்கு அவன் இரண்டாம் உலகப் போரில இந்திய தேசிய ராணுவத்தில பங்கெடுக்கிறது மூலமா ஈடு கட்டிருவான்.. உள் நாட்டுப் போரை நாம பார்த்துக்கலாம்.. வெளிநாட்டுப் போரை ஆதவன் பார்த்துக்கட்டும்.."

இனி எங்களுக்கு உன் உதவி தேவையில்லை என்று காளியப்பன் மறைமுகமாக அறிவுறுத்தியதில் இயந்திரம் போல எழுந்து நின்று மற்ற தோழர்களைக் கட்டித் தழுவினான் ஆதவன்.. ரகுவையும் காத்தவராயனையும் தவிர மற்றவர்கள் இரக்கத்துடன் ஆதவனைக் கட்டிக் கொண்டார்கள்.. ரகுகூட அமைதியாக கட்டித் தழுவி விலகினான்.. காத்தவராயன் கட்டித் தழுவிய தழுவல்தான் ஆதவனின் எழும்புகளை நொறுக்கப் பார்த்தது..

“காத்தவராயா..”

காளியப்பன் குண்டுக் கட்டாக அவனைத் தூக்கி விலக்கிவிட்டான்..

“போய் வா ஆதவா..”

ஆதவன் படியேறினான்.. குகையின் வாசலை அடைந்ததும் திரும்பிப் பார்த்தான்.. காத்தவராயனின் செவ்வரி ஓடிய கண்களுடன் அவன் கண்கள் கலந்தன.. காத்தவராயன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.. ஆதவன் குகையை விட்டு வெளியில் வந்தான்.. வீட்டை நோக்கி நடந்தவனின் மனம் அலைகடலாய் சுழன்று கொந்தளித்துக் கொண்டிருந்தது..

‘தாமரை ராபர்ட்டைச் சந்தித்தாளா..?’

அப்போதும் அவனால் அதை நம்ப முடியவில்லை.. வீட்டுக்குப் போன போது.. அமராவதி அடுப்பை மூட்டிக் கொண்டிருந்தாள்.. மகனைக் கண்டதும் முக மலர்ச்சியுடன்..

“செவ்வந்தி.. உன்னோட அண்ணன் வந்துட்டான்.. சட்னிய அரைக்க வாம்மா..” என்று குரல் கொடுத்தாள்..

வீட்டின் பின் பக்கத்தில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த விறகுக் குவியலில் இருந்து விறகுகளை உருவிக் கொண்டிருந்த செவ்வந்தி உள்ளே எட்டிப் பார்த்தாள்.. மையப் பகுதியின் திறந்த வெளி முற்றத்தில் பித்தளை அண்டாவில் நிரம்பியிருந்த தண்ணீரை பித்தளைச் செம்பில் மோந்து கால் கைகளை கழுவிக் கொண்டிருந்தான் ஆதவன்.. விறகுக் கட்டைகளுடன் உள்ளே வந்த செவ்வந்தி..

"ராத்திரி முழுக்க உனக்காக தூங்காம காத்திருந்தோம்.. எங்கே போயிருந்த..?" என்றாள்..

"சிநேகிதப் பசங்களோட பேசிக்கிட்டு இருந்திருப் பான்.. இப்பத்தான் பிள்ளை வந்திட்டானில்ல.. நான் இட்லிய அவிக்கறேன்.. நீ சடுதியா அம்மிக் கல்லில சட்டினியை அரைச்சுரு.." அமராவதி பரபரத்தாள்..

"கேட்டியில்ல.." என்றாள் செவ்வந்தி..

"என்னதான் துப்பாக்கிக்குண்டு உன்னைத் துரத்திக் கிட்டே இருந்தாலும்.. நிக்காம நீ ஓடிக்கிட்டே இருந்தாலும் உன்னை ஒரு போராளின்னு நம்ம அம்மா ஏத்துக்கவே இல்ல.."

மகள் என்னசொல்லிக் கொண்டிருக்கிறாள் என்று புரியாமலே மகனைப் பார்த்து வாஞ்சையுடன் சிரித்து வைத்தாள் அமராவதி.. ஆதவனின் மனதை அந்தச் சிரிப்பு கசக்கிப் பிழிந்தது.. என்ன வாழ்க்கை இது என்று அவன் மனம் அழுதது..

அவனுடைய தாய்த்திருநாடு அவர்களுக்கு சொந்தமானதில்லை... வெள்ளையரிடம் அடிமைப் பட்டுக்

கிடக்கிறது என்பதினால்தானே அவனுக்கு இத்தனை துயரங்கள் ஏற்பட்டிருக்கின்றன..?

உயர்ந்த படிப்பைப் படித்தும் அதற்கான வேலையில் உட்கார முடியவில்லை.. அதிக அளவில் நிலமிருந்தும்.. உட்கார்ந்து சாப்பிட முடியவில்லை.. தாய்க்கு மகனாக.. தங்கைக்கு அண்ணனாக.. அப்பாவுக்கு பிள்ளையாக குடும்பத்திற்கான கடமையை ஆற்ற முடியவில்லை.. இது அத்தனைக்கும் மேலாக அவனுக்கென்று பிறந்தவளின் காதலை தக்க வைத்துக் கொள்ளவதிலும் சிக்கல் வந்து விட்டதே..

'என் நாடு மட்டும் சுதந்திர நாடாக இருந்திருந்தா..?'

அவன் துயரத்துடன் அண்டாவுக்குள் செம்பைப் போட்டான்.. கொடியில் கிடந்த துண்டை உருவி கை, கால் முகம் துடைத்து சமையலறையின் நிலைப்படியில் சாய்ந்து உட்கார்ந்தான்.. அடுப்பை ஊதுகுழலில் ஊதி எரிய வைத்துக் கொண்டிருந்த அமராவதிக்கு மகனின் அருகாமையில் சந்தோசம் ஏற்பட்டது..

"முன்னைக்கு இப்ப இளைச்சுத் தெரியறப்பா.." நாத்தழுதழுத்தாள்..

"எங்கன இருந்தாலும் ஒரு வாய் கஞ்சியைக் குடிச்சுப்புடு ராசா.. பக்கத்தில இருந்து பரிமாற தாயிருக்கேன்.. நீயோ தாய் நாட்ட நினைச்சுக்கிட்டு ஓடிப் போயிடற.. பெத்தமனசு தவிக்குதுடா தம்பி.. எம்புள்ள எங்க இருக்கானோ.. என்னத்தச் சாப்பிட்டானோன்னு மனசு கிடந்து அடிச்சுக்குதுடா தம்பி.. நீ போராடு.. நான் வேணாங்கலை.. போராட்டத்துக்கு இடையில உன்னைப் பெத்தவள ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப்

போயிருடா கண்ணா.. இந்தப் பாவி மனசு பறப்பாப் பறக்குது.."

"அம்மா..!"

அமராவதியின் மடிமீது தலை சாய்த்து படுத்து விட்டான் ஆதவன்.. பெற்றவளின் மனக்குமுறலில் அவனது தேகம் துடித்தது..

என்ன செய்வான்..? என் வீடு என்று அவன் நிம்மதியுடன் உறங்கி எழ.. அவன் வீடு.. சுதந்திர நாட்டில் இல்லையே..

அம்மிக்குழவியைக் கழுவிக் கொண்டிருந்த செவ்வந்தி துணுக்குற்றாள்.. ஆதவனின் மறுகல் அவளை அசைத்துப் பார்த்தது.. தங்கத்தின் புறக்கணிப்பைப் பற்றி தனஞ்ஜெயன் அவளிடம் சொல்லியிருந்தான்..

"அம்ம.. மனசு மாறிருச்சு செவ்வந்தி.. ஆதவன்கிட்ட முகம் கொடுத்துப் பேச மாட்டேங்கிறாங்க.. தாமரையை வேற இடத்தில கட்டிக் கொடுத்திரனும்னு பிடிவாதம் பிடிக்கிறாங்க.. அப்பாவோட அதட்டலிலதான் அடங்கி யிருக்காங்க.."

"நிச்சயம் பண்ணிட்டு மாத்திப் பேசலாமா அத்தான்..?"

"நீ அவங்க இடத்தில இருந்து யோசிச்சுப் பாக்கனும் தாமரை.. தேசப் பற்று ஆதவனுக்குத்தான் இருக்கா..? எனக்கு இல்லையா..? நானும் சத்யாக்கிரகம் பண்ணுகிறவன்தான்.. வெள்ளைக்காரன் கொடுக்கிற வேலை வேணாம்ன்னு தூக்கியெறிஞ்சுட்டு படிச்ச படிப்ப மறந்து வேட்டிய மடிச்சுக் கட்டிக்கிட்டு கழனியில இறங்கியிருக்கிறவன்தான்.. ஒத்துழையாமை இயக்கத்தில

சிறைக்குப் போயி திரும்பினவன்தான்.. என் வழியில அவனும் வந்தா எந்தப் பிரச்னையும் இல்ல செவ்வந்தி..”

“உங்க வழியில அண்ணன் வராது.. அப்படியே வந்தாலும் மதராஸீப் பட்டினத்தில வெள்ளைக்காரன்கிட்ட வேலை பார்க்காது..”

“சேச்சே..! என்னப் பேச்சு பேசற.. வெள்ளைக்காரன் கிட்டக் கை கட்டி உத்தியோகம் பார்க்கனும்னா நான் சொன்னேன்..?”

“உங்க அம்மா அப்படித்தான் சொல்கிறாங்க அத்தான்.. அவங்களுக்கு மதராஸீ பட்டினத்தில வேலை பாக்கிற மருமகன்தான் வேணும்.. அவன் கோட்டு சூட்டுப் போட்டு டைகட்டி.. வெள்ளைக்கார துரை போல தலையில குல்லா மாட்டி வரனும்.. அப்பத்தான் அவங்க சந்தோசமா பொண்ணக் கட்டிக் கொடுப்பாங்க.. எங்கண்ணன் அதுக்கு ஆளா..?”

செவ்வந்தி கோபத்துடன் வந்து விட்டாள்.. ஆதவனின் மனதைப் பற்றி அவளுக்குத் தெரியும்.. அவனை பொன் விளைந்த களத்தூரில் சில நாள்களாவது கட்டிப் போட்டுத் தங்க வைப்பது தாமரையின் மீதான அவனின் காதல்தான் என்பதில் அவள் மனம் வேதனை கொண்டிருந்தது.. அந்த வேதனையை மனதில் சுமந்து கொண்டிருந்தவளுக்கு ஆதவனின் மருகலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

பனித்த கண்களைத் துடைத்துக் கொண்டு அவள் சட்னியுடன் உள்ளே வந்தாள்.. அமராவதியின் மடியில் தலை வைத்திருந்த ஆதவன் எழுந்து உட்கார்ந்தான்..

“குளிச்சுட்டு வாண்ணே.. சூடா சாப்பிடலாம்..”

செவ்வந்தி சுடுதண்ணீர் வைக்க வீட்டுக்குப் பின்பக்க கிணற்றடிக்குப் போனாள்.. சாம்பலைக் கையில் அள்ளிப் பல் தேய்த்த வண்ணம் விடிந்து கொண்டிருந்த அடிவானின் வெளிச்சப்புள்ளிகளைப் பார்த்தான் ஆதவன்.. பெரிய கற்கள் ஃ வடிவத்தில் இருக்க.. அதில் அடுப்பின் நெருப்பில் கரி அப்பிப் போயிருந்த பெரிய பித்தளைப் பானையை தூக்கி வைத்தாள் செவ்வந்தி.. காய்ந்திருந்த சுள்ளிகளை ஒடித்து.. துவரம்செடியின் சருகுடன் கலந்து அடுப்பில் தள்ளி நெருப்பை மூட்டினாள்.. தகதகவென பற்றிக் கொண்டு எரிந்தது நெருப்பு.. அடுப்பை விட்டு விலகி வந்து கயிற்றில் கட்டப் பட்ட வாளியை கிணற்றுக்கட்டையில் மாட்டப் பட்டிருந்த உருளையில் செருகி கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீரை நிரப்பி கயிற்றை இழுக்க ஆரம்பித்தாள்.. தண்ணீர் இறைத்து அவள் கிணற்றடி அண்டாவை நிரப்பிக் கொண்டிருக்க.. ஆதவன் பித்தளைச் செம்பில் தண்ணீரை மோந்து வாய் கொப்பளித்தான்..

“விலகு சொல்றேன்..”

தங்கையின் கையிலிருந்த கயிற்றைப் பிடுங்கி.. நிமிடத்தில் அண்டாக்களில் தண்ணீரை இறைத்து ஊற்றி நிரப்பினான்..

‘என் அண்ணன்..!’ செவ்வந்தியின் மனம் நெகிழ்ந்தது..

“தாமரையைப் பார்த்தியா..?” ஆழ்ந்த குரலில் கேட்டாள்..

“நீ பார்த்தியா..?” ஆதவன் பதிலுக்கு கேட்டான்..

“இல்லேண்ணா.. இப்பல்லாம் அவள அவங்கம்மா குளக்கரைக்கும் ஆத்தங்கரைக்கும் குமரிப் பொண்ணு

களோட அனுப்பி வைக்கறதில்ல.. கிணற்றடியிலேயே குளிச்சுத் துவைச்சுக்கன்னு சொல்லிட்டாங்களாம்.."

'அப்புறம் எப்படிப் பாலாத்தங்கரைக்குப் போயிருப்பா..?'

ஆதவன் யோசித்துக் கொண்டிருக்க.. செவ்வந்தி பெரிய கரித் துணியைப் பிடித்துக் கொண்டு சூடான பித்தளைப் பானையைத் தூக்கிக் கொண்டு வந்தாள்.. ஆதவன் இறைத்து வைத்திருந்த அண்டாத் தண்ணீரில் வெந்நீரை விளாவினாள்..

"ஏன் செவ்வந்தி.."

"என்னண்ணா..?"

"இந்த ஜில்லாக் கலெக்டரா இருக்கிற வெள்ளைக் காரனை தாமரையும், நீயும் ஒருதடவை பார்த்திருக்கிறதா தனஞ்ஜெயனிடம் சொன்னேல்ல.."

"ஆமாண்ணா.. நாங்க மட்டும் பார்க்கலை.. எங்ககூட அப்ப வைரமும் நின்னிருந்தா.."

"அப்ப என்ன நடந்தது..?"

"தாமரையும், வைரமும் கம்மாக்கரை புளிய மரத்தில இருந்த புளியம் பழத்தப் பிடுங்கித் தின்னாங்க.. அதுக்கு லாரன்ஸின்னு ஒரு வெள்ளைக்காரன் வந்து அதட்டினான்.."

"எதுக்காம்..?"

"நம்ம ஊரு கம்மாக்கரை புளிய மரத்தில காய்ச்சுத் தொங்கற புளியம்பழமெல்லாம் அவன் அப்பன் வீட்டுச் சொத்தாம்.."

"அடி நெொய்யாலே.. யார் மரத்த யாரு உரிமை கொண்டாடறது..?"

"அதை அவன்கிட்டக் கேக்க முடியுமா..? நாங்க நடுங்கிப் போயி நின்னப்ப ஜில்லாக் கலெக்டர் மோட்டார் காரில வந்து இறங்கினான்.. கொஞ்சம் பாக்கிறதைப் போல பகுமானமா இருக்கிறவனுகள வெள்ளக்காரத் துரை போல இருக்கான்னு சொல்லுவாக.. இவன் நிசமாவே வெள்ளைக்கார துரை.. கலெக்டர் வேற.. எப்படி ஒரு பந்தாவா இறங்கி நின்னிருப்பான்னு நினைச்சுப் பாரு.."

'அதில்தான் தாமரை மயங்கி விட்டாளோ..?'

தன் நினைப்பைச் சகித்துக் கொள்ள முடியாமல்..

"சேச்சே.." என்று வாய்விட்டுச் சொன்னான் ஆதவன்..

"என்னண்ணே.." செவ்வந்தி ஆச்சரியத்துடன் பார்த்தாள்..

"ஒன்னுமில்லேம்மா.." சமாளித்த ஆதவன்..

"அப்ப அந்த கலெக்டரு உங்ககிட்ட ஏதாச்சும் பேசினானா..?" என்று விட்டேற்றியாகக் கேட்பதைப் போலக் கேட்டான்..

"எங்ககிட்டப் பேசலை.. அந்த லாரன்ஸைத்தான் திட்டினான்.. நம்ம தாமரையை வைச்ச கண்ணு வாங்காம பாத்துத் தொலைச்சான்.."

ஏற்கனெவே தனஞ்ஜெயனின் மூலமாக அறிந்த விவரம்தான் என்றாலும் அந்த நொடியில் அந்த விவரம் புதுப் பரிணாமத்துடன் தனஞ்ஜெயனின் முன்னால்

நின்றது.. தாமரையை ராபர்ட் பார்த்திருக்கிறான்.. அது மோகம் கொண்ட பார்வையாக இருந்திருக்கிறது.. அவனைக் கொல்லப் போன ஆதவனைத் தப்பிப் போக விட்டிருக்கிறான்..

இரண்டுக்கும் இடையே ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத சம்பந்தம் இருப்பதாக ஆதவனின் மனதில் பட்சியொன்று வந்து சொல்லியது..

ஆதவனின் மனம் அமைதியை இழந்தது.. அவன் வெந்நீரில் குளித்து விட்டு வீட்டுக்குள் போனான்.. சமையலறையை ஒட்டிய நடைவராண்டாவில் பந்திப் பாயை விரித்து அதன் முன்னால் இலைகளைப் போட்டிருந்தாள் செவ்வந்தி.. சூடான ஆவி பறக்கும் இட்லிகளைப் பித்தளைக் குண்டாவில் அடுக்கிக் கொண்டு வந்து வைத்தாள் அமராவதி.. சட்னியும், சாம்பாரும்.. பித்தளைச் சட்டிகளில் இருந்தன..

“மகனுக்காக பலகாரம் சுட்டிருக்க போல..” விசுவநாதன் கண்மாயில் குளித்து முடித்து வந்து உட்கார்ந்தார்..

“ஆமாம்.. நேத்தே இட்லிக்கு ஊற வைச்சு மாவாட்டி வைச்சிட்டேன்..” அமராவதி அவர் இலையில் இட்லிகளை வைத்து சட்னியை ஊற்றினாள்..

“புள்ளயும் வந்திரட்டும்..” விசுவநாதன் தடுத்தார்..

“புள்ளதான் குளிச்சுட்டு வந்துட்டானே..” ஆதவனை கை காட்டினாள் அமராவதி..

“வாய்யா..”

விசுவநாதனின் வாத்சல்யமான அழைப்பில் மனம் கரைந்து போன ஆதவன் அவருக்குப் பக்கத்தில்

உட்கார்ந்தான்.. கொதிக்கும் சாம்பாரில் ஒரு கிண்ணம் நெய்யைக் கவிழ்த்து விட்ட அமராவதியின் தனித்த கவனிப்பில் மனம் திளைத்தான் ஆதவன்..

அன்று முழுவதும் எங்கேயும் போகாமல் சிந்தனை வசப்பட்டவனாக வீட்டிலேயே இருந்தான்.. அமராவதி அகம் மகிழ்ந்து போனவளாக கோழியடித்து குழம்பு வைத்தாள்.. மதியம் சாப்பிட்டு விட்டு தூங்கி எழுந்தவன்.. பாலாற்றங்கரைக்குப் போனான்... ஆற்றுமணலில் மல்லாக்கப் படுத்து கைகளை மடித்துத் தலைக்குக் கொடுத்திருந்தவனின் காதுகளில் அந்த கொழுசு சப்தம் துல்லியமாக கேட்டது..

'இது.. இது..'


அவன் பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தான்.. அது தாமரையின் கொழுசொலி.. ஒரு மைல் தூரத்துக்கு அந்தப் பக்கமாக அவள் நடந்து வந்தாலும் ஆதவன் அந்த சப்தத்தை எளிதாக இனம் பிரித்து கண்டு விடுவான்..

'அவ வர்றாளா..?'

துள்ளி எழுந்து ஆற்றங்கரையின் பாறைக்குப் பின்னால் மறைந்து பார்த்தான்.. ஆதவன் அவளை அன்று ஆற்றங்கரைக்கு வரச் சொல்லியிருக்கவில்லை.. ராபர்ட்டைக் கொல்லும் திட்டத்துடன் ஊரை விட்டுப் போனவன் ஊருக்குள் திரும்பி விட்ட செய்தியை தாமரை அறிந்திருக்க மாட்டாள்..

அப்படியிருக்கும் போது தாமரை யாரைப் பார்க்க வருகிறாள்..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



15

மெல்லக் கொன்றது விசமல்ல.. நாஜிகளின் துரோகம்..

அம்பிகாவுக்கும் அதே உணர்வு ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்பியவராக அவள் முகம் பார்த்தார்.. அதே நொடியில் அவளும் அவரை பார்த்து வைத்ததில் திருடனுக்கு தேள் கொட்டியதைப் போல திருட்டு விழி விழித்தபடி அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டார்..

'இந்த மனுசன் இருக்காரே..'

பற்களை நறநறத்த அம்பிகாவும் பார்வையைத் திருப்பி மகனைப் பார்த்தாள்.. அவன் கதையைத் தொடர்ந்தான்..

"குத்து மதிப்பா குண்டு வெடிச்சதில பெரிசா சேதமில்லை.. 130 தடவை குண்டு வெடிச்சது.. ஹார்பர்ல இருந்த எண்ணைக் கிடங்கு சிதறி வெடிச்சுச்சு.. பிடிக்கப் போன பிரிட்டிஷ் போர் கப்பல்ககிட்டயிருந்து எம்டன் எஸ்கேப் ஆகிருச்சு.."

"அதான் கில்லாடியான ஆளுகள 'எம்டன்'னு சொல்றாங்களா..?"

"யெஸ் மம்மி.. எம்டனை பிரிட்டிஷ் கடற்படையில பிடிக்க முடியலை.. 1908-ல அதை உருவாக்கினாங்களாம்.. 20 பீரங்கிகள் எம்டன் கப்பலிலே இருந்ததாம்.. 30

போர்க் கப்பல்களை ஸ்வாஹா பண்ணிருச்சாம்.. 'எம்டன்' கப்பல்ன்னா இங்கிலீஷ்காரனுக்கு சிம்ம சொப்பனமாம்.."

"அதுக்காகவே அதுக்கு பத்தி பொருத்தி வைச்சு சூடம் காட்டி சாம்பிராணிப் புகை போடனும்டா.."

"சிட்னி பக்கம் கொக்கோலஸ் தீவுப்பகுதிக்குப் போனா நீங்க எம்டன் கப்பலுக்கு சூடம் ஏத்தி சாம்பிராணி காட்டலாம்.. ஏன்னா 1914-ம் வருசம் நவம்பர் மாதத்தில எம்டன் கப்பல சுட்டுக் கடலில முழ்கடிச்சுட்டாங்க.. இன்னமும் 'எம்டன்' கப்பலோட முகப்புப் பகுதி தண்ணீருக்கு வெளியே தெரிந்து கொண்டிருக்கு.. அதில் ஜெர்மன் நாட்டுக்கொடி கம்பீரமாக பறந்து கொண்டிருக்கு.."

"என்னமோ போடா தாமு.. இன்னைக்கு நாம நிம்மதியா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்.. ஒரு காலத்தில இந்த நிம்மதிய வெள்ளைக்காரங்ககிட்ட அடகு வைச்சிட்டு அடிமையாயில்ல வாழ்ந்திருக்கோம்..?"

மெய்தான் என்று தாமோதரன் வாயால் சொல்ல வில்லை.. அவனது முகத்தின் இறுகிய தசை நார்கள் அதைச் சொல்லின.. இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசினால் அவன் இவ்வாறுதான் உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுவான்.. விட்டால் துப்பாக்கியைத் தூக்கி 'டுமீல்' என்று சுட்டு விடுபவனைப் போல தெறிப்பான்..

"இது நன்றி கொன்ற உலகம்மா.. செண்பகராமன் தேர்ந்த தொழில் நுட்பத்தோட இருந்தாரு.. முதல் உலகப் போரில அவரோட தொழில் திறமையினாலதான்

ஜெர்மானியக் கப்பல் படை.. மத்த நாடுகளோட கப்பல் படையை ஒரு கை பார்த்துச்சு.. முதல் உலகப் போர் முடிஞ்சதுக்குப் பின்னால செண்பகராமனுக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸோட அறிமுகம் கிடைச்சுச்சு.. அவர் இந்திய தேசிய ராணுவத்தில ஐக்கியமானாரு.. 'ஜெய் ஹிந்த்' ங்கிற கோசத்தை உருவாக்கினதில செண்பக ராமனுக்கு முக்கிய பங்கிருந்துச்சு.. 'ஜெய் ஹிந்த்'ன்னு சொல்லும் போதே நமக்குள்ள ஒரு உத்வேகம் வரும்மா.. அது தாரக மந்திரம்..! அந்த 'ஜெய் ஹிந்த்'ங்கிற தாரக மந்திரத்தை நேதாஜிக்கு அறிமுகப் படுத்தினது செண்பக ராமன்தான்.."

"அப்பேற்பட்ட மனுசருக்கு ஜெர்மனி நன்றிக்கடன் பட்டிருக்கு.."

"நீங்க வேற.. அவனுகதான் செண்பகராமனுக்கு விசம் வைச்சுக் கொன்றாங்க.."

"என்னடா சொல்கிற..?"

அம்பிகாவுடன் ஈஸ்வரனும் அதிர்ந்து விட்டார்.. நன்றி கெட்ட உலகம் என்று சொல்லாமல் 'நன்றி கொன்ற உலகம்..' என்று ஏன் தாமோதரன் சொன்னான் என்று அப்போதுதான் அவர்களுக்கு விளங்கியது..

"என்னத்தம்மா சொல்லச் சொல்கிறீங்க.. இங்கிலீஷ் காரங்களில இங்கிலாந்துக்காரன் வேற.. ஜெர்மன்காரன் வேறன்னு இல்லேம்மா.. ரெண்டு நாட்டுக்காரனுக்குமே மண்டைக்கனம் ஜாஸ்தி.. ஹிட்லர் ஒரு தடவை 'இந்தியர்களுக்கு நிர்வாகத் திறமை இல்லை.. இவங்க

சுதந்திரம் வாங்கி என்ன செய்யப் போகிறாங்க..?'ன்னு பேசி வைச்சிட்டார்.. ஜெர்மனியில திறமையான உழைச்சுக்கிட்டு இருந்த செண்பகராமனுக்கு கோபம் வந்திருச்சு.. அவர் ஹிட்லர் சொன்னது தப்புன்னு ஆதாரங்களை அடுக்கிப் பேசி.. ஹிட்லரை மன்னிப்புக் கடிதம் எழுத வைச்சிட்டாரு.."

"அடேங்கப்பா..! ஹிட்லர்ன்னா உலகமே நடுங்கியிருக்கு.. அந்த ஹிட்லரையே மன்னிப்புக் கடிதம் எழுத வைச்சு எழுத்து மூலமா மன்னிப்புக் கேட்க வைச்சிருக்காரா நம்ம தமிழர்..!"

"ஆமாம்மா.. அதை ஜெர்மானிய நாஜிக்கள் மறக்கலை.. அவங்க செண்பகராமனோட சாப்பாட்டில மெல்லக் கொல்லும் விசத்தை வைச்சுட்டாங்க.. தான் சாகப் போகிறோம்'ன்னு செண்பகராமனுக்குத் தெரிஞ்சிருச்சு.. தன்னோட வொய்ப் லட்சுமிபாய் கிட்ட அவரோட அஸ்திய இந்தியாவுக்கு கொண்டு வந்து கரமனை ஆத்தில கரைத்து நாஞ்சில் வயல்களில தெளிக்கனும்னு கேட்டுக்கிட்டாரு.. லட்சுமிபாய் அப்படியே செய்கிறேன்னு வாக்குக் கொடுத்திருக்காங்க.. அடுத்த கொஞ்ச நாளிலேயே செண்பகராமன் இறந்து போனாராம்.. அவரோட அஸ்தியோட லட்சுமி பாய் 1936-ல இந்தியாவுக்கு திரும்பியிருக்காங்க.. 1966-லதான் இந்திய கவர்ண்மென்டுக்கு செண்பகராமனோட கடைசி ஆசையை நிறைவேத்தனும்ன மனசுவந்திருக்கு.. செண்பகராம்னின் அஸ்தியை கரமனை ஆத்தில கரைச்சுட்டு மீதியை நாஞ்சில் வயல்களில தெளித்தாங்க.."

அம்பிகாவின் முகத்தில் சோகம் ததும்பியது..



16

அடிமைச் சங்கிலி பிணைத்திருப்பது..
அன்னை தேசத்தை மட்டுமல்ல..
அத்தேசத்தில் பிறந்த பெண்களையும்தான்..

விழியை இமை அறியாதா..? தாமரையின் வரவை ஆதவன் அறிய மாட்டானா..? அவளின் பாதக் கொழு சொலியை இனம் பிரித்துக் காண அவனால் மட்டுமே முடியும்..

'இது தாமரையின் கொழுசுச் சத்தம்தான்..'

அவன் மனம் அடித்துச் சொன்னது பொய்யாகப் போய் விடவில்லை.. மெதுவான நடையுடன் தாமரைதான் அங்கே வந்து கொண்டிருந்தாள்..

'என்னைத் தேடி வர்றாளா..?'

ஆதவன் பரபரப்பாக எழுந்து உட்கார்ந்தான்.. ரகு கூறியதோ.. காத்தவராயனின் முறைப்போ.. ரகசியக் கூட்டத்திலிருந்து அவன் விலக்கப் பட்டதோ.. அந்த நொடியில் அவன் மனதில் இல்லை..

அனைத்துக் குமுறல்களையும் விரட்டிவிட்டு அவன் மனதை தாமரையே ஆக்ரமித்திருந்தாள்..

'என் தாமரை..!'

அவனுடைய உடலும் மனமும் தேடலில் தகிக்க ஆரம்பித்தது.. அவளை அவன் வரச் சொல்லவேயில்லை என்பது தோதாக அவனுக்கு மறந்து போய் விட்டது.. அவன் ஊருக்குள் வந்துவிட்ட விவரம் அவளுக்குத் தெரியாது என்பதையும் அவன் வெகு எளிதாக மறந்து போய் விட்டான்..

'என்னைத் தேடித்தான் வருகிறா..'

எதிர்பார்ப்புடன் ஓர் எட்டு வைத்தவனின் கண்கள் கூர்மையாகின.. தாமரை வழக்கமான பாவாடை தாவணியில் இல்லாமல் பட்டுப்புடவையில் சர்வாலங்கார பூஷிதையாக வந்து கொண்டிருந்தாள்.. நீண்ட அவளுடைய கூந்தலைப் பின்னலிட்டு.. அதில் தாழம்பூவையும், மல்லிகையையும் இணைத்துத் தைத்திருந்தாள்.. கைகளில் வளையகள் குழுங்கின.. ரவிக்கையின் கைப்பகுதியை வங்கி அலங்கரித்தது.. இடுப்பில் ஒட்டியானம்.. காதுகளில் ஜிமிக்கி.. கழுத்தில் அட்டிகை.. நெற்றியில் நெத்திச் சுட்டியென்று.. மணப்பெண் போல தோற்றமளித்தாள்..

'எப்பவும் இப்படி அலங்காரம் பண்ணிக்க மாட்டாளே..' ஆதவனின் புருவங்கள் உயர்ந்தன..

ஆற்றங்கரையில் அந்தி மயங்கி இருள் பரவும் பொழுதில்.. யாருமற்ற நாணல்கள் அடர்ந்த பகுதிக்கு.. காதலனைச் சந்திக்க வருபவள் இதுபோல மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதைப் போலவா அலங்காரம் செய்து கொண்டு வருவாள்..?

அதுவும்.. அந்தக் காதலன் ஊருக்குள் திரும்பி விட்டானா இல்லையா என்று தெரியாமலே.. அவன் வரச்சொல்லாமலே.. அவனைத் தேடிக் கொண்டு வருகிறவள்.. இப்படியா பட்டும்.. தங்க நகைகளுமாக பவனி வருவாள்..?

'ஒருவேளை.. வீட்டுக்குத் தெரியாமல் ஓடிப் போய் கல்யாணம் பண்ணிக்கலாம் வாடான்னு சொல்ல வருகிறாளோ..?'

அப்படித்தான் இருக்குமென்று நினைத்தான் ஆதவன்.. தாமரையின் அம்மாவுக்கு வேறு இடத்தில் பெண்ணைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று தோன்றி விட்டது.. அந்தப் பேச்சு வழுத்திருக்கலாம்.. கல்யாணமாகாமல் வீட்டில் இருந்தால்தானே இந்தப் பிரச்னை என்று தாமரை வீட்டிற்குத் தெரியாமல் ஆதவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் முடிவை எடுத்திருக்கலாம்.. ஆதவன் வீட்டிற்குத் திரும்பி விட்ட செய்தியை செவ்வந்தி மூலமாக அறிந்திருக்கலாம்.. அதனால் வீட்டை விட்டு வெளியேறி வந்திருக்கலாம்..

அளவு கடந்த காதல் சந்தேகம் கொள்ளாது.. குற்றமிருந்தாலும் அதற்கான நியாயங்களைத் தேடி அலையும்.. நியாயங்கள் கிட்டாமல் போனாலும் அக்குற்றங்களுடனே காதலை ஏற்றுக் கொள்ளத் துடிக்கும்..

ஆதவனும் அது போலத்தான்.. தாமரையின் வரவு அவனுக்கானது என்று திடமாக நம்பினான்.. ரகுவும், காத்தவராயனும் வேறு எவரையோ பார்த்து விட்டு உளருகிறார்கள்.. ராபர்ட்டிற்கு உளவுத் துறை தகவல் சொல்லியிருக்கும்.. அதனால்தான் அவன் கட்டுக் காவலுடன் காத்திருந்தான்.. ஆதவனின் தாமரை ஓர்நாளும் அவனுக்குத் துரோகம் செய்ய மாட்டாள்.. இதோ.. பெற்றவர்களை மீறி.. அவனைத் தேடி வந்து கொண்டிருக்கிறாள்..

இரு கைகளையும் விரித்தான் ஆதவன்.. தாமரையை அணைக்கத் தோதாக கால்களை ஆற்று மணலில் ஊன்றிப் பதித்து காத்து நின்றான்.. இருள் பரவ ஆரம்பித்திருந்தது.. அவன் அங்கு நிற்பதை உணர்ந்தவளாய் வருகிறாள்

என்ற நினைவில் நாணல்கள் அடர்ந்த பகுதியில் நின்று கொண்டிருந்தவனை கண்டு கொள்ளாமல் சற்றுத் தொலைவிலேயே அவள் நின்று விட்டாள்.. யாரையோ எதிர்பார்த்து காத்திருப்பவளைப் போல ஆற்றங்கரையை ஒட்டிய பாதையில் அவள் பார்வை பதட்டத்துடன் படிந்திருந்தது..

'நான் வருலேன்னு காத்திருக்கா போல..'

ஆதவன் அதற்கும் ஒரு அர்த்தத்தைக் கற்பித்தான்..

'இங்கே இருக்கேன் தாமரை..!'

கூவ வாயெடுத்தவனின் குரல் தொண்டையை விட்டு வெளியேறவில்லை.. தாமரையின் உடல் விரைத்தது.. அவள் எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் வந்து விட்டதைப் போல அவள் முகத்தில் பதட்டம் குறைந்தது.. ஆனால் முகம் இறுகியது..

அவளது செய்கைகள் விசித்திரமானவைகளாக இருந்தன.. கொட்டும் அருவி போல.. துள்ளியோடும் மான்குட்டி போல.. கட்டுக்களற்று விளையாடும் பசுங்கன்றைப் போல இருந்தவள்.. வடித்து வைக்கப்பட்ட சிலை போல முகத்தில் எந்தவித உணர்வுகளையும் பிரதிபலிக்காமல் அசைவற்று நின்றாள்.. தூரத்தில் மோட்டார்கார் வந்து கொண்டிருந்தது.. ஒளியைப் பாய்ச்சி வந்த கார் வரும் பாதையைக் கவனித்த ஆதவனின் உடலுக்குள் ஆயிரம் தோட்டாக்கள் பாய்ந்ததைப் போல இருந்தது..

அந்தக் கார்.. ராபர்ட்டின் கார்..!

ஆதவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.. அவன் ஸ்தம்பித்தான்.. ராபர்ட்

தாமரையைப் பார்க்க வருகிறானா..? தாமரையும் அவனுக்காக ஆற்றங்கரைக்கு வந்து காத்திருக்கிறாளா..?

'இது எப்படி சாத்தியம்..?'

இதே ஆற்றங்கரையில்.. இதே மணலில்.. மூன்று தினங்களுக்கு முன் அவனுடன் கூடாமல் கூடிய அவனுடைய காதலி.. எவனோ ஒரு வெள்ளையனுக்காக இருட்டும் வேளையில் காத்திருக்கிறாளா..?

"முட்டாள்..!"

ரகுவும், காத்தவராயனும் அவனைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிப்பதைப் போல இருந்தது..

"காட்டிக் கொடுத்தது உன் தாமரைதாண்டா.." காத்தவராயனின் உறுமல் ஆதவனின் காதுகளில் எதிரொலித்தது.

தணிகாசலமும், தனஞ்ஜெயனும் தீவிரவாதத்திற்கு எதிரானவர்கள்.. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல... காந்தியம் பேசி உப்புச் சத்யாக்கிரகம் பண்ணியவர் தணிகாசலம்.. தனஞ்ஜெயனோ காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பின்பற்றி.. பிரிட்டிஷ் அரசாங்கம் தந்த உயர்ந்த பதவியைத் துறந்தவன்..

அவர்கள் வீட்டுப் பெண்ணா ஒரு வெள்ளைக் காரனைப் பார்ப்பதற்காக அந்திப்பொழுது கடந்த வேளையில் ஆற்றங்கரையில் வந்து நிற்கிறாள்..?

கார் நெருங்கி விட்டது.. கண்கள் இடுங்க ஆதவன் பின்னுக்கு நகர்ந்தான்.. கை முஷ்டியை மடக்கி பொங்கி வந்த ஆத்திரத்தைக் கட்டுப் படுத்த முயன்றான்..

தாமரையை கண்டந் துண்டமாக வெட்டிப் போட்டுவிட வேண்டும் என்ற ஆத்திரம் கட்டுக்கடங்காமல் அவனுக்குள் பெருகியது..

'இவ மட்டும் அவன் பின்னாடி போகனும்ஸ்ரு ஒரு எட்டு எடுத்து வைக்கட்டும்.. ரெண்டு பேருக்கும் சங்கூதி இந்த ஆத்து மணல்லேயே புதைச்சு சமாதி கட்டிடறேன்..' மனதுக்குள் கருவினான்..

'டேய் பரங்கிப்பயலே..! நேத்துத் தப்பிச்சவன் இன்னைக்குத் தனியா மாட்டிக்க வர்றயா..? உன்னப் பொலி போட்டு.. என்னைச் சந்தேகப் பட்டவங்க முன்னாடி போயி நின்று பகை ரூடிச்சிட்டு வந்திருக்கேன் பாருங்கடான்னு சொல்லிக்கறேன்.. வாடா..' வெஞ்சினத்துடன் காத்திருந்தான் ஆதவன்..

தாமரையின் அருகில் வந்து நின்ற காரை ராபர்ட்டே ஓட்டிக் கொண்டு வந்திருந்தான்..

'டிரைவர் வந்தா இடைஞ்சல்ன்னு நினைச்சிட்டான் போல..' ஆதவனின் ரத்தம் கொதித்தது...

காத்திருந்தவன் காதலியை பிழைக்க வந்து நாட்டை அடிமைப் படுத்திய வெள்ளைக்காரன் அபகரித்துக் கொண்டு போக நினைத்தால் ஆதவன் அதை விரலைச் சுவைத்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பானா..?

கொலைவெறியுடன் ஓர் எட்டு வைத்தவனின் பார்வை கூர்மையானது.. ராபர்ட் காரின் பின்பக்கத் கத்வைத் திறந்தான்.. ஆதவன் தேங்கி நின்று அது யாரென்று பார்த்தான்..

'காருக்குள்ள இவன் மட்டும் இல்லையா..? கூட வந்திருக்கிறது யாரா இருக்கும்..? டிரைவரையே வேணாம்ன்னு சொல்லிட்டு வந்தவன் துணைக்கு யாரைக் கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கான்..? இவனுக எல்லாம் காவலுக்கு ஆள் இல்லாம எங்கேயும் வர மாட்டானுகளே..'

இகழ்ச்சியுடன் உதட்டை மடித்துக் கடித்தபடி ராபர்ட்டின் காவல் வீரனைப் பார்த்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது..

அந்தக் காவல்வீரன் வேறு யாருமல்ல.. ராபர்டைப் பெற்றெடுத்த தாய் ஜோசபின்தான்..

'இதென்னடா கூத்தா இருக்கு.. அம்மாவைக் கூப்பிட்டுக்கிட்டு தாமரையைப் பார்க்க வந்திருக்கிறானா..?'

ஆதவனின் புருவங்கள் முடிச்சிட்டன.. எது எப்படியிருந்த போதிலும் ராபர்ட் தனியாக தாமரையைச் சந்திக்கவராமல் தாயுடன் வந்திருக்கிறான் என்பதில் ஏதோ ஒரு வகையில் கொந்தளித்த அவன் கோபம் சமன் பட்டது.. பின்னால் நகர்ந்தான்.. இருளும் நாணல் புதர்களும் அவனை முழுமையாக மறைத்தன.. அவன் நின்றிருந்த இடத்திலிருந்து தாமரையையும் மற்றவர்களையும் அவனால் கவனிக்க முடிந்தது.. அவர்களின் பேச்சு தெளிவாக அவன் காதுகளில் விழுந்தது..

ஆதவனின் பார்வை கூர்மையானது.. இருள் கலந்த நிலவின் வெளிச்சத்தில் அவன் அவர்களைக் கூர்ந்து பார்த்தான்..

ராபர்ட்டின் முகத்தில் சந்தோசம் பொங்கிக் கொண்டிருந்தது.. எதனால் அப்படியொரு சந்தோசம்

அவன் முகத்தில் தளும்பிக் கொண்டிருக்கிறது என்று ஆதவன் யோசித்தான்..

அவனது தனம் நிறைந்த பாரதத்தின் செல்வங்களைக் கொள்ளையடித்து அடிமைப் படுத்தி வைத்திருப்பதினால் அந்த சந்தோசம் பொங்குகிறதா..?

ராபர்ட்டின் சந்தோசம் அந்த வகையைச் சேர்ந்ததாக ஆதவனுக்குத் தோன்றவில்லை.. அது தனிப்பட்டதொரு சந்தோசமாக இருந்தது..

“மம்மி.. திஸ் இஸ் தாமரை..!”

அவன் பெருமையுடன் தாமரையைக் காட்டினான் ஆதவன் பல்லைக் கடித்தான்..

‘தாமரை குளத்தில இருக்கும்டா பரங்கித் தலையா..! ஆத்தங்கரையோரமா இருக்காது..’

இதை ராபர்ட்டிடம் யார் சொல்வது..? ஆதவன் சொல்லத் தயாராகத்தான் இருந்தான்.. அதையும் தாண்டி ராபர்ட்டைக் கொன்று கூரு போட்டு விடவும் துடித்தான்.. ஆனால்.. நடந்து கொண்டிருப்பது என்னவென்று அறியாமல் அவன் ராபர்ட்டைக் கூரு போட்டு என்ன ஆகப் போகிறது..?

தாமரையைத் தேடி ராபர்ட் வந்திருக்கிறான்.. அவன் வருகைக்காக ஆற்றங்கரைக்கு வந்து நின்று தாமரை காத்திருக்கிறாள் என்றால் குற்றவாளி ராபர்ட் மட்டும் தானா..?

அந்த இருள் படலத்திலும் ஒன்றை அவனால் உணர முடிந்தது.. ராபர்ட்டின் முகத்தில் தெரிந்த சந்தோசத்தின்

சாயல் ஜோசபினிடம் இல்லை.. மருந்துக்கும் சிரிக்காமல் அவள் தாமரையை உற்றுப் பார்த்தாள்..

"நீங்கள் கேட்டிர்களே.. ஒரு இந்தியப் பெண் உன்னை எப்படிக் காதலிப்பாள் என்று.. இவள் என்னைக் காதலிக்கிறாள்.."

ஆங்கிலத்தில் சொன்னான் ராபர்ட்.. அடங்கியிருந்த ஆதவனின் சினம் தளையை அறுக்க முனைந்தது.. விழிகள் சிவக்க அவன் ராபர்ட்டின் மேல் பாயத் தயாரானாள்..

"உன் காதலை ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்று கூறு மகனே..!"

ஜோசபினின் வார்த்தைகள் ஆதவனைத் தடுத்து நிறுத்தின..

"இரண்டும் ஒன்றுதானே அம்மா.."

"இல்லை மகனே.. இரண்டும் வேறு வேறு.."

"நீங்கள் சொல்வதைப் போலவே இருக்கட்டும்.. எனக்கு அதில் ஆட்சேபனை எதுவும் இல்லை.. தாமரையை விரும்புகிறேன் என்று சொன்னேன்.. அவள் உன்னை விரும்புவாளா என்று கேட்டீர்கள்.. இதோ தாமரை உங்கள் முன்னால் நிற்கிறாள்.. நீங்களே அவளிடம் கேளுங்கள்.. உங்களது சந்தேகங்களைத் தெளிவு படுத்திக் கொள்ளுங்கள்.."

"இவளுக்கு ஆங்கிலம் தெரியுமா..?"

"தெரியாது.."

"எனக்குத் தமிழ் பேசத் தெரியாது.. அப்படியிருக்க எப்படி நான் இவளிடம் பேசுவது..?"

"நான் மொழி பெயர்க்கிறேன்.."

"வாழ்நாள் முழுவதும் எனக்கும் அவளுக்கும் இடையே மொழி பெயர்ப்பாளனாக இருக்கப் போகிறாயா..? அது நடக்கின்ற காரியமா..? உன்னிடம் பேச முடியாத சில விவரங்களை அவளிடம் பேச நான் நினைக்கலாம்.. உன்னிடம் பகிர்ந்து கொள்ள இயலாத சில விவரங்களை என்னிடம் பகிர்ந்து கொள்ள அவள் விரும்பலாம்.. மொழி பெயர்ப்பாளனாக நீ உடனிருக்கும்போது எவ்வகையில் அது சாத்தியமாகும் மகனே..?"

உதட்டை மடித்துக் கடித்து.. புருவங்கள் சுருக்கி.. ஜோசபின் பேசுவதை மிகக் கூர்மையாக செவி மடுத்தான் ஆதவன்.. ராபர்ட்டின் செய்கையில் ஜோசபினுக்கு விருப்பமில்லை என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது..

"உங்களுக்கு கொஞ்சம் தமிழ்தெரியும்.."

"கொஞ்சும் கொஞ்சும் தெரியுது.. ஆனால் மகனே..! அவளுக்கு அது கூடத் தெரியாது என்று சொல்கிறாயே.."

"உங்களுக்கு மட்டும் இங்கிலாந்தில் இருக்கும் போது இந்தக் கொஞ்சும் கொஞ்சும் தமிழ் தெரிந்திருந்ததா..?"

"இல்லை.. அதற்குத்தான் அவசியம் இல்லையே.."

"அதுவேதான்.. தாமரைக்கும் ஆங்கிலத்தில் பேச வேண்டிய அவசியம் இதுவரைக்கும் இல்லாமல் இருந்தது.. நம்முடன் இங்கிலாந்துக்கு வந்து விட்டால் அதற்கான அவசியம் ஏற்பட்டு விடும்.. அவள் கற்றுக் கொள்வாள்.. நான் கற்றுக் கொடுப்பேன்.."

"மொழியைக் கற்றுக் கொடுப்பாய்.. உடையணியும் பாணியை எப்படி மாற்றுவாய்..? பார்த்தாயா.. தாமரை

இந்தியப் பெண்களின் கலாச்சாரத்தில் உடையணிந்து வந்திருக்கிறாள்.. இவளை கவுன் அணியச் சொல்வாயா..? நீண்ட கூந்தலைப் பின்னிப் பூவைத்திருக்கிறாள்.. இந்தக் கூந்தலை வெட்டிக் குட்டை முடியாக்கி தோள் வரை விரிய விடச் சொல்வாயா..? கழுத்து.. காது.. கை.. என்று உடல் முழுவதும் நகைகளைப் பூட்டியிருக்கிறாள்.. இவற்றைப் போடக் கூடாது என்று சொல்வாயா..? இந்துக்களின் கோவிலை மறந்து விட்டு சர்ச்சுக்கு வரச்சொல்வாயா..? வீட்டை விட்டு வெளியே வராமல் வளர்ந்த பெண்ணை நம் பக்கத்து விருந்துகளில் கை கோர்த்து நடனமாடச் சொல்வாயா..? வணக்கம் என்று கை குவிக்கக் கூட அஞ்சி கதவின் பின்னால் மறைந்து நிற்பவளை ஆண்களிடம் கை கொடுக்கச் சொல்லிப் பழக்குவாயா..? எதைச் செய்வாய் ராபர்ட்..? இந்தியப் பெண்ணை இங்கிலாந்தின் மருமகளாக்க நினைக்கிறாயே.. அவள் இதை ஒப்புக் கொண்டு உன்னுடன் வந்து விடுவாளா..?"

"வருவாள் அம்மா.."

ராபர்ட்டின் குரலில் தெரிந்த உறுதியில் ஆதவனின் இதயம் வலித்தது.. எப்படிப்பட்ட வலி அது...! அவனுடைய காதலி ராபர்ட்டுடன் நாட்டை விட்டுச் சென்று விடுவாள் என்பதில் ராபர்ட் கொண்டிருக்கும் உறுதியை ஆதவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. கடப்பாரையைக் கொண்டு யாரோ ஆதவனின் இதயத்தைப் பிளப்பதைப் போலவே இருந்தது...

"நீ இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக வேலை பார்க்கிறாய் ராபர்ட்... அதிகாரம் மிக்க வேலை.. இதை உதறிவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பப் போகிறாயா..?"

"ஆம்.. இங்கே தாமரையுடன் நிம்மதியாக வாழ முடியாது..."

"தாமரையைச் சேர்ந்தவர்கள் அவளைக் கொன்று புதைத்து விடுவார்கள்.. அதனால் நீ அவளை அழைத்துக் கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று விட நினைக்கிறாய்.. ஆனால் மகனே...! அவர்கள் அங்கும் அவளைத் தேடி வரமாட்டார்களா..? நான் விவரம் சேகரித்து விட்டேன்.. தாமரையின் தந்தை விவசாயியாக இருக்கலாம்.. ஆனால் அவர் படித்தவர்.. தாமரையின் அண்ணன் லண்டனில் படித்துப் பட்டம் வாங்கியிருக்கிறான்.. தாமரையின் சித்தப்பாவோ இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவராம்.. உலகம் சுற்றும் சுபாஷ் சந்திர போஸின் உதவியாளராம்.. இத்தனைக்கும் மேலாக தாமரைக்கு ஓர் காதலன் இருக்கிறானாமே...? அவன் சுபாஷ் சந்திர போஸின் மறு உருவமாமே..? தாமரையின் அண்ணனுடன் இவனும் லண்டனில் படித்திருக்கிறான்.. சுபாஷ் சந்திர போஸின் நிழலாக தொடர்ந்து கொண்டிருக்கிறான்.. காற்றுக்கூட நுழைய முடியாத கலெக்டரின் தோட்ட பங்களாவின் இவன் நுழைந்து விட்டானாமே... உன்னுடன் ஆயதம் தாங்கிய வீரர்கள் இருந்ததால் அன்று நீ தப்பித்தாய்... என்றும் அதுபோல தப்பித்து விட முடியுமா..? தாமரையைக் கடத்திக் கொண்டு இங்கிலாந்துக்கு என்ன.. உலகின் எந்த மூலைக்கு நீ சென்றாலும் உன்னைத் தேடி அவன் அங்கு வருவான் மகனே...! வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு.. உனக்காக உன் கேத்தரின் இங்கிலாந்தில் காத்திருக்கிறாள்.."

"தாமரைதான் என் காதலி அம்மா... வருங்கால மனைவி..."

ஜோசபின் நெடுமூச்செரிந்தாள்... எவருக்கு வந்த விருந்தோ என்று தாய்க்கும் மகனுக்குமான உரையாடலை செவி மடுக்காமல் ஆற்றுநீரின் சுழல்களை வெறித்துக் கொண்டிருந்த தாமரையைப் பார்த்தாள்.. அவள் முகத்தில் கவிந்திருந்த துயரத்தில் ஜோசபினின் இதயம் துடித்தது.. இறக்கை வெட்டப்பட்ட கிளியின் தவிப்பைத் தாமரையின் கண்களில் ஜோசபின் கண்டாள்..

'பாவம்...' அவளது இதயம் தாமரைக்காக வருந்தியது.

"ஹலோ...." என்றாள்..

ஆற்றை வெறித்துக் கொண்டிருந்த தாமரையிடம் அசைவில்லை... ராபர்ட் கோபம் கொண்டான்.. தாமரையை அதட்டினான்..

"தாமரை...!"

அவனது கோபக் குரலில் உலுக்கி விட்டவளைப் போல திரும்பிப் பார்த்த தாமரை மலங்க மலங்க விழித்தாள்.

"அவளை மிரட்டாதே ராபர்ட்..." கண்டனம் தெரிவித்தாள் ஜோசபின்...

"பின்னே என்னம்மா.. உங்களைச் சந்திக்க வரச் சொன்னேன்.. வரும்போது அழகாக உடுத்திக் கொண்டு வா.. இல்லாவிட்டால் என் அம்மா உன்னை வற்புறுத்தி சம்மதிக்க வைத்திருக்கிறேன்னு நினைப்பாங்கன்னு சொன்னேன்... இவள் என்னடான்னா இந்தியப் பெண்கள் நகைகளைப் பூட்டிக் கொள்வதைப் போல பூட்டிக் கொண்டு வந்திருக்கிறாள்.. நீங்கள் அதையே ஒரு

குற்றமாகச் சொல்கிறீர்கள்.. ஹலோன்னு நீங்க கூப்பிட்டால் அது காதில் விழுகாமல் ஆற்றைப் பார்த்துக்கிட்டு இருக்கிறாள்.. எனக்கு கோபம் வராதா...?"


"வரலாம்.. ஆனால் அந்தக் கோபம் நியாயமில்லாத கோபம் மகனே..."

ஜோசபின் தாமரையின் கன்னம் தொட்டாள்.. கூச்சத்துடன் தாமரை பின்னால் நகர்ந்து கொள்ள..

"இதுதான் இந்தியப் பெண்கள்..." என்று ராபர்ட்டிடம் சொன்னாள் ஜோசபின்..

ராபர்ட் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.. ஜோசபின் ஏதோ கேட்டாள்.. தாமரை விழித்தாள்.. ராபர்ட் மொழி பெயர்த்தான்.. தயக்கத்துடன் தாமரை பதில் சொன்னாள்.. ராபர்ட்டும், ஜோசபினும் கிளம்பி விட்டார்கள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



16

நினைத்துப் பார்க்கையில்
நெஞ்சம் குலுங்குது....

அன்று முழுவதும் பெற்றவர்களுடன் இருந்தான் தாமோதரன்.. மாலையில் குடும்பமாக அவர்கள் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்குச் சென்றார்கள்.. அம்பாளையும், ஈஸ்வரனையும் தரிசனம் செய்துவிட்டு, தீபாதரனை ஒளியைத் தொட்டுக் கண்களில் ஒற்றி

குங்கும, விபூதி பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு சன்னதியை வலம் வந்தார்கள்..

தாமோதரன் அம்பிகாவுடன் சன்னக்குரலில் பேசிக் கொண்டே வந்தான்.. தாய்க்கும் மகனுக்குமான அந்தப் பிணைப்பில் ஈசுவரன் பொறாமைப்பட்டார்.. அவரிடம் மட்டும் ஏன் அவன் இந்த நெருக்கத்தைக் காண்பிக்க மாட்டேன் என்கிறான்...?

அவர்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தவர் களில் ஒரு பெண்மணி யதேச்சையாகத் திரும்பிப் பார்த்து விட்டு...

"தாமு..." என்றபடி நின்று விட்டாள்..

அம்பிகாவுடன் ரகசியம் பேசி உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்த தாமோதரன் அந்தப் பெண்மணியைக் கவனிக்கவில்லை...

'எனக்குத் தெரியாம இதுக மட்டும் ரகசியம் பேசிச் சிரிக்குதுக..' ஈஸ்வரனுக்கு கோபமான கோபம் வந்தது...

"தாமு...." உரத்த குரலில் அதட்டினார்..

அந்த அதட்டல் அந்தப் பெண்மணியின் அழைப்பை தாமோதரன் கவனிக்கவில்லை என்பதற்கானதல்ல என்பதை அவரின் ஆழ்மனமே அறியும்...

அவரின் அதட்டலில் தடபுடா என்று தாமோதரன் திரும்பிப் பார்த்து விடவில்லை.. அம்மாவுடனான ஆழ்ந்த உரையாடலை சன்னக் குரலில் பேசி முடித்து விட்டு... அதற்கு முத்தாய்ப்பாக உரத்த குரலில் சிரித்தும் வைத்து விட்டு வெகு சாவாதானமாக திரும்பி..

"என்னப்பா...?" என்றான்..

'எதுக்கு இப்படிச் சிரிக்கிறான்..?'

அதன் காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்று தலை முடியைப் பிய்த்துக் கொண்டார் ஈசுவரன்.. மகனிடம் அதைக் கேட்டு விடவும் அவரது சுயமரியாதை இடம் கொடுக்கவில்லை.. அவரையே ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை.. அந்த ஆட்டத்தைப் பற்றிக் கேட்க முடியுமா...?

"அங்கே பாருடா... யாரு உன்னைக் கூப்பிடறாங்கன்னு.."

தாமோதரனை அழைத்தபடி நின்றிருந்த பெண்மணியைச் சுட்டிக் காட்டினார் ஈசுவரன்...

தகப்பனார் சொல்கிறார் என்பதற்காகவே எவருக்கு வந்த விருந்தோ என்று பொன்னே.. பூவே என்று மிக மெதுவாக கழுத்தைத் திருப்பிப் பார்த்த தாமோதரன்..

"ஆண்ட்டி..." என்று முக மலர்ச்சியுடன் கூவினான்..

'அம்மான்னாலும் சரி.. ஆண்ட்டின்னாலும் சரி.. சித்தம்தான்.. அப்பான்னா மட்டும் பயல் ஊமை வேசம் கட்டறான்...' மனதுக்குள் குமைந்தார் ஈசுவரன்..

தாமோதரன் இரண்டே எட்டில் கூப்பிட்ட பெண்மணியை அணுகி அவள் பாதம் தொட்டு நிமிர...

"இந்தப் பதவிச நம்மகிட்டக் காட்டறானாடி...?" அம்பிகாவிடம் ஈசுவரன் கேட்க.. அவரை காட்டமாக முறைத்தாள் அம்பிகா..

'மகனைச் சொன்னா இவ உக்கிர காளியாகிருவாளே..'

"பேசாம இருங்க.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. கோவிலாச்சேன்னு பாக்கறேன்.. யாருங்க அவங்க..?"

"சித்தார்த்தனோட அம்மா நிருபமா...!"

"தெரியுதில்ல.. அவங்ககிட்ட இன்னைக்கு நேத்தா அவன் மரியாதை காட்டறான்.. விவரம் தெரிந்த வயசில இருந்து மரியாதையாத்தானே பேசிப் பழகறான்...?"

ஈசுவரன் வாயை மூடிக் கொண்டார்.. அம்பிகா மரியாதையான சிரிப்புடன் நிருபமாவை அணுகினாள்..

"நல்லா இருக்கீங்களா..?" என்று நலம் விசாரித்தாள்..

"ரொம்ப நல்லா இருக்கோம்.. நீங்க எப்படி இருக்கீங்க..?"

"உங்களைப் போலச் சொல்ல எனக்கும் ஆசைதான்.. என்ன பண்றது..? சொல்ல முடியலையே.. நான் வாங்கி வந்த வரம் அப்படி..."

ஈசுவரனை முறைத்தபடி சொன்னாள் அம்பிகா.. அதை கண்டு கொள்ளாமல் சிரித்தாள் நிருபமா..

"தனியாவா வந்திருக்கீங்க ஆண்ட்டி..?"

"இல்லே தாமு.. நீரஜாவும் அவளோட டாடியும் வந்திருக்காங்க..."

நிருபமா கை தட்டியதில் விவேகானந்தனும் நீரஜாவும் திரும்பிப் பார்த்தார்கள்.. தாமோதரனின் இதயம் 'லப் டப்' என்று அடித்துக் கொண்டது.. பக்கத்தில் இருப்பவர்களை மறந்து 'பறக்காவெட்டி' போல அவன் நீரஜாவைப் பார்த்து வைக்க.. ஆழ்ந்த பார்வையுடன் அருகில் வந்தாள் நீரஜா..

"என்னம்மா கோவிலுக்கு வந்தியா..?" அபத்தமாக வினவி வைத்தார் ஈசுவரன்..

"இல்ல அங்கிள்... லைப்ரரிக்கு வந்தேன்..." சிரிக்காமல் பதில் சொன்னாள் நீரஜா..

'இவனோட சிநேகிதன் கூடப்பிறந்தது எப்படியிருக்கும்..? இவனைப் போலதானே இருக்கும்..?' அதற்கும் மகன் மீது குற்றம் கண்டு பிடித்தார் ஈசுவரன்.

விவேகானந்தன் சித்தார்த்தனின் கம்பெனி நிலவரத்தை விசாரிக்க ஆரம்பித்தார்.. அவர் கேட்ட விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்து சமர்ப்பித்த தாமோதரனை சிலாகித்து பார்த்து வைத்தாள் நீரஜா..



17

சத்தியத்தின் மக்களை சூது வந்து கவர்வதோ...?

தொலைவில் மறைந்த வெளிச்ச புள்ளிகளைப் பார்த்தபடி அசையாமல் நின்ற தாமரையை சப்தமில்லாமல் அணுகினான் ஆதவன்.. நீண்ட பெருமூச்சுடன் திரும்பிய தாமரை அவன் மீது மோதி அலறப் போனாள்...

"கத்தாதே..."

அவள் வாய் பொத்திய ஆதவனின் கையின் இறுக்கத்தில் தாமரையின் பற்கள் நொறுங்கவா என்று பயத்துடன் கேட்டன..

அகப்பட்டுக் கொண்டவளாய் அச்சத்துடன் விழித்த அவள் விழிகளில் அப்பட்டமான பயம் தெரிந்தது.. அந்த பயத்தில் ஆதவனின் கோபம் அதிகரித்தது.

யாரிடம் யார் பயம் கொள்வது..? அவனிடம் தாமரை பயம் கொள்வதா..? ஏன்..?

அது நாள்வரை அவனைக் கண்டதும் அவள் விழிகளில் காதல் உதிப்பதைத்தான் அவன் பார்த்திருக்

கிறான்.. அன்றுதான் அவனைக் கண்டு அவள் அச்சப் படுவதை முதன் முறையாகப் பார்க்கிறான்..

"ஏன்டி..?"

அந்த ஒற்றைக் கேள்வியில் தாமரையின் உயிர் துடித்தது.. ஆதவனின் கை அவள் வாயை விட்டு அகன்று கழுத்தில் படிந்தது.. தொண்டைக் குழியில் அவன் விரல்கள் அழுந்தியதில் மூச்சுத் திணறிய தாமரையின் கைகள் பற்றுக் கோலைத் தேடி ஆதவனின் கைகளையே இறுக்கிப் பிடித்தன.. அவளது விரல்களின் ஸ்பரிசத்தில்..

"பாவி.." என்று அவளை ஆற்றங்கரையின் மணல் மேட்டில் தள்ளி விட்டான் ஆதவன்..

உருண்ட தாமரை.. உடல் நடுங்க எழுந்து உட்கார்ந்தாள்.. அவள் பக்கத்தில் மண்டியிட்ட ஆதவன் அவள் முடியைப் பிடித்து உலுக்கினான்..

"வெள்ளைக்காரனை விரட்ட நினைக்கிற வீட்டில எப்படி டீ நீ பிறந்த..? என் காது கேட்க அவன் அம்மா கிட்ட இவதான் என் காதலின்னு உன்னைக் காட்டறான்.. நீயும் அசையாம நெடுமரம் போல நிக்கிற.. உன்னை வெட்டிப் போட்டாலும் என் கோபம் அடங்காதுடி.. எங்கேயிருந்துடி உனக்கு இப்படியொரு புத்தி வந்துச்சு..? உனக்கும் எனக்கும் கல்யாணம்தான் நடக்கலை.. முதலிரவுதான் கொண்டாடலை.. மத்தபடி உனக்கு நான் புருசன்.. எனக்கு நீ பெண்டாட்டின்னுதானேடி இத்தனை நாளா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்.. இடையிலே எங்கேயிருந்துடி இந்த வெள்ளைக்காரன் முளைச்சு வந்தான்..?"

"அத்தான்..."

"அத்தானா...? நான் உனக்கு அத்தானா..? அப்படின்னா.. அந்த வெள்ளைக்காரன் உனக்கு யாருடி...?"

தாமரை விசும்பினாள்.. கலைந்த கூந்தலும்.. ஆற்று மணல் படிந்த சேலையுமாக தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.. கண்ணீர் கொட்டிக் கொண்டிருக்க அடி பட்ட பறவையின் உயிர்த் துடிப்போடு ஆதவனிடம் மன்னிப்பை யாசித்தாள்...

"என்னை மன்னிச்சிருங்க அத்தான்..."

அந்த வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காமல் கண்களை மூடித் தலையைச் சிலுப்பினான் ஆதவன்.. அவனிடமிருந்து விலகித் தாமரை தொலதூரமாக போய் விட்டதைப் போல உணர்ந்தவனுக்கு நெஞ்சில் சூட்டுக் கோல் பட்டதைப் போல இருந்தது..

"ஏண்டி இப்படிப் பண்ணின..? எதனால இதுக்குத் துணிஞ்ச..? அவன்மேல உனக்குக் காதல்ன்னு சொன்னதை அவனைப் பெத்த அம்மாவே நம்பலைடி.. நான் எப்படி நம்புவேன்..? ஆனா.. அவன் காதலை நீ ஏற்றுக்கிட்டதை அவனோட அம்மா ஒப்புக்கிறாங்களேடி.. அது ஏன்..? அவன் காதலைச் சொன்னா நீ தலையாட்டிடுவியா..?"

"ஐயோ அத்தான்.. இது அப்படியில்லை..."

"வேற எப்படிடீ..? ஒரு தடவைக்கு ரெண்டு தடவை.. நீயும் நானும் சேர்ந்திருக்கிறதை அவன் பார்த்திருக்கான்.. நீயும் நானும் காதலிக்கிறோம்ன்னு அவனுக்கு நல்லாவே தெரியும்.. இருந்தும் உன்கிட்ட காதலைச் சொல்லியிருக்கான்னா.. வெள்ளைக்காரன் புத்தி அப்படி.. அவனுகளுக்கு

கல்யாணம்ங்கிறதும் உடனே டைவர்ஸ் பண்றதும் தண்ணி குடிக்கிறது மாதிரி.. போகிற போக்கில அத்து விட்டுட்டுப் போய்க்கிட்டே இருப்பானுக.. ஆனா நீ..? எப்படி தாமரை..?"

அவன் பேசப் பேச தாமரை விக்கித்துப் போகாமல் துயரத்துடன் அழுது கொண்டிருந்தாள்.. அதில் ஆதவனின் புருவங்கள் மேலேறின.. அவளைப் பிணைத்திருக்கும் தளை எது என்பதை அறிய அவன் துடித்தான்.. எப்போது அந்தத் தளையில் அவள் பிணைந்தாள் என்று மனம் பதைத்தான்..

"என்னடி...?"

தாமரை பதில் சொல்லவில்லை.. ஆற்றங்கரை மணலில் கால்களை மடக்கி முழங்கால்களில் தலை கவிழ்ந்து ஓர் அனாதையைப் போல அவள் அழுது கொண்டிருந்தாள்.. முகமெல்லாம் கண்ணீரால் நனைந்து போயிருந்தவளை இழுத்து மடியில் போட்டு அவளது கண்ணீரைத் துடைத்து விட அவனது கைகள் துடித்தன..

"இவள் என் காதலி...?"

ராபர்ட் சொன்ன வார்த்தைகள் காற்றில் எதிரொலித்து அவன் கைகளைக் கட்டிப் போட்டன..

ஊசிகளாய் அவன் மனதைத் துளைத்த அந்த வார்த்தைகளில்..

"என்னன்னு சொல்லித் தொலைடி..." என்று அவன் உறுமினான்..

சோர்ந்த முகத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் தாமரை.. குற்றுயிராய் துடிக்கும் பறவையின் வேதனை அவள் விழிகளில் தெரிந்தது...

"அத்தான்..." அவள் சொல்ல ஆரம்பித்தாள்..

"மூணு நாளைக்கு முன்னாடி உங்களைப் பார்க்க இதே ஆத்தங்கரைக்கு ஓடி வந்தேனே அத்தான்.."

"நினைவிருக்கு.. மறக்க முடியுமா..? நீதான் மறந்து தொலைச்சிட்ட.. என்னைத் தொலைச்சிட்டு நிக்கிற..."

"நான் உங்களைத் தொலைக்கலை அத்தான்.. அன்னைக்கு ராத்திரியில நான்தான் தொலைஞ்சு போக இருந்தேன்.. அன்னைக்கு மட்டும் நான் தொலைஞ்சு போயிருந்தா உங்களைப் பார்க்க உயிரோட வந்திருக்க மாட்டேன் அத்தான்.. என்னைப் புதைச்ச இடத்தில புல்லு முளைச்சிருக்கும்..."

"என்னடி சொல்ற..?"

"ஆமாம் அத்தான்.. உங்களைப் பார்க்கக் கூடாது.. பேசக்கூடாதுன்னு அம்மா சொல்லிட்டாங்க.. அப்பா கிட்டயும் அண்ணன்கிட்டயும் இதைப் பத்திச் சொல்லவே முடியலை.. சித்தப்பாவப் பத்திச் சொல்லவே வேணாம்.. நீங்க வீட்டுக்கு வர்றப்பவே உங்ககிட்ட நின்னு பேச விடமாட்டாரு.. ரெண்டு நாளா உங்களைப் பார்க்க முடியாம எனக்குப் பைத்தியம் பிடிச்சதைப் போல ஆகிருச்சு அத்தான்... என்கிட்டச் சொல்லாம ராணுவத்துக்குத் திரும்பிப் போயிருவீங்களோன்னு பயந்து போயிட்டேன்.. வீட்டுக்குத் தெரியாம ஆத்தங்கரைக்கு வந்தேன்.. திரும்பிப் போக மனசில்லாம உங்க கூடவே இருந்திட்டேன்.."

அந்த இரவில் நினைவில் ஆதவனின் முகம் கணிந்தது.. மனதின் பாரம் சற்றுக் குறைவதைப் போல அவன் உணர்ந்தான்..

"ஆமாம்.. அன்னைக்கு ரொம்ப நேரம் நாம ஆத்தங்கரையில இருந்திட்டோம்..."

"நம்மளத் துரத்திக்கிட்டு வந்த வெள்ளைக்காரங்க கிட்ட இருந்து நீங்க தப்பிச்சுப் போயிடனும்கிறது மட்டும் தான் என் மனசில இருந்துச்சு அத்தான்.. அவங்க கையில நீங்க மாட்டிறக் கூடாது.. அதைப் பத்தி மட்டுமே நினைச்ச நான் என்னைப் பத்தி நினைக்க மறந்திட்டேன் அத்தான்.."

"ஏய்ய்...!" ஆதவன் முகம் மாறினான்..

"அடிப்பாவி.. காட்டுக்குள்ள நாம ஓடினப்ப தனஞ்ஜெயன் அங்கே இருந்தானேடி.. அவன் உன்னைப் பார்த்துக்குவான்ங்கிற தைரியத்திலதானே உன்னை விட்டுட்டு நான் மட்டும் தப்பிச்சேன்..?"

"இல்லை அத்தான்..." ஈனஸ்வரத்தில் முணு முணுத்தாள் தாமரை..

"எதுடி இல்லை...?"

"அங்கே நின்னுக்கிட்டு இருந்தது அண்ணனில்லை.. எவனோ ஒருத்தன் வெள்ளைக்காரனுகளுக்குப் பயந்து மரத்துக்குப் பின்னாலே ஒளிஞ்சுக்கிட்டு இருந்தான்.. என்னைத் தனியா விட்டுட்டு நீங்க மட்டும் தப்பிக்க மாட்டிங்கன்னு அவனைக் காட்டி அண்ணன் அங்கே இருக்கான்னு நான் பொய் சொல்லிட்டேன் அத்தான்.."

"தாமரை..." அதிர்ந்தான் ஆதவன்..

"ஆமாம் அத்தான்.. எனக்கு வேற வழி தெரியல... துரத்திக்கிட்டு வந்த லாரன்ஸ் மகா மோசமானவன்னு சித்தப்பா ஒருநாள் சொல்லிக்கிட்டு இருந்தாரு.. ஒருதரம் குளத்தில குளிச்சுட்டு நானும், செவ்வந்தியும், வைரமும்

வந்தப்ப இந்த லாரன்ஸ் எங்களை முரட்டுத்தனமா திட்டினான்.. பெண்பிள்ளைகன்னு கூடப் பார்க்கலை.. அப்படியாப்பட்டவன் கிட்ட நீங்க மாட்டினா என்ன ஆகிறதுங்கிற பயத்திலதான் நான் அந்தப் பொய்யைச் சொல்லி உங்களைத் தப்பிக்க வைச்சேன் அத்தான்..”

“சண்டாளி..! அப்படித் தப்பிச்சு நான் உயிர் பிழைத்துத்தான் ஆகனுமா..? இப்படியொரு பொய்யைச் சொல்லி என்னை விரட்டி விட்டிருக்கயேடி.. அந்த மரத்துக்குப் பின்னால நின்ன தடியன்கிட்ட.. நான் பேசினேனேடி.. உன்னைப் பத்திரமாக கூப்பிட்டுக்கிட்டுப் போகச் சொன்னேனேடி.. அவனும் கேட்டுக்கிட்டானே.. நான் தனா இல்லைன்னு அவன் சொல்லலையேடி.. அவனால்தான் உனக்கு ஆபத்து வந்ததா...?”

“இல்லை அத்தான்.. அவனை நான் அண்ணன்னு கை காட்டினப்பவே அவன் ஓடிட்டான்... நீங்க சொன்னதைக் கேட்க அவன் அங்கே இல்லை...”

“பின்னே...?” கேட்டுக் கொண்டிருந்த ஆதவனுக்குப் புரிந்து விட்டது..

“லாரன்ஸ்..! அந்த நாய்கிட்ட நீ மாட்டிக்கிட்டயா..? கடவுளே..! இதுக்காடி உன்னை மாஞ்சு மாஞ்சு காதலிச்சேன்..? துப்பாக்கிக் குண்டுகளுக்கு மத்தியில வாழறவண்டி நான்.. சுபாஷ் சந்திர போஸோட ராணுவத்தில இருக்கிறவன்.. என்னோட காதலி ஒரு வெள்ளை நாய்கிட்ட அகப்படறதா..? இதுக்கு எனக்கு நீ விசம் வைச்சுக் கொன்றிருக்கலாமேடி...?”

“அத்தான்...”

"பேசாதே... உயிர் தப்பிப் பிழைக்கனும்னு நான் ஆசைப்பட்டேனா..? என் ராணுவம் எனக்கு அதைச் சொல்லிக்கொடுக்கலையேடி.. செய் அல்லது செத்து மடின்னுதானே சொல்லிக் கொடுத்திருக்கு.. நீயேன்டி என் வீரத்தைச் சோதிச்ச...?"

"எனக்குத் தெரியலை அத்தான்.. அவனுககிட்ட நீங்க அகப்பட்டா என்னவாகும்ன்னு யோசிச்சவளுக்கு.. நான் மாட்டிக்கிட்டா என்னாகும்ன்னு யோசிக்கத் தெரியாமல் போயிருச்சே.."

தாமரை துடித்தாள்.. அந்த நொடிகளின் நிகழ்வுக்கு அவள் மனம் திரும்பியது.. அர்த்த ராத்திரியை நெருங்கிக் கொண்டிருந்த இருட்டு வேளையில் தன்னந்தனியாக காட்டுக்குள் மாட்டிக் கொண்டவளை லாரன்ஸின் குதிரை வலம் வந்தது.. லாரன்ஸ் வெறி கொண்டவனாக உரக்கச் சிரித்தான்.. கூட இருந்தவர்களிடம் அவளைக் காட்டி ஆங்கிலத்தில் கூவினான்..

"இதோ இருக்கிறாளே.. இவள்தான் அந்த ஆதவனின் காதலி.. ஐ.என்.ஏ வைச் சேர்ந்தவன் அவன்.. நம் கண்களில் விரல் விட்டு ஆட்டுகிறவன்.. உலகப் போர் நடந்துக்கிட்டு இருக்கும்போது பொன் விளைந்த களத்தூருக்கு எதற்காக அவன் வந்தான்..? இதைத் தெரிஞ்சுக்க வேண்டிய ஜில்லாக் கலெக்டர் அமைதியாக இருக்கிறார்.. நான் அப்படி இருக்க மாட்டேன்.. இவளை என்ன நிலைமைக்கு ஆளாக்குகிறேன் என்று பார்.."

தாமரையின் தாவணியைப் பிடித்து இழுத்தான் லாரன்ஸ்.. சுற்றி வந்த குதிரையில் இருந்தவனின் கையில் தாமரையின் தாவணி சென்றுவிட.. அவள் மானம் காக்க

மரத்தின் பின்னால் மறைந்தாள்.. விட்டு விடு என்று அவனிடம் கெஞ்சினாள்.. குரூரத்துடன் குதிரையிலிருந்து குதித்தான் லாரன்ஸ்... சுற்றி நின்ற வெள்ளையர்கள் அவனைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தார்கள்..

"என்னைக் கொன்று விடு..." மன்றாடினாள் தாமரை.. லாரன்சின் கையில் இருந்த துப்பாக்கியைக் காட்டி அதைக் கொண்டு அவளைச் சுட்டு விடும்படி கெஞ்சினாள்..

"நீ சாக வேண்டும்... அந்தச் சாவு துப்பாக்கிக் குண்டினால் ஏற்படக் கூடாது.. எப்படி உன்னைக் கொல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியும்.."

லாரன்ஸின் வெறி கொண்ட பார்வை தாமரையின் உடல் மீது ஊர்ந்ததில் அவள் அருவெறுப்புக் கொண்டு..

"ச்சீ...! நாயே...!" என்று அதட்டினாள்..

"டாக் சொல்ற..? யு கால் மி டாக்..?"

லாரன்ஸ் ஆங்காரத்துடன் தாமரையைப் பிடிக்க முயன்றதில் தாமரையின் மீதமிருந்த உடைகளும் கிழிந்தன.. அவள் புதருக்குள் புகுந்து கொண்டாள்..

"டாக் என்னா செய்யும்..? கடித்துக் குதறும்.. உன்னை இந்த டாக் கடித்துக் குதறப் போகுது..."

லாரன்ஸ் புதருக்குள் நுழையப் போன போது..

"டூமில்..." என்ற சத்தம் கேட்டது..

லாரன்ஸின் நெஞ்சைத் துளைத்துக் கொண்டு பாய்ந்த துப்பாக்கியின் தோட்டாவில் ரத்தம் கொட்ட் அவன் சரிந்து விழுந்தான்.. சுற்றியிருந்த குதிரைகளில் இருந்த வெள்ளைக்கார சிப்பாய்கள் துப்பாக்கி வெடித்த திசையை நோக்கித் குதிரைகளைத் திருப்பினார்கள்..

அங்கே ராபர்ட் நின்றிருந்தான்..!

“நான் சாவைத்தான் கேட்டேன் அத்தான்.. என்னைக் கொன்னுருடா பாவின்னு கையெடுத்துக் கும்பிட்டேன்.. கதறினேன்.. அந்த வெறி பிடிச்ச நாயோட காதில என் கதறல் விழுகல அத்தான்.. சுத்தி நின்னிருந்த மத்த வெள்ளைக்கார நாய்களும் என் மேல இரக்கம் காட்டல.. இந்த நாய் நான் உடுத்தியிருந்த துணிகளைக் கிழிச்சிருச்சு.. நான் மானத்தை மறைக்கப் புதருக்குள்ள புகுந்துட்டேன்.. என்னை நானே கொல்றதுக்கு தாவணி கூட என்கிட்ட இல்லை அத்தான்.. அது இருந்திருந்தா என் கழுத்தைச் சுத்தி இறுக்கி என் மூச்சை நிறுத்தியிருப்பேன்..”

நடந்த கொடுமையின் நிகழ்வுகளுக்கு உள்ளிருந்து கதறினாள் தாமரை.. காதலியின் மானமும், உயிரும் ஆபத்தில் சிக்கியிருந்ததை அறியாமல் அவன் மட்டும் தப்பி வீட்டில் பாதுகாப்பாக தூங்கியிருக்கிறான் என்ற வேதனையில் ஆதவனின் இமைகள் துடித்தன.. நடந்த அவலத்தை தொடர்ந்து விவரித்தாள் தாமரை...

“கெட் லாஸ்ட்..”

ராபர்ட்டின் சத்தத்தில் உடனடியாக அந்த இடத்தை விட்டுக் குதிரைகளை விரட்டிக் கொண்டு ஓடி விட்டார்கள் வெள்ளைக்கார சிப்பாய்கள்.. செத்துக் கிடந்த லாரன்ஸின் உடலைக் காலால் உதைத்துத் தள்ளிய ராபர்ட்டின் முகத்தில் மித மிஞ்சிய அருவெறுப்பும் கோபமும் பரவியிருந்தன...

“டர்ட்டி ஃபெல்லோ....”

தாமரை மறைந்திருந்த புதரை அவன் நெருங்கினான்..

"வராதீங்க.." தாமரை அலறினாள்..

"டோன்ட் அம்ப் ரைடு.." ராபர்ட் தைரியம் அளித்தான்.

"வேண்டாம்.. என் துணிகள்ளாம் கிழிஞ்சு போயிடுச்சு.. தாவணிய அந்த நாய் உருவிருச்சு.." கதறினாள் அவள்..

ராபர்ட் நிதானித்தான்.. தரையில் கிடந்த தாமரையின் தாவணியை எடுத்து அவளிடம் நீட்டி விட்டு கோட்டை அவிழ்த்தான்.. அதையும் அவளிடம் கொடுத்தான்..

பசித்தவளுக்கு பழைய சோறு கிடைத்தாலே மகிழ்ந்து போவாள்.. இங்கோ பாலும் பழமும் சேர்ந்து கிடைத்தன.. தாமரை அவல கதியில் அவற்றைப் பிடுங்கிக் கொண்டாள்.. தாவணியை உடலில் சுற்றி அதற்கு மேலே கோட்டை மாட்டிப் புதரிலிருந்து வெளிப்பட்டபோது முழுமையாக தன்னை மறைத்திருந்தாள்..

"ஐயா..! நீங்க தெய்வம்...!"

தாமரையின் குரல் கரகரத்தது.. அவளது மன உணர்வுகளை கேட்டுக் கொண்டிருந்த ஆதித்தனுக்கு... அவளைப் புரிந்து கொள்ள முடிந்தது..

"அந்த நெடியில இருந்து அவரை நான் தெய்வமாப் பார்க்க ஆரம்பிச்சேன் அத்தான்.. இந்த உடம்பும் உசிரும் அவரு காப்பாத்தித் தந்தது.. அவரு மட்டும் அந்த நேரத்தில அங்கே வராம இருந்திருந்தா...?"

"சொல்லாதே..."

ஆதவன் கையலாகாத கோபத்துடன் ஆற்றங்கரை மணலை எட்டி உதைத்தான்.. காதலியை காப்பாற்ற முடியாதவனாக ஆக்கி விட்ட தாமரையை நினைத்து வெகுண்டான்..

"இதுக்காடி என்னை தப்ப வைச்சே..? இந்த நாட்டில இருக்கிற ஒவ்வொரு வெள்ளைக்காரனையும் ஒழிச்சுக் கட்டனும்கிற வெறியோடு வாழறவண்டி நான்.. அப்படியாப் பட்டவன காதலிச்சவள காப்பாத்த முடியாதவனா ஆக்கி வைச்சிட்டயேடி.. ஒரு வெள்ளைக்கார நாயி உன்னை வேட்டையாடப் பாத்திருக்கு.. இன்னொரு வெள்ளைக் காரன்கிட்ட உனக்கு நன்றியுணர்வு வந்திருக்கு.. இந்த ரெண்டுக்கும் யாருடி காரணம்..? நீதானே..."

"இப்படி நடக்கும்ன்னு நான் நினைத்தேனா அத்தான்..?"

"நாம அடிமைப்பட்டுக் கிடக்கோம் தாமரை.. வியபாரம் செய்ய வந்த வெள்ளைக்காரன் நம்ம நாட்டைப் பிடிச்சுக்கிட்டு நம்மளை அடிமைகளாக்கிட்டு உக்காந்திருக்கான்.. இப்படியாப்பட்ட தேசத்தில எதுவும் நடக்கும்.. உன்னைப் பலிகொடுத்த வாழற வாழ்க்கை எனக்குத் தேவையில்லடி.. இதை புரிஞ்சுக்காம தப்புப் பண்ணிட்டேயேடி.. அர்த்த ஜாமத்தில.. அத்துவானக் காட்டுக்குள்ள.. வெள்ளைக்காரனுக துரத்திக்கிட்டு வரும்போது.. உன்னோட அண்ணன் அங்கே இருக்கான்னு பொய் சொல்லி என்னைத் துரத்தி விட்டுட்டேயேடி பாவி..! உன்னை என்ன சொல்கிறது..?"

"போனதைப் பேசிப் பிரயோசனமில்லை அத்தான்.."

சோர்வாகச் சொன்னவளைக் கூர்ந்து பார்த்தான் ஆதவன்.. இந்தத் தாமரை வேறு ஒரு தாமரையென்று அவனுக்குத் தோன்றியது... அவனுடைய தாமரை விவரமறியாதவள்.. துடுக்கும், சிரிப்புமாக உல்லாசமாக வாழ்வை எதிர்கொள்ளும் சின்னஞ்சிறுபெண்.. இப்படி

உலகில் உள்ள ஒட்டு மொத்த சோகங்களையும் முகத்தில் தேக்கி விரக்தியாக பேசும் தாமரை அவனுடைய தாமரையல்ல..

அவளின் விளையாட்டையும் குறும்பையும் விரட்டியடித்தது யார்..? ஒருவகையில் ஆதவனும் குற்றவாளியென்பதில் வேதனையுடன் கண் மூடி நின்றான் அவன்.. அவனைப் பார்க்கத்தான் அவள் ஆற்றங்கரைக்கு வந்தாள்.. அவனுடைய ஆசையின் வேகத்துக்கு ஈடு கொடுக்கத்தான் அந்தி மயங்கிய பின்பும் அங்கேயே இருந்தாள்.. அவனைக் காப்பாற்றத்தான் யாருமில்லாத அநாதை போலக் காட்டுக்குள் நின்று கொண்டு.. அவளுடைய அண்ணன் அங்கிருக்கிறான் என்று பொய் சொல்லி அவனை விரட்டி விட்டு ஆபத்தில் மாட்டிக் கொண்டாள்..

அனைத்தும் அவனுக்காகத்தான..

"என்னைக் காப்பாற்றின ராபர்ட்டை நான் தெய்வமாப் பார்த்தேன்.. பார்க்கிறேன்.. அவரைக் கொல்ல நீங்க புறப்பட்டா அதைப் பாத்துக்கிட்டுச் சும்மாயிருக்க என்னால் முடியுமா அத்தான்..?"

முடியாது என்றுதான் ஆதவனுக்குத் தோன்றியது..


நியாயங்கள் மாறுபட்டவை.. அவரவர் கோணத்தில் அவரவரின் நியாயம் மட்டுமே சரியானதாக இருக்கும்..

"நீங்களும், உங்க நணபர்களும் ராபர்ட்டைக் கொல்ல வரப் போறிங்கங்கிற விவரத்த அவர்கிட்டச் சொன்னது நான்தான்.. பதிலுக்கு உங்களில யாரையும் அவர் சிறைபிடிக்கக்கூடாது.. கொல்லக் கூடாதுன்னு கேட்டுக்கிட்டேன்... அவரும் வாக்குக் கொடுத்தார்.. கொடுத்த வாக்கைக் காப்பாற்றிட்டார்..."

எதற்காக கொல்ல வந்தவனை சிறை பிடிக்காமல் தப்பித்துச் செல் என்று ஒரு மாவட்டத்தின் ஆட்சியாளனான ராபர்ட் கூறினான் என்று அப்போது புரிந்தது ஆதவனுக்கு...

"என்னைக் காதலிக்கிறதாச் சொல்கிறார்.. நான் உங்களைத்தான் காதலிக்கிறேன்.. உங்களை மட்டும் தான் என்னால காதலிக்க முடியும்ன்னு சொல்லிட்டேன்.. அவர் அதைப் பற்றிக் கவலைப் படலை..." கண்ணீருடன் சொன்னாள் தாமரை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



17

ஊரடங்கும் வேளையிலே..
உனது முகம் நெஞ்சினிலே..

"**கா**ஞ்சிபுரத்துக்கு எப்ப வந்த..?"

"காலையிலதான் ஆண்ட்டி.."

"காலையில வந்திருக்க.. இன்னும் நம்ம வீட்டுப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கலை.. என்னப்பா இது..?"

அம்பிகா சடைத்துக் கொண்டாள்.. ஆழ்ந்த பார்வையுடன் நின்றிருந்த நீரஜா..

"அது நம்ம வீடாச்சே மம்மி.. இவர் வீடில்லையே.." என்று சொன்னாள்..

சட்டென்று நிமிர்ந்து பார்த்த தாமோதரன் அவளை இமைக்காமல் பார்த்து வைத்தான்.. நீரஜாவின் இதழில் உதித்த குறுஞ்சிரிப்பும்.. விழிகளில் தெறித்து விழுந்த

மின்னலும்.. அவர்களுக்குள் ஏதோ ஓர் நூதன இழை ஓடிக் கொண்டிருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பித்தன..

'ரொம்ப நாளாவே ஒரு மார்க்கமாத்தான் பார்த்துக்குதுக..'

அதற்கு மேல் நினைக்கக் கூட யோசனையாக இருந்தது ஈஸ்வரனுக்கு.. விவேகானந்தன் ராஜபரம் பரையைச் சேர்ந்தவர்.. நிருபமாவும் அப்படித்தான்.. காஞ்சிபுரத்தில் இருக்கும் அவர்களின் சொத்துக் கணக்குகளை சரி பார்க்க வேண்டுமென்றால் ஒருநாள் போதாது..

'இவன் என்னடான்னா அண்ணாந்து வானத்தைத் தான் பார்ப்பேன்னு அடம் பிடிக்கிறானே..'

ஏணி வைத்தாலும் எட்டாத தூரத்திலிருக்கும் விவேகானந்தனின் செல்வப் புதல்வியின் மீது ஈஸ்வரன் பெற்ற புதல்வன் அவ்வபோது மையல் பார்வைகளை வீசுவதன் மர்மம் என்னவென்று ஈஸ்வரனுக்கு பிடிபட மாட்டேன் என்றது..

அவர் கண்ட காட்சியை விவேகானந்தனும் நிருபமாவும் காணாமல் இருந்திருப்பார்களா என்ற அடுத்த மர்மம் அவர் மூளையைக் குடைந்தது..

எதுவுமே நடக்காததைப் போல வெகு இயல்பாக அவர்கள் தாமோதரனிடம் உரிமையுடன் பேசிப் பழகிய விதத்தில் அவர்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் பைத்தியம் பிடித்து விடும் நிலைமைக்கு ஆளானார் ஈஸ்வரன்..

'பணக்காரங்க மனசில என்ன நினைப்பிருக்குன்னு கண்டு தொலைக்க முடியாதே.. என்னப்பனே.. ஏகாம்பரேஸ்வரா..! என் மகனுக்கு பிடிச்ச பொண்ணு பொண்டாட்டியா வந்து வாய்க்கனும்.. அது இந்த நீரஜாவாக இருந்தாலும் சரி..'

ஏழைத் தகப்பனால் இதைத்தான் செய்ய முடியும்.. என் மகனுக்கு உன் பெண்ணைப் பிடித்திருக்கிறதைப் போலத் தெரிகிறது.. பெண்கொடு என்று கேட்கவா முடியும்..?

வெகுநேரம் அவர்கள் பேசிக் கொண்டு நின்றதில் பலத்த கால்வலிக்கு ஆளானார் ஈஸ்வரன்.. சிரித்த முகமாக நின்றிருந்த அம்பிகாவை பார்த்தவருக்கு..

'இவளுக்கு மட்டும் கால் வலிக்காதா..?' என்ற ஆச்சரியம் உண்டானது..

அவள்தான் அப்படியென்றால்.. அங்கிருந்த மற்ற நால்வரும் அதைப்பற்றிய பிரக்ஞையே இல்லாதவர்களைப் போல.. அசையாமல் நின்றபடி சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்:

'அட்லீஸ்ட்.. காலை மாத்தியாவது நிக்குதுகளா..?' உற்றுப் பார்த்தார் ஈஸ்வரன்..

ஊஹீம்.. அவர்கள் கால்களை அசைக்கவே இல்லை..

'என்னங்கடா இது..'

ஈஸ்வரனின் அங்கலாய்ப்பை உணர்ந்தவர்களைப் போல ஒருவழியாக அவர்கள் பேச்சை முடித்துக் கொண்டார்கள்..

"வீட்டுக்கு வா தாமு.."

"இப்பத்தான் பார்த்து பேசிட்டோமே.. இன்னொரு நாள் வர்றேன் அங்கிள்.. நைட்டே சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிரனும்.. ஏகப்பட்ட மெயில்லை செக் பண்ணி ஒரு

முடிவெடுக்க வேண்டியிருக்கு.. ஹோல் நைட் கண் விழிச்சாலும் வேலை முடியாது.."

"என்னவோ போ.. நீயும் சித்தார்த்தனும் காஞ்சிபுரத்திலதான் உங்களோட வேர் இருக்குங்கிறதை மறந்துட்டு சென்னையே கதின்னு இருக்கறிங்க.."

விவேகானந்தன் என்னவோ இதை இயல்பாகத் தான் சொல்லி வைத்தார்... அந்த வார்த்தைகளில் தாமோதரனுக்குள் ஏதோ ஓர்விதமான சிலிர்ப்பு உண்டானது.. நீரஜாவைப் பார்த்தான்.. அவள் கோவில் கோபுரத்தில் எதையோ தேடுவதைப் போல் பார்வையால் துழாவிக் கொண்டிருந்தாள்.. அவன் பார்ப்பதை உணர்ந்து பார்த்தவளின் விழிகளில் பரிதவிப்பு தெரிந்தது..

இதுதான்.. இந்த இனம் தெரியாத ஈர்ப்பும், சொந்தமும்தான்.. அவனை அவளிடம் கவர்ந்து இழுத்தது..

'இதைப் போலதான் சித்தார்த்தனும் யாமினிகிட்ட ஃபீல் பண்றானோ..'

அந்த நினைவுடன் சென்னை திரும்பியவனால் வழக்கம் போல யாமினியிடம் கடுமை காட்ட முடிய வில்லை.. சில சமயங்களில் அவள் சித்தார்த்தனின் ரூமிற்கு ஃபைலில் சைன் வாங்க வரும்போது அங்கேயிருக்கும் தாமோதரன் அவளிடம் சிரித்துப் பேசக்கூடச் செய்தான்.. ஓர்நாள் யாமினி நீட்டிய ஃபைலில் கையெழுத்துப் போடும்போது.. தாமோதரனைப் பார்த்த சித்தார்த்தன்..

"இந்தக் கம்பெனியப் பத்தி விசாரிடா தாமு.. மன்னார் அண்ட் கம்பெனி போல டுபாக்கூர் கம்பெனியோன்னு தோணுது.." என்றான்..

"உனக்கு எல்லாத்திலயும் சந்தேகம்தாண்டா.. இந்தியாவுக்கு அறவழியில போராடி விடுதலை வாங்கிக் கொடுத்தாங்க என்கிறதையே இல்லைன்னு சொல்ற ஆளாச்சே நீ.." என்றான் தாமோதரன்..



18

ஜெய்ஹிந்த் என்றொரு கோசம்..! தேசத்தின் மீதான நேசம்..!

"ஜெய்ஹிந்த்..!"

உரத்த முழக்கத்தில் அணிவகுத்து நின்ற வீரர்கள் விறைப்பாக நிமிர்ந்து நின்று பதிலுக்கு முழக்கமிட்டு பறந்து கொண்டிருந்த தேசிக் கொடிக்கு வீர வணக்கம் வைத்தார்கள்.. வரிசையில் ஒருவனாக நின்றிருந்த ஆதவன் ராணுவ நடையுடன் கொடிக் கம்பத்திற்கு மரியாதை செய்தான்..

அது 1943-ம் வருடத்தின் அக்டோபர் மாதம் இருபத்தி ஒன்றாம் தினம், இந்திய தேசிய ராணுவத்தினர் சிங்கப்பூரில் இருந்தார்கள்.. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அங்கு நடந்த மாநாட்டில் சுதந்திர அரசுப் பிரகடனத்தை வெளியிட்டார்.. 1943-ம் வருடத்தின் டிசம்பர் மாதத்தில் 29-ந் தேதியன்று அரசின் தலைவராக தேசியக் கொடியை ஏற்றினார்.. அவற்றை ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சீனா உட்பட ஒன்பது நாடுகள் ஆதரித்தன.. பர்மாவில் இருந்தபடி இந்திய தேசியப் படையை இந்தியா நோக்கி நகர்த்தினார்..

படை கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்த மாவீரன் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்..! இந்திய தேசிய

ராணுவத்தின் போர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிரானது.. இந்தியாவுக்கு எதிரானது அல்ல..

அதை இந்திய ராணுவம் தெளிவாக புரிந்து வைத்திருந்தது.. இந்திய தேசிய ராணுவத்திடம் இந்திய ராணுவத்திற்கு பரிவு இருந்தது.. இதை வெள்ளையர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

உலகப்போரில் இந்திய ராணுவத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஈடுபடுத்தியிருந்தது.. மற்றொரு போர் அதைப் போல மூளுமானால் இந்திய ராணுவம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கட்டுப் பாட்டுக்குள் இருக்காது என்ற நிதரிசனமான உண்மையில் ஆங்கிலேயர் அதிர்ந்தனர்..

1943-ல் நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் வெள்ளையர்களிடமிருந்து அந்தமான், நிக்கோபார் தீவுகளைக் கைப்பற்றியதை வெள்ளையார்களால் ஜீரணிக்க முடியவில்லை.. அவற்றுக்கு ஷாஹீத் (தியாகம்), ஸ்வராஜ் என்று பெயரிட்டு 'கர்னல் லோகநாதன்..' என்ற தமிழரை ஆளுநராக நியமித்தார் சுபாஷ் சந்திர போஸ்..

"தமிழ் ஆளுக மேல தலைவருக்கு பற்று அதிகம் ஆதவா..!" மெய் சிலிர்த்தார் மருதாச்சலம்..

"தமிழ், தெழுங்கு, கன்னடம்ன்னு அவர் பிரிச்சுப் பாக்கறவரில்ல மாமா.. வீரம் நிறைஞ்சவங்க மேல பிரியம் காட்டறாரு.." ஆதவன் சொன்னான்..

"பசும்பொன் முத்துராமலிங்கம் மேல தலைவருக்கு எம்புட்டுப் பாசம் தெரியுமா.."

"தெரியும்.."

"தெரிஞ்சுக்கிட்டுமா இப்படிச் சொல்ற..? பசும்பொன் முத்துராமலிங்கம் கூப்பிட்டதற்காக மதுரைக்கு வந்தாருப்பா.."

"மதுரையிலே 600-க்கும் அதிகமான தமிழ்வீரர்கள் இந்திய தேசிய ராணுவத்தில சேர்ந்ததை மறந்துட்டுப் பேசறிங்களே மாமா.."

"அதனாலதான் அடுத்த பிறவியில் தமிழனாகப் பிறக்க ஆசைப் படுகிறேன்னு சொன்னாருப்பா.."

நெக்குருகிய மருத்தாச்சலத்திற்குத் தெரியாது.. அந்தப் பிறவியில் சுபாஷ் சந்திரபோஸ் என்ற அந்த மாவீரர் காற்றில் மறையும் புகையாக காணாமல் போகப் போகிறார், அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்கு இந்தியாவிடம் பதில் இல்லாமல் போகப் போகிறது.. என்பது..

வருங்காலத்தை அறிந்து விட்டால் நிகழ்காலத்தில் நிகழ்வுகள் ஏது..? நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தமிழ் வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது என்னவோ உண்மைதான்.. பின்னாளில் அவர் இறந்து விட்டதாக உலகம் சொல்லிய காலகட்டத்தில் அவர் உயிருடன் இருக்கிறார் என்று அறிவித்தார் ஓர் தமிழர்.. கொல்கத் தாவில் நடந்த பத்திரிக்கையாளர் கூட்டத்தில் நேதாஜி உயிருடன் இருப்பதாகவும்.. தான் அவரை சந்தித்து விட்டு வந்ததாகவும் அவர் கூறியதால் ஜவஹர்லால் நேரு உண்மையை அறிய ஒரு கமிசனை உருவாக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.. அந்தக் கமிசனும் உட்கார்ந்த இடத்திலேயே ஆய்வு செய்து நேதாஜி இறந்து விட்டது உண்மைதான் என்று அறிக்கையை சமர்பித்தது.. அதை பல தேசத் தலைவர்கள் விமரிசனம் செய்தார்கள்..

அவ்வாறு உறங்கிக் கிடந்த உண்மையை உரத்த குரலில் கூறித் தட்டி எழுப்பிய தமிழர் பசும்பொன் முத்துராமலிங்கம்..!

இந்திய தேசிய ராணுவத்தில் செண்பகராமன், பசும்பொன் முத்துராமலிங்கம், லோகநாதன் என்று தமிழ் வீரர்களுக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கிடைத்தது..

இந்தியாவை நோக்கி நகர்ந்த ராணுவத்தில் ஆதவன் விமானப் படையில் இருந்தான்.. மருதாச்சலம் கப்பல் படையில் இருந்தார்.. அடிக்கடி சந்தித்துக் கொள்ள முடியாத சூழல்.. சந்திக்கும் சொற்ப பொழுதுகளிலும் நாட்டு நிலவரத்தைப் பற்றிய உரையாடல்..

எதனால் ஆதவன் பொன் விளைந்த களத்தூரை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்தான் என்ற விவரத்தை அவனிடம் கேட்க நினைத்ததை மருதாச்சலத்தால் கேட்க முடியாமலே போனது..

“நான் ராபர்ட்டைத்தான் காதலிக்கனுமாம்.. உங்களைக் காதலிக்கக் கூடாதாம்.. தடையுத்தரவு போட்டிருக்கார்..”

கன்னத்தில் காய்ந்து போன கண்ணீரின் தடங்களுடன் உயிர்ப்பில்லாமல் சொன்னாள் தாமரை.. தீர்க்கமாக அவளைப் பார்த்தான் ஆதவன்..

“நீ என்ன சொன்ன..?” கூர்மையுடன் வெளிவந்தது அவன் கேள்வி..

“காதல்ங்கிறது தானா வரனும்ன்னு சொன்னேன்..”

“அதுக்கு அவன் என்ன சொன்னான்..?”

“வரலைன்னா விட்டிரு.. எனக்கு அதைப் பத்திக் கவலையில்ல.. நான் உன்னைத்தான் காதலிக்கிறேன்,. உன்னை இங்கிலாந்துக்கு கூப்பிட்டுப் போகப் போறேன்னு சொன்னாரு..”

“போகப் போறியா..?”

"தெரியல.."

விரக்தியுடன் சொன்னான் தாமரை.. இதைக் கேட்கவா இந்திய தேசிய ராணுவத்திலிருந்து அவசர விடுமுறையில் புறப்பட்டு வந்தேன் என நொந்து போனான் ஆதவன்.. அவனால் அவளது நிலைமையை புரிந்து கொள்ள முடிந்தது..

மீள முடியாத புதைகுழியில் மாட்டிக் கொண்டு விட்டாள் அவன் காதலி..! நன்றிக் கடன் பட்டு விட்டாள்.. ஆதவனுக்குச் சொந்தமான அவன் காதலியின் உடலையும், உயிரையும் ஒரு வெள்ளையன் காப்பாற்றியிருக்கிறான்.. எப்பேற்பட்ட உதவி அது..! அந்த உதவியைச் செய்தவன் பூட்டிய நன்றிக்கடன் என்ற விலங்கில் சிறைபட்டு கூண்டுக்குள் அடைந்து விட்டாள் அவன் காதலி..!

இனி பொன் விளைந்த களத்துரில் ஆதவனுக்கு என்ன வேலை..?

அவனுடைய வேலை இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றுவது.. தாமரைக்கு அவன் தேவை இல்லை.. அவனுடைய ராணுவத்திற்கு அவன் தேவை..

அவன் புறப்பட்டு விட்டான்..

"அத்தான்.." தாமரை கதறினாள்..

"உன்னைக் குற்றம் சொல்ல மாட்டேண்டி.. இது விதி..! போன பிறவியில உன்னை நான் அலைக்கழிச் சிருக்கணும்.. கண்ணெதிரே நிற்க வைத்து மனசைக் காயப் படுத்தியிருக்கனும்.. என்னோடு சேர முடியலையேன்னு துடிதுடிக்க வைத்திருக்கனும்.. அதுக்கான அத்தனை பலனும் மொத்தமா இந்தப் பிறவியில என் தலையில விடிஞ்சிருக்கு.. போகிறேண்டி.."

"வேண்டாம் அத்தான்.. இங்கேயே இருங்க.."

"எதுக்குடி..? அந்த ராபர்ட் ஆட்டி வைக்கிற பொம்மையாய் நீ ஆடறதைப் பாக்கிறதுக்கா நான் இருக்கனும்..?"

ஆதவனின் சீற்றத்தில் நின்றிருந்த தாமரையின் கண்ணீர் பொங்கி வழிந்தது.. அவனைக் கட்டிக் கொண்டு கதறியழுகவேண்டும் போலத் துக்கம் கொண்டாள் தாமரை.. அவன் தோளில்சாய வேண்டும்.. சோகத்தின் சுமைகளையெல்லாம் அழுது தீர்க்க வேண்டும் என்று மருகினாள்.. கலைந்த தலையும், சிவந்த கண்களுமாக சீற்றத்துடன் நிற்பனின் ஆண்மை ததும்பிய அழகில் அலை பாய்ந்தது அவள் மனது.. அவன் மார்பில் முகம் புதைத்து.. சிகைகோதி அவனது கோபம் தீர்க்கத் துடித்தது..

அவனும் அதைத்தான் எதிர்பார்த்தான்.. அவனது ஒரு பார்வையில் ஓடிவந்து அவன் கட்டுக்குள் அடங்கி விடும் அவளது காதலின் வேகத்தை எதிர்பார்த்தான்.. முத்த மழையால் அவன் முகத்தை நனைக்கும் ஆசையை எதிர்பார்த்தான்.. அவன் தேகத்தகிப்பில் தன் தேகத்தை சூடேற்றிக் கொள்ளும் அவளது ஆலிங்கனத்தை எதிர் பார்த்தான்..

அவள் நினைத்ததும் நடக்கவில்லை.. அவனுடைய எதிர்பார்ப்பும் நிறைவேறவில்லை.. அவனை நோக்கி எடுத்து வைத்த அடிக்கு அடுத்த அடியை எடுத்து வைக்காமல் அப்படியே நின்று விட்டாள் தாமரை..!

அவளையே உற்றுப் பார்த்தபடி நின்ற ஆதவனின் உள்ளம் கொந்தளித்தது.. அவனது பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் தலை கவிழ்ந்த தாமரை

கண்ணீரை உகுத்தாள்.. அவளுக்கும் அவனுக்குமான இடைவெளியை அவள் கடக்க முற்படாததை கவனித்தான் ஆதவன்.. அவன் இதயம் வலித்தது..

பிறந்தது முதல் அவனுக்கென்று வளர்ந்தவள்.. அந்த ஊரின் அனைத்துப் பகுதிகளிலும் அவனுடன் சுற்றி வந்தவள்.. மாமல்லபுரக் கடற்கரையில் அவன் மார்பில் சாய்ந்து நின்ற போது அவள் காதுகளில் சலங்கையின் ஒலி கேட்பதாக கூறியவள்.. ஆதவனின் காதுகளிலோ அன்று குதிரையின் குளம்போசை கேட்டு வைத்தது.. அதைச் சொன்னதும் பயந்து போனவளாக அங்கிருந்து உடனே கிளம்பி விட வேண்டும் என்று அடம் பிடித்தவள்.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் சன்னதியில் கண்மூடி நின்றிருந்தபோது.. மாங்கல்யம் எங்கே என்று கேட்டவள்.. அதிசயத்திலும் அதிசயமாக அதே கேள்வி ஆதவனின் மனதிலும் எழுந்ததை அறிந்ததும் கலவரப் பட்டவள்.. காஞ்சியை விட்டு பொன் விளைந்த களத்தூருக்கு வந்த பின்பும் சிந்தனை வயப்பட்டிருந்தவள்..

“மனுசருக்கு ஏழு பிறவி உண்டாமே அத்தான்..? அப்படின்னா இதுக்கு முதல்ல நாம பிறந்திருப்போமா..? அப்படிப் பிறந்திருந்தப்ப நீங்க யாரோ.. நான் யாரோன்னு இருந்திருப்போமா.. இல்லை.. ஒருத்தருக்காக ஒருத்தர்ன்னு இப்ப இருக்கிறதைப் போல அப்பவும் இருந்திருப்போமா..?” என்று கேட்டவள்..

அப்படி ஒருத்தருக்காக மற்றொருவர் என்று இருந்த உறவு எப்படி மாறியது..?

விழி கலங்க நின்றிருந்தவளின் பார்வை போகாதே என்று அவனை யாசித்தது.. அந்தப் பார்வையின்

யாசிப்பிற்கு அவன் கட்டுப்படவில்லை.. பரிதவிப்பவளைத் தொட்டு இழுத்து பக்கத்தில் அழைத்து முத்தமிட அவனால் முடியும்தான்..

ஆனால் அவன் அதைச் செய்ய மாட்டான்..

அவன் கண்ணுக்கு முன்னாலேயே ராபர்ட் அவளைத் தனது காதலியென்று பெற்ற அன்னையிடம் அறிமுகம் செய்து வைத்தான்.. அதைக் கேட்டுக் கொண்டு மறுத்துப் பேசாமல் தாமரை அமைதியாக நின்றிருந்தாள்..

அதற்குப் பின்னாலும் அவளைத் தொட அவனால் முடியுமா..?

அங்கு நிற்க முடியாதவனாக ஆதவன் வேகமாக நடந்தான்..

"அத்தான்.."

அவன் பின்னாலே ஓடிய தாமரை அவனை வழி மறித்துக் காலில் விழுந்து அழுதாள்..

"வழியை விடுடி.."

"மாட்டேன்.. நீங்க போகக் கூடாது.."

"சரி.. போகலை.. இப்பவே என் கூட வா.."

"எங்கே..?"

"கோவிலுக்கு.. அங்கே உனக்குத் தாலியைக் கட்டிப் பெண்டாட்டியாக்கிக்கறேன்.. இந்த பொன விளைந்த களத்தூரிலேயே பொழைப்பை நடத்தலாம்.."

தாமரை பதில் சொல்லவில்லை.. இயலாமையுடன் அவள் விட்ட கண்ணீரில் ஆதவனின் சினம் அதிகமானது..

"முடியாதில்ல..? எனக்குக் கழுத்தை நீட்ட முடியாதில்ல..? அப்புறம் என்ன அலுவலுக்கு என் வழியை

மறிக்கற..? வெள்ளைக்காரன் கூட நீ இங்கிலாந்துக்கு கிளம்பிப் போறப்ப வழியனுப்ப நான் இருக்கனும்னு ஆசைப்படறியா..?"

ஆதவனுக்கு கோபம் வந்தால் நல்ல நல்ல வேள்விகளாக கேட்டு வைப்பான்.. அப்படி அவள் எதற்கெல்லாம் ஆசைப் படுகிறாள் என்று பட்டியலிட்டு விளக்கம் சொல்லி அவன் கேட்ட கேள்விகளில் காதுகளைப் பொத்திக் கொண்டு துடித்துப் போனவளாக மணலில் மண்டியிட்டுக் கதறினாள் தாமரை..

"விலகிப் போகிறவன நிறுத்தி வைச்சு வெறியைக் கிளப்பாதே.. வழியை விடு.. இந்தக் கண்கொள்ளாக் காட்சிக்கெல்லாம் சாட்சியா இருக்க நான் விருப்பப் படலை.. புரியுதா..?"

"அத்தையும் மாமாவும் உங்களைத் தேடுவாங்க.."

"தேடட்டும்.. அவங்களுக்கு இது புதிசில்ல.."

"செவ்வந்திக்கு என்ன பதிலைச் சொல்லுவேன்..?"

"அவளோட அண்ணன மனசு வெறுத்துப் போய் ஓட வைச்சிட்டாங்கிற உண்மையைச் சொல்லு.."

"அத்தான்.."

"சும்மா அத்தான்.. பொத்தான்னு கொஞ்சினன்னு வைய்யி.. அடிச்சுப் பல்லைக் கழட்டிருவேன்.. யாருக்கு யாருடி அத்தான்..? உனக்கு அந்த ராபர்ட்தான் அத்தான்.."

கோபத்தில் ஆதவன் கத்தினான்.. தன்னையு மறியாமல் முகம் சுளித்த தாமரை அருவெறுப்புடன்..

"ச்சீ..!" என்றாள்..

அந்த ஒற்றைச் சொல்லில் அப்படியே நின்று விட்டான் ஆதவன்.. பேச்சளவில்கூட ராபர்ட்டை இணை

சேர்க்க முடியாத தாமரையின் குணத்தில் அவன் மனம் கசிந்தது..

"உன்னை இந்தக் கதிக்கு ஆளாக்கினவன் நான்தாண்டி.. எனக்கு மன்னிப்பில்லை.." வேதனைப் பட்டான் ஆதவன்..

"அந்த லாரன்ஸ் நாயோட அட்டூழியத்துக்கு நீங்க எப்படி அத்தான் பொறுப்பாவீங்க..?" அப்பாவியாய் வினவினாள் தாமரை..

ஆதவன்தான் பொறுப்பு.. அதையறியாத அவளது குழந்தைத்தனத்தில் இளகியது அவன் மனது.. அலங்கார தேவதையாய் நின்றவளின் அழகு அவனை வசீகரித்தது.. அந்த அலங்காரம் அவனுக்கானதல்ல என்பதில் துயரம் கொண்டான் அவன்..

அவன் போய்விட வேண்டும்.. தாமரையின் கண்ணுக்கு எட்டாத தொலைவிற்கு ஓடி விட வேண்டும்.. அங்கேயே இருந்தால் அவனால் தாமரையை விட்டு விலகியிருக்க முடியாது.. அவளை சிறையெடுத்து தாலிகட்டி விடுவான்.. நன்றிக் கடனில் சிறை பட்டிருப்பவளை மேலும் இம்சைப் படுத்தாமல் இருக்க வேண்டுமானால் அவன் பொன் விளைந்த களத்தூரில் இருக்கக் கூடாது..

"சித்தப்பா இருக்காரே அத்தான்.."

"இருக்கட்டும்.."

"உங்களைக் கேட்பாரே.."

"தெரியலைன்னு சொல்லு.. அவரே என்னைத் தேடி வந்திருவாரு.."

விரைந்து அங்கிருந்து விலகிவிட்டான் ஆதவன்.. இந்திய தேசிய ராணுவத்திற்குத் திரும்பி விட்டான்.. சில நாள்களில் வந்து சேர்ந்த மருதாச்சலம்.. அவரிடம் சொல்லாமல் ஏன் வந்தான் என்று அவனை துளைத்து எடுத்தார்..

"குற்ற உணர்வா இருந்தது மாமா.. குடும்பம், குழந்தைன்னு நினைக்காம நம்ம நேதாஜி ராணுவமே கதின்னு இருக்கிறப்ப.. நான் மட்டும் தாமரையே கதின்னு இருக்கிறது நியாயமில்லைன்ன தோணுச்சு.. அதான் கிளம்பி வந்துட்டேன்.."

"வந்தது சரிதான் மாப்பிள்ளை.. என்கிட்டச் சொல்லாம ஏன் வந்த..? இதுவரைக்கும் நீ இப்படி செய்ததில்லையேப்பா.. அதைத்தான் ஏன்னு கேக்கறேன்.."

ஆதவன் அதற்குப் பதில் சொல்வதற்குள் நேதாஜி அழைப்பதாக மருத்தாச்சலத்திடம் வந்து நின்றான் ஒருவன்..

"தலைவர் கூப்பிடறாரா..?"

மாப்பிள்ளையை மறந்து நேதாஜியிடம் விரைந்து விட்டார் மருதாச்சலம்.. அடுத்து வந்த நாள்களில் அவர் கப்பல் படைக்கும், ஆதவன் விமானப் படைக்கும் இடம் மாறி விட்டதில் விளக்கம் சொல்ல வேண்டிய கட்டாயத்தி லிருந்து தப்பித்து விட்டான் ஆதவன்..

இந்தியாவில் அரசியல் சூழல்கள் மாறிக் கொண்டிருந்தன.. மகாத்மா காந்தியின் வசீகரத்தை முன்னிருத்தியிருந்த காங்கிரஸ் கமிட்டியினால் அதையும் தாண்டி முழுவீச்சுடன் வெளிப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வசீகரத்திற்கு அணை கட்ட முடியவில்லை..

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு காரணமான ஜெனரல் டயரைச் சுட்டுக் கொன்று பழி தீர்த்தார் உத்தம் சிங்.. அந்த வீரச் செயலை வன்மையாகக் கண்டித்தார் மகாத்மா காந்தி.. ஆனால் 1942-ல் காந்தி நடத்திய 'வெள்ளையனே.. வெளியேறு..' என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற இயக்கத்திற்கு உத்தம்சிங்கின் பழிவாங்கல்தான் உணர்வூட்டியது.. இதை காங்கிரஸ் கமிட்டியில் இருந்த அனைத்து தேசியத் தலைவர்களும் உணர்ந்திருந்தனர்..

காந்தியின் மிதவாத கொள்கையை பலர் பின்பற்றியிருந்தாலும் பகத்சிங்கின் வீரச் செயலை போற்றிப் பாடுபவர்கள் இந்தியாவில் மிகுந்திருந்தார்கள்.. வெள்ளையரிடம் அகப்பட இருந்த பகத்சிங்கை தனது கணவன் என்று 'துர்கா தேவி' என்ற இந்தியப் பெண் துணிச்சலுடன் கூறி காப்பாற்றிய வீரச்செயலை இந்தியாவே புகழ்ந்து பேசியது..

இந்திய தேசிய ராணுவத்தின் தாரக மந்திரமான 'ஜெய் ஹிந்த்..!' என்ற கோசம் உலக நாடுகளின் அரங்கில் தனி இடத்தைப் பெற்று இந்தியாவின் விடுதலையைப் பற்றிப் பேச வைத்தது..

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ராஷ் பிஹாரி போஸால் உருவாக்கப் பட்டுச் செயல்படாமல் இருந்த இந்திய தேசிய ராணுவத்தை சுபாஷ் சந்திரபோஸ் மீள் உருவாக்கம் செய்து அதன் தலைவராவார் என்று எதிர்பார்த்திராத பிரிட்டிஷ் அரசாங்கம் அவரின் வேகமான செயல்பாடுகளில் யோசிக்க ஆரம்பித்தது.. இந்தியர்கள் ஆயுதம் ஏந்தி பட்டை பலத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்க்கத் துணிவார்கள் என்பதை ஆங்கிலேயருக்கு உணர்த்தினார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்..

1941-ல் நேதாஜியின் துணிச்சலில் பிரிட்டிஷ் அரசாங்கம் கோபம் கொண்டது.. வீட்டுச் சிறையில் அவரை வைத்துக் காவல் காத்த பிரிட்டிஷாரின் கண்களில் அகப்படாமல் நேதாஜி தப்பித்து மாயமாகி விட்டதில் அவரின் சக்தியை உணர்ந்து கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் அவரைக் கட்டுப்படுத்த என்னவழி என்று திகைத்து விழித்தது..

தப்பித்துச் சென்ற நேதாஜி 1941-ல் சுதந்திர இந்திய மையம் என்ற அமைப்பை உருவாக்கினார்.. ஆசாத் ஹிந்த் என்ற ரேடியோ அலைவரிசையை இந்திய தேசிய ராணுவத்திற்காக ஒலிபரப்பினார்.. இந்திய தனிக்கொடியை உருவாக்கி பறக்க விட்டார்.. 'ஜனகனமன' பாடலை தேசிய கீதமாக அறிவித்தார்.

புயலென செயல்பட்ட இவரது செயல்பாட்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் கவலை கொண்டது.

பிற்காலத்தில் சுபாஷ் அறிவித்த 'ஜன கன மன..' பாடலை தேசிய கீதமாக ஏற்றுக் கொண்டவர்களால் அவர் உயிருடன் இருப்பதை அறிவிக்க முடியாத சூழலை பிரிட்டிஷ் அரசாங்கம் உருவாக்கி விட்டுத்தான் சென்றது.

நேதாஜி உலகம் சுற்றினார்.. ஒவ்வொரு நாடுகளிலும் இந்தியாவின் விடுதலைக்கான உதவியைக் கேட்டார். போர்காலத்தில் நீர்மூழ்கி கப்பல் மூலம் ஜப்பான் சென்று ஜெனரல் டோஜோவைச் சந்தித்து உதவி கேட்டார்.. ஜப்பான் உதவிக்கரம் நீட்டியது..

அதீதமான அன்புடன் ஜப்பான் தேசத்தின் தலைவர் களிடம் பழகினாலும்.. நிமிர்வாக செயல்பட்டார் நேதாஜி..

பர்மியப் புரட்சிப்படையை எதிர்க்க நேதாஜியின் உதவியை ஜப்பானியர் கேட்டபோது நேதாஜி மறுத்து விட்டார்..

"இந்திய தேசிய ராணுவம் என்பது கூலிப்படையல்ல..!"

இதுவே அவர் சொன்ன பதில்..!

அஞ்சாமை அவரது ஆளுமை..!

இந்திய தேசிய ராணுவம் முன்னேறியது.. 1944-ம் வருடம் பிப்ரவரி மாதம் நான்காம் தேதியன்று இந்திய தேசிய ராணுவத்தில் உரையாற்றினார் நேதாஜி..!

"அதோ.. அந்த நதியின் கரைக்கு அப்பால்.. அந்த அடர்ந்த காடுகளுக்குப் பின்னால்.. நம் கண்களில் படும் அந்த மரங்களுக்குப் பின்னால்.. நமக்காக உறுதியளிக்கப் பட்ட அந்த பூமி உள்ளது.. எந்த மண்ணில் இருந்து நாம் உயிர் பெற்றோமோ.. அந்த பூமியை நோக்கி நாம் திரும்புகிறோம்.. புறப்படுங்கள்.. இந்தியா அழைக்கிறது.. ரத்தம், ரத்தத்தை அழைக்கிறது.."


ஆதவன் பார்த்தான்.. தொலைதூர தொடுவானத்திற்குப் பின்னால் கிடந்த 'தனம் நிறைந்த பாரதம்' அவனை கரம் நீட்டி அழைத்தது.. வியாபாரிகள் என்ற போர்வையில் வந்து ஆக்ரமித்த வெள்ளையரிடம் அடிமைப் பட்டுக் கிடந்த அவனது தாய்த்திருநாடு அவனை அழைத்தது.. இந்தியா அவனை அழைத்தது..

அவன் புறப்பட்டு விட்டான்..

"ஜெய்ஹிந்த்..!"

வீர வணக்கத்துடன் இந்திய தேசிய ராணுவத்தினர் முன்னேறினார்கள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



18

துப்பாக்கி முழக்கத்திலே.. தோன்றியது தேசியகீதம்..!

"கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம்ங்கிற தெல்லாம் சும்மாடா தாமு.. மறைக்கப்பட்ட இன்டியன் ஹிஸ்டரியைக் கரைச்சுக் குடிச்சுட்டுப் பேசறவங்க பேச்சைக் காதில வாங்க முடியாதுடா..?"

சிலகாலமாக தாமோதரன் இணக்கமாக பேசிவருவதால் தைரியம் பெற்ற சித்தார்த்தன் ஜாடையாக யாமினியைப் பார்த்தபடி சொன்னான்.. அதை ரசித்து நமட்டுச் சிரிப்பு சிரித்தான் தாமோதரன்.. யாமினிக்கு வேகம் வந்தது.. அவளுக்கு சரித்திரம் தெரியவில்லை என்று சித்தார்த்தன் எள்ளி நகையாடுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

"வரலாறில மறைக்கப்பட்ட வரலாறுன்னு ஒன்னு இருக்கா சார்..?" என்று சித்தார்த்தனிடம் சண்டைக்குப் போனாள்..

'ஆஹா..!' என்று ஆகிவிட்டது தாமோதரனுக்கு.. யாமினியும் சித்தார்த்தனும் மோதிக் கொள்வது அவனுக்குக் கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.. தீவிரமாக அவர்கள் சண்டைபோட்டுக் கொண்டதில் அவன் மகிழ்ந்து போனான்..

'இப்படித்தான் இருக்கனும்..' கன்னத்தில் கை வைத்து மோதலை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்..

"ஷ்யூர்.." என்றான் சித்தார்த்தன்..

"என்ன ஷ்யூர்..? விளக்கம் சொல்லாம வெறும் ஒத்தை வார்த்தையில தப்பிச்சுரலாம்ன்னு நினைச்சிரக் கூடாது.."

"அந்த நினைப்பு எனக்கில்ல.. ஐ.என்.ஏ வோட பங்கு இம்பார்டண்டானது.. நேதாஜியோட ஃபோர்சைக் கண்டு பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு பயந்ததுங்கிறதுதான் உண்மை.. அதனாலதான் அவங்க இந்தியாவை விட்டு வெளியேறுகிற டிசிசனை எடுத்தாங்க.."

"நேதாஜிதான் சுதந்திரத்துக்கு பாடுபட்டார்.. காந்தி எதுவும் செய்யாம ராட்டையில நூல் நூற்றுக்கிட்டு இருந்தாருங்கறிங்களா..?"

"ஒரு வகையில அப்படித்தான்.. உலகம் பூராவும் சுத்தின நேதாஜி வெளிப்படையா அதைச் செய்யலை.. யாருக்கும் தெரியாம வீட்டுக்காவலில இருந்து தப்பினாரு.. ஒளிஞ்சு மறைஞ்சு.. நீர் மூழ்கிக் கப்பல்ல எல்லாம் ஜர்ன் பண்ணி வெளிநாடுகளோட ஆதரவைச் சம்பாதிச்சாரு.. ஐ.என்.ஏ வோட துப்பாக்கி எத்தனை வெள்ளைக் காரங்களை கொன்று குவிச்சதுன்னு தெரியுமா..? அவர் வெள்ளைக்காரனோட முகவாயைப் பிடித்துக் கெஞ்சி.. எங்க நாட்டை எங்களுக்கு விட்டுக் கொடுத்திருங்க.. உங்க ஊரைப் பார்த்து ஓடிப் போயிருங்கன்னு கேட்டுக்கிட்டு நிற்கலை.. ஆர்மி ஃபோர்ஸை ஃபார்ம் பண்ணினார்.. பிரிட்டிஷ் கவர்ண்மென்டை ஆர்மி ஃபோர்ஸோட எதிர்த்த இந்தியன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்.."

"இந்தியா அமைதிப் பூங்கா சார்.."

"அதுக்கு..?"

"அஹிம்சைதான் வெற்றிக்கான வழின்னு காந்தி நினைச்சதில என்ன தப்பிருக்கு..?"

"ஜாலியன் வாலாபாக் படுகொலையை கண்ணால் பார்த்த பின்னாடியும் அவர் அஹிம்சையைப் பத்திப் பேசினதுதான் எனக்குப் புரியலை.. அந்த அஹிம்சையை வெள்ளைக்காரனிடம் மட்டும்தான் அவர் காண்பிச்சார்.. இந்தியர்கள்கிட்டக் காண்பிக்கல.. பகத்சிங்கோட தூக்குத் தண்டனையை காந்தி நினைச்சிருந்தா தடுத்து நிறுத்தியிருக்கலாம்ன்னு அப்போக் காங்கிரஸ் கமிட்டியில இருந்தவங்களே பேசியிருக்காங்க.. பகத்சிங்குக்கு ஆதரவா காந்தி வெள்ளைக்கார இர்வின் பிரவுகிட்டப் பேசனும்னு எதிர்பார்த்தாங்க.. எங்கே..? காந்தி - இர்வின் ஒப்பந்தம்ன்னு ஒப்பந்தம் போடத்தான் காந்திக்கு யோசனை வந்தது.. பகத்சிங்கைக் காப்பாற்ற அவர் யோசிக்கலை.. உத்தம்சிங் கதையிலும் இப்படித்தான்.. ஜெனரல் டயரை எப்படிக் சொல்லலாம்ன்னு ஸ்ட்ராங்கா கண்டிச்சு அறிக்கை விட்டவர்தான் காந்தி.. அதை நேதாஜி ஆதரித்ததையும் அவரால ஏத்துக்க முடியலை.."

"வன்முறை வேண்டாம்ன்னு சொன்னா அது தப்பா..?"

"வன்முறைக்கு வன்முறைதானே தீர்வு..? காட்டுத் தீயை அணைக்க.. அதுக்கு எதிரான காட்டுத்தீயாலதான் முடியுமாம் அதைப் போலதான் இதுவும்.. நேதாஜி இதைத்தான் செய்தார்.."

"சும்மா நேதாஜி.. நேதாஜின்னு சொல்லாதீங்க.. அவர் செய்கையை காந்தி ஆதரிச்சிருந்தா அவர் ஜப்பானைக் கொண்டு வந்து இந்தியாவின் நடுப்பகுதியில் நிறுத்தியிருப்பார்.. நல்லவேளை.. இந்தியா தப்பிச்சது.."

"ஊஹூம்..? நாம என்ன செய்தோம்..? ரஷ்யாவைக் கொண்டு வந்து இந்தியாவின் நடு வீட்டில் வைக்கலையா..?"

"இது நட்பு உடன்படிக்கை..!"

"அது மட்டும் என்ன..?"

தாமோதரனுக்கு கைதட்ட வேண்டும் போல இருந்தது..



19

காற்றில் கரைந்த கற்பூரம்போல் காணாமல் ஏன் போனாய்..?

"நேத்தாஜி இறந்து விட்டார்.."

ஜப்பான் வானொலி அறிவித்ததைக் கேட்ட ஆதவன்..

"இல்லை.." என்று அலறினான்..

அடர்ந்த காட்டில் அவனுடன் இருந்த மருத்தாச்சலமும் மற்ற இருவாலிபர்களும் திகிலடைந்த முகத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. வாலிபர்கள் இருவரும் தாழ்ந்த குரலில் பேச ஆரம்பிக்க.. மருதாச்சலம் நகர்ந்து சென்று ஓர் மரத்தில் சாய்ந்து நின்றார்.. துயரத்துடன் விழிகளை மூடிக் கொண்டார்.. இரண்டு சொட்டுக் கண்ணீர் துளிகள் அவரது விழிகளிலிருந்து துளிர்த்து விழுந்தன..

"அழுவது வீரனுக்கு அழகல்ல.."

இதை முழங்கியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.. அவரைப் பின்பற்றிய இந்திய தேசிய ராணுவத்திற்கும்

அதையே சொல்லிக் கொடுத்திருந்தார்.. அப்படி நேதாஜியிடம் பாடம் படித்திருந்தும் மருதாச்சலம் கண்ணீர் விட்டாரென்றால் சரித்திரம் அவர்களை அந்த நிலைமைக்கு ஆளாக்கியிருந்தது..

எந்த தாய்த்திருநாட்டின் விடுதலைக்காக நாடு விட்டு நாடு வந்து அவர்கள் இரவு, பகல் பாராமல் போராடினார்களோ.. அந்த தாய்த் திருநாடாம் இந்தியாவில் அவர்கள் ஒளிந்து மறைந்து காடுகளில் பதுங்க வேண்டிய அவலம் நிகழ்ந்து விட்டது..

இதோ.. அவர்களை வழி நடத்திய சூரியனும் அஸ்தமித்து விட்டதாக ஜப்பான் வானொலி அறிவித்து விட்டது..

"நேத்தாஜி இறந்திருக்க மாட்டார்.." அடித்துச் சொன்னான் ஆதவன்..

அப்படித்தான் இருக்குமென்று அவனுடன் இருந்த சலிமும், மூர்த்தியும் ஆமோதித்தார்கள்.. மருதாச்சலம் எந்தக் கருத்தையும் கூறவில்லை.. மௌனத்தின் உறைவிடம் போல அமைதியாகி விட்டார்.. இறுகிப் போன அவரின் மௌனத்திற்குப் பின்னால் புதைந்திருக்கும் அவரது மனதின் குமுறல்களை கலங்கியிருந்த அவரது விழிகள் புலப் படுத்தின..

"தைவான் நாட்டில விமான விபத்தில இறந்துட்டாராம்.."

"எப்படா இது நடந்தது..?"

"இந்த ஆகஸ்டு 18-ந் தேதியிலதான் நடந்திருக்குடா சலிம்.. பார்மோசா வழியா மன்சூரியா போகனும்னு நேதாஜி அவரோட நம்பிக்கையான விசுவாசிகளான ஆறேழு

பேரோட விமானத்தில ஏறினாராம்.. அதுதான் இந்த உலகம் நேதாஜியை கடைசியா பார்த்ததாம்.. தைவான் விமான விபத்தில தப்பினதா சொல்லப்படற ஹபிபுர் ரஷ்யமான் நேதாஜி இறந்து விட்டார்ன்னு சாதிக்கிறாராம்.. மத்தவங்க என்ன ஆனாங்கன்னு தெரியலையாம்..”

“யார்..? கர்னல் ஹபிபுர் ரஹ்மானா..?”

“அவரே தான்..”

“அவர் தலைவருக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திட்டா சாகிறவரைக்கும் காப்பாத்துகிறவராச்சே.. உண்மையைச் சொல்ல மாட்டார் ஆதவா..”

“ம்ம்ம்.. நானும் அதையேதான் நினைக்கிறேன்.. ஜப்பான் அரசுக்கு நேதாஜி மேல மரியாதை அதிகம்டா மூர்த்தி.. அதனால நேதாஜியின் பாதுகாப்புக்காக அவர் மறைந்து வாழ தோதா இருக்கட்டும்ன்னு நேதாஜி இறந்து விட்டதா சொல்லியிருக்கலாம்..”

“ஐ.என்.ஏ வுக்கு வந்த நிலைமையைப் பார்த்தியாடா.. சிங்கம் போல சீறி நின்னோமேடா.. வெள்ளைக்காரங்களை ஓட, ஓட விரட்டினோமே.. இப்பக் காட்டுக்குள்ள போர்க் குற்றவாளிகளா பதுங்கி மறைஞ்சுக் கிட்டு இருக்கோமே..”

சலீமின் வேதனை மற்ற இரு இளைஞர்களையும் தொற்றிக் கொண்டது.. மருதாச்சலம் பேச்சை மறந்து போனவராக வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.. இருண்டிருந்த கானகம் போல இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்களை இருள் போர்த்தி மறைத்தது..

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டின் பங்கு பெற்றிருந்த நேசநாடுகளின் அணி வெற்றியடைந்து விட்டது.. இந்திய தேசிய ராணுவம் ஆதரித்த அச்சு நாடுகளின் அணி தோல்வியடைந்து விட்டது.

1945-ல் ஜெர்மனி சரணடைந்த போதே இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்து விட்டது.. ஹிட்லர் தனது காதலிக்கு விசம் கொடுத்து விட்டுத் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்து வீழ்ந்தார்.. நேதாஜிக்கு உதவுவதாகக் கூறிய வலிய மரம் இற்று மண்ணில் வீழ்ந்து விட்டது.

ஹிட்லர் கொடுங்கோலனாக இருந்திருக்கலாம்.. சர்வாதிகாரியாக இருந்திருக்கலாம்.. சரித்திரம் அவனை வசைபாடலாம்..

ஆனால் அவன்தான் இந்தியாவின் விடுதலைக்கான ஆதரவைத் தெரிவித்தவன்.. நேதாஜியுடன் கைகுழுக்கி உடன் அமர்ந்து உரையாடியவன்.. தலைமறைவாக இருந்த நேதாஜியை பெர்லினுக்கு அழைத்துக் கொண்டவன்..

ஜெர்மனியின் சரணடைதலுக்குப் பின்னரும் சின்னஞ்சிறு ஜப்பான் நேசநாடுகளை எதிர்த்து நின்றது.. ஜப்பான் மீது 'ஹிரோஷிமா..' 'நாகசாகி..' என்ற இடங்களில் அணு குண்டுகளை வீசிப் பணிய வைத்தன நேசநாடுகள்.. அதன் கொடூரத்தைத் தாங்க முடியாமல் பிரிட்டிஷ் ராணுவத்திடம் சரணடைந்தது ஜப்பான்..

அப்போது சிங்கப்பூரில் இந்திய தேசிய ராணுவத்தின் தலைமையகமான 'கதே மாளிகை..'யில் இருந்தார் நேதாஜி.. அவரை அங்கிருந்து வெளியேறி விடும்படி செய்தி அனுப்பினார் ஜப்பானின் ஜெனரல் டோஜோ..

1945-ம் வருடம் ஆகஸ்டு மாதம் பதினெட்டாம் நாள், ஹபிபுர் ரஹ்மான் மற்றும் ஜப்பான் தளபதிகள் ஒன்பது பேருடன் தனி விமானத்தில் சிங்கப்பூரை விட்டுக் கிளம்பினார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்..! தைவான் நாட்டில் 'மஞ்சூரியா' என்ற இடத்தில் எரிபொருள் நிரப்ப தரையிறங்கியது விமானம்.. அதன் பின் என்ன ஆனது..?

எவருக்கும் புலப்படாத.. எவராலும் கண்டு பிடிக்க முடியாத மர்மமல்ல இது..! மனம் இருந்திருந்தால் மார்க்கம் இருந்திருக்கும்.. மனம் வைக்க எவருக்கும் மனம் இல்லை என்பதுதான் உண்மை..

காற்றில் கலந்த புகைபோல என்று மீண்டும் மீண்டும் சொன்னால் அது மிகையாகாது.. அவ்வாறுதான் நேதாஜி மாயமாக மறைந்து போனார்..

ஜப்பான் வானொலி தைவான் நாட்டில் நடந்த விமான விபத்தில் நேதாஜி காலமாகி விட்டார் என்று அறிவித்தது..

அந்த அறிவிப்பை உண்மையென்று அவரது ஆதரவாளர்களும், நேதாஜியின் குடும்பத்தினரும் ஏற்க மறுத்து விட்டார்கள்..

"இந்தியாவில இருக்கிற பிரிட்டிஷ் கவர்ண் மெண்டோட வைஸ்ராஸ் அர்ச்சினால்டு தன்னோட டைரியில நேதாஜி இறந்திருக்க மாட்டார்.. அவர் மறைந்து வாழ்வதற்காக இந்த செய்தி கொடுக்கப் பட்டிருக் கலாம்ன்னு சந்தேகிக்கிறேன்னு எழுதியிருக் காராம்டா.."

நாட்டு நிலவரத்தை அறிந்து கொள்வதற்காக தில்லி சென்று திரும்பி வந்த சலிம் சொன்னான்.. மருதாச்சலம் அப்போதும் எதையும் பேசவில்லை.. அவரை

உற்றுப் பார்த்த இளைஞர்கள் அவருக்கு முன்னரே இந்த செய்தி தெரிந்திருக்கலாம் என்று பேசிக் கொண்டார்கள்..

"1937-ல 'ஓர் இந்தியனின் புனித யாத்திரை..'ன்னு தன்னோட சுயசரிதத்தை எழுத ஆரம்பிச்சார்டா நேதாஜி.." பெருமூச்சு விட்டான் ஆதவன்..

"என்னுடைய நம்பிக்கை, தத்துவம்ன்னு தலைப்புக் களைக் கொடுத்து அவர் எழுதினது 10 அத்தியாயங்கள் மட்டும்தான்.." மூர்த்தி வேதனையுடன் சொன்னான்..

'புனித யாத்திரைக்கு காசி, ராமேஸ்வரத்தை தன்னகத்தில் கொண்டிருக்கும் இந்தியாவில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்ற மாவீரனின் புனித யாத்திரைக்கு இடமேயில்லை போல..' மனதுக்குள் நினைத்துக் கொண்டான் ஆதவன்..

இந்திய தேசிய ராணுவம் தோல்வியுற்றதில் நேசநாடுகள் நேதாஜி சுபாஷ் சந்திர போஸை 'போர்க் குற்றவாளி..' என அறிவித்து விட்டன..

அவர் என்ன குற்றம் செய்தாராம்..? இந்திய தேசிய ராணுவம் அமைத்து இந்தியர்களின் விடுதலைக்காக பாடுபட்டாராம்..

நேச நாடுகள் 'போர்க் குற்றம்' என்று சொன்னது இந்திய சுதந்திரத்திற்காக நாடு நாடாக அலைந்து நேதாஜி ஆதரவு திரட்டியதைத்தான்..

உண்மை அது மட்டுமல்ல.. இந்திய தேசிய ராணுவத்தால் இந்தியாவின் இந்திய ராணுவத்திற்குள் பிரிட்டிஷாரின் மீதான எதிர்ப்பு வெளிப்படையாக தோன்றி

பிட்டது.. இந்திய தேசிய ராணுவத்தின் மீது இந்தியாவின் இந்திய ராணுவத்திற்கு பரிவு இருந்தது.. இரண்டாம் உலகப் போரைப் போல மற்றொரு போர் தோன்றினாலோ.. இந்தியாவிற்குள் போராட்டம் ஏற்பட்டாலோ.. அதை அடக்க இந்திய ராணுவத்தை நம்ப முடியாது என்பதை பிரிட்டிஷ் அரசாங்கம் தெள்ளத் தெளிவாக புரிந்து கொண்டு விட்டது.. இந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகி விட்ட பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு நேதாஜியின் மீது கட்டுக்கடங்காத கோபம் ஏற்பட்டது.

நேசநாடுகளுக்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மீது ஆவேசமான கோபம் ஏற்பட்டு விட்டதில் அரைப் பார்த்த இடத்தில் தண்டிப்பதற்காக அவர்கள் வன்மத்துடன் காத்திருந்தார்கள்..

உலகையே வலம் வந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.. இரண்டாம் உலகப் போரில் மகத்தான வெற்றியைப் பெற்ற நேச நாடுகளிடம் சிக்கவேயில்லை.. மாயமாய் மறைந்து விட்டார்..

இந்திய தேசிய ராணுவத்தின் விசாரணையின் போது.. அது போரினால் வலுவழந்திருந்த பிரிட்டிஷாரின் மனநிலையில் இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியது என்கிறது..

"பிரிட்டிஷ்காரன் ஓடிப் போயிடுவாண்டா.. இதுக்கு மேலேயும் இந்தியாவில தாக்குப் பிடிக்க முடியாதுன்னு தெரிஞ்சுக்கிட்டான்.."

ஆதவனின் வார்த்தைகளுக்கு அவனுடைய தோழர்கள் கைதட்டி தங்களின் உற்சாகத்தைத் தெரிவித்தார்கள்..

"பிரிட்டிஷ் இந்தியாவை விட்டு வெளியேற இதுவே தூண்டுதல்.." என்றான் சலீம்..

அவர்கள் மறைந்து வாழ்ந்தார்கள்.. அவ்வபோது மறைவிடத்தை விட்டு மாறுவேடத்தில் வெளியேறி இந்திய நகரங்களில் சுற்றி வந்தார்கள்.. அரசியல் சூழலைப் பற்றிய விவரங்களை சேகரித்து வந்து மற்றவர்களிடம் சொன்னார்கள்..

இந்தியாவை விட்டு வெள்ளையர்கள் வெளியேறப் போவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன..

நேதாஜி சுபாஷ் சந்திர போஸைப் பற்றி இந்திய தேசியத் தலைவர்கள் கவலை கொள்ளவே இல்லை.. செல்வாக்கு மிக்க செல்வந்தரின் குடும்பத்தில் பிறந்திருந்தும்.. 1915-ஆம் ஆண்டில் கொல்கத்தா பிரசிடெண்சி கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதே.. ஆங்கில இனவெறி கொண்ட சி.எப். ஓட்டன் என்ற ஆங்கில ஆசிரியரிடம் இந்தியர்களை அவமதித்தார் என்று சண்டைக்குப் போய் கல்லூரியை விட்டே நீக்கப் பட்ட சுபாஷ் சந்திரபோஸை இந்தியாவின் விடுதலைப் போராட்டத் தலைவர்கள் வெகு எளிதாக தூக்கி எறிந்து விட்டார்கள்.. நேதாஜியைப் பற்றிய பேச்சையே எடுக்க வில்லை..

1946-ல் நேதாஜி ரஷ்ய எல்லையில் காணப் பட்டதாகக் கூறப்படுவதாக சலிம் பரபரப்புச் செய்தி யொன்றைக் கொண்டு வந்தான்..

"ரஷ்யாவில இருந்து நேருவுக்கு நேதாஜி ரகசியக் கடிதம் எழுதி அனுப்பினாராம்.." என்று துணைச் செய்தியொன்றையும் அவனே சொன்னான்..

"நேரு, நேதாஜிக்கு நெருங்கின நண்பரா இருக்கலாம்.. ஆனா நேதாஜிக்கு உதவ மாட்டார்ன்னுதான் நினைக்கிறேன்.." ஆதவன் சிந்தனையோடு சொன்னான்..

மற்றவர்கள் தலையை அசைத்தார்கள்.. அரசியல் சதுரங்கத்தின் ஆடு புலி ஆட்டத்தில் வெட்டப்படும் காய்களாக தலைமைப் பொறுப்புக்குத் தகுதியானவர்கள் வீழ்த்தப் படுவார்கள் என்பது சரித்திரம் உரைக்கும் குரூரம்.. விடுதலைப் போராட்ட வீரர்கள் மட்டும் அதற்கு விதி விலக்காகி விடுவார்களா என்ன..?

1939-ம் ஆண்டில்.. பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார் நேதாஜி.. அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று பகிரங்கமாக அறிவிப்பு விட்டு உண்ணா விரதம் இருந்தார் நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி.. அஹிம்சாவழியின் மாறுபட்ட தீவிரவாத கருத்துடன் இருந்த சுபாஷ் சந்திர போஸீக்கு அவர் அளித்த தண்டனை அது.. சுபாஷ் தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார்.. காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர் உரிமையையும் துறந்து வெளியேறினார்..

அதே தண்டனை இரண்டாம் முறையாக நேதாஜிக்காக காத்திருந்தது..

"நேதாஜி இந்தியாவுக்கு திரும்பிட்டா இந்தியாவின் தலைமைப் பதவியில யார் உட்காருவாங்க..? நீங்களா இல்லை நேதாஜியான்னு மௌண்ட் பேட்டன் நேருவிடம் கேட்டதாப் பேசிக்கிறாங்கடா ஆதவா.."

இதையும் சலீம்தான் வந்து சொன்னான்.. இதுதான் நடக்குமென்று அவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள்..

நேதாஜி உயிருடன் இருக்கிறார்.. எங்கோ ஓர் மூலையில் அவர் இருக்குமிடத்தை இந்திய தேசத்தின் விடுதலைக்காக அறவழியில் பாடுபட்ட தலைவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தெரிந்துதான் வைத்திருந்தார்கள்.. அங்கும் இங்குமாக சிதறி மறைந்து வாழ்ந்தவர்களால் அதைப் பற்றித் தங்களுக்குள்தான் பேசிக் கொள்ள முடிந்தது.. உலகம் கேட்க உரக்கச் சொல்ல முடியவில்லை..

அனைத்து சாகசங்களையும் கொண்டிருந்த நேதாஜி சுபாஷ் சந்திரபோஸிடம் வீரம் குவிந்து கிடந்தது.. அரசியலுக்கான 'நெளிவு, சுளிவு' தான் இல்லாமல் போய் விட்டது.

நேதாஜி உயிருடன் இருப்பதற்கான ஆதாரங்கள் ஏதும் உள்ளதா என்று 1946-ம் ஆண்டில் சர்தார் வல்லபாய் படேலிடம் கேட்கப்பட்டது.

"அவர் இல்லைன்னு சொல்லிட்டாருடா.." என்றான் சலீம்..

"அது மட்டுமில்லைடா.. இந்த 1946-ம் வருசத்தி லேயே ஜூலை மாதம் 22-ம் தேதியில் காந்திஜியோட காரியதரிசிகளில் ஒருத்தரான குருஷேவ் நெளரோஜி காந்திஜியோட சார்பா, புரபசர் லூயிங் பிஷருக்கு கடிதம் ஒன்னு எழுதினாராம்.. அந்தக் கடிதத்தில இந்திய தேசிய ராணுவத்தின் மேல இந்தியாவின் ராணுவத்துக்கு பரிவு இருக்கு.. நேதாஜி ரஷ்யாவின் உதவியோட இந்தியாவுக்குத் திரும்பி விட்டால் இந்தியர்களின் எழுச்சியை காந்தியாலோ.. காங்கிரஸாலோ தடுத்து நிறுத்த முடியாதுன்னு சொல்லப்

பட்டிருந்ததாம். இதில எந்த அளவுக்கு உண்மை இருக்குன்னு எனக்குத் தெரியலைடா..”

இந்தியாவின் விடுதலைக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி விட்டன.. “வெளியே போகப் போகிற வெள்ளைக்காரன் நாட்டைத் துண்டு போட்டுட்டுப் போறாண்டா மூர்த்தி..” சலீமின் கண்கள் சிவந்திருந்தன.

இந்த முறை அவன் கொண்டு வந்த செய்தியில் குழுவிலிருந்த தோழர்கள் துடிதுடித்துப் போய் விட்டனர்.. ஒன்றுபட்ட இந்தியா பிளவு படப் போகிறதா..?

“இந்தியாவை மதவாரியா ரெண்டாத் துண்டு போடப் போறாங்கடா.. இதுக்கு காந்தியும், ஜின்னாவும் ஆதரவைத் தெரிவிச்சிட்டாங்களாம்..”

“எப்படிடா சலீம்..! இரட்டைக் குழல் துப்பாக்கியா இணைந்து நின்று போராடினோமே.. நாம் ஒரு தாயின் பிள்ளைகள்டா.. நமக்குள்ளே பிரிவினையா..? நீவேறு.. நான் வேறா சலீம்..?”

“அப்படின்னு நாம நினைக்கலைடா நம்ம தேசத்தலைவர்கள் நினைக்கிறாங்க ஆதவா.. இந்துக்கள் அதிகமா இருக்கிற பகுதி இந்தியாவாம்.. முஸ்லீம்கள் அதிகமா இருக்கிற பகுதிகள் பாகிஸ்தானும், பங்களாதேசுமாம்.. கொடுமைடா ஆதவா..”

அது கொடுமையாகத்தான் இருந்தது.. பாரதநாடு இரணடு துண்டுகளாகப் பிரிக்கப் பட்ட வங்கப் பிரிவினையின் போது எந்தப் பக்கம் செல்வது என்று புரியாமல் மக்கள் கதறிப் புலம்பினார்கள்.. முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்த இந்துக்கள் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு கனத்த இதயத்துடன்

வெளியேறினார்கள்.. இந்தியாவில் மதச்சார்பு அறிவிக்கப் படப் போவதாக இருந்ததால் விருப்பமுள்ள முஸ்லீம்கள் இந்தியாவிலேயே தங்கிக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருந்ததால் இந்தியப் பகுதிகளைவிட்டு வெளியேறிய முஸ்லீம்களின் எண்ணிக்கை குறைவான தாகவே இருந்தது.. பிரிவினையின் போது பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டார்கள்.. பல குடும்பங்கள் சிதைந்தன.. ரத்த ஆறு ஓடியது..

"இதுக்காடா சுதந்திரம் வேணும்னு போராடினோம்..?" ரத்தம் கொதித்தான் ஆதவன்..

"நேதாஜி இருந்திருக்கனும்டா.. இந்தியா துண்டாகிறதை ஒருநாளும் அவர் அனுமதிச்சிருக்க மாட்டாரு.." கனத்த மனதுடன் சொன்னான் சலீம்..

அதுவரை பேசாமல் இருந்த மூர்த்தி சலிமைப் பார்த்தான்...

"நீ பாகிஸ்தானுக்குப் போயிருவியா சலீம்..?" துக்கத்துடன் கேட்டான்..

"மாட்டேன்.." சலீம் தலையசைத்து மறுத்தான்..

"இது நான் பிறந்து வளர்ந்த பூமிடா.. இந்து, முஸ்லீம்ன்னு பேதம் வைச்சா இந்திய தேசிய ராணுவத்தில ஒன்னா நின்னு போராடினோம்..? மதம்ங்கிறது அடையாளம் மட்டும் தாண்டா.. மனிதாபிமானத்திற்கு அது வேலி போட்டிறக் கூடாது.."

மன ரணத்துடன் சொன்ன சலீம் ஓர்நாள் மனைவியென்று ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து நின்றான்.. தோழர்கள் ஆச்சரியத்துடன் வாழ்த்துச் சொன்னார்கள்..

"உன் பெயரென்ன சகோதரி..?" அன்புடன் ஆதவன் வினவிய போது..

"ரத்னாபாய்.." என்றாள் அந்தப் பெண்..

"ஆமாம் ஆதவா.. இவள் இந்துப் பெண்தான்.. வங்கப் பிரிவினையின் போது சூறையாடப் பட்டவள்.. இவளுக்கு நான் வாழ்வு கொடுத்திருக்கேன்னு சொல்ல மாட்டேன்.. இவகூட வாழ்ந்தா புண்பட்ட என் மனம் ஆறும்.. ஏதோ ஒரு வகையில என் வாழ்வும் பயன்பாடா இருக்குதுன்னு மனசு அமைதியாகும்.. என்னால முடிஞ்சது.. சுதந்திரம் வாங்கப் போற நம்ம நாட்டுப் பெண்ணொருத்திக்கு வாழ்க்கை கொடுக்க முடிஞ்சது தான்ங்கிற நிம்மதியோட நான் வாழ்வேன்.."

ஆழமாகப் பேசிய சலீம்மை கட்டியணைத்துக் கொண்டான் ஆதவன்.. அவனுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை..

1947-ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15-ம் நாளில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைக்கப் போவதாக அறிவிக்கப் பட்டது..

"இப்பக்கூட அந்த மௌண்ட் பேட்டன் சும்மா போறானா..? இந்திய தேசிய ராணுவத்துக்க முக்கியத்துவம் கொடுக்காதீங்கன்னு நேருகிட்டச் சொல்லியிருக்காண்டா.." சலீம் வந்து செய்தி சொன்னான்..

"அவன் சொன்னா நேரு கேட்டுக்குவாரா..?" .

"கேட்காம இருப்பாரா..? நேதாஜி இந்தியாவுக்குத் திரும்பி வந்தா அவரிடம் தலைமைப் பதவியை தங்கத் தட்டில் வைத்துக் கொடுத்தாகனும்.. தேசத் தலைவர்களுக்கு வேற வழியிருக்காதுன்னு மௌண்ட்

பேட்டன் சொன்னதா பேசிக்கிறாங்கடா.. இப்படிச் சொன்னா யாரா இருந்தாலும் யோசிப்பாங்கதானே..?"

"இந்திய விடுதலைக்கு இவங்க மட்டும்தான் பாடுபட்டாங்களா..?"

"அப்படின்னு இவங்க சொல்லிக்கிறாங்க.. உண்மையான இந்திய வரலாறை மக்களுக்கு தெரியாம மறைச்சு வைச்சுட்டு புனையப்பட்ட புதுவரலாறை மக்களுக்கு கொடுக்கப் போறாங்க.. உனக்கொன்னு தெரியுமா..?"

"என்ன சலீம்..?"

"பிரிட்டிஷ் வைஸ்ராய் கிளைமண்ட் அட்லியிடம் கல்கத்தாவில இருக்கிற பி.வி.சக்ரவர்த்தி பேசிக்கிட்டு இருந்தப்ப அட்லி பல கருத்துக்களைச் சொன்னாராம்.."

"என்னன்னுடா..?"

"காந்தியின் வெள்ளையனே வெளியேறு இயக்கம் 1942-ல ஆரம்பிக்கப் பட்டதில்ல..? அது பிரிட்டிஷை பாதிக்கவே இல்லையாம்.. அப்ப இருந்த உணர்ச்சிப் பெருக்கு கூட 1940-ல உத்தம்சிங் ஜாலியன் வாலா பாக் படுகொலைக்காக ஜெனரல் டயரைச் சுட்டுக் கொன்னதால ஏற்பட்டதுதானாம்.. அதன் செல்வாக்கு ரொம்ப ரொம்பக் குறைவாம்.. உண்மை என்னன்னா நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் ராணுவ நடவடிக்கைகள் இந்தியாவில் பிரிட்டிஷ் அரசின் அடித்தளத்தைப் பலவீனப் படுத்திருச்சாம்.. நேதாஜியோட அதிரடிப் போராட்டம்தான் வெள்ளயரை அசைத்துப் பார்த்ததாம்.. இந்திய தேசிய ராணுவத்தின் மேல பரிவு கொண்டிருக்கிற இந்திய ராணுவம் பிரிட்டிஷ் அரசுக்குச் சாதகமாக இருக்காது என்பதை உணர்ந்து

கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியேறும் முடிவை எடுத்திருச்சாம்..”

“அப்படித் தனியொரு மனிதனா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்துக் காட்டின அந்த சாதனை யாளனுக்குத்தான் சுதந்திர இந்தியாவில வாழ இவங்க இடம் தர மாட்டேங்கிறாங்களே..”

பேச்சற்ற கனத்த மௌனம் அங்கு விழுந்தது.. ஆதவன்தான் முதலில் மௌனத்தைக் கலைத்தான்..

“எது எப்படியிருந்தாலும் நாம் எதுக்காக பாடுபட்டோமோ.. அந்த நல்ல நாள் வரப்போகுது.. இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் சுதந்திரம் கிடைக்கப் போகுது.. அந்த சந்தோசத்தில நாமும் பங்கெடுத்துக்கலாம் சலீம்..”

“வெளிப்படையாகவா..?”

“மறைஞ்சு நின்னு கொண்டாடலாம்..”

“இப்படியே எத்தனை காலம் மறைஞ்சு வாழப் போறோம்..”

“சுதந்திரத்துக்குப் பின்னால நமக்கு விடிவு வருமான்னு பார்க்கலாம்.. இந்திய ராணுவம் இந்திய தேசிய ராணுவத்தை கை விட்டு விடாது.. அவங்களோட வற்புறுத்தலுக் காகவாவது நம்மைப் பத்தி தேசத்தலைவர்கள் யோசிப்பாங்க.. மக்களும் கேள்வி கேப்பாங்கள்ல..?”

தோழலர்கள் பிரிந்து அவரவர் ஊருக்குப் பயணமானார்கள்.. மருதாச்சலம் பிரிந்து தனியாகக் கிளம்பி விட்டார்.. எப்போதும் அதுதான் அவர்களுக்கு இடையே நிலவும் வழக்கம் என்பதால் ஆதவன் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.. ஒட்டு தாடியும், மீசையுமாக.. முகத்தை

மறைக்கும் தலைப்பாயுடன் அவன் ரயிலில் ஏறி உட்கார்ந்தான்.. கடந்த போன ரயில் நிலையங்களில் காங்கிரஸின் தொண்டர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கிக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.. ஆதவன் இருந்த ரயில் பெட்டியில் நடனக் குழுவினர் பயணம் செய்தார்கள்.. பாட்டும் நடனமுமாக அந்தப் பெட்டியே விடியப் போகும் அந்த சுதந்திர விடியலைக் கொண்டாடிக் கொண்டு வந்தது..

“இப்பக் கப்பலேறிப் போயாச்சு..
சுத்தமான ஜராச்சு கண்ணம்மா..
நட்டநடு ராவாச்சு..
நட்டவிதை பூவாச்சு பொன்னம்மா..
விடியும் வரையில் போராடினோம்..
உதிர நதியில் நீராடினோம்..
வைக்கல் எல்லாம் வளாச்சு..
துக்கம் எல்லாம் தூளாச்சு கண்ணம்மா..
நம்ம வாசல் தேடி சாரல் வரும்..
மெதுவானம் தூவும் தூறல் வரும்..
வாழ்வில் சூழ்ந்த சோகம் யாவும்..
இப்பக் கப்பலேறிப் போயாச்சு..
சுத்தமான ஜராச்சு கண்ணம்மா..”

மத்தளத்தைக் கையில் ஏந்தி சுழன்றாடிய அந்த வாலிபன் தலையின் முடிக்கற்றைகள் இடையூறு செய்யாமல் இருக்க தலைப்பாகை கட்டியிருந்தான்.. அவனுடன் ஆடிய பெண் கண்களில் மையலோடு முகம் முழுவதும் காதலோடு இணைந்து ஆடினாள்.. காதலர்களாக இருக்கலாம் என்று நினைத்துக் கொண்டான் ஆதவன்.. அவன் மனதில் தாமரை வந்தாள்.. அந்தக் கொடூரமான நாள்

மட்டும் குறுக்கிடாமல் இருந்து ராபர்ட்டிடம் அவள் நன்றிக்கடன் படாமல் இருந்திருந்தால் இந்த நாளில் அவளுடன் ஆதவன் பாட்டுப்பாடி கொண்டாடியிருப்பான் என்ற நினைவில் அவனுக்குப் பெருமூச்சு வந்தது..

"வண்ணமான் வஞ்சிமான் நீர்க்கோலம்..
கண்களால் கன்னத்தில் போட..
இன்னுமா.. இன்னுமா.. போர்க்கோலம்
இங்கு நீ.. அங்கு நான்.. போராட..?"

அவன் மனக் கண்ணில் சுழன்றாடி கேள்வி கேட்டாள் தாமரை..

'ஏண்டி உன்னை விட்டுட்டு நான் மட்டும் அன்னைக்குத் தப்பிச்சேன்..?'

அத்தனை தினங்களாக அமிழ்ந்திருந்த கேள்வி ஆதவனின் நெஞ்சத்தில் எழுந்து நின்றது.. தாமரையின் மீதான தாபம் அவன் நெஞ்சத்தை அலைக்கழித்தது.. இந்தியாவிற்கு விடியல் வந்து விட்டது.

அவனுக்கு..?

"உன்னைக் கேட்டா என் நெஞ்சை
அள்ளிக் கொடுத்தேன்..?
தினம் நான்தான் என் அன்பே..!
முள்ளில் படுத்தேன்..
நானோர் தீவாய் ஆனேன் வாவா..
அம்மம்மா நாளெல்லாம்..
கானல் நீரைக் குடித்தேன்..
இப்பக் கப்பலேறிப் போயாச்சு..
சுத்தமான ஊராச்சு கண்ணம்மா.."

மனதுக்குள் பொங்கி அவன் பாடினான்.. ஆடிக் கொண்டிருந்த நடன மங்கை அவனைத் திரும்பிப் பார்த்து

விட்டுக் காதலனிடம் ரகசியமாக ஏதோ சொன்னாள்.. அவன் கண்சிமிட்டிச் சிரித்தான்.. இருவரும் ஆதவனை ஓர் புரிந்து கொள்ளலுடன் பார்த்தார்கள்..

"அன்னமே..! அன்னமே.. நான்சொல்லி..!
வந்ததா தென்றலும் நேற்று..?
உன்னையே உன்னையே நான் எண்ணி
வெந்ததைச் சொன்னதா பூங்காற்று..?"

ஆதவன் ரயில் பெட்டியின் ஜன்னலில் தலை சாய்த்துக் கொண்டான்.. அவன் மனம் தாமரையைத் தேடியது.. அவன் கைக்கு எட்டாத தொலைவில் அவள் விலகிப் போய்விட்ட நிதரிசனத்தை தாங்க முடியாமல் அவன் மனம் கனத்தது..

எப்போதும் போல இருந்திருந்தால்.. இந்தியாவின் விடுதலைக்காக சந்தோசம் கொண்டாடிக் கொண்டிருக்கும் அந்த நல்ல நாளில் பொன் விளைந்த களத்தூரில் தணிகாசலத்தின் வீடும் மருதாச்சலத்தின் வீடும் திருமணக் கோலம் பூண்டிருக்குமே..

இந்திய விடுதலைக்காக காத்து நின்ற தனஞ்ஜெயனுக்கும், ஆதவனுக்கும் செவ்வந்தியையும், தாமரையையும் மணம் முடித்துப் பெண் கொடுத்து பெண் எடுக்கும் வைபவத்தை இரு வீட்டிலும் நிகழ்த்தியிருப் பார்களே..

'அப்படி மட்டும் நடந்திருந்தா..?'

"உந்தன் காலில் மெட்டிபோல்..
கூட நடப்பேன்..
உந்தன் கண்ணீருக்கு இமைபோல்
காவலிருப்பேன்..

மாலைசூடி.. தோளில் ஆடி..
கைதொட்டு.. மெய்தொட்டு..
உன்னில் என்னைக் கரைத்திருப்பேன்..
இப்பக் கப்பலேறி போயாச்சு..
சுத்தமான ஊராச்சு கண்ணம்மா..
நான் நட்ட விதை என்னாச்சு..?
பட்டுப் போய் விழுந்தாச்சு பொன்னம்மா..”

ஆதவனின் துயரத்தில் நடனக் குழுவினர் அமைதியாகி விட்டார்கள்.. ஆடிக் கொண்டிருந்த இளைஞன் ஆதவனை அனுதாபத்துடன் பார்த்தான்.. அந்தப் பெண் அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்..

“இந்தியா..வின் விடுதலை வந்தாச்சு..
எனக்கான விடுதலை எங்கே போச்சு..?
மீளாத்துயரில்.. என்னைத் தள்ளி விட்டு..
நீ மட்டும் நிம்மதியாக இருந்தாச்சு..
இந்த வானும் மண்ணும் சாட்சி சொல்லும்..
நாம் வாழ்ந்த வாழ்வை
உன் மனச்சாட்சி சொல்லும்..
தீயில் நானும் நடக்க.. நீயும் துயரில் மிதக்க..
என்னடி.. என்னடி.. வாழ்க்கையிது..?
இப்பக் கப்பலேறிப் போயாச்சு..
சுத்தமான ஊராச்சு கண்ணம்மா..! கண்ணம்மா..!”

ஆதவன் இறங்க வேண்டிய ரயில் நிலையம் வந்து விட்டது.. இறங்கியவனுக்கு கை ஆட்டி வழியனுப்பி வைத்தார்கள் அந்த நடனக் குழுவினர்.. பதிலுக்கு கையாட்டி விட்டு இருளில் இறங்கி நடந்தான் ஆதவன்.. வாழ்க்கையும் இது போலதான் என்று அவனுக்குத் தோன்றியது..

ரயில் பயணம்தான் வாழ்க்கை.. வழியில் சிலர் வருகிறார்கள்.. சிலர் விடைபெறுகிறார்கள்.. என்ன வொன்று.. ரயில் பயணத்தில் போகுமிடம் எதுவென்று தெரிந்திருக்கும்..

வாழ்க்கைப் பயணத்தில்..? அது தெரியாமலே நகர்கிறது வாழ்க்கை..!

பொன் விளைந்த களத்தூரின் எல்லையை நெருங்கி விட்டான் ஆதவன்.. தூரத்தில் ஊர் தெரிந்தது.. விளக்கு களுடன் காணப்பட்டது.. சுதந்திரத்தின் கொண்டாட்டமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான் ஆதவன்.. கண்மாய்க் கரை மேல் ஏறத் துவங்கிய பாதையின் ஆரம்பத்திலிருந்த அகன்ற ஆலமரத்தின் கீழே மோட்டார் காரின் சிவப்புப் புள்ளிகள் ஒளிர்விட்டு மறைந்து கொண்டிருந்தன.. எவருக்கோ காட்டப்படும் அடையாளக் குறி போல அது தோன்றியதில் ஆதவன் மரத்திற்குப் பின்னால் மறைந்து நின்று உற்றுப் பார்த்தான்..

இருளை ஊடுறிவிய வெளிச்சக் கோடு அங்கே ராபர்ட் நின்று கொண்டிருப்பதை அவனுக்குக் காட்டியது..


'இவனா..? யாருக்குச் சிக்னல் கொடுக்கிறான்..? தாமரைக்கா..?'

ஆதவனின் யூகம் சரியானதாக இருந்தது.. கண்மாய்க் கரை மேட்டில் தாமரை தோன்றினாள்.. சரிந்து இறங்கிய பாதையில் இறங்கி ராபர்ட்டின் அருகில் வந்தாள்.. ஆதவனுக்கு நெஞ்சடைத்தது..

இதைக் காணவா அவன் அங்கு வந்தான்..?

"நீங்க சொன்னபடி நான் வந்து விட்டேன்.. வீட்டை விட்டு ஓடி வந்துட்டேன்.. போதுமா..?" உதடுகள் துடிக்கக் கேட்டாள் தாமரை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



19

புறக்கணிப்பை விட கொடிய தண்டனை.. இவ்வுலகில் ஏதுமில்லை...

"அதென்ன..? எதுக்கெடுத்தாலும் நேதாஜி.. நேதாஜிங்கறிங்க.. அவர்தான் வீரர்.. மத்தவங்கள்ளாம் சோடையா..? அப்ப பகத்சிங்கையும், உத்தம் சிங்கையும் என்னன்னு சொல்வீங்க..?"

யாமினி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.. அதைப் பார்க்க சித்தார்த்தனுக்கு வேடிக்கையாக இருந்தது.. தாமோதரன்தான் ஏற்கனவே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானே..

"உங்களுக்கு ஒன்னும் தெரியாதுங்கிறது இப்ப புரூவ் ஆகிருச்சா..?"

"என்னது..?"

"ஹிஸ்டரியில சொல்றேங்க.."

சித்தார்த்தனின் கண்கள் சிரித்தன.. அவன் அதைத்தான் சொல்லியிருப்பானா என்பதில் யாமினிக்கு சந்தேகம் இருந்தது.. தாமோதரனின் முன்னிலையில் அந்தச் சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொள்ள முனையாமல்..

"அதானே பார்த்தேன்.." என்று ஏற்றுக் கொண்டாள்..

"பகத்சிங்கும், உத்தம்சிங்கும் சுத்த வீரர்கள்.. சமரசமற்ற போராளிகள்ன்னு நேதாஜி பாராட்டினார்.. காந்திதான் கோபப்பட்டு அவங்களை வன்மையாக் கண்டிச்சார்.."

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவீங்க..?"

"எத்தனை தடவை சொன்னாலும் நீங்க மறந்து போயிடறீங்களே.."

"காந்தி ஆன்மீகத்தின் அடையாளம்.."

"நேதாஜி விவேகானந்தரை தன்னோட மானசீக குருவா ஏத்துக்கிட்டவர்.. அரசியலுக்கு வருகிறதுக்கு முன்னாலேயே துறவியாகனும்ங்கிற ஆசையில வீட்டை விட்டு வெளியேறி சுவாமி பிரம்மானந்தரைத் தேடிப் போனவர்.. அவரோட அருளாசியோட திரும்பி வந்தவர்.."

"இவ்வளவுதானா..? இன்னும் இருக்கா..?"

"நிறைய இருக்குங்க.. இந்து ஆன்மீகத்தின் தாக்கம் இருந்தாலும் நேதாஜிகிட்ட மதவாதமோ, பழமைவாதமோ இருந்ததில்லை.. எமிலிங்கிற ஆஸ்திரிய நாட்டில் பிறந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பெண்ணைத் தான் மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. அவரை சமதர்வாதின்னு சொல்லிக்குவார்.."

ஒன்றைக் கவனித்தாள் யாமினி.. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைப் பற்றிப் பேசும்போது சித்தார்த்தனின் முகம் ஒளிர்ந்தது.. காந்தியைப் பற்றிய பேச்சு வரும் போது தாமோதரனின் முகம் ஒளிர்ந்தது..

காலம் காலமாக நேதாஜியுடன் பழகியவனைப் போல அவரைப் பற்றிய அனைத்து விவரங்களையும் பிட்டுப் பிட்டு வைத்தான் சித்தார்த்தன்.. அவனுடன் வாதிட்ட அந்தப் பொழுது இன்பமானதாக யாமினிக்கு இருந்தது..

அந்த இன்ப உணர்வுகளுடன் அவள் வேலைகளைக் கவனித்தாள்.. அன்று முழுவதும் அவளிடத்தில் அந்த உற்சாகம் நீடித்தது.. சித்தார்த்தனிடம் கையெழுத்து வாங்கப் போன போது அவனும் அவளைப் போலவே உல்லாச மனப்பான்மையுடன் பாரதியின் பாடலை முணுமுணுத்துக் கொண்டருந்தான்..

"நின்னையே ரதியென்று..
நினைக்கிறேனடி கண்ணம்மா..
தன்னையே சகியென்று
சரணம் எய்தினேன்..
பொன்னையே நிகர்த்த மேனி
மின்னையே நிகர்த்த சாயல்..
பின்னையே நித்ய கன்னியே..!
கண்ணம்மா.."

கையெழுத்திட்டபடி அவன் அவளைப் பார்த்தான்.. தாமோதரன் அறையில் இல்லையென்ற சுதந்திர உணர்வுடன் அவளும் அவனைப் பார்த்தாள்..

அண்ணலும் நோக்கி.. அவளும் நோக்கியதில்.. கண்ணோடு கண் கலந்து.. ஏதோ ஒரு மாய உலகிற்கு அவர்களை இட்டுச் சென்றது..



20

வளம் பொங்கும் எம் திருநாட்டை வெள்ளையனிடம் விட்டு வைப்பதா..?

தாமரையின் மனம் சுக்கு நூறாக உடைந்திருந்தது.. ஆற்றங்கரையில் அவளைப் பிரிந்து போன ஆதவனை அதற்குப் பின்னால் அவளால் பார்க்கவே முடியவில்லை..

"உன்னாலதாண்டி.."

செவ்வந்தி சுட்டுவிரல் நீட்டி தாமரையைக் குற்றம் சாட்டினாள்..

"உன்னாலதான் எங்கண்ணன் சொல்லாம கொள்ளாம ஊரை விட்டுப் போயிருச்சு.. உன் ஒருத்தியால எங்க குடும்பமே எங்கண்ணனைப் பார்க்க முடியாம தவிச்சு நிக்குது.. இதுக்கு முன்னாலேயும் எங்கண்ணன் சொல்லாம போயிருக்கு.. ஆனா ஒரு மாசம், ரெண்டு மாசத்தில ஊரைப் பார்த்து ஓடி வந்திரும்.. இப்ப வருசம் தான் ஓடிக்கிட்டு இருக்கு.. எங்கண்ணன் ஓடி வரலையே..? பாதகி..! இந்த வெள்ளைக்காரப் பயகூட கொஞ்சிக் குழாவி எங்கண்ணனை ஊரை விட்டேத் துரத்திட்டயேடி ராட்சசி..!"

"இல்லை செவ்வந்தி.. கலெக்டரு கூட நான் கொஞ்சிக் குழாவினதில்ல.. அவரு நல்ல மனுசருடி.. விரல் நகம்கூட என் மேல படாம எட்டி நிக்கிற உத்தமரு.. தப்பாப் பேசாதேடி.."

"ச்சீ..! பேசாதே.. எங்கண்ணன் விண்..! நீ மண்ணுடி.. அதுவும் சேற்று மண்..! விண்ணுக்கும் மண்ணுக்கும்

எப்படிடீ பொருந்தி வரும்..? வெள்ளைக்காரங்களை விரட்டனும்னு அஹிம்சா வழியில உங்கண்ணனும், அப்பாவும் நிக்கிறாக.. உன்னக் கட்டிக்கனும்னு நினைச்சிருந்த எங்கண்ணனோ வெள்ளக்காரங்களோட சண்டை போட இந்திய தேசிய ராணுவத்திலேயே போய் சேர்ந்திருக்கு.. இவுகளுக்கு மத்தியில இருக்கிற நீ என்னடான்னா ஒரு வெள்ளைக்காரனைப் பாத்து விரல் நீட்டி உத்தமன்னுகிற.. மனுஷியாடி நீ..?"

'உனக்குத் தெரியாது செவ்வந்தி..' மனதுக்குள் மருகினாள் தாமரை..

'அந்த வெள்ளைக்காரன்தான் என் உயிரையும், மானத்தையும் காப்பாற்றினான்.. எனக்காக அவனோட ஆளையே சுட்டுக் கொன்னான்.. நான் கேட்டுக் கிட்டதுக்காக அவனைக் கொல்ல வந்த உன்னோட அண்ணனையே தப்பிப் போக விட்டான்.. அவன் நல்லவண்டி..'

சொல்ல முடியாது.. எதையும் வெளியில் சொல்ல முடியாது.. அவளைப் பிரிந்து ஆதவன் போய் நான்கு வருடங்களாகி விட்டன.. இரண்டு வருடங்களுக்கு முன்னால் இரண்டாம் உலகப் போர் முடிந்து விட்டது.. என்றும் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்களை 'போர் குற்றவாளி' என் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருக்கிறது என்றும் தணிகாசலமும், தனஞ்ஜெயனும் பேசிக் கொண்டார்கள்.. ஆதவனும், மருதாச்சலமும் என்ன ஆனார்கள்.. எங்கே போனார்கள் என்று தெரியாத நிலையில் தங்கம் மகளின் திருமணத்தை வற்புறுத்த ஆரம்பித்து விட்டாள்..

"இங்கே பாருடா தனா..! சுதந்திரப் போராட்ட வீரன்னா உன்னப் போல நெஞ்சை நிமித்தி நிக்கனும்.. இப்படி ஒளிஞ்சு மறைஞ்சு திரியக் கூடாது.. உன் சித்தப்பாவும் அந்த ஆதவனும் இருக்காங்களா.. இல்லையான்னு கூடத் தெரியலை.. ஆதவனுக்காக என் மக வாழ்க்கை பாழாகனுமா..? உன் அப்பாகிட்டக் கேட்டுச் சொல்லு.."

தணிகாசலம் என்னபதிலைச் சொல்வார்..? மாறுபட்ட கருத்திருந்தாலும் நேதாஜியின் சூரத்தனத்தில் அவர் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.. நேதாஜியே காணாமல் போய் விட்டபின்பு.. ஆதவனுக்காக அவர் எப்படி காத்திருப்பது..? அவர் பெண்ணைப் பெற்றவராயிற்றே..

"இந்தியாவுக்கு விடுதலை வரனும்னுதான கல்யாணத்த தள்ளிப் போட்ட..? இப்ப விடுதலை வரப் போகுதுன்னு ஊரு, நாட்டில பேசிக்கிறாங்களே.. அந்த நாளிலேயே உனக்கும் செவ்வந்திக்கும், தாமரைக்கும் சுப்பையா அண்ணனோட மகனுக்கும் கல்யாண நாளை குறிச்சிரலாம்.. உனக்கும் வயசாச்சு.. தாமரைக்கும் வயசாச்சு.. நானொன்னும் அநியாயமா பேசிறல.. செவ்வந்தியை நீ கட்டிக்கிறதுக்கு தடை சொன்னேனா..? ஆதவன் இருந்திருந்தா அவனுக்கு என் பெண்ணைக் கொடுக்கிறதுக்கு மறுப்புச் சொல்லியிருப்பேனா..? தங்கச்சி கல்யாணமாகாம வீட்டில உக்காந்திருக்க அவ முன்னாலே உன்னால செவ்வந்தி கூட சந்தோசமா வாழ்ந்திர முடியுமா..?"

எதை.. எதைக் கொண்டு அடித்து வீழ்த்த வேண்டும் என்ற வித்தையை தங்கம் எப்போது கற்றாள் என்று தெரியாதவர்களாக தணிகாசலத்தின் குடும்பத்தார் திகைத்துப் போனார்கள்.. தங்கத்தின் குறி தப்பவில்லை.. மருதாயியே சொல்லி விட்டாள்..

"பதினாறு வயசுக்கு மேலே வயசுக்கு வந்த பொண்ண வீட்டி வைச்சிருக்க மாட்டாக ராசா.. நாட்டில இல்லாத வழக்கமா நாம தாமரைய பதினாறு வயசு வரைக்கும் கட்டிக்கொடுக்காம நிறுத்தி வைச்சிட்டோம்.. இப்ப அவளுக்கு பதினேழு வயசாகுது.. செவ்வந்திக்கும் அதே வயசுதான்.. ஒன்னுக்கு ரெண்டு பொண்ணுகள வாழ விடாம நிறுத்தி வைக்கிறதுக்கு நமக்கு எந்த அதிகாரமுமில்லடா மகனே..! சுதந்திரம் கிடைக்கிற நாளில நம்ம வீட்டில ரெண்டு கல்யாணத்தையும் நடத்திரலாம்.."

தாயின் கட்டளை.. தகப்பனாரின் மௌனம்.. மனைவியின் வற்புறுத்தல்.. தணிகாசலம் பணிந்து விட்டார்.. தனஞ்ஜெயன் ஆதவனை நினைத்து மறுகினான்.. தாமரை கதறினாள்.. மனதுக்குள் வருத்தப் பட்டாலும் தணிகாசலம் கல்யாண நாளை நிச்சயம் செய்து விட்டார்..

விடிவதற்குள் சுதந்திரம் கிடைக்க வேண்டிய அந்த அற்புத நாளில் தணிகாசலத்தின் வீடு திருமணக் கோலம் பூண்டிருந்தது.. அதே இரவில் இங்கிலாந்துக்கு கிளம்ப வேண்டிய ராபர்ட்டிடமிருந்து தாமரைக்கு அழைப்பு வந்து விட்டது.. யாருக்கும் தெரியாமல் தாமரை வீட்டை விட்டு வெளியேறி ராபர்ட்டைத் தேடி வந்து விட்டாள்..

இது எதையும் அறியாத ஆதவன் ஆலமரத்தின் பின்னாலிருந்து நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"கம் தாமரை.." ராபர்ட் காரின் கதவை திறந்து விட்டான்..

ஆதவன் துயரத்துடன் கண்களை மூடிக் கொண்டான்.. நாட்டை விட்டு வெள்ளைக்காரனுடன் ஓடப் போகிற காதலியை வழியனுப்பி வைக்கத்தான் அவன்

அங்கு வந்தானா..? தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவன் கண் பார்த்த போது தாமரை காரில் ஏறாமல் அங்கேயே நின்றிருந்தாள்.. ஆதவனின் நெற்றியில் கோடுகள் விழுந்தன..

'இவ ஏன் தயங்கி நிற்கிறா..?'

"நான் என்ன கேட்டாலும் கொடுப்பேன்னு எனக்கு வாக்குக் கொடுத்திருக்கீங்க.. நினைவிருக்கிறதா..?" தாமரை கேட்டாள்..

"நினைவிருக்கிறது.. மறக்கவில்லை.. கேள்.. எதை வேண்டுமானாலும் கேள்.. என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து உன் வீட்டை விட்டு வெளியேறி வந்து விட்ட உனக்காக எதை வேண்டுமானாலும் நான் கொடுப்பேன்.. உனக்காக தமிழ் பேசக் கற்றுக் கொண்டவன் நான்.. உனக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன் தாமரை.."

"அப்படின்னா.. என்னை எனக்குத் திருப்பிக் கொடுங்க.."

"வாட்..?"

"ஆமாம்.. என்னை நீங்க கட்டுப் படுத்தக் கூடாது.. என்னால் உங்களுடன் வர முடியாது.. வரச்சொல்லி நீங்க என்னை வற்புறுத்தக் கூடாது.."

நிறுத்தி நிதானமாக தாமரை கேட்டதை மரத்தின் பின்னாலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஆதவன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

அவனறிந்த தாமரையா இவள்..? இத்தனை புத்திசாலித்தனம் எங்கிருந்து இவளுக்கு வந்தது..? இத்தனை சாதுர்யத்தை எங்கு கற்றாள்..?

ராபர்ட் யோசித்தான்.. அவன் முகத்தில் வந்த கடினத் தன்மையில் அவன் வாக்குத் தவறுவான் என்றே ஆதவன் நினைத்தான்..

ராபர்ட் வாக்குத் தவறவில்லை..

"ஆகட்டும்.." என்றான்..

"நிஜமாகவா..?" தாமரை ஆனந்தத்துடன் கேட்டாள்..

"மெய்யாகத்தான் சொல்கிறேன்.. நான் உன்னைக் காதலிக்கிறேன் தாமரை..! நீ கேட்டதைக் கொடுப்பதாக பலமுன.ற சொல்லியிருக்கிறேன்.. இதுவேண்டும் என்று எதையும் நீ என்னிடம் கேட்டதில்லை.. முதன் முதலாக உன்னை விட்டு விடும்படி கேட்டிருக்கிறாய்.. நீ கேட்டதைக் கொடுக்காமல் இருப்பேனா..? உனக்கான விடுதலையை கொடுத்து விட்டேன்.. உனது தேசம் விடுதலையாகும் இந்நாளில் நீயும் என் மீதிருக்கும் நன்றிக் கடனிலிருந்து விடுதலை பெறுகிறாய் தாமரை.." அமைதியாகச் சொன்னான் ராபர்ட்..

"நன்றி.. நன்றி.. நன்றி.." குதூகலித்தாள் தாமரை..

"பொறு தாமரை.. அந்த நன்றிக் கடனிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாய்.. இப்போது நன்றி சொல்கிறாயே.. இந்த நன்றிக் கடனை எப்படிக் கழிக்க போகிறாய்..?" ராபர்ட்டின் கேள்வி அவளைத் துளைத்தது.

'நினைத்தேன்..' ஆதவன் பல்லைக் கடித்தான்..

"அப்படின்னா.. உங்ககூட வரச்சொல்லிக் கேட்கப் போறிங்களா..?" தாமரையின் சந்தோசம் காணாமல் போனது.

"இல்லை.. அப்படிக் கேட்க மாட்டேன்.. அதற்கான நன்றிக் கடன்தானே இது.. உன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.. அந்த ஆசையை நீ விட்டுக் கொடுக்க வைத்து விட்டாய்.. என்னைத் திருமணம் செய்து கொள்ளாத நீ.. வேறு யாரையும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது.. வாக்குக்கொடு.."

தாமரை திகைத்து நின்றாள்.. அவள் விழிகளில் பெருகிய கண்ணீரில் ஆதவன் நிலை குலைந்தான்.. அவள் விடும் கண்ணீர் அவனுக்கானது என்பதில் காதலியின் துயரம் தீர்க்க இயலாதவனாக பரிதவித்தான்..

"பிராமிஸ் மி.."

ராபர்ட்டின் அழுத்தமான வார்த்தையில் ஓர் முடிவுக்கு வந்தவளாக கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள்.. ராபர்ட்டிடம் கை கூப்பினாள்..

"வாக்குக் கொடுக்கிறேன்.. இந்தப் பிறவியில் நான் யாரையும் கல்யாணம் செய்துக்க மாட்டேன்.. என்னை நம்பலாம்.."

ஏமாற்றத்தின் சீற்றம் கண்களில் செவ்வரியாக மாற தாமரையை உறுத்துப் பார்த்தபடி நின்றான் ராபர்ட்.. அவன் பார்வையில் பாதிக்கப்படாதவளாக பதுமையைப் போல தாமரை நின்றிருந்தாள்..

"இங்கிலாந்துக்கு போகிறேன்.."

"சரி.."

"இனி இந்தியாவுக்கு என்னால் வர முடியுமோ என்னவோ.."

"அப்படியா..?"

"என் வாழ்நாளில் உன்னை மறுபடியும் ஓர்முறை பார்க்க முடியாமல் போய் விடக்கூடும்.. தாமரை.."

"ஓஹோ.."

உணர்ச்சியற்ற ஒட்டுதலில்லாத குரலில் பதில் சொல்லிக் கொண்டிருந்த தாமரையை தீர்க்கமாக பார்த்த ராபர்ட்..

"என்மேல் உனக்கு அன்பு இருந்ததே இல்லையா தாமரை..?" என்று படபடத்தான்..

"இல்லை.." உறுதியாக பதிலளித்தாள் தாமரை..

"உங்கள் மீது மலையளவு மரியாதை இருந்தது.. இருக்கிறது.. இனியும் இருக்கும்.. அன்பு இருந்ததில்லை.. நீங்கள் நல்லவர், கண்ணியமானவர்ன்னு நினைச்சிருக்கேன்.. அழகானவர்ன்னு நினைச்சதில்ல.. உங்க மேல பக்தி வருது.. காதல் வரலை.. வரவும் வராது.. அது என் அத்தான் மேல மட்டும்தான் வரும்.."

"ஏன்..?"

"ஏன்னு எனக்குச் சொல்லத் தெரியல.. அவர்மேல எனக்குக் கொள்ளை பிரியமிருக்கு.. அவரோட பேச்சு, சிரிப்பு, கோபம்ன்னு விதம் விதமா முகபாவனைகளை நினைச்சு ரசிக்கத் தோணுது.. என் கண்ணுக்கு என் அத்தான் மட்டும்தான் அழகானவரா தெரிகிறார்.."

"ஆதவன் கொடுத்து வைத்தவன்.."

"அந்தக் கொடுத்து வைத்தவரைக் கல்யாணம் செய்துக்கக் கூடாதுன்னுதான் நீங்க சத்தியம்

"நானும் மனிதன்தான்.. நான்கு வருடங்களாக உன்னைக் காதலிக்கிறேன்.. என் காதல் உன்னை பாதிக்கவில்லை.. என்னுடன் வர நீ விருப்பப்படலை.. வேறு என்ன நான் செய்ய..? என்னுடன் வாழாத நீ.. உன் காதலனுடன் வாழ்ந்துவிடக் கூடாது.."

எத்தனை நல்லவனையும் காதல் என்னும் மாயப் பிசாசு கெட்டவனாக மாற்றி விடுகிறது என்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாக நின்ற ராபர்ட் காரில் ஏறிச் சென்று விட்டான்..

அவன் போன வழியையே உணர்ச்சியின்றி பார்த்துக் கொண்டிருந்த தாமரை.. ஒரு பெருமூச்சுடன் கண்மாயை ஒட்டிய கிணற்றின் பக்கத்தில் போனாள்.. சேலை முந்தானையைக் கொண்டு கைகளையும் கால்களையும் பிணைத்தாள்.. தண்ணீரில் குதிக்கப் போனாள்..

"எவ்வளவு சுயநலம்டி உனக்கு.."

அவள் எதிரே வந்து நின்றான் ஆதவன்.. இமைக்க மறந்தாள் தாமரை..

"அத்தான்.."

"நீ சாகனும்.. நான் வாழனும்.. எப்படிடீ உனக்கு என்னை விட்டுட்டுப் போக மனசு வந்துச்சு..?"

ஆதவன் மண்டியிட்டு அமர்ந்து அவளது கைகளையும் கால்களையும் பிணைத்திருந்த சேலை முந்தானையை அவிழ்த்து விட்டான்.. அவள் கை பிடித்து எழுப்பி நிறுத்தினான்..

"ஒழுங்கா சேலையைக் கட்டிக்க.."

தாமரை கண் கலங்க சேலையைச் சரியாக கட்டிக் கொண்டாள்.. அவள் கை பிடித்தான் ஆதவன்.. விரல் நடுங்க விலகியவளை இழுத்து நிறுத்தினான்..

"எல்லாம் எனக்குத் தெரியும்டி.. இவ்வளவு நேரமா இந்த ஆலமரத்துக்குப் பின்னாலதான் ஒளிஞ்சிருந்தேன்.. யாரையும் கட்டிக்க மாட்டேன்னுதான வாக்குக் கொடுத் திருக்க..? எங்கத்தானத் தொட்டுக்க மாட்டேன்னு வாக்குக் கொடுக்கலையே.." உல்லாசமாக கண் சிமிட்டினான்..

"அத்தான்.." தவித்தாள் தாமரை..

"பயப்படாதே.. கல்யாணம் பண்ணிக்காம உன்னைக் கட்டிலுக்குக் கூப்பிட மாட்டேன்.. அதுக்காக எட்டடி தள்ளியும் நிக்க மாட்டேன்.. இதுவரைக்கும் எப்படி யிருந்தோம்..? அப்படியே இனியும் இருக்கலாம்.."

"எப்படி அத்தான்..? எப்படி உங்ககூட என்னால இருக்க முடியும்..? கல்யாணம் பண்ணிக்காம நாம சேர்ந்து வாழ்கிறோம்ன்னு ஊர் உலகம் சொல்லாதா..?"

"கல்யாணம் பண்ணிக்கிட்டாப் போச்சு.."

"அத்தான்.."

"வாடி பேசாம.."

கண்மாய்க் கரையிலிருந்த அம்மன் கோவிலுக்குள் அவளை இழுத்துக் கொண்டு போனான் ஆதவன்.. நேர்த்திக் கடனுக்காக கட்டப் பட்டிருந்த மஞ்சள் கயிறுகளில் ஒன்றை அவிழ்த்தான்..

"வேண்டாம் அத்தான்.." மன்றாடினாள் தாமரை..

அவளது கெஞ்சலைப் பற்றிக் கவலைப்படாமல் தாலிக்கயிற்றை அவள் கழுத்திற்குப் பக்கத்தில் கொண்டு

போன ஆதவன் அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அதில் தெரிந்த கலக்கத்தில் அவன் மனம் இளகியது..

"முட்டாள்.."

அவள் கையில் மஞ்சள் கயிறைக் கொடுத்தான்.. தாமரை திகைப்புடன் ஆதவனின் முகம் பார்த்தாள்..

"வாக்கு மீற வைக்க மாட்டேன்டி.. இந்த மஞ்சள் கயிறை நீயே உன் கழுத்தில் கட்டிக்க.. ஊர் உலகத்துக்கு முன்னாடி இதை நான் கட்டின தாலியா சொல்லிக்கலாம்.." இலகுவாக வழி சொன்னான் ஆதவன்..

"அத்தான்.." தாமரை தழுதழுத்தாள்..

"இது என்விரல் பட்ட தாலிக்கயிறு.. இதை உன் கழுத்தில் நான் கட்டினால்தான் எனக்கு நீ பெண்டாட்டின்னு இல்லை.. என் கைபட்ட கயிறை நீ கழுத்தில் கட்டிக்கிட்டாலும் எனக்கு நீ பெண்டாட்டிதான்.. கட்டிக்க.."

"உங்களுக்குன்னு வாழ்க்கையிருக்கு அத்தான்.."

"நீதாண்டி என் வாழ்க்கை.. நமக்கு வேற வழியில்லைடி.. நீ வீட்டை விட்டு வெளியில வந்துட்ட.. ஊரே உன்னைத் தேடிக்கிட்டு இருக்கும்.. ஒரு வெள்ளைக் காரன்கூட நீ ஓடிப் போகப் பார்த்தேன்னு வெளியே தெரிஞ்சா உன் வீட்டில உன்னை உயிரோட சமாதி வைச்சுருவாங்கடி..

"அவர்கூட நான் ஓடிப் போக நினைச்சேனா..? இல்லை அத்தான்.. அவருக்கு வாக்குக் கொடுத்திருந்த தினால வந்தேன்.. அவர் வரச் சொன்னப்பவே அவர்கிட்ட பதிலுக்கு வாக்குக் கேட்டிரணும்னு முடிவு பண்ணி வைச்சிட்டேன்.."

"அது உனக்கும் எனக்கும் தெரியும்.. ஊருக்குத் தெரியுமா..?"

"அதுக்காக உங்க வாழ்வை பணயம் வைக்கறிங்களே அத்தான்.."

"நீ ஓடி வந்தது எனக்காகன்னு இருக்கட்டும்.. உங்கப்பா எனக்கு உன்னைக் கட்டித் தரமாட்டாருன்னு பயந்து போயி வந்திட்டதா சொல்லிக்கலாம்.. சுதந்திரம் கிடைக்கிற இந்த நாளில எப்படியும் நான் ஊருக்குள்ள திரும்பி வருவேன்னு உனக்குத் தெரியும்ன்னு கதை பிணையலாம்.. கட்டிக்க.. உன் வாக்குக்கு பங்கம் வராது.. இதனால ஒருத்தனை மனசில நினைச்ச தாமரை அவனுக்காக வீட்டை விட்டு வெளியில் வந்து அவனையே கல்யாணம் பண்ணிக்கிட்டதா இந்த ஊரும் உலகமும் நம்பும்.."

"நான் ஒருத்தனைத்தான் மனசில நினைச்சேன்.."

"இல்லேன்னு நான் சொன்னேனா..?"

ஆதவனின் முகம் மலர்ந்திருந்தது.. காதலில் வென்று விட்டவனின் மலர்ச்சி அது.. அவனுடைய காதலி அவனுக்காகவே வாழ்ந்திருக்கிறாள் என்பதில் வந்த மலர்ச்சி அது..

"உங்க வாழ்வு..?"

"உன்னோடு வாழப் போகும் இந்த வாழ்வு.."

"நான் வாக்குக் கொடுத்திருக்கேன்.."

"கட்டில் மட்டும் வாழ்க்கையில்லைடி.. அது இல்லாம காலம் பூரா சேர்ந்து வாழ்வோம்.. உனக்கு நான்.. எனக்கு நீ.."

"ஏன்..? எனக்காக நீங்களும் ஏன் கஷ் _ப்படனும்..?"

"விதிடி.. போன ஜென்மத்தில உன் கண்ணெதிரே வேற ஒரு பெண்ணோட நான் வாழ்ந்தேனோ என்னவோ..

இந்த ஜென்மத்திலே அதுக்கான தண்டனையா என் கண்ணெதிரே என்னை உயிருக்குயிரா காதலிக்கிற காதலியிருந்தும் சேர முடியாம நான் தவிக்கனும்னு விதிச்சிருக்கோ.. என்னவோ.. கடவுள் போட்ட கட்டளையை யாரால மீற முடியும்..?"

"அத்தான்.."

தேம்பி அழுதாள் தாமரை.. அவளை மார்பில் சாய்த்துக் கொண்டான் ஆதவன்.. சிந்தும் கண்ணீரைத் துடைத்து விட்டு ஆறுதல் சொன்னான்..

"அழாதே.. இந்த ஆதவனால் தாமரையை விட்டுப் பிரிந்திருக்க முடியாது.."

"என்னால மட்டும் முடியுமா..? சாகறதுக்குக் கூட சுதந்திரம் இல்லாம இருந்தேன்.. அத்தான்.."

"போனதை மறந்துரு.. கட்டிக்கிட்டாத்தான் புருசன் பெண்டாட்டியா..? மனசால நீதாண்டி என் பெண்டாட்டி.. நான்தான் உன் புருசன்.."

தாமரை கையில் இருந்த மஞ்சள் கயிறை.. கழுத்தில் கட்டிக் கொண்டாள்.. அவர்கள் அம்மனை வணங்கி விட்டு ஊருக்குள் போனர்கள்.. தணிகாசலத்தின் வீட்டு வாசலில் கூடியிருந்த கும்பல் அவர்களைக் கண்டதும்.. 'ஆ' வென்று வாய் பிளந்தபடி கையிலிருந்த கட்டைகளைக் கீழே போட்டது.. தணிகாசலத்தின முகத்தில் வெளிச்சம் பரவியது.

"மன்னிச்சுக்கங்க மாமா.. எனக்காகத்தான் தாமரை வீட்டை விட்டு வெளியில் வந்தா.. கோவிலில் நாங்க கல்யாணம் பண்ணிக்கிட்டோம்.."

கலங்கி நின்ற தாமரையைக் கண்களால் அமைதிப் படுத்தியபடி சொன்னான் ஆதவன்..

"என்னை முந்திக்கிட்ட.." தனஞ்ஜெயன் தோழனைக் கட்டித் தழுவிக் கொண்டான்..

பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கியபோது தாமரையின் மனம் உறுத்தியது.. ஆதவன் அவள் விரல் பற்றி அழுத்தி தைரியம் கொடுத்தான்..

விடியலின் அருகாமையில் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது.. விடிந்தவுடன் தனஞ்ஜெனுக்கும், செவ்வந்திக்கும் கல்யாணம் நடைபெற்றது.. எங்கிருந்தோ வந்து சேர்ந்த மருதாச்சலம் அண்ணன் பிள்ளைகளை வாழ்த்தினார்..

இத்துடன் சுபம் என்று முடித்து விட ஆசைதான்.. ஆனால் கதை தொடர்கின்றதே..

இந்திய விடுதலைக்குப் பின்னால் இந்திய தேசிய ராணுவத்தினர் கணித்தபடி இந்திய ராணுவம் அவர்களை கைவிட்டு விடவில்லை.. மக்களின் பரிவும் சேர்ந்து கொண்டதில் இந்திய தேசிய ராணுவத்தின் மீது குற்றமில்லை என்று இந்திய அரசாங்கம் அறிவித்து விட்டது.. தனஞ்ஜெயனுக்கும், ஆதவனுக்கும் இந்திய அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகள் கிடைத்தன.. கூடுதலாக ஆதவனுக்கும், மருதாச்சலத்திற்கும் இந்திய தேசிய ராணுவத்தில் பணி புரிந்ததிற்கான ஓய்வூதியம் கிடைத்து..

தனஞ்ஜெயன் சென்னையில் வேலை ப்ார்க்க.. ஆதவன் மட்டும் கல்கத்தாவிற்கு பணி மாறுதல் வாங்கிக் கொண்டான்.. ஏன் என்று புரியாமல் விழித்த தாமரையிடம்..

"போகப் போகத் தெரியும்.." என்றான்..

மதராசபட்டினத்தில் மகள் வாழ வேண்டும்.. மகளைக் கல்யாணம் செய்து கொள்ளும் மருமகன் கால்காசு உத்தியோகம் பார்த்தாலும் கவர்ண்மென்டு உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று கனவு கண்ட தங்கம்.. அதற்கும் கூடுதலாக மகள் கல்கத்தாப் பட்டினத்தில் வாழப் போவதிலும்.. மகளைக் கல்யாணம் செய்திருந்த மருமகன் மிகப்பெரிய அரசுப் பதவியில் இருந்ததிலும் மகிழ்ந்து போயிருந்தாள்..

இரண்டு வருடங்கள் ஓடின.. தனஞ்ஜெயனுக்கும் செவ்வந்திக்கும் ஆண் குழந்தை பிறந்தது.. தாமரை குளித்துக் கொண்டிருக்கிறாளா என்று பொன் விளைந்த களத்தூரின் மக்கள் விசாரிக்க தாமரை திருதிருத்தாள்..

“இதுக்குத்தான் இவங்க கண்ணுக்கு எட்டாத தொலைவுக்கு டிரான்ஸ்பர் வாங்கிட்டு வந்தேன்..” என்றான் ஆதவன்..

“புரியலை..”

“உன் வீட்டுக்கு கடிதம் போடு..”

“என்னன்னு..”

“நீ குளிக்காம இருக்கேன்னு..”

“அதெப்படிங்க அப்படிச் சொல்ல முடியும்..? பத்து மாசம் கழிச்சு குழந்தை எங்கேன்னு கேப்பாங்களே..”

“இதுதான் எங்க குழந்தைன்னு காட்டிட்டாப் போச்சு..”

ஆதவனின் வழிகாட்டல்படி தாமரை ஊருக்கு கடிதம் எழுதினாள்.. அடுத்த வருடத்தில் அவர்கள் பொன் விளைந்த களத்தூருக்கு சென்றபோது ‘தத்து’ எடுத்திருந்த பெண் குழந்தையுடன் போனார்கள்..

"அப்படியே எங்க தாமரை ஜாடை.."

மருதாயி மகிழ்ந்து போன போது தாமரைக்கு சிரிப்புத்தான் வந்தது..

ஆதவனும் தாமரையும் சந்தோசமாக இருந்தார்கள்.. மருதாச்சலம் திடிர் திடிர் எனக் காணாமல் போவதும், திரும்ப வருவதுமாக இருந்தார்.. வளர்ப்பு மகளுக்கு சுபாஷ் சந்திர போஸின் நினைவாக 'சந்திரா' என்று பெயர் வைத்தார்கள்..

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் என்ன ஆனார் என்று யாரும் கவலைப்படவில்லை.. 1947-ற்கு பின்பு இந்திய அரசு கேட்டுக் கொண்டால் நேதாஜியை இந்தியாவுக்கு அனுப்புவதாக ரஷ்ய அரசு கூறியதாகவும்.. கேட்கத்தான் இந்திய தேசத் தலைவர்களுக்கு மனமில்லை என்றும் ஆதவனுக்கு சலீம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்..

இந்திய மக்களுக்கு நேதாஜியின் மீது ஆழ்ந்த அபிமானமும் ஆதர்சமும், மரியாதையும் இருந்தன.. அதை இந்திய தேசத் தலைவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்றும் சலீம் எழுதியிருந்தான்..

ரஷ்யாவில் ஸ்டாலினால் சைபிரியா சிறையில் சித்ரவதைக்கு ஆளாகி அவர் கொல்லப்பட்டதாக ஓர் வதந்தி பரவியது.. நேதாஜி என்னவானார் என்று எவருக்கும் தெரியவில்லை.. தெரிந்தவர்கள் அதைப்பற்றி மூச்சு விடவில்லை..

1938-ல் அசைக்க முடியாத கட்சித் தல்லைமைப் பதவி.. 1939-ல் அதிக வாக்கில் வெற்றி.. இதனால் மக்களிடம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸீக்கு இருந்த செல்வாக்கும், வசீகரமும் நிரூபிக்கப் பட்டன..

அந்த அதீதமான செல்வாக்கும், வசீகரமும் மற்ற தலைவர்களை அச்சுறுத்தியதால்தான் இவர் ஆறே வருடங்களில் காணாமல் போக வைக்கப்பட்டாரா..?

1949-ம் வருடம் பசும்பொன் முத்துராமலிங்கம் நேதாஜியை சந்தித்ததாகவும் சீனாவில் அவருடன் தங்கியதாகவும் ஜனவரி மாதம் 23-ம் நாள் மதுரை தமுக்கம் மைதானத்தில் நடந்த கூட்டத்தில் கூறினார்.. அவர் விமான விபத்தில் இறக்கவில்லை என்றார்.. எவரும் பேச அஞ்சிய உண்மையைக் கூட்டம் போட்டுப் பேசிய பசும்பொன் முத்துராமலிங்கம் 1950-ல் காணாமல் போனார்.. 1951-ல் முரட்டு மீசையை மழித்து பாகவதர் கிராப்பில் வித்தியாசமான தோற்றத்துடன் வெளியுலகிற்கு வந்தார்.. நேதாஜி இறக்கவில்லை என்று அறிவித்தார்.. 1955-ல் பர்மா சென்று திரும்பும் வழியில் கொல்கத்தாவில் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அதை உறுதிபடுத்தினார்..

“இதனால நேருவுக்கு நிர்பந்தம் ஏற்பட்டிருச்சு..”

வயோதிகராகி விட்ட மருதாச்சலம் கொல்கத்தாவிற்கு வந்திருந்தபோது கூறினான் ஆதவன்.. வழக்கமான மௌனத்துடன் கேட்டுக் கொண்டார் மருதாச்சலம்..

“இப்ப நேதாஜி உயிரோட இருக்கிறாரா.. இல்லையாங்கிற கேள்விக்கு அவர் பதில் சொல்லியாகனும்..”

ஆதவனின் வார்த்தைகள் உண்மையாகின.. இந்திய தேசிய ராணுவத்தில் லெப்டினன்டாக இருந்த ‘ஷாநவாஸ்கான்’ தலைமையில் ‘ஒரு நபர் விசாரணை ஆணையம்’ 1956-ல் நேதாஜியின் மறைவைப் பற்றி ஆராய்வதற்காக நேருவால் ஏற்படுத்தப் பட்டது..

இதுவே நேதாஜியின் மறைவைப் பற்றிய மர்மத்தைப் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முதல் கமிசன்..

1945-ல் காணாமல் போனவரைப் பற்றிக் கண்டு சொல்வதற்காக 1956-ல் கமிசன் அமைக்கப் பட்டது..

இந்தக் கமிட்டி நேதாஜி இறந்து போனதாக சொன்னது.. நேதாஜியின் அண்ணன் சுரேஷ் சந்திரபோஸ் இதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்..

இதற்கிடையே இந்தியாவின் ரஷ்யதூதர் டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன் நேதாஜியை வெளியே தெரியாத ஓர் இடத்தில் சந்திக்க அனுமதிக்கப் பட்டதாக பேச்சு நிலவியது..

சந்திராவுக்கு பதினொரு வயதான போது.. சலீம் ஆதவனைப் பார்க்க வந்திருந்தான்.. பரஸ்பர நல விசாரிப்புக்குப் பின்னால் நண்பர்கள் பேசிக் கொண்டிருந்த போது..

"இந்த 1962-ம் வருசம் போற்றப் பட வேண்டிய வருசம்டா.." என்றான் சலீம்..

"நேரு உத்தம்சிங்கைப் பாராட்டியிருக்காரே.. அதைச் சொல்றியா..?"

"ஆமாம்.. 1919-ல் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது.. 1940-ல் இருபத்தியொரு வருசம் மனசில வன்மத்த புதைச்சு வைச்சு ஜெனரல் டயரைக் கொன்று பழிதீர்த்தார் உத்தம்சிங்.. அவரோட உடலைக் கூட பிரிட்டிஷ் கவர்ண்மென்டு கொடுக்க மாட்டேன்னு சொல்லிருச்சு.. 22 வருசம் கழிச்சு நம்ம நாடு அவரைப் பாராட்டுது.."

நண்பர்கள் சிரித்துக் கொண்டார்கள்.. மூர்த்தியும் சலீமும் அடிக்கடி ஆதவனைச் சந்திக்க வந்து போனார்கள்.. மருதாச்சலம் எப்போதாவது ஒர்முறை வருவார்.. எங்கே போயிருந்தார் என்பதைச் சொல்ல மாட்டார்.. அதையும் ஓர்நாள் கண்டு பிடித்துச் சொன்னான் சலீம்..

"ஆதவா.. உன்னோட சின்ன மாமா.. அயோத்தியா பக்கத்தில இருக்கிற பைசாபாத்துக்குத்தாண்டா போயிடறாரு.."

"அங்கே இவருக்கென்னடா வேலை..?"

"கும்னானி பாபான்னு ஒரு துறவியாம்.. கும்னானின்னா பெயரில்லாத துறவின்னு அர்த்தமாம்.. அவரை 'பகவான்ஜி'ன்னு சொல்றாங்களாம்.. அவர் கூடத்தான் உன் சின்னமாமா இருக்கிறாராம்.."

"பகவான்ஜி சக்தியுள்ள துறவியோ..?"

"அப்படித்தான் தோணுது.. இல்லேன்னா உத்தர பிரதேசத்தோட முதல்வர் டாக்டர் சம்பூர்ணா 1954-ல இருந்து 1957-ம் வருசம் வரைக்கும் பகவான்ஜியோட அத்தனை தேவைகளையும் கவனித்துக் கொள்வாரா..? ராம்பவன் இல்லம்ங்கிறது அவரோட வீட்டோட பெயராம்.. 1962-ல இருந்து பபித்ரா மோகன்ராய் பகவான்ஜி கூட தங்கிட்டாராம்.. லீலாராய்தான் இப்ப பகவான்ஜிக்கான செலவுகளைக் கவனிச்சுக்கிறாங்களாம்.."

ஆழ்ந்த குரலில் சலீம் பேசப்பேச.. ஆதவனுக்குள் மின்னல் வெட்டியது..

"சலீம்..?" குரல் நடுங்கக் கேட்டான்..

"நீ நினைக்கிறதைத்தான் நானும் நினைக்கிறேன்.. அவர் நேதாஜியாய் இருக்கலாம்.. ஆனா ஆதவா.. நாம

போய் அவரைப் பார்த்தா அவருக்கு இடைஞ்சல் வந்திரலாம்..”

மனம் துடிக்க.. நண்பர்கள் விலகி நின்றார்கள்.. 1973-ல் சந்திராவுக்கு இருபத்தி மூன்று வயதானது.. தனஞ்ஜெயனின் மகனுக்கு சந்திராவைப் பெண் கேட்டார்கள்.. தாமரையின் சந்தோசத்தில் ஆதவன் சரியென்று சொல்லி விட்டான்.. மதராஸில் திருமணம் நடந்து முடிந்தது..

பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்து விட்டுத் தனித்து வாழ்ந்த ஆதவனுக்கும், தாமரைக்கும் சந்திராவின் நினைவாகவே இருந்தது. 1974-ல் ‘சாது தில் திண்ட’ என்ற சுல்தான்பூர் மோதியின் வேண்டுகோளை செவி மடுத்த இந்திய அரசாங்கம் ‘உத்தம் சிங்’கின் சவப் பெட்டியை இந்தியாவுக்கு அனுப்பும்படி பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டது.. பிரிட்டிஷ் அரசாங்கமும் ‘உத்தம்சிங்’கின் சவப்பெட்டியை அனுப்பி வைத்தது.. பஞ்சாப் முதல்வர் ஜெயில்சிங் பெட்டியை பெற்றுக் கொண்டார்.. பிரதமர் இந்திராகாந்தி மலர் வளையம் வைத்தார்.. உத்தம் சிங்கின் சொந்த நகரமான ‘சுனாம்’ கிராமத்தில் உடல் எரியூட்டப் பட்டு.. அஸ்தி.. சட்லஜ் நதியில் கரைக்கப் பட்டது.

பைசாபாத்திற்கு ஆதவன் ஒர்முறை போய் வந்தான்.. உள்ளூர் மக்கள் ‘பகவான்ஜி’ என்ற துறவியை நேதாஜி என்றே அடையாளம் சொன்னார்கள்.. அவரை ஆதவன் தரிசித்த போது அவரது இதழோரம் கோடிட்ட சிறு புன்னகையில் அவன் நேதாஜியாக இருக்கக் கூடும் என்று மூர்த்தியிடம் சொன்னான் ஆதவன்..

"அந்தக் கண்களோட தீட்சண்யம்..! வாய்ப்பே இல்லைடா மூர்த்தி.. அவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்.."

இந்தச் செய்தி நாட்டில் பரவியதோ என்னவோ.. 1974-ல் நேதாஜியின் மரணம் குறித்து ஆராய கோஸ்ரா கமிசன் அமைக்கப்பட்டது.. 1978-ல் சமர்பித்த அந்தக் கமிசனின் அறிக்கை எதையும் திட்டவட்டமாக கூற மறுத்துவிட்டது..

நேதாஜி உயிருடன் இருப்பதைப் பற்றித் தமக்குத் தெரியும் என்று நேதாஜியின் மனைவி எமிலி 1973-ல் கூறியதை நினைத்துப் பார்த்த ஆதவனுக்கு வேதனையாக இருந்தது.. அடுத்த சில வருடங்கள் மௌனமாக நகர்ந்தன..

"1970-ல் பகவான்ஜி லீலாராய்க்கு கடிதம் எழுதினாராம்.. அந்தக் கடிதத்தில் இருக்கிற கையெழுத்து நேதாஜி சுபாஷ் சந்திர போஸோட கையெழுத்துத்தானாம்.." என்று சலீம் பரபரத்தான்..

"நீயும் நானும் சொல்லி என்ன செய்ய..? சொல்ல வேண்டியவங்க சொல்லனுமே.." என்றான் ஆதவன்..

"பகவான்ஜி இப்பக் கஷ்டத் திசையில இருக்காராம்டா.. லக்னோ ஆலம்பா ஸ்ரீதகர் பகுதியில வாடகைக்கு வீடு எடுத்திருந்தாராம்.. வாடகை கொடுக்க முடியலையாம்.. வீட்டுக்காரன் பட்டுன்னு சுடு சொல்லை வீசித் தொலைச்சிருக்கான்.. காதியா கிராமத்தில கோமதி நதிக்கரையில இடிந்த சிவன் கோவிலில இருக்கிறாராம்.." சலீமின் கண்கள் கசிந்தன..

ஆதவன் தாமரையின் வளர்ப்பு மகளான சந்திராவிற்கு எட்டுவயதில் மகனும், ஆறுவயதில் மகளும் இருந்தார்கள்..

பேரன், பேத்தியென்று குடும்பத்திற்குள் கவனமாகி விட்ட ஆதவன் மனம் பதைத்தான்.. அறுபத்தி நான்கு வயதில் பென்சன் வாங்கிக் கொண்டிருப்பவனால் என்ன செய்துவிட முடியும்..?

1940-ல் இருந்த இளமை முறுக்கும்.. கட்டவிழ்ந்த உற்சாகமும் நேதாஜியைப் போல மாயமாய் மறைந்து விட்ட நிலையில்.. இந்திய தேசிய ராணுவத்தின் வீர நினைவுகளோடு வயோதிகப் பாதையில் நடைபோட ஆரம்பித்திருக்கும் நண்பர்களால் நினைத்தவுடன் பைசாபாத்திற்கு ஓடிப் போய் விட முடியவில்லை..

இருந்தும் அவர்கள் சென்றார்கள்.. மூர்த்தியையும் தேடிப்பிடித்து கூட அழைத்துக் கொண்டார்கள்..

1985-ஆம் ஆண்டில் நண்பர்கள் மூவரும் 'பகவான்ஜி' என்றழைக்கப்பட்ட அந்த துறவியைத் தேடிப் போன போது அவர் இறந்திருந்தார்..

1985-ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 16வது நாளில் பகவான்ஜி இறந்து விட்டதாக அந்த ஊரின் மக்கள் கூறினார்கள்.. அவர் உயிருடன் இருந்த போது அடிக்கடி..

"இந்தத் துறவி இயற்கையாக மரணிப்பதையே விரும்புகிறான்.. போர்க் குற்றவாளியாக அல்ல.." என்று கூறிக் கொண்டிருப்பாராம்..

நேதாஜியின் பிறந்த நாளும்.. பகவான்ஜியின் பிறந்தநாளும் ஒன்றுதான்..

உள்ளூர் மக்களுக்கு அவர்தான் நேதாஜி என்று தெரிந்திருக்கிறது.. உத்திரபிரதேசத்தின் முதல்வர் 1954 லிருந்து 1957 வரை பகவான்ஜியின் அனைத்துத்

தேவைகளையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்.. 1970-ல் லீலாராய் என்பவருக்கு பகவான்ஜி எழுதிய கடிதத்தில் உள்ள கையெழுத்து நேதாஜியின் கையெழுத்துதான் என்று அவரை அறிந்திருந்த அனைவரும் சொல்லியிருக்கிறார்கள்.. பகவான்ஜியின் பெட்டியில் நேதாஜி சம்பந்தப்பட்ட புகைப்படங்களும் பத்திரிக்கைக் குறிப்புகளும் இருந்திருக்கின்றன..

இது அத்தனைக்கும் சிகரமாக 1983-ஆம் வருடம் ஜீலை மாதம் ஆறாம் தேதியன்று 'Nethaji Dead on Alive' என்ற நூலின் மறு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட மொரார்ஜி தேசாய்..

"நேதாஜி உயிருடன் இருக்கிறார்.. ஆனால் துறவறம் பூண்டுள்ளார்.." என்று கூறியிருக்கிறார்..

இத்தனை ஆதாரங்கள் பகவான்ஜிதான் நேதாஜி என்று சுட்டுவிரல் கொண்டு சுட்டிக் காட்டியும்.. அவரை அடையாளம் காண எவரும் முன் வரவில்லை.. உலகையே திரும்பிப் பார்க்க வைத்த அந்த மாவீரன் இவர்தான் என்று சொல்லப் பட்ட பகவான்ஜி இறுதிக் காலத்தில் இடிந்த சிவன் கோவிலில் காலத்தை கழித்தார்..

மருதாச்சலம் துறவறம் பூண்டு இமயமலைச் சாரலுக்குப் போய் விட்டதாக தனஞ்ஜெயனிடமிருந்து ஆதவனுக்கு கடிதம் வந்தது.. அதன் பின்னால் அவரைப் பற்றிய தகவல் ஏதும் இல்லை.. ஆதவனுக்குத் தெரியும்.. நேதாஜி இல்லாத உலகில் இருக்க மருதாச்சலம் விரும்ப மாட்டார் என்பது.. நேதாஜியின் மீதான மருதாச்சலத்தின் விசுவாசம் அத்தகையது..

1985-ஆம் வருடம் நவம்பர் மாதம்.. பொன் விளைந்த களத்தூரில் இருந்து மகாபலிபுரத்திற்குச் சென்ற கார் ஒன்று விபத்துக்குள்ளாகி அதில் பயணித்த நால்வர் சம்பவம் நடந்த இடத்திலேயே இறந்து விட்டார்கள் என்று பத்திரிக்கை செய்தி ஒன்று வந்தது..

அந்த நால்வரின் பெயர்கள் பட்டியலிடப் பட்டிருந்தன.. அவை..

1. ஆதவன் (வயது 65)
2. தாமரை (வயது 57)
3. தனஞ்ஜெயன் (வயது 65)
4. செவ்வந்தி (வயது 57)

நேதாஜி இறந்த அதே வருடத்தில் மருதாச்சலம் துறவறம் பூண்டு இமயமலைச் சாரலுக்குச் சென்றதில் வியப்பில்லை.. ஆதவன் இறந்ததிலும் வியப்பில்லை..

அவர்கள் இருவரும் நேதாஜியின் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தவர்கள்..

தாமரை ஆதவனை பின் பற்றியதிலும் வியப்பில்லை.. அவள் ஆதவனின் ஆன்மா..!

தனஞ்ஜெயனும், செவ்வந்தியும் ஆதவன், தாமரையுடன் சேர்ந்தே மடிந்தார்களே..

அதுதான் வியப்பு..!

ஏதோ ஓர் இழை அவர்கள் நால்வரையும் இணைத்திருந்ததை வாழ்வின் பல கட்டங்களில் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்..

இறப்பிலும் அந்த இழை தொடர்ந்து வந்து பிணைத்து அழைத்துச் சென்றதில்தான் மனித ஜீவன்களின் அறிவுக்குப் புலப்படாத தேவ ரகசியம் அடங்கியிருக்கிறது..

விடை கொடுங்கள்.. விடுதலைப் போராட்டம் முடிந்து சுதந்திர இந்தியாவை பார்த்து விட்டோம்.

அடுத்து ஏழாம் ஸ்வரத்தில் 'நிழல் ஆட்ட யுத்தம்' மட்டும் தனித்துப் பயணித்து நடப்புக் கால கட்டத்தில் வரப் போகிறது..

பின்னுரை :

விடுதலைப் போராட்டம் முடிந்து.. சுதந்திர இந்தியாவின் நடப்புக் காலகட்டம் வந்து விட்டது.. இந்த கால கட்டத்தில் நடந்து முடிந்த நிகழ்வுகளைத் திரும்பிப் பார்க்கும் போது நெஞ்சம் கனக்கிறது..

இந்திய தேசம் இரு துண்டாக்கப் பட்டது.. மதத்தை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்ட நாடுகளில் பகையுணர்வை ஊன்றி... விடுதலை பெற்றாலும் இறுதிவரை போராடிக் கொண்டிருக்கும் விதியை பாரத தேசத்தின் இரண்டு அங்கங்களான இந்திய, பாகிஸ்தான் நாடுகளுக்கு விதித்து விட்டு வெள்ளைக்காரன் வெளியேறி விட்டான்.. இரவினில் சுதந்திரம் பெற்றோம்.. விடியலை இன்னும் தேடிக் கொண்டுதான் இருக்கிறோம்..

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே.. நீ என்ன எங்களுக்கு சுதந்திரத்தை வழங்குவது..? நாங்களாகவே அதை எடுத்துக் கொள்வோம் எங்கள் நாடு.. எங்களின் உரிமை என்று கி.பி. 1940ஆம் ஆண்டு சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திர அரசுப் பிரகடனத்தை வெளியிட்டார்.. டிசம்பர் 29-ந்தேதி அரசின் தலைவராகத் தேசியக் கொடியை ஏற்றினார்.. அவற்றை ஜப்பான், இத்தாலி, ஜெர்மனி, சீனா உட்பட 9 நாடுகள் ஆதரித்தன.. பர்மாவில்

இருந்து இந்திய தேசியப் படையை இந்தியாவின் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்து நகர்த்தினார்..

படைகொண்டு பிரிட்டிஷை எதிர்த்த மாவீரன் அவர்..!

ஆயுதமின்றிப் போராடி சுதந்திரத்தைப் பெற்றோம் என்று வரலாறு கூறுகிறது.. ஆனால் உண்மையில் இந்திய தேசிய ராணுவத்தால் இந்திய ராணுவத்திற்குள் ஆங்கில எதிர்ப்பு தோன்றி விட்டது.. இனியொரு போராட்டம் இந்தியாவில் ஏற்பட்டால் அதை அடக்க இந்திய ராணுவத்தை நம்ப முடியாது என்பதை உணர்ந்த பிரிட்டிஷ் அரசு இந்தியாவை விட்டு வெளியேறும் முடிவை எடுத்தது..

அதனால்தான் இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ், ரஷ்யா உள்பட ஒருதரப்பில் நின்று யுத்தம் புரிந்த நேசநாடுகளுக்கு நேதாஜி மீது அப்படி ஒரு ஆவேசமான கோபம்.. அவரைப் பார்த்த இடத்தில் தண்டிக்க அவர்கள் காத்திருந்தார்கள்.. அவர் யார் கையிலும் சிக்கவில்லை..

கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி பி.வி. சக்ரவர்த்தி.. அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆளுநரான கிளைமண்ட் அட்லியுடன் உரையாடிய போது கிளைமண்ட் அட்லி கீழ்க்கண்டவாறு கூறியதாக குறிப்பிடுகிறார்..

'காந்தியின் வெள்ளையனே வெளியேறு என்ற 1942-ன் முழக்கமும், இயக்கமும் பிரட்டிஷ் அரசாங்கத்தைப் பாதிக்கவில்லை.. அதன் செல்வாக்கு மிகவும் குறைவு.. உண்மை என்னவென்றால் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இந்திய தேசிய ராணுவ

நடவடிக்கைகள், இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அடித்தளத்தை பலவீனப் படுத்தி விட்டது.. அடுத்து ஒரு போர் நிகழுமானால் இந்திய ராணுவம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின பக்கம் நிற்காது என்ற உண்மையை பிரிட்டிஷ் அரசாங்கம் உணர்ந்து விட்டது.. இந்திய ராணுவத்தில் இந்திய தேசிய ராணுவத்திற்கான ஆதரவு அலையும்.. ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்பு அலையும் உருவாகி விட்டதில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவை விட்டு வெளியேறும் முடிவை எடுத்து விட்டது.. இரண்டாம் உலகப் போரினால் வலுவிழந்திருந்த பிரிட்டிஷாரின் மனநிலையில் இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டும் என்ற எண்ணத்தை இந்திய தேசிய ராணுவம் தான் உண்டாக்கியது.. மற்றபடி காந்தியின் பிரச்சாரங்கள் பதினான்கு வருடங்களுக்கு முன்னதாகவே நீர்த்துப் போய் விட்டன.. பிரிட்டிஷாரை அஞ்சி ஓட வைத்தது நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்..'

இதே கூற்றை பல்வேறு அரசியல் வரலாற்று நூல்கள் பல்வேறுபட்ட கோணங்களில் விவரித்து.. ஒருமித்த குரலில் கூறியிருக்கின்றன..

தனியொரு மனிதனாக பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அசைத்துக் காட்டியவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்..!

அவருக்கும் மகாத்மா காந்திக்குமான கொள்கை மோதல் 1940-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-வது நாளில் ஜெனரல் ரெஜினால்ட் டயர் என்ற ஆங்கிலேய அதிகாரியை உத்தம்சிங் சுட்டுக் கொன்றதை காந்தி கண்டித்த போது அதிகமானது.. 1919-ல் ஏப்ரல் மாதம் 13வது நாளில் அமிர்தசரஸில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில்

காங்கிரஸின் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது ஜெனரல் ரெஜினால்ட் டயர் முன் அறிவிப்பின்றி சுட்டுக் கொல்ல ஆணையிட்டான்.. இந்த நிகழ்வை..

'ஜாலியன் வாலாபாக் படுகொலை..'

என்று வரலாற்று ஆசிரியர்கள் குருதி கொப்பளிக்கும் பக்கங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்..

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று ஒருவரையும் விட்டு வைக்காமல் தொடர்ந்து 10 நிமிடங்களுக்கு ஒரு சிப்பாய்க்கு 33 முறை என்று 1650 முறை சுட்டுக் கொன்றதில் ஆயிரக்கணக்கான இந்திய மக்கள் கொல்லப் பட்டார்கள்.. அவர்களில் பலர் பொதுக் கூட்டத்தில் பேச வந்த பெரும் தலைவர்களைப் பார்க்கும் ஆர்வத்தில் வந்தவர்கள்..

அதுபற்றி ஜெனரல் ரெஜினால்ட் டயர் கூறும் போது. 'இந்தியரின் மனதில் அச்ச உணர்வை உண்டு பண்ணவே அந்த ஆணையைப் பிறப்பித்தேன்..' என்று கூறினான்..

அந்த ஜெனரல் ரெஜினால்ட் டயரை.. 21 ஆண்டுகள் காத்திருந்து.. நெஞ்சில் ஜாலியன் வாலா பாக்கின் கொடூரச் செயலின் துக்கத்தினைச் சுமந்து.. 1940 மார்ச் மாதம் அதே 13-ம் தேதியன்று உத்தம்சிங் சுட்டுக் கொன்றார்..

அச்செயலை காந்தி வன்மையாக கண்டித்தார்.. சுபாஷ் சந்திரபோஸ் பாராட்டிக் கடிதம் எழுதி அனுப்பினார்.. காந்திக்கும் நேதாஜிக்குமான உரசல் அதிகமானது இந்நிகழ்விற்குப் பின்னர்தான்..

'குருதியைக் கொடுங்கள்.. உங்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தருகிறேன்..' என்று முழங்கினார்

நேதாஜி.. வசீகரமான இளம் தலைவரான இவர் பின்னால் இளைஞர்கள் திரண்டார்கள்..

'நான் தீவிரவாதிதான்.. எல்லாமும் கிடைக்க வேண்டும்.. அல்லது ஒன்றுமே தேவையில்லை என்பது தான் எனது கொள்கை..'

1938-ல் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டபோது இப்படி முழங்கினார் போஸ்..

இந்த முழக்கத்தை பிரிட்டிஷிடம் சமாதானமாகப் பேசி.. நீங்கள் கொடுப்பதைக் கொடுங்கள் என்று சுதந்திரத்தை வேண்டி நின்ற காந்திக்குப் பிடிக்கவில்லை..

காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் வளர்ச்சியையும், ஆளுமையையும் விரும்பவில்லை..

1940-ல் ஜெனரல் டயரை கொன்றதற்காக உத்தம் சிங்கைக் கண்டித்தார் காந்தி.. ஆனால்.. அது எழுப்பிய உணர்வலைகள் 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பிரதிபலித்தபோது அவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் செயல்பாடுகளின் தாக்கத்தை உணர்ந்து கொண்டார்..

இரண்டு முறை காங்கிரஸ் தலைவராக இருந்தவர் நேதாஜி.. 1938-ல் அவர் காங்கிரஸ் தலைவராக தேர்ந் தெடுக்கப் பட்டபோது.. 'மகாகவி ரவிந்திர நாத் தாகூர்..' சுபாஷை சாந்தி நிகேதனுக்கு அழைத்துப் பாராட்டிப் பேசி.. 'நேதாஜி' என்ற பட்டத்தை அளித்தார்..

இவ்வாறு மரியாதைக்குரிய மகாகவியால் மரியாதைக் குரிய தலைவர் என்ற பட்டத்தைப் பெற்றவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவருக்கு இந்திய தேசத்தலைவர் களிடம் என்ன மரியாதை கிட்டியது..?

1939-ல் இரண்டாம் முறையாக காங்கிரஸ் தலைமைப் பொறுப்புக்கு அவர் போட்டியிட்ட போது காந்தி அதை விரும்பவில்லை.. போஸின் செல்வாக்கு உயர்ந்து உச்சத்தில் இருப்பதை உணர்ந்த காந்தி போஸீக்கு எதிராக ராஜேந்திர பிரசாத்தையும், நேருவையும் போட்டியிடச் சொன்னார்.. அவர்கள் மறுத்து விட்டார்கள்.. பட்டாபி சீதா ராமையாவை நிறுத்தினார்.. சீதா ராமையா 1371 வாக்குகளைப் பெற்றார்.. சுபாஷ் சந்திரபோஸோ 1580 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று விட்டார்.. 'சீத்தாராமையாவின் தோல்வி எனக்கான பெரிய இழப்பு..' என்று பகிரங்கமாகவே அறிவித்த காந்தி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார்..

அஹிம்சையைப் போதித்த மகானின் இச்செய்கை ஒரு வகையில் இம்சையானது.. நேதாஜிக்கான அநியாயங்கள் இதிலிருந்துதான் வெளிப்படையாக நிகழ ஆரம்பித்தன..

நேதாஜி போட்டியிட்டு வென்ற கட்சித் தலைமைப் பதவியை ராஜினாமா செய்தார்.. கட்சியை விட்டு விலகினார்.. 'ஃபார்வர்டு பிளாக்' என்ற கட்சியை ஆரம்பித்தார்..

1941-ல் பிரிட்டிஷ் அரசாங்கம் நேதாஜியை வீட்டுக் காவலில் வைத்தது.. 1941 ஜனவரி 17 அன்று அவர் காற்றில் மறையும் கற்பூரப் புகை போல வீட்டைக் காவல் காத்து நின்ற பிரிட்டிஷ் படை வீரர்களுக்குத் தெரியாமல் மறைந்து தப்பினார்.. பெஷாவர் வழியே காபூலைத் தொட்டு சைபர் கனவாய் வழியே ஆப்கானிஸ்தானை அடைந்து.. இத்தாலி சென்று 'இங்குஷ் கணவாய்' வழியே ரஷ்யாவில் நுழைந்து மாஸ்கோ சென்று பெர்லினுக்கு பயணமானார்..

71 நாள்கள் பயணம் செய்து அவர் பெர்லினை அடைந்த இந்நிகழ்வை..

'Great Escape' (கிரேட் எஸ்கேப்)

என்று வரலாற்று ஆசிரியர்கள் சிலாகிக்கிறார்கள்..

வேறு எந்த தேசத் தலைவரும் இதுபோன்ற சாகசங்களை நிகழ்த்தியதில்லை.. சாகசங்களின் நாயகனான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைக் கண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் அஞ்சியதைப் போல அவரின் இமயம் போல உயரும் செல்வாக்கில்.. தேசத் தலைவர்கள் யோசிக்க ஆரம்பித்தார்கள்..

1943-ல் நேதாஜியின் இந்திய தேசிய ராணுவம் 'அந்தமான், நிக்கோபார்..' தீவுகளைக் கைப்பற்றியது.. அவற்றுக்கு ஷாஹீத் (தியாகம்).. ஸ்வராஜ் என்று பெயர் மாறற் கர்னல் லோகநாதன் என்னும் தமிழரை ஆளுநராக நியமித்தார்..

உலகம் இவரைக் கவனித்தது.. தனியொரு மனிதனாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு சவால் விட்ட இவருடைய ஆளுமை எண்ணற்ற இந்திய இளைஞர்களை வசீகரித்தது.. அதே சமயத்தில் இந்திய தேசிய ராணுவம் அமைத்து இந்தியர்களின் விடுதலைக்காக பாடுபட்ட அவரை 'போர்க் குற்றவாளி..' என நேசநாடுகள் அறிவித்தன.. அவர்கள் அறிவித்ததை இந்திய காங்கிரஸின் தேசத் தலைவர்கள் ஆட்சேபிக்கவில்லை.. நேசநாடுகள் குற்றம் என்று குறிப்பிட்டது.. இந்திய சுதந்திரத்திற்காக நாடு, நாடாக அலைந்து நேதாஜி ஆதரவு திரட்டியதைத்தான்.. இரண்டாம் உலகப் போரில் நேச

நாடுகள் வென்றன.. அவை.. நேதாஜியை வேட்டையாடத் துடித்தன..

இந்நிலையில் 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 16-ந் தேதி பார்மோசா வழியாக மன்சூரியா செல்ல நேதாஜி தனது தோழர் ஹபிபுர் ரஷ்மானுடன் விமானத்தில் ஏறினார்.. அதன் பின்னால் நேதாஜியை இந்த உலகம் பார்க்கவே இல்லை..

தைவான் விபத்தில் அவர் இறந்து விட்டதாகச் சொல்லப் பட்டது.. தைவான் அரசாங்கமோ அப்படியொரு விமான விபத்து நிகழவே இல்லை என்று மறுத்து விட்டது.. காயங்களுடன் உயிர் தப்பியதாகச் சொல்லப் பட்ட ஹபிபுர் ரஹ்மான் நேதாஜியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான லெப்டினன்ட் கர்னல்.. தனது தலைவருக்குக் கொடுத்த வாக்குறுதியை இறுதிவரை காப்பாற்றினார்.. நேதாஜி எங்கே சென்றார் என்று இவர் சொல்லவே இல்லை.. நேதாஜி இறந்து விட்டதாக மீண்டும் மீண்டும் கூறினார்.. இந்திய காங்கிரஸ் தலைவர்களைவிட ஜப்பான் அரசுக்கு நேதாஜி மீது மரியாதை இருந்தது.. அதனால்தான் நேதாஜி இறந்து விட்டதாக ஜப்பான் வானொலியும் அரசாங்கமும் அறிவித்தன.. அவர் இறக்கவில்லை என்று இந்த உலகம் உணர்ந்திருந்தது.. ஆனால் இந்திய தேசிய தலைவர்கள் அவரது இறப்பை ஏற்றுக் கொண்டார்கள்..

1946 அக்டோபர் 3ல் சர்தார் வல்லவாய் படேலிடம் நேதாஜி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற கேள்விக்கு இல்லை என்று பதில் சொன்னாராம்..

1946 ஜீலை மாதம் 22 ல் குருஷேச் நெளரோஜி என்ற காந்தியின் காரியதரிசி காந்திஜியின் சார்பாக புரபசர் லூயிஸ் பிஷர் என்பவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாராம். அதில்

"இந்திய ராணுவத்தினருக்கு இந்திய தேசிய ராணுவத்திடம் பரிவு உள்ளது.. நேதாஜி ரஷ்யாவின் உதவியுடன் இந்தியாவுக்குத் திரும்பி விட்டால் இந்தியர்களின் எழுச்சியை காந்தியாலோ.. காங்கிரஸாலோ தடுத்து நிறுத்த முடியாது.." என்று எழுதப் பட்டிருந்ததாம்.

அந்தக் கடிதத்தை ஃபைரவ் சந்திர பட்டாச்சார்யா.. 'USA'வில் உள்ள பிரின்ஸ்டன் யுனிவர்சிட்டியில் 1993-ல் பார்த்தாராம்.. அதன் ஒளி நகலை அமியா நாத் போஸ் என்பவருக்கும், சமர்குஹா என்பவருக்கும் அனுப்பியுள்ளதாகவும் பேச்சு நிலவுகிறது..

அவரது இறப்பை அவரது குடும்பமும், ஆதரவாளர்களும் ஏற்றுக் கொள்ளவே இல்லை..

நேதாஜி ரஷ்ய எல்லையில் தென்பட்டதாக தகவல் நிலவுகிறது.. ரஷ்யாவில் இருந்து நேருவுக்கு நேதாஜி ரகசியக் கடிதம் எழுதியதாகவும் அதில் இந்தியாவுக்கு வர விரும்புவதாக கூறியிருந்ததாகவும் சொல்கிறார்கள்..

1941-ல் சுதந்திர இந்திய மையம் என்ற அமைப்பை உருவாக்கிய சுபாஷ் சந்திரபோஸ் ஆஸாத் ஹிந்த் என்ற ரேடியோ அலைவரிசையில் நாட்டுக்கு தனிக்கொடி உருவாக்கி 'ஜன கன மன..' பாடலை தேசிய கீதமாக அறிவித்தார்.. அவர் அறிவித்த தேசிய கீதத்தை ஏற்றுக் கொண்ட நம் நாட்டின் தேசத் தலைவர்கள் இறுதிவரை அவரை ஏற்றுக் கொள்ளவே இல்லை..

மௌண்ட் பேட்டன், நேருவிடம் இந்திய தேசிய ராணுவத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது, நேதாஜி

இந்தியாவிற்குத் திரும்பி வந்தால் அவரிடம் தலைமைப் பதவியை தட்டில் வைத்து அளிப்பதற்கு சமமாகும் என்று சொன்னாராம்..

நேதாஜியை போர்க்குற்றவாளியாக அறிவித்திருந்த போதிலும் இந்திய அரசு கேட்டுக் கொண்டால் நேதாஜியை இந்தியாவுக்கு அனுப்புவதாக ரஷ்யா கூறியதாம்.. கேட்கத்தான் யாருக்கும் மனமில்லை என்கிறார்கள்..

இந்திய மக்களுக்கு நேதாஜியின் மீது இருந்த ஆழ்ந்த அபிமானமும், ஆதர்சமும், மரியாதையும் நம் தேசத் தலைவர்களை அச்சுறுத்தி அவர்களை கேட்க விடவில்லை..

ரஷ்யாவின் ஸ்டாலினால் சைபிரியா சிறையில் அடைக்கப் பட்ட நேதாஜி சித்திரவதைகளுக்கு ஆளாகி கொல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.. இதில் எந்த அளவுக்கு உண்மையுள்ளது என்று தெரியவில்லை.. வடஇந்தியாவில் பைசாபாத்தில் 'பகவான் ஜி' என்ற பெயருடன் நேதாஜி துறவியின் வடிவுடன் மறைந்து வாழ்ந்ததாகவும்.. அவர்தான் நேதாஜி என்று உள்ளூர் மக்களுக்குத் தெரியும் என்றும் 1985-ல் அவர் இறந்து விட்டார் என்றும் கூறப்படுகிறது..

இதுவரை பல கமிசன்கள் வைத்து விசாரித்தும் நேதாஜி என்ன ஆனார் என்ற மர்மம் இன்றுவரை விடுபட வில்லை என்பதில் இந்தியர்களான நாம் அனைவரும் பெருமை கொள்வோம்.. எப்பேற்பட்டவர்கள் நாம்..!

'ஓர் இந்தியனின் புனித யாத்திரை..!'

நேதாஜி 1937-ல் எழுத ஆரம்பித்து முற்றுப் பெறாத சுயசரிதை இது.. புனித யாத்திரைக்கு இந்தியாவில் இடமே இல்லை போல..

சுபாஷ் துடிப்பான இளம் தலைவர்..! அதுவே மக்களை வசீகரித்தது.. பகத்சிங் சமரசமற்ற போராளி..! உத்தம்சிங் இந்தியர்களின் தன்மானம் காத்த தலைவன்..! வாஞ்சிநாதன் அச்சமற்ற தியாகி..!


இவர்களைத்தான் காந்தி தூஷித்தார்.. வெறுத்தார்.. விலக்கி வைத்தார்..

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸை நியாயமற்ற முறையில் கட்சித் தலைமையை விட்டு விலக்கி கட்சியை விட்டும் விலக்கி வைத்தார்.. பகத்சிங்கின் தூக்குத் தண்டனையை ஆதரித்து அதற்கான இர்வினின் பத்திரத்தில் ஆட்சேபமில்லை என்று கையெழுத்திட்டார்.. வாஞ்சிநாதனைக் கண்டித்தார்.. உத்தம்சிங் ஜெனரல் டயரைக் கொன்றது முறையல்ல என்று கூறினார்.. வெள்ளைக்காரனான ஆஷீக்கு நினைவுச் சின்னம் எழுப்பச் செய்தார்..

இவற்றுக்கெல்லாம் காந்தியின் தரப்பில் சொல்லப்படும் காரணங்கள் நியாயமானவையோ.. நியாய மற்றவையோ.. எனக்குத் தெரியாது.. நாட்டுக்காக போராடிய இந்தப் போராளிகளுக்கு காந்தி நியாயம் செய்யவில்லை என்பது மட்டுமே எனக்குத் தெரிகிறது..

'ஜெய் ஹிந்த்..!'

ஏழாவது ஸ்வரத்தின் 'நீழல் ஆட்ட யுத்தம்'



20

அன்று சிந்திய ரத்தத்திற்கு என்ன கைம்மாறை செய்திட்டோம்..?

கம்யூட்டரில் விழி பதித்திருந்த தாமோதரன் இன்டர் நெட்டில் வெளியாகியிருந்த செய்தியொன்றைப் படித்து விட்டு..

"இவங்களுக்கு வேற வேலையே இல்லை.." என்று அலுத்துக் கொண்டான்..

சித்தார்த்தனிடம் அன்றைய எங்கேஜ்மெண்டுகளை நினைவு படுத்த வந்த யாமினி புரியாமல் ஓர் பார்வை பார்த்து விட்டுப் பேசாமல் இருந்தாள்.. அவளால் கேட்க முடியாததை..

"யாரைடா சொல்ற..?" என்று சித்தார்த்தன் கேட்டு வைத்தான்..

"நேதாஜியோட தொடர்பில இருக்கிற அத்தனை ஃபைல்ஸையும் வெளியிடனுமாம்.. இதெல்லாம் நடக்கற காரியமா..?"

"ஏன் நடக்காது..? தகவல் அறியற உரிமைச் சட்டம் இதுக்கும் பொருந்தும்தானே..?"

"எல்லாத்துக்கும் பொருந்தாதுடா சித்தார்த்.. ஹைலி காண்பிடென்ஸியல்ன்னு சிலது இருக்கும்.. அதையெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கி விட முடியாது.."

"என்னவோ போ.. இவங்களும் நேதாஜியோட மரணத்தைப் பத்தி விசாரிக்க கமிசன் மேல கமிசனா போடறாங்க.. ஒரு பலனையும் காணோம்.."

"ஜஸ்டிஸ் முகர்ஜி கமிசன் கொஞ்சம் உண்மையைச் சொல்லுச்சே.."

"சொல்லுச்சு.. சொல்லுச்சு.. சுபாஷ் சந்திரபோஸ் தைவான் நாட்டு விமான விபத்தில் இறக்கலைன்னு சொல்லுச்சு ரஷ்யாவுக்குத் தப்பிப் போயிருக்கலாம்ன்னு சொல்லுச்சு.. ஜப்பானியக் கோவிலில் உள்ளது நேதாஜியின் அஸ்தியில்லைன்னு சொல்லுச்சு. 1970ல் லீலாராய்க்கு பகவான்ஜி எழுதிய கடிதம் நேதாஜி யோட கையெழுத்தோட இணைந்து போகுதுன்னு சொல்லுச்சு.. இத்தனையையும் எப்பச் சொல்லுச்சு..? 2005-ஆம் வருசம் சொல்லுச்சு.. பகவான்ஜி 1985-லேயே இறந்துட்டார்.. 2010-ல பகவான்ஜி நேதாஜியா இருக்க 100 % வாய்ப்பிருக்குன்னு ஜஸ்டிஸ் முகர்ஜி சொன்னது டெலிகாஸ்ட் ஆகியிருக்கு.."

"ம்ஹீம்.. வாழும் காலத்தில ஒரு மாவீரனை நம்ம நாடு கண்டுக்கவே இல்லை.."

யாமினிக்கு வேதனையாக இருந்தது.. அவளுடைய இடத்திற்குச் சென்று அமர்ந்தவளின் வாய் தன்னையு மறியாமல்..

"நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ..
சொல்லடி சிவசக்தி..! - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்.."

என்று உருகிப் பாடியது..

அப்பாடலில் சித்தார்த்தன் அவளைப் பார்த்தான்.. இருவர் பார்வையிலும் புரிதலுடன் கூடிய மனவலி இருந்தது.

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

ஏழாம் ஸ்வரத்தில் தொடர்ந்து வரும்..